T. 1536.

வெளியீடு: கூஅ

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்



6

10 DEC 1943

கழக வெளியீடு - கூஅ

ஶ்ரீ

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்

*

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
எம். ஏ., எம். எல்.,
(தாகூர் சட்ட விரிவுரையாளர்)
எழுதியது

*

: திருநெல்வேலி, தென்னிந்திய :
: சைவசித்தாந்த :
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

*Second Edition June* 1927

[ *3rd Edition* ]

*Published by*
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
TIRUNELVELI & MADRAS

Paper Issue Card No. MS. 95-B (1000—12-1-47)

[ *All Rights Reserved* ]

KABEER PRINTING WORKS, MADRAS MS. 524

# பதிப்புரை

திருநாவலூரிலே தோன்றி எல்லாம்வல்ல சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப் பெற்றவரும், 'பித்தனே' என்று மெய் குளிர்ப்பக் கூறிச் சிவபெருமானை மகிழ்விக்கச் செய்தவரும், இல்லற நெறியிலே நிற்பினும் சிவனிடத்தில் இடையறா அன்புடையரா யிருப்பின் வீடுபேற்றை யடையலாமென்று உலகத்துக் கெடுத்துக் காட்டா யிலங்கியவரும், இறைவனையே தோழராகக் கொண்டவரும், முதலையுண்ட பிள்ளையை மீட்டு அழைத்துக் கொடுத்தவரும், இன்னோரன்ன பல அருஞ்செயல்களை இறைவனருட்டுணை கொண்டு செய்தவரும், தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்திற்கு முதனூலாய திருத்தொண்டத் தொகையைப் பாடியருளியவரும், வெள்ளை யானைமேலேறி வெள்ளிப் பொருப்பனைச் சேர்ந்தவருமாகிய சுந்தரமூர்த்தி நாயனாரது செம்மை சான்ற வரலாற்றினைப் படிக்க விழைவது யாவர்க்கும் வேண்டுவது.

முன்னர் அறிஞர் பலர் அப்பெருமான் வரலாற்றினை எழுதி வெளியிட்டிருப்பினும் இந்நூல் முன்னர் வெளிவந்த புத்தகங்களைப்போ லல்லாமல் புதிய முறையில் ஆராய்ச்சிக் கருத்துக்களுடன் எழுதப்பட்டிருப்பது கருதி வெளிவரவேண்டுவது இன்றியமையாததாயிற்று.

சைவசமயத்திற்குப் பேரிடர் விளைத்து வந்த புத்தம் சமணம் முதலிய புறப்புறச் சமயங்களை வேரறுக்கத் தோன்றிய சைவசமயாசாரியர் நால்வருள், இந்நூலாசிரியராலே முன்னரே எழுதப்பட்டு வெளிவந்த அருள்ஞானத்

தந்தையாகிய அப்பர் பெருமான் வரலாற்றினையும், மூன்றுண்டுற்ற குழந்தையாயிருந்த ஞான்றே இறைவனையும் இறைவியையும் நேரே கண்டு ஞானப்பா லுண்டு அருள் பெற்றவராகிய திருஞானசம்பந்தப்பெருமான் வரலாற்றினையும் கற்றுப் பயன்றுய்த்த தமிழ்மக்கள் இந்நூலினையும் வாங்கிப் படித்து இன்பமெய்துவார்களாக.

இந்நூலின்கண் சுந்தரர் வரலாறு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வரலாற்றுப் பகுதி முடிந்ததும் அதனால் உணரக்கிடக்கும் ஆய்வுரைகளை விளக்கி எழுதிச் சேர்த்திருப்பதும், அடிகள் தேவாரத்தில் மிளிர்ந்து கிடக்கும் அரும் பொருள்களை ஆய்ந்தெழுதிச் சேர்த்திருப்பதும் கற்பவர்க்குக் கழிபேரின்பம் பயப்பனவாகும்.

தமிழ், ஆங்கிலம், சட்டம் முதலியவற்றிற் பெரும் புலமை நிரம்பி, அன்பு அற வொழுக்கங்களிற் சிறந்து விளங்கித் தமிழ் மக்களாக்கங்கருதி இது போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதி யுதவிவரும் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கட்கும், இப்பதிப்புக்குத் திருத்தஞ் செய்துதவிய தமிழறிஞர்கட்கும் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார்.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | சுந்தரர் திருப்பெயர் விளக்கம் | ... | சு |
| | சுந்தரர் புகழ்மாலை | ... | எ |
| க. | தோற்றுவாய் | ... | 1 |
| உ. | தடுத்தாட்கொள்ளப்பெற்றது | ... | 5 |
| ங. | தில்லைவணங்கித் திருவாரூரடைதல் | ... | 28 |
| ச. | பரவையார் திருமணம் | ... | 40 |
| ரு. | நெல்பெற்ற அற்புதம் | ... | 73 |
| சு. | செங்கல் பொன்னுக்கப்பெற்றதும், இறைவன் வழிகாட்டப்பெற்றதும் | ... | 77 |
| எ. | தண்ணீரும் பொதிசோறும் பெற்றது | ... | 92 |
| அ. | சங்கிலியார் திருமணம் | ... | 99 |
| கூ. | திருவாரூர்க்குத் திரும்பி இறைவனைத் தூதுவிடுதல் | ... | 115 |
| க0. | ஏயர்கோனுக்குச் சினந்தீர்த்தது | ... | 133 |
| கக. | சேரமான் பெருமாள் நட்பு | ... | 139 |
| கஉ. | வெள்ளையானைமேற் கயிலைக்குச் சென்றது | ... | 159 |
| கங. | தேவார ஆராய்ச்சி | ... | 174 |

# சுந்தரமூர்த்திகளது திருப்பெயர்கள்

நுணங்கிய கேள்விமேலோன், நாவலர் பெருந்தகை, தமிழ்நாதன், நற்றமிழ் நாவலர்கோன்,, வண்டமிழ் நாவலர் தம்பெருமான், நாவலர், காவலர், நாவலர்கோன், தமிழ்வேந்தன் என்பன அவரது கல்வி நலந் தெரிவிப்பன.

நாவலூர் மன்னர், புரிநூன்மணிமார்பர், நாவலாதி சைவன், சைவ வேதியர் தலைவர் என்றற்றொடக்கத்தன ஊரையும் மரபையுங் குறிப்பன,

ஈசனுக்கினியான், செய்தவம் பெரியோன், தடுத்து முன்னாண்ட தொண்டர், புண்ணியனார், விழுத்தவ வேந்தர், மெய்யருள் பெற்றுடையவர், தனித்தொண்டர், சித்த நிலைதிரியாத திருநாவலூரர், சைவ நற்றவக்களிறு, விடையவர்க்கன்பர், தம்பிரான்றோழர் என்னுஞ் சொற்றொடர்கள் அவரது அருந்தவத்தையும் பேரன்பையும் உணர்த்துவன.

பெருந்தகையார், எங்கள் வள்ளலார், எல்லாம் நிகரில்லான், பயனுணர்வார், வனப்பகையப்பர், சிங்கடியப்பர் முதலிய சொற்கள் அவரது அருள்வண்மையையும் பெருமையையும் உணர்த்துவன.

முனைப்பாடிப் புரவலனார், திருமுனைப்பாடி நாடர் என்பன அவரது அரச ரியல்பு குறிப்பன.

தேமரு தொடையன்மார்பன், பூந்தாரான், மணங் கமழ்தாரான், அலங்கலந் தோளினான், பவித்திரஞ் சிறந்த கையான், காளை, பரவையார் தனித்துணைவர், பரவை கேள்வனார் என்பன நாயனாரது போக வாழ்க்கையைக் குறிப்பன.

# சுந்தரர் புகழ்மாலை

## அருணகிரிபுராணம்

வடகயிலை மலைபிரிந்து வந்துதித்தம் மண்டலத்தெங்
கடவுடகைந் தாட்கொளலுங் கட்டுரைத்துப் பதிகமவ
னடிநிழலை யடைந்தாரை யறிவித்தே யெமக்கிந்தப்
படிமுழுதும் புகழ்நிறுவு மாரூரர் பதம்பணிவாம்.

## திருவிளையாடற்புராணம்

அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானு
ளிரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல் வைப்
[பாம்.

## காசிகாண்டம்

கதழெரி நேமி தூண்டிக் கராங்கவர் குரவ னீன்ற
மதலையை யழைத்த செங்கண் மாலென வருந்து ருமை
லதிர்கட லமுத மென்ன வருந்தமிழ்ப் பதிகம் பாடி
முதலைவாய்ப் பிள்ளைதந்த முதல்வனை வழுத்தல் செய்வாம்.

## சங்கரநாராயணர் கோயிற்புராணம்

ஏனமாய் மாயோன் வேலை யிருநிலங் கீண்டுங் காணுத்
தேனவிழ் கமல மன்ன சேவடி படியிற் றோய
காணவர் குழலி பங்கி னுதனைத் தூது விட்ட
வானுலாம் பொழில்சூழ் நாவன் மன்னனை வணங்கல்
[செய்வாம்.

## காஞ்சிப்புராணம்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
யிருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா ளென்றுந்
திருமணக்கோ லப்பெருமாண் மறைப்பெருமா
ளெமதுகுல தெய்வ மாமால்.

## திருவாரூக்காப்புராணம்

அடிமை யானவர்க் கருளையுந் தன்னையு முயிரிற்
படியி லாவகை யளிப்பது பாருளோ ரறிய
வடிவின் மாண்டவ லொருத்திது தெனவிறை வழங்க
நொடியின் மாலைசெய் வன்றொண்ட ரடிமலர் நுவல்வாம்.

## கருவூர்ப்புராணம்

வெள்ளியங் கிரியை நீங்கி நாவலூர் மிளிரத் தோன்றி
யொள்ளிய தோகை பாகன் சாதனத் தோட்டிக் குள்ளாய்த்
தெள்ளிய பரவை யாழ்ந்து சங்கிலி சிமிழ்ப்புற் ருசு
தள்ளிய களிற்றின் பாத தாமரை தலைமேற் கொள்வாம்.

## மருதூர்ப்புராணம்

காதுகொண்டு கேட்குமவர்க் கின்ப வெள்ளங்
கரைபுரள மனங்கொண்டு களிக்கின் றோர்கட்
கேதுகொண்ட பாசவிருட் படல நீக்கி
யிணையிலருட் சுடரெங்கு மெறிப்ப வெற்பின்
மாதுகொண்ட பாகர்விருப் பாகத் தோன்றி
வரமதுர பாகப்பா மாலை மல்கத்
தாதுகொண்டு கடந்திளைத்த வடியிற் சாத்துஞ்
சுந்தரர்தஞ் சீர்த்தியினைத் துதித்தல் செய்வாம்.

உ

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்

## க. தோற்றுவாய்

முழுமுதற் கடவுளை வழிபட்டு அவரது திருவடிப் பேரின்பத்தை அடையக் கருதுவோர் இருவகைப் படுவார். உலகப்பற்றை அறவே ஒழித்துத் துறவறநிலையில் நிற்போரும், உலகப்பற்றுடையராய்க் கடவுளிடத்து அன்பினை மிகுதியாக வளர்த்து அப்பற்றுத் தானாக நீங்கும்படி முயல்வாரும் ஆவர். உலகத்திலுள்ள பலசமயங்களுள் சமணம், புத்தம், சுமார்த்தவேதாந்தம், மாத்துவம் என்னுஞ் சமயங்கள் துறவற நெறியையே வீட்டிற்கு வழியாகச் சொல்லும். வீட்டின் இயல்பினை முற்றிலும் ஆராயாத கிறித்து மகம்மதிய மதங்கள் துறவற நெறியைப் பெரிதும் பாராட்டுவதில்லை. வீட்டியல்பினை முற்றும் உணர்ந்த சைவசமயமானது இருநெறியையும் பெரிதுந் தழுவி யுரைப்பது பெரியபுராணத்தால் இனிது விளங்கும். இயற்பகை நாயனார், சிறுத்தொண்ட நாயனார் என்னும் பெரியோர்கள் இல்லறத்தில் வாழ்ந்தும், மனைவி மக்கள்பால் பற்றில்லாதவராய்ச் சிவனடிப் பேரன்பினையே மிகுதியும் உடையவராய் வீடெய்தினமை காண்க. பண்டைத் தமிழரும் இல்லறநெறியை வீட்டிற்கு ஓர் தந்திரவழியாகப் பயன் படுத்தும் ஓர் முறையை அறிந்திருந்தனர். இறையனா ரகப்பொரு ளுரையிற் களவியல்

என்பதற்குப் பொருள் கூறுமிடத்து, உயர்ந்த இன்பம், ஒத்த தலைவனும் தலைவியும் கூடி வாழ்தலால் உளதாமென்றும், அவ்வாழ்க்கை தவத்தாற் கிட்டுவதென்றுங் கூறிப், பின்னர் அத்தவத்தை வீட்டின் பொருட்டுப் பயன்படுத்தவேண்டுமென்று தந்திரமாகப் போதிப்பது அந்நூலின் நோக்கமென்றது அறியற்பாலது. உலக வாழ்க்கையில் அமிழ்ந்திக் கிடக்கும் உயிரைப் பற்றச் செய்யும் பொருட்டு ஊண் ஒழித்தல் வேண்டுமென்றும், விடியற்காலத்தில் குளிர்ந்த நீரில் மூழ்க வேண்டுமென்றும், சடைமரவுரி முதலியன தரித்தல் வேண்டுமென்றும், வெயிற்காலத்தில் அனல் நடுவிலும் மழைக்காலத்தில் தண்ணீரிலும் பனிக்காலத்தில் வெளியிலும் நின்று தவம்புரிய வேண்டுமென்றும் பல துறவு நூல்கள் கூறும். அவ்வாறு கடுமையாகத் தவம் புரியாது, 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றுஞ் சிவன் தாள் நினை' என்றபடி எப்பொழுதும் கடவுளை மறவாத அன்பினையே கடைப்பிடிக்க வேண்டுமென்பது சில பேரறிஞர் கொள்கை. அங்ஙனம் செய்தலாலே முத்தியடைதல் கூடுமென்பதைத் துறவிற் சிறந்த பட்டினத்தடிகள் மிகவும் அழகாகப் பின்வருமாறு நவின்றனர்.

“ மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கண்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவருங்
காடு மலையும் புக்குக் கோடையிற்
கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி
யைவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலு
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்து
முடையைத் துறந்து மூண்ணு துழன்றுங்

காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியுங்
களரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டுந்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
ரீங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம்

.................................................

மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழன்மிசைப் பொலியு
மஞ்சொன் மடந்தைய ராகந் தோய்ந்துஞ்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தி
னறுசுவை யடிசில் வறிதினி தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்துந்
தூசு நல்லன தொடையிற் சேர்த்தியு
மைந்து புலன்களு மார வார்ந்து
மைந்தரு மொக்கலு மகிழ மனமகிழ்ந்
திவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திர வெழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வ வத்திறம்".

சைவத்திருநெறித் தலைவர்களுள் ஒருவராகிய சுந்தர மூர்த்தி நாயனார், மேற்கூறிய இருவகையுள் இரண்டாவது வகையைச் சார்ந்த மக்கட்குத் தலை சிறந்த ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றார். முன்னை வினையினாலே பெண்டிரொடு வாழ்ந்தும் திருவடிஞானம் உடையவராதலால் அவர் வீடுபேற்றிற்கு உரியரானார். எத்துணைத் தவங்கிடந்தாலும் சிவபெருமான் அளிக்கும் பதிஞானம் இல்லாதவர்கள் பிறவியறமாட்டார்கள்.

பெரிய புராணத்தின் கதைத் தலைவராக எண்ணப்படுதற்குரியார் சுந்தரமூர்த்தி சுவாமிகளே. பெரிய புராணத்தின் முதலிலும் நடுவிலும், முடிவிலுங் கூறப்படுவது இப்பெருந்தகையார் வரலாறே யாதலால், இவர் சரித்திரத்தினுள்ளேயே இவர் குறித்த திருத்தொண்டர்களின் வரலாறும் அடங்கும். இவர் திருத்தொண்டத்தொகையை அருளிச்செய்யாவிடின் பெரிய புராணமே ஏற்பட்டிராது. அறுபத்துமூன்று தனியடியார் பெருமையும், ஒன்பது தொகையடியார் பெருமையும் உலகத்திற்கு விளங்க மாட்டா. இவர் சைவ உலகத்திற்குச் செய்த பெருநன்மையின் சிறப்பை யுணர்ந்தே ஆசிரியர் சேக்கிழார் ஒவ்வொரு சருக்கத்தின் முடிவிலும் இவர்க்கு வாழ்த்துக் கூறியுள்ளார். ஆதலால், இப் பெருந்திருவாளரது புராணம் யாவருங் கேட்டுப் பயன் பெறுதற்குரியது.

# உ. தடுத்தாட்கொள்ளப்பெற்றது

சுந்தரமூர்த்தி நாயனுர் தோன்றிய நாடானது சோழ நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் நடுவேயுள்ள நடு நாடெனப்படுந் திருமுனைப்பாடி நாடாகும். அதனை ஆசிரியர் சேக்கிழார்,

> மங்கையர் வதன சீத மதியிரு மருங்கு மோடிச்
> செங்கயல் குழைக ளடுந்

தன்மைய தென்ருர்.

அதாவது தண்மை மிகுந்த திங்கள் போன்ற பெண்டிர் திருமுகத்தில் இலங்கும் கயல்மீன் போலும் செவ்வரி படர்ந்த கண்கள் காதளவு ஓடியனவாய்க் காதிலணிந்துள்ள குழைகளைப் போய்ப் பற்றுந் தன்மையனவா யிருத்தலின், குளிர் நீர் மிகுந்த பொய்கையிற் செவ்விய கயல் மீன்கள் தளிர்களைப் பற்றுவன போன்ற தோற்றம் மங்கையர் திருமுகங்கட்கு இருந்தன என்ருர். இதனுல் உடலழகும் உள்ளச் சால்பும் உடைய உத்தமப் பெண் மணிகள் நிறைந்த நாடு திருமுனைப்பாடி நாடென்பது கூறப்பட்டது.

நல மிக்க அத் திருநாட்டில் திருமறையவர்கள் நிறைந்த திருநாவலூரின்கண் ஆதிசைவ அந்தணர்குலத்திற் சடையனுர் என்பவருக்கு அவர் தம் மனைவியாகிய இசைஞானியார்பால் உலகமுய்யும் வண்ணம் நமது நாயனுர் தோன்றியருளினுர். இவர்க்கு நம்பி ஆரூரர் என்று திருப்பெயர் இடப்பெற்றது. இவர் ஐம்படைத் தாலி மணிச்சுட்டி பொன் னரைஞாண் சதங்கை முதலிய அணி கலன்களை அணியப் பெற்றுக் கவின்மிகச் சிறுதேர் உருட்டி விளையாடும் நாளிலே நரசிங்க முனையரையர்

என்னும் அரசர், அவரைப் பார்த்துச் சொல்லுதற்கரிய காதல் கொண்டு அவர் பெற்ருேர்பாற் சென்று குழந்தையைத் தம்மொடு அழைத்துச் செல்ல விடைபெற்றுத் தமது அரண்மனைக்குத் தவப் புதல்வரைக் கொடுபோய்த் தமது அரசிளங்குமரன்போலச் சீராட்டிப் பாராட்டி வளர்த்துவந்தனர். உரிய காலத்திலே நம்பியாரூரரும் மறைமுறைப்படி பூணூ லணிந்து அளவற்ற பண்டைக் கலைகள் பலவும் ஆய்ந்து கற்றுத்தேர்ந்து, புகழொடு திகழ்ந்தகாலைத் திருமணப் பருவம் வந்தெய்திற்று. அப்போது சடையனுர் ஒப்பற்ற தமது புதல்வற்குச் சைவ அந்தணர் குலத்திலே எங்நலமுஞ் சிறந்த புத்தூரில் வாழ்ந்த சடங்கவி என்பார்பால் மகட்பேச ஆளனுப்பினர். குலநலம் குணநலம் முதலியவற்ருல் நம்பியாரூரர் தலைசிறந்தோரென்பதைப் பெரியோர் வாயிலாகத் தெரிந்து சடங்கவியார் முகமலர்ச்சியோடு தமது புதல்வியை அவருக்கு மணம் புரிவிக்க இசைந்தனர். இசைந்த செய்தியைக் கேட்ட மன்னர், தமது செல்வத்திற் கேற்றவாறு யாவர்க்கும் திருமண ஓலை அனுப்பினர். திருமணத்திற்கு ஆடவரும் பெண்டிரும், திருநாவலூர் வந்து குழுமினர். மங்கலச் செயல்களெல்லாம் செவ்வனே நடைபெற்றன. பூமாலைப் பந்தர் அமைக்கப்பட்டது. முளைகளெல்லாம் பாலிகைகளில் இடப்பட்டன. திருமணத்திற்கு முந்திய நாள், மணவாளர்க்குப் பைம்பொன் கயிற்றிஞற் காப்புக் கட்டப்பட்டது. விதிமுறைப்படி பல சடங்குகளும் இயற்றப் பெற்றன. நாயனுரது திருமணக் கோலம் காண விரும்பியவன் போலக் கதிரவன் உதித்தனன். அவர் திருமண நாளன்று காலைக்கடன் முடித்துத் திருமஞ்சனச் சாலை புகுந்து தூய வாசனை நீரில் மூழ்கி, அகிற் புகை கமழும் பட்டுடை யுடுத்தித் தலையினை ஈரம்புலர்த்தி முடித்துத், திருமேனியிற் கத்தூரி கமழுஞ் சந்தனக்கலவை சாத்

தப் பெற்று, ஆழியணிந்து, பல்வகை நறுமலர் மாலையும் ஒளிமிக்க மணியணிகளும் பூண்டு, மணக்கோலம் கொண்டார். தன்னை வளர்த்த மன்னவர் சிறப்பும் தமது மறையவர் ஆர்ப்பும் பொலிந்திலங்க, நகர வாசிகள் விழாக் கொண்டாட, நம்பியாரூரர் இறைவரது திருவடியை உள்ளத்தில் நினைந்து, திருநீறணிந்து புரவிமேலேறிப் பல்வகை இன்னிசைக் கருவிகளொலிப்பப் பெண்டிர் பல்லாண்டு கூற, மறையவர் நான்மறை முழக்கஞ் செய்ய, உடனுறை நண்பர்கள் உயர்ந்த ஊர்திகளில் ஏறிவரப் புத்தூர் சென்றடைந்தார். அவ்வூரிலே அந்தணப் பெண் மணிகள் வீடுகள்தோறும் நிறைகுடம் வைத்துத் தூப தீபங்களேந்தி, வாசனை மிக்க அறுகு பொரி முதலியன தூவிச் சந்தனங் கலந்த நறுநீரினை வீதிகளிற் றெளித்து மணவாளனை எதிர்கொண்டார்கள். அவ்வள்ளலது பேரழகினைக் கண்ட பெண்டிர் பாடியாடி இங்ஙனம் மொழிந்தார்கள்.

"கண்களெண் ணிலாதவேண்டுங் காளையைக் காண வென்பார்
பெண்களி லுயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூரவந்த மணங்கண்டு வாழ்ந்தோ மென்பார்."

வன்றொண்டர், திருமணப் பந்தரை யடைந்து சங்க முழங்கப் பரியினின்றிறங்கி, மணவினை நிகழ்த்தச் சென்றார். ஆயகாலை கயிலைத் தலைவர், நமது நாயனாரைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டுத் திருநீற்றுப் பொலிவும் நரைமயிர்த் தொகுதியு முடைய கிழவடிவம் பூண்டு, காதில் தொங்கும் குண்டலமும் மார்பில் துவளும் கண்டிகையும் பூணூலும் தோளில் துலங்கும் வெள்ளிய மேலாடையு முடையவராய்த் திருக்கரத்தில் விளங்கும் குடையோடு தண்டூன்றித் தளர்நடை கொண்டு திருமணப் பந்தலை யடைந்து, அவையாரை நோக்கி இவ்வுரையை நீங்கள்

யாவருங் கேளுங்களென்ருர். அப்போது அங்குள்ள மறையோரும் மணவாளரும் அவரை நோக்கி உமது வரவு நல்வரவாகுக. அஃது எங்கள் தவப்பயனே. நீர்சொல்ல விரும்புவதைச் சொல்லு மென்ருர்கள். உடனே மறைக் கிழவர் நாவலர் பெருந்தகையை நோக்கி 'உனக்கும் எனக்கு முள்ள தொடர்பால் முன்னமே ஓர் பெரு வழக்கு இருக்கின்றது; அதனை முடித்தே நீ உன் மணவேள்வியை நிகழ்த்துவாயாக' என்றனர். அப்பொழுது சுந்தரமூர்த்தி கள் மறையவரை நோக்கி, 'உனக்கும் எனக்கும் வழக்கு உள்ளதானல் அதனை முடியாமல் நான் மணஞ் செய் யேன். அவ்வழக்கை முற்றிலும் மொழிக' என்றனர். உடனே வேடம் பூண்டவர் அங்குள்ள அந்தணரை நோக்கி 'இதைக் கேளுங்கள். இந்த நாவலூரன் என் அடியான்; இதுதான் நான் சொல்லுவது' என்ருர். அப் போது அங்குள்ளாரெல்லாரும் வியப்புற்று 'இவன் என்ன நினைத்தான்' என்று கூறிக்கொண்டு அவர்பாற் சென்று சிலர் கோபித்தார்கள். சிலர் சிரித்தார்கள். சுந்தரமூர்த்தி யும், இப்பார்ப்பான் சொல்லுவது நன்று என்று நகைத் தார். சிரித்தவரைப் பார்த்து மறைக்கிழவர் மேலாடை நன்கணிந்து 'அந்தக் காலத்திலேயே நின் பாட்டன் எனக் குக் கொடுத்த அடிமை யோலை இதோ இருக்கின்றது. இதனை யறியாமல் நீ எவ்வாறு சிரித்தாய்?' என்றது கேட்டவுடன், நாவலூர்நம்பி சிரிப்பு நீங்கி, அவரை நோக்கி 'ஒரு அந்தணருக்கு மற்ருேர் அந்தணர் அடிமையாதலை நீ இன்று சொல்லத்தான் கேட்டோம்! நீ பித்தனே!' என் ருர். அதற்கவர் 'நான் பித்தனயினுமாக பேயனயினு மாக; நீ எத்தனை தீயமொழிகள் பகர்ந்தாலும் அவற்ருல் நான் பின்னடையமாட்டேன். அவ்வளவிற்கு நீ என்னை அறியாதவனுகின்ருய். நீ வித்தகம் பேசவேண்டாம். பணி செய்ய வேண்டு' மென்ருர். அப்போது மணவாளன் 'நீர்

கூறுகின்ற ஓலையின் உண்மையை நான் தெரிய விரும்புகின்றேன். ஆதலால் ஓலையைக் காட்டு' மென்றனர். அதற்குக் கிழவர் நம்பியை நோக்கி 'நீ ஓலையைக் காணுந் தகுதியை உடையையோ? சபையோர் முன் நான் அதனைக் காட்ட நீ பணிசெயக் கடவை' என்றுரைத்தபோது நாவலூரர் சினங்கொண்டு விரைந்து சென்று மாலும் அயனுந் தொடர்தற்கரிய முதல்வரைப் பின்தொடர்ந்து ஓலையைப் பிடுங்க முயலவும் கிழவர் தெருவழியே ஓடினார். வன்றொண்டர் மிகவிரைவுடன் தொடர்ந்து ஓலையை வாங்கி அந்தணர் அடிமையாதல் என்னமுறை என்று சொல்லி அதனைக் கிழித்தெறிந்தார். கிழவர் ஓவென்று முறையிட்டார். அங்கு நின்றவர்கள் இருவரையும் விலக்கி 'உலகத்திற் பெருவழக்காயில்லாத ஒருவழியிற்பிணங்குகின்றமுனிவரே, நீர் எங்குள்ளீர் சொல்லும்' என்றார்கள். அப்போது ஐயர் 'நான் இவ்விடத்தில் உள்ளேன். எனது உறைவிடமும் நெடுந்தூரமன்று. இந்த வெண்ணெய் நல்லூர் தான். அஃதிருக்கட்டும், நியாயமில்லாமல் என்கையிலிருந்த ஓலையை வலிந்து பற்றிக் கிழித்தமையால் இவன் அடிமையென்பதைத் தானே காட்டிவிட்டான்' என்றார். அப்போது நம்பியாரூரர் 'இவன் நீண்ட நாள் வழக்காடித் தேர்ந்தவன் போலும்' என்று கூறி மிகுந்த சீற்றத்துடன் 'வெண்ணெய் நல்லூரினன் என்றால் உன் தப்புவழக்கை அங்கேபோய்ப் பேசுக என்றனர். ஐயர் அதனைக் கேட்டு, 'நீ வெண்ணெய் நல்லூருக்கு வந்தாலும் நல்லதே. அங்குள்ள வேதியர்முன் ஆதியிலேற்பட்ட மூல ஓலையைக் காட்டி நீ அடிமை என்பதை நிலைநிறுத்துவேன்' என்று மொழிந்து தண்டினை யூன்றி முன் சென்றார். அவர் பின்னே காந்த மிழுக்கும் இரும்பைப்போல ஆரூரர் விரைந்து பின் தொடர, அவரது அளவிறந்த உறவினரும் இஃது எவ்வாறாகுமோ என்று கவன்று பின் செல்ல,

ஐயர் வெண்ணெய் நல்லூரையடைந்து மறையோர் அவை முன் சென்று 'நம்பியாரூரன் என்னடியான் என்று காட்டிய ஓலையைக் கிழித்தெறிந்தான். இதுவே என் முறைப்பாடு' என்றார்.

அவ்வவையிலுள்ள பெரியார் 'வேதியர் அடிமையாகும் வழக்கம் இவ்வுலகத்தில் இல்லாததொன்று: நீ சொல்லுவது யாது?' என்றனர். அதற்கு ஐயர் 'ஒப்புக்கொண்ட முறை செய்வதன்றோ பொருத்தமானது. இவன் கிழித்த ஓலை இவன் பாட்டன் எனக்குக் கொடுத்தது. அவ் வுடன்படிக்கை எழுதிய ஓலையைக் காட்டினால் விரைந்து வாங்கி அதனை வலியக் கிழிப்பது வெற்றியாகுமோ? என்று வழக்கினைப் பொருத்தமாக எடுத்துரைத்தார். அப்போது சபைத்தலைவர் நம்பியாரூரைப் பார்த்து உமது கருத்து யாதென்று வினவினர். அவர் கூறியதாவது 'நீங்கள் எல்லா நூலும் அறிந்தவர்கள், நான் ஆதிசைவனென்று அறிவீர்கள். நான் தனக்கு அடிமை என்று இவ்வந்தணன் சாதித்தானென்றால் இஃது என் மனத்தினால் அறியமுடியாததோர் சூழ்ச்சியாக இருக்கின்றது. இஃது என்னால் நம்பமுடியவில்லை' என்றனர். அப்போது அவையார் முனிவரை நோக்கி 'நீ இன்று இவரை உன் அடிமை என்று கூறுகின்ற வெஞ்சொல்லை எங்கள்முன் நிலைநாட்ட வேண்டும். வழக்கம், எழுத்து, பிறர் சாட்சி என்னும் மூன்றில் ஒரு சான்று எங்களுக்குக் காட்டவேண்டுமென்றனர். அப்போது அவர் 'முன்னே சண்டையிட்டுக் கிழித்த ஓலை, படி ஓலை; மூல ஓலையைத் தக்க இடத்தில் காட்ட வைத்திருக்கின்றேன்' என்றனர். காட்டக்கூடுமானால் காட்டுக எனவும், இவன் முன்போல வலிந்து அதைப் பிடுங்காமற் பார்த்துக்கொள்வீர்களென்றால் நான் காட்டுவேன் என்றனர். அப்படியே அதற்குத் தீங்கு நேரிடவொட்டோமென்று அவர்கள் கூறியவுடன்

மறைக்கிழவர் ஓலையைக் கொண்டுவந்தார். அப்போது அவையோர்க்குத் துணை நிற்பேரின் ஒருவன் ஆவணத்தை வாங்கிச் சுருள் பிரித்துப் பின்வருமாறு வாசிக்கலானான். "நாவலூர் ஆதிசைவனாகிய ஆரூரன் எழுதிக்கொடுத்ததாவது வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என் சந்ததியாரும், வழிவழித் தொண்டு செய்ய ஒப்புக் கொண்டு இவ்வோலை எழுதிக் கொடுத்தேன். இதற்குச் சான்று இவை என் எழுத்திலிருப்பது." இந்த வாசகம் கேட்ட பின்னர்ச் சான்றாக இவ்வாவணத்தில் மேலெழுத் திட்டவர்களது கையெழுத்துக்களை ஒப்புநோக்கித் தெளிந்தார்கள். பின் நாவலூர் நம்பியைச் சபையோர் பார்த்து இது உங்கள் பாட்டனார் எழுத்தா என்று தெளிவாகப் பாருமென்றார்கள். அப்போது மறைக்கிழவர் கூறுவார்: 'இவன் பாட்டனார் கையெழுத்து இவனுக்கா தெரியும். இவன் பாட்டனாரது வேறு எழுத்து இருந்தால் அதனை இதனோடு ஒப்புநோக்கி நீங்கள் உண்மை தெளியுங்க' ளென்றார். அவ்வாறே அவர்கள் ஒப்புநோக்கி இரண்டும் ஒத்திருந்தமை யறிந்தார்கள். அப்போது சபையோர் 'இவ்வந்தணர்க்கு நம்பியாரூரராகிய நீர் தோற்றீர்; ஆதலால் அவர் ஏவியதைச் செய்தல் உம்முடைய கடன்' என்றனர். நம்பியாரூரரும் விதி இதுவேயானால் நான் இசையே னென்று சொல்லமுடியுமா என்று கூறி நின்றார். அப்போது சபையார் அந்தணரைப் பார்த்து நீர் இந்த ஊரின ரென்றீரே; அங்ஙனமாயின், இந்த ஊரில் உமது வீடு வாசல் முதலியவற்றைக் காட்டு மென்றார்கள்.

அப்போது வழக்கு வென்ற புண்ணியர் நீங்கள் ஒருவரும் என்னை யறியமாட்டீர்களென்றால் வாருங்கள் என்று சொல்லி மறையோர் கூட்டமும் நம்பியும் தம்மைத் தொடரத் திருவருட்டுறையென்னுங் கோயிலுட் புகுந்தார். பிறர் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

அப்போது நம்பியாரூரர் இவர் திருக்கோயில் புகுந்தது எதனுலோ வென்று பெருவிருப்போடு அவரைத் தனியே பின் தொடர்ந்து அழைத்தகாலை உமையாளோடு இறைவர் விடைமே லெழுந்தருளி அவருக்கு மெய்ம்மையை உணர்த்தலுற்ருர். 'நீ முன்பே நமக்குத் தொண்டன்; நீ பிறர்பால் வைத்த பற்றின் காரணமாக நம்முடைய கட்டளைப்படி இவ்வுலகிற் பிறந்தனை. துன்ப மிக்க வாழ்க்கையோடுள்ள தொடர்பினை யறுப்பான் அந்தணர் முன் வழக்குத் தொடர்ந்து நின்னைத் தடுத்தாண்டோ' மென்றனர். இதனைக் கேட்டவுடனே பெற்ற பசுவின் கனைப்புக் கேட்ட கன்றுபோல நாவலூர் நம்பி உடம்பு முழுவதும் புளகங்கொண்டு கைகளைச் சென்னிமேல் வைத்துத் தொழுதுகொண்டு தமியேனை வலிய ஆட்கொண்டது கூத்தப்பெருமானுகிய உம்முடைய செயலா? என்று கூறி வியப்புற்றனர். விசும்பிடை ஐந்தெழுத்தொலி நிறைய விண்ணவர்கள் பொழிந்த பூமாரி நிலமிசை நிறைய, உலகத்தாருக்கு மகிழ்ச்சி பொங்க, மந்திர வொலிகள் எங்குந் தழைப்ப, ஓலை காட்டி ஆண்டவர் நம்பியை நோக்கிக் கூறுவார். 'நீ வன்மை பேசினமையால் '**வன்றெண்டன்**' என்னும் நாமம் பெற்றனை. அன்பொடு பாடும் பாடலே நமக்கு அருச்சனையாகும். ஆதலால் இந்நிலவுலகில் நீ செந்தமிழ்த் திருப்பாடல் பாடுக' என்றனர்.

மற்றுநீ வன்மை பேசி வன்றெண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலால் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடுகென்ருர் தூமறை பாடும் வாயார்.

அப்போது சுந்தரமூர்த்திகள் கூத்தியற்றும் சிவபெருமான் திருவடிகளைக் கும்பிட்டு நின்று கூறுவார். அந்தணுய் வழக்கினுல் வென்றென்னை ஆட்கொள்ள வந்த

பெருநன்மை யறியாத வெனக்கு உண்மை யுணர்த்தி யுய்யக் கொண்ட குற்றமற்ற அமுதே. இப்போது நாயேன் நின்குணப் பெருங்கடலில் எதனை யறிந்து என் சொல்லிப் பாடவல்லேன் என்றனர்.

வேதியி ஞகி என்னை வழக்கிஞல் வெல்ல வந்த
வூதிய மறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட
கோதிலா அமுதே இன்றுன் குணப்பெருங் கடலைநாயேன்
யாதினை அறிந்தென் சொல்லிப் பாடுகே னெனமொழிந்தார்.

அப்போது இறைவர் அன்பரைத் திருவருளிஞல் நோக்கி, முதலில் நீ என்னைப் பித்தனென்றே கூறிஞய். ஆதலால் என் பெயர் பித்தனென்றே யமைத்துப் பாடுக என்றனர். உடனே நம்பியும் அண்ணலைப் பாடத் தொடங்கினர். அடியவர்பால் மெய்த்தாயினு மினிய மாதொருபாகனை இந்நிலவுலகிலுள்ள உயிர்களெல்லாம் அறிந்துய்யும் பொருட்டுப் பாடுவார் ‘பித்தா பிறைசூடி’ என்னும் பெரிய திருப்பதிகத்தைத் துவங்கி, இந்தளம் என்னும் இனிய பண்ணிற் பாடி முடித்தனர். அப்போது சிவ பெருமானும் இவ்வாறே பல வகையாக நமது புகழை உலகினிற் பாடுக வென் றருள்செய்தனர். திருப்புத் தூரிலே மணஞ் செய்யவிருந்த பெண் சுந்தரமூர்த்தி யையே ஓயாது நினைந்திருந்து அப்புண்ணியத்தால் சிவ லோகமெய்தினள். சுந்தரமூர்த்திகளும் திருநாவலூரை யடைந்து திருப்பதிகம் பாடினர்.

## ஆராய்ச்சி

ஆசிரியர் சேக்கிழார் பெருங்காப்பிய இலக்கணத் திற்கு ஏற்பப் பெரிய புராணத்திற்குக் கதைத் தலைவ ராகச் சுந்தரமூர்த்தி நாயஞரைக் கருதினமையால், அந் நூலின் முதலிலும் இடையிலும் கடையிலும் சுந்தர

மூர்த்திகள் சரித்திரத்தையே வகுத்துரைத்தருளி, அவரது பெருஞ் சரிதையும் அறுபான் மும்மை நாயனர் சரித்திரங்களும் தொகையடியார் வரலாறும் அடங்கும் வண்ணம் நூலமைத்தது அவரது திறமையை நனி விளக்கும்.

அறிவில்லாத பொருள்களுள் அழகானவற்றைப் பார்க்கிலும் அறிவின் நயமும் அழகும் ஒருங்கமைந்த பொருள்கள் நமது மனத்தை மிகுதியாகக் கவருந் தன்மையன. உடலழகோடு உயிரழகும் சேர்ந்தால், உள்ளக் கவர்ச்சி மிகுதிப்படுத வியல்பு. மாட மாளிகைகளிலும் ஓரறிவுடைய தழைசெறி நன்மரங்கள் நிறைந்த பூம்பொழிலானது கண்கவர் வனப்பு மிக்கது. அறிவு மிகுந்தாலும் உயிரின் குணநயமாகிய உள்ளழகு அமையாதவிடத்து உள்ளக் கவர்ச்சி ஏற்படாது. புலி முதலிய விலங்குகள், ஐயறிவுடையனவாகிலும் அச்சுறுத்தும் சினமும் கொல்லும் இயலும் உடையனவாதலின் அவை வனப்புடையனவல்ல. ஆனல் மெல்லிய சாயலும் மருண்ட பார்வையும் விரைந்தோடித் துள்ளி விளையாடுமியல்பு முடைய மான்கணங்களும், இனிய குரலும் அழகிய வடிவமுமுடைய புள்ளினங்களும் மரங்கொடிகளிலும் மிகுதியாகப் பெரிதும் உள்ளத்தைக் கவருந் தன்மையன. ஐயறிவுடைய இவற்றிலும் ஆறறிவுடையவராய்த் தம்மை யுணர்வாரைத் தாமும் உணர்ந்து நட்புச் செய்யத் தக்கவராய், உடலழகும் உயிரின் மென்மைக் குணநயங்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நன்மங்கையரின் தோற்றமே மக்களது ஐம்புலன்களையும் உள்ளத்தினையும் ஈர்க்கவல்ல கழிபெரு வனப்புடையது. ஆதலால் சரித்திர இயைபுபற்றிப் பெண்டிர் வனப்பினை இப்புராண முதற்செய்யுளிலே ஆசிரியர் விதந்தோதிப் போந்தனர். கற்பிற்சிறந்த பெண்மணிகளுக்கே காதளவோடிய நீண்ட கண்கள் உண்டென்ப.

ஆசிரியர் சேக்கிழார் திருமுனைப்பாடி நாடானது தலையாய மங்கையர் நிறைந்த நன்னுடென்று கூறிய அளவிலேயே அஃது எந்நாட்டிலும் வனப்புமிக்க தென் பதை இனிது குறித்தருளினு ரென்க. மடந்தையரோடு தமது, அருள் வாழ்க்கையை இவ்வுலகினில் நடத்தும் பொருட்டுத் தோன்றிய பெருமானுர் அன்னேரின் செவ்வி இனிதமையப் பெற்ற வளநாட்டினிற் ருேன்றுதல் மிகவும் பொருத்தமானது. வேளாளரின் சிறப்பினை இயம்பு மிடத்து அவரது வாய்மையை விதந்தோதுதல் போலவே, ஆதிசைவ மரபினரைக் கூறுமிடத்தும் வாய்மை குன்ருத் திருமறையவர்கள் என்றது காண்க. சிவமறையோரைத் திருமரபோர் என்பதும் அக்காலத்து வழக்குப் போலும். சிவபெருமானுக்குரிய திருப்பெயரான சடையனுர் என் பதே சுந்தரமூர்த்தி நாயனுர்தந் தந்தையார்க்கும் பெயராக வமைந்தது. அவர்தம் மனைவியார் அவரோடிசைந்த உணர்ச்சியுடையரா யிருந்தாரென்பது இசைஞானியார் என்ற அவர் பெயரால் விளங்குகின்றது. சத்தியின் வடிவம் தடையிலா ஞானமென்று சொல்லுஞ் சிந்தாந்த நூற்கருத்துக் கேற்பவும் இசை ஞானியார் என்ற பெயர் வாய்த்திருப்பது காணத்தக்கது. 'ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை யிசை ஞானியார்' என்றதுங் காண்க. நமது நாயனுர்க்கு நம்பியாரூரர் என்ற நாமமே அவரது பெற்ருேரால் ஆதியில் இடப்பெற்றதாகத் தெரிகிறது. நம்பி என்பது ஆண்மக்கட்குச் சிறப்புப் பெயராகும். ஆதிசைவர்க்கே அது மரபுப் பெயரென்பாரும் உளர். மரபுப்பெயரை இயற்பெயருக்கு முன்னமைத்தல் இலக் கணத்திற்கு ஒத்தது. சுவாமி என்ற சொல்லை இக்காலத் தில் வழங்குகின்ருர்கள். 'சுவாமி விவேகாநந்தர்' என் பது காண்க. ஆரூரரென்ற பெயர் திருநாவலூரிற் பிறந் தவருக்கு இடப்பெற்றதற்குக் காரணம் தெளிவாகத்

தெரிந்திலது. நாயனாரது பெற்றோர்கள் திருவாரூர்ப் பெருமானிடம் மிக்க அன்புடையராய்த் தமது அருமைப் புதல்வருக்கு அவர் பெயரை இடக் கருதினர் போலும். ஊரின் பெயரால் இறைவருக்குத் திருப்பெயரமைக்கும் வழக்கு அக்காலத்திற் பெரிதும் பரவியிருந்தது போலும். 'தில்லை நாதர்' 'நெல்லை நாதர்' 'குற்றாலநாதர்' முதலிய சொற்றொடர்களும் அவ்வழக்கினை விளக்கும். சுந்தரர் என்ற திருப்பெயர் நமது நாயனார் புராணத்துட் காணப் படவில்லை திருநாவுக்கரசர் புராணத்துள் 'அறந்தரும் நாவுக்கரசு ஆலால சுந்தரரும்' என்றவிடத்து அது வந்துள்ளது.

ஆண் குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி யணிதல் பண்டையோர் வழக்கு. அது திருமாலின் ஐம்படை வடிவுடையது என்பர். திருமால் காத்தற்கடவுளாதல் பற்றி அவரது திருவருள் உளவாதற்பொருட்டு இவ் வணியை முன்னோர் அணிந்தனர் போலும். புலிப்பற்றாலி யணிதல் புறநானூற்றிற் கூறப்பட்டது. குழந்தைப்பருவங் கழிந்த விடத்து அத்தாலியைக் களைந்துவிடுதல் மரபென் பது நெடுஞ் செழியனது இளமையைக் கூறும் புலவர் 'தாலி களைந்தன்று மிலனே' என்றதால் இனிது விளங் கும். புலி நகத்தினை நோய் நீக்கத்தின் பொருட்டுத் தாலியிற்சேர்த்துக் குழந்தைகட்கு அணிதல் இக்காலத்துங் காணப்படுவது. காலிலணியுஞ் சதங்கையும் நெற்றியி லணியுஞ் சுட்டியும் புதல்வியர்க்கே சிறப்பின வாயினுங் குழந்தைகளுள் இருபாலார்க்கும் அணிதல் பண்டை வழக்கமே. அரைஞாண் ஆண் மக்கட்குச் சிறந்ததோ ரணியே. சிறுதே ருருட்டுதல் குழந்தைகட்கு நடை வலியுறு தற்குரியதோர் நல்விளையாட்டாகும். பிள்ளைத்தமிழில் இதற்குத் தனிப்பதிகம் ஏற்பட்டுள்ளது.

அக்காலத்தில் திருமுனைப்பாடி நாட்டில் அரசாண்ட

சிற்றரசர் முனையரைய ரென்னும் பட்டப்பெயருடையா ரென்று தெரிகிறது. அவர்கள் பல்லவரின் வேருயவரோ ஒரு பகுதியாரோ என்பது இனிது விளங்கவில்லை. நரசிங்க முனையர் என்ற சொற்றொடர் அரசரது வைணவ சமயத்தைக் குறிக்கு மென்பாரு முளர். சடையனருக்குப் பெரு நண்பராதலால் இவ்வரசர் சைவரே என்பாருமுளர். திருவருளால் உதித்த இளந்தோன்றலார் அரசருக்குக் காதலை விளைத்தது ஒரு வியப்பன்று. அரசர் காதல் கூரத் தக்க வனப்பினராய் விள்ங்கினமையின், ஆரூரர்க்கே அழகரென்ற பெயர் தகும் என்பது அறியற்பாற்று. சீருஞ் செல்வமும் பெறவந்த அருட்புதல்வர் எம்மரபி னுஞ் சிறந்த ஆதிசைவமரபின் சீரும், கவலையற்று அரசிளங் குமரராய் வளருஞ் செல்வமும் பெற்றன ரன்றே.

அக்காலத்திலே அரசர், ஆதிசைவர் முதலிய பிற மரபிற் பிறந்த புதல்வர்களைக் காதன் மகவாகப்பெற்று வளர்த்தல் வழக்கென்பது புலனாகின்றது. அரசர்க்குக் காதற்பிள்ளையா யிருந்தும் அரசர்க்குரிய கலைகளைப் பயிலாது, அந்தணர்க்குரிய வொழுக்கத்தையும் நற்கலை களையுமே பயின்றனர். நமது நாயனர் மணப்பருவத்திற் குரிய ஆண்டு யாதென்று புராணமுடையார் விதந்திலர். பதினாண்டிற்கு மேற்பட்ட பருவமே அதற்குரித்தென் பது நூலாராய்ச்சியாற் புலனாவதொன்று. சுந்தரமூர்த்தி பதினெட்டாண்டுதான் நிலவுலகிற் றிகழ்ந்தனரென்ற பாட்டினை ஏற்றுக்கொள்ளின், அவர் பதினெட்டாண்டு நிறைவதற்குப் பலநாட்கு முன்னமேயே அவர் திருமணம் தொடங்கி யிருக்கவேண்டுமென்பது தெளிவு. இறையனு ரகப்பொருளுரையிலுந் தலைவருக்குப் பதினாறாட்டைப் பிராயமே குறிக்கப்பட்டது.

குலமுறைகள் அக்காலத்திலேயே நன்கு நிலைத்துவிட்ட

மையால், சைவ அந்தணர் மரபிலே தக்க கோத்திரத்திலே, நமது நாயனாருக்கு அவர் பெற்றோர் இல்லாளைத் தெரிந் தெடுத்தனர். மணமகனைச் சார்ந்த நலஞ்சிறந்த முதியோர் பெண்ணினது பெற்றோர்பாற் சென்று பெண்பேசுதலும், மணநாளினைத் தீர்மானித்து மணத்திற்குரிய பொழுதினை எழுதிய ஓலையை ஆடவரும் பெண்டிரும் மணமகனது பெற்றோர் மாட்டு எடுத்துச் செல்லுதலும், பெண்ணி னைச் சார்ந்த இருபாலாரும் அதனை ஏற்றுக்கொள்ளு தலும், யாவர்க்குந் திருமண அறிவிப்புச் செய்தலும், திருமணத்திற்கு முன்னரே ஆடவர்கள் கூடிப் பாலிகை களில் முளையிட்டு அவற்றை வளர்த்தலும், பெண் வீட்டில் திருமணம் நிகழ்த்துதலும், திருமணநாட்குத் தலை நாளிலே மணமகனுக்கு அறநூல் விதிப்படி காப் புக்கட்டுதலும் அக்காலத்து வழக்கங்களென்பது இச் சரித்திரத்தாற் புலனாம். திருமண நாளன்று மணமக னுக்கு நறுநீர் மஞ்சனம் ஆட்டுவித்தலும், மஞ்சள் விர விய கலவைப் பொடியைப் பூசுதலும், ஈரம் புலர்தற் பொருட்டுக் குடுமிக்கு அகிற்புகையூட்டுதலும், சிக்கறுத் துச் சிகைமுடித்தலும், பட்டாடை யுடுத்துதலும், பச்சைக்கருப்பூரம் பனிநீர் கலந்த சந்தனக் குழப்பு சாத்தி மோதிரம் அணிவித்தலும், நறுமலர் மாலையும் கவின் மிக்க அணிகளையுஞ் சாத்தி மணக்கோலஞ் செய்தலும் அக்கால வழக்கே. எல்லாவற்றிலுஞ் சிறப்பாகத் திருநீற் றினையுங் கண்டிபினையுமே நாயனார் பொருளாகக் கொண் டது அவரது ஒப்பற்ற உயர்நிலைமை விளக்குமென்க. அரசர் திருவும் அந்தணர் சிறப்பும் ஒருங்கியைந்த திரு மணமானது யாவரும் பாராட்டும் பெரு விழாவாய் இலங் கிற்று. மணமகன் நலன் அமைந்த குற்றமற்ற குதிரை யின்மேலேறித் திருமணப் பந்தர்க்குச் செல்லுதல் இக் காலத்தின் வழக்கின் வீழ்ந் தொழிந்தது போலும்.

மகமதியர்க்குள்ளேயே அவ்வழக்கம் இக்காலத்துக் காணப்படுகின்றது. அவர்கள் தமிழரிடமிருந்து அதனைக் கற்றூர்களோ தம் மதவழக்கமாய்க் கைக்கொண்டார்களோ தெரியவில்லை. நமது நாயனர் ஏறிச் சென்ற குதிரை யோகப்புரவி என்னப்பட்டது. அச்சொற்றொடர் இரு பொருளுடைத்து. அதன் பொதுப்பொருள் நல் ஊழினைத் தரும் பரி என்பது. நுண்பொருள் நாயனரது ஞான வாழ்க்கைக் கேதுவாகிய சிவயோகமென்னுங் குதிரை என்பது. நீறு சாத்திப் புரவி மேற்கொண்டார் என்பதனுலும் அது பெறப்படும். நாயனரது பரிசனங்கள் தத்தம் ஊர்திகளிலேறி உடன் சென்ற காலை கடல் போன்ற முழக்கமும் ஊரெங்கும் நிறைந்த நறுமணமும் யாண்டும் பரவின. நறுமணம் பரவியதைக் குறிக்கும் ஆசிரியர் மணம் வந்த புத்தூரென்று இரட்டுற மொழிந்தமை காண்க. வாசனை நிறைந்த புத்தூர் எனவும், மணத்தின் பொருட்டுச் சுந்தரமூர்த்தி வந்த புத்தூர் எனவும்; மணத்திற்கு வந்த புத்தூரேயொழிய மணம் நிகழ்ந்த புத்தூரன்று எனவும் ஆசிரியர் பெற வைத்தமை வியக்கற்பாலது. மணமகன் பரியினின்றும் இழிந்து திருமணப் பந்தர்க்குட் சென்றகாலை வெண் சங்க முழக்கம் நிகழ்ந்ததென்றமையால், மணப்பொழுதிலே சங்கம் ஒலித்தல் ஆதிசைவ மரபினர் வழக்கென்பதுந் தெளியப்படும். சுந்தரமூர்த்தி நாயனர், திருக்கைலாயத்தில் நின்று நிலவுலகிற்கு இழிந்தமையுங், கைலாயத்திலேயே நிலவுலகத்தில் அவரை ஆட்கொண்டருளுவதாகச் சிவபிரான் உறுதி கூறியதும்,

ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்

என்ற அடிகளாற் போதரும். சிவபெருமான் அக்காலத்து அந்தணர் திருவேடம் பூண்டு வந்தது அந்தணர் பேரவைக்

கண் தமது நோக்கத்தை நிறைவேற்றுதற் பொருட் டென்க. நெற்றியிலே திருநீறும், காதிலே கண்மணியா லாகிய குண்டலமுங், கழுத்தில் கண்மணிமாலையுந், தோளில் நூலும் வெளுத்த மேலாடையுங், கையிற் குடை யும் மாற்றுடையுங் குசையும் முடிந்த மூங்கில் தண்டும், அரையிற் கோவணமும் உடையும் திருவேடத்தின் பகுதிகளாகக் கூறப்பட்டன.

கமண்டலமும் ஆசனமுங் கூறப்படவில்லை. கல் லாடை அணியாமையாலும், துகில் முடிந்த தண்டொடு தோன்றினமையாலும், மூப்புப் பருவத்தாலும் கடவுள் வானப்பிரத்த வடிவங்கொண்டு வந்தாரென்ப. மூங்கில் தண்டு முக்கோல் வடிவினதென்று கூறப்படவில்லை. மூப்படைந்தாலும் பேரழகுடைய திருமேனி தரித்து வந்தது அவையினர் மனத்தைக் கவரும் மதிப்பொடு திகழக் கருதிப்போலும். மறை என்ற சொல் மந்திரத் தையும் உபதேச உரையையுங் குறிக்கும். ஆயிரம் என்ற சொல் பல என்னும் பொருட்டு. மறையாயிரம் மொழிந்த திருவாயான் என்றதற்கு அளவுபடாத மறைகளை அரு ளிச்செய்தவன் என்று பொருளுரைக்கப்பட்டதுங் காண்க.

மணத்தினை வேள்வி என்று கூறுவது ஒரு வழக்கு. "நின்னுடைய வேள்வியினை நீ முயறி என்றான்" என்றது காண்க.

நமது நாயனர் காலத்திலே ஒருவன் தன்னையும் தன் சந்ததியாரையும் அடிமையாக்கிக் கொள்ளும் வழக்க மிருந்ததென்று புலனாகின்றது. அந்தணர்க்குள் அவ் வழக்கம் இல்லாதிருந்த போதிலும் உடன்படிக்கையினால் அந்தணனுந் தன்னை யடிமையாக்கிக் கொண்டால், அது வழக்கத்திற்கு மாறென்று கடியப்படுவதில்லை என்றுந் தோன்றுகிறது. ஆனல் சிவபெருமான் சுந்தரமூர்த்தியை

அடிமைகொள்ளப் போந்ததற்கு முன் அந்தணர் அந்தணருக்கு அடிமையாகும் வழக்கம் அறவே இல்லை என்பது தெளிவு. ஆதலினாற்றான் ஓலை காட்டவந்த அண்ணலைப் பித்தனென்று எள்ளி யாவரும் நகையாடத் தொடங்கினர். நமக்கு வியப்பாவது யாதெனில், வழக்கில் இல்லாத ஒன்றினை உடன்படிக்கையால் அமைத்துக் கொண்டவிடத்து அது மறுக்கப்படா திருந்ததேயாமென்க. ஒரு குலத்தான் மற்றொரு குலத்தானோடு உண்ணுதல் வழக்கமில்லாதகாலை அங்ஙனம் உண்ணுதல் தவறென மறுக்கப்படுமன்றோ? பிராமணனொருவனும் பிற வகுப்பினனொருவனும் தம்முள் இசைந்து உடனுண்டலை மேற்கொண்டால், அஃது அக்காலத்து மறுக்கப்படுமோ படாதோ என்ற ஐயம் நிகழற்பாலது. குல வரம்பினைப் பாதுகாக்கும் வழக்கம் கடுமையாக இருந்திருப்பின் அதற்கு மாறாய உடன்படிக்கை மறுக்கப்பட்டொழியும். அன்றாயின் உடன்படிக்கை வழக்கத்தை வெல்லுந் தகைமையாயிருக்கும். இச்சரித்திரத்தில் அந்தணர் அந்தணருக்கே அடிமையாவதாகக் கட்டுப்பட்டமையாற் குலவரம்பு கடத்தலைப்போல அது குற்றமாகாதென்று கொண்டனர் போலும்! குலவரம்பு அக்காலத்திலே மிகவுந் திட்பமாக அமைந்திலதென்பது மேற் காட்டப்படும்.

இனி, ஆட்சி ஆவணம் சாட்சி என்னும் மூன்று ஆதரவுகளை வழக்குத் தீர்ப்பதற்குக் கருவியாகக் கொண்டனரென்று தெரிகிறது. இம்மூன்றினும் ஆட்சியே முதற்கட் கூறப்பட்டமையால், அவ் வழக்கமே தலையாய சான்றாகக் கருதப்பட்டது. ஓலைப் பத்திரம் ஒப்பினவற்றை எழுதிக்கொள்ளப் பெரிதும் பயன்பட்டதாகத் தெரிகின்றது. ஆனால் அரசாங்கத்தார் பத்திரங்களைப் பதிவு செய்யும் (Register) வழக்கம் அக்காலத்தி லில்லை.

காட்சி என்பது நிகழ்ந்ததொன்றைக் கண்டவர் பகருஞ் சான்று. வழக்குகளைத் தீர்ப்பதற்கு ஊராரது பேரவையே ஒவ்வொரு ஊரிலும் நியாய மன்றமாக இருந்ததென்று தோன்றுகிறது. ஒவ்வொரு மரபினருக்கும் தனித்தனி மன்றங்க ளிருந்திருக்கலாம். திருவெண்ணெய் நல்லூரி லிருந்த அவை அந்தணர் பேரவை. பழையனூரிலிருந்த அவை வேளாளர் பெருமன்றம். எவ்வூரில் எம்மரபினர் மிகுதிப்பட்டாரோ அம்மரபினுட் சிறந்தோரால் அவ் வூரில் நியாயமன்றம் நடைபெற்றிருத்தல் கூடும்.

திருவெண்ணெய் நல்லூர் அந்தணர் பேரவையின் அங்கத்தினர் அவ்வூரிலுள்ள அந்தணர் யாவருமோ அல் லது அவருள் தெரிந்தெடுக்கப்பட்ட சிலரோ என்பது விளங்கவில்லை. ஆயினும் அவ்வந்தணர் அவைக்கண் தலைமை பூண்ட சிலரே வழக்குகளை உசாவிக் கேட்டுத் தீர்ப்புச் செய்ததாகவும் பிறர் ஒப்புரைத்ததாகவுங் கருத இடமுண்டு. 'அந்தணர் அவையின் மிக்கார்' என்ற திருப் பாட்டை உற்று நோக்குக. மூல ஓலை படியோலை என்ற வழக்கமும் ஆவணத்திற்கு மேலெழுத்திடுதலுங் கைச்சாத் திட்டாரது எழுத்தினை அவர்தம் பிற எழுத்துக்களோடு ஒப்பு நோக்கி உண்மை தெளிதலும் இக்காலத்திற் போலவே அக்காலத்து நியாய மன்றங்களினும் நிகழ்ந்தன என்று தெரிகின்றது.

வெகுளி மிகுந்தகாலைத் தவறு ஏற்படுதல் இயல் பென்பது சுந்தரமூர்த்திகள் வழக்கு முடிவதற்கு முன் னேயே ஓலையைப் பிடித்துக் கிழித்தமையால் தெளியப் படும். திருவருள் பெறுந் தகுதியுடைய இவர்க்குச் சினம் எழுந்தமை கதிரவன் எழுவதற்கு முன்னுள்ள குமரி யிருட்டுப் போல்வதொரு நிலையாம். நியாய மன்றங்களில் இடைவிடாது வல்வழக் கிடுபவர்களைப் பழைய மன்றாடி என்பர் போலும். சிவபெருமானைப் பழைய மன்றாடி

யென்பது இரட்டுற மொழிதலாம். முன்னைப் பழம்பொருளாய்த் தில்லை மன்றுள்ளும் அன்பர் உள்ளக் கமலமிசையும் ஆடும் அண்ணலென்பது சிறந்த பொருள். இரும்பணையுங் காந்தம்போல இறைவர் பின் நாயனார் சென்றது முதற்கண் அச்சத்தாலும் பின் அன்பினாலு மென்க. 'நம்பி நீடும் பெரு விருப்பினோடு தனித் தொடர்ந்தழைப்ப மாதோடு உம்பரின் விடைமேற் றோன்றி' என்றமையால் வெறுத்து வழக்காடியபோது வெளிப்படாதிருந்த முதல்வன், அன்போடழைத்தகாலை வெளிப்பட்டருளினன் என்பதறிக. தோன்றிய முதல்வன் முற்பிறப்பிலேயே வன்றொண்டர் தனக்கு அடிமையாய் இருந்ததையும், மாதர்பாற் பற்றுவைத்ததின் காரணமாகத் தானே மண்மீது அவரைப் பிறக்கும்படி பணித்ததையும், பிறவித் துன்பத்தினின்று தான் அவரைத் தடுத்தாண்டதையும் இயம்பி யருளியவுடனே சுந்தரமூர்த்திக்கு முற்பிறவி உணர்ச்சி ஏற்பட்டமையான் ஈன்ற பசுவின் கனைப்பினைக் கேட்ட கன்று போலக் கதறிப் பதறி அன்பு வெள்ளத்திலாழ்ந்தனர். முற்பிறவியிற் கயிலாயத்தில் இருந்தமையும் மாதர்பால் உள்ளம் வைத்தமையும் இவ்விடத்திலே விதந்தோதவில்லை.

'முன்புநீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப்
பின்புநம் மேவ லாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்துவந்து
நன்புல மறையோர் முன்னர் நாம்தடுத் தாண்டோ மென்றார்'

என்றது காண்க.

இறைவர் குறிப்பாக உணர்த்திய அளவிலேயே வன்றொண்டர்க்கு முன்னுணர்ச்சி விரைவின் மூண்டெழுந்தது. உள்நின் றுணர்த்துவோனும் அவனே யாதலின், வெளித்தோற்றம் உட்செயலுக்குக் கருவியாகவே அமைந்

தது. முதற்கண் மானுடச் சட்டை சாத்தி வந்து வழக்கிட்ட இறைவன் பின்னர் விடைமீது தோன்றி யருள் செய்தமையால் சகலர்க்கும் பிரளயாகலர்க்கும் அருள் செய்யும் முறைகள் இங்கே கலப்புற்றன. மயக்கம் மிகுந்த முதல் நிலையில் சகலர்க்கருளும் முறையையும் திருவருட்டுறையுட் புகுந்து மயக்கந் தீர்ந்து நாயனர் அன்போடு அழைத்த காலை இருமலத்தார்க்கருளும் முறையையும் இறைவன் பயன்படுத்தியதுங் காண்க. நாயனர் முற்பிறவியில் கடவுள் உலகத்தில் வதிந்தவராதலாலும், வழக்கு முடிவில் பிற மக்களினின்றும் பிரிந்து இறைவனைத் தனியே தொடர்ந்தழைத்தமையானும் அவர் விடைமேற் றோன்றி யருளப்பெற்றனர் என்க.

'எண்ணிய ஓசை ஐந்தும் விசும்பிடை நிறைய' என்பதற்கு ஐந்தெழுத் தொலி வானில் முழங்க என்று பொருள் கொள்ளுவாரு முளர். சிவபெருமான் விடைமேற் றோன்றிய காலைச் சுந்தரமூர்த்தி நாயனருக்கு உபதேசம் பண்ணினதாகத் தெரியவில்லை. அவருக்கு முற்பிறப்பு நிலையை உணர்த்தி 'நீ வன்மை பேசினமையால் வன்றொண்டனென்னும் நாமம் பெற்றாய். நமக்கும் சிறந்த அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் நம்மைத் தமிழிற் பாடுக' என்று கட்டளை கொடுத்து மறைந்ததாகப் புராணங் கூறுகின்றது.

'மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட னென்னு நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகு மாதலால் மண்மே னம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்'

"முன்பெனைப் பித்தனென்றே மொழிந்தனை யாதலாலே
என்பெயர் பித்தனென்றே பாடுவாய்"

என்றது காண்க.

வன்றொண்டரென்ற பெயரே இறைவனால் இவர்க்கு முதற்கண் இடப்பட்டதாகத் தெரிகிறது. 'நமக்கும் அர்ச்சனை பாட்டே' என்ற விடத்துச் சுந்தரமூர்த்தி நாயனார் பித்தனென்ற சொல்லைத் தமக்குப் பெயராக அமைத்துப் பாடுவிக்கக் கருதிய இறைவன் அக்குறிப்பை இதன் கண்ணே வைத்தார். அஃதெங்ஙனமெனில், இவ்வழக்கில் 'நீ வன்றொண்டப் பெயர் பெற்றனை. யாம் பித்தனென்ற பெயர் பெற்றேம்' என் றியம்புங் குறிப்பு நமக்கும் என்பதிலுள்ள உம்மையாற் போதரும். 'சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டே' என்றதனாலும், 'சொற்றமிழ் பாடுக' என்றதனாலும் செந்தமிழ்த் திருவருட் பாடல்களினால் இறைவனை வழுத்துதலே பிற எவ்வகை அர்ச்சனையிலுந் தலைசிறந்ததென்பது தெளியப்படும். பொருள் விளங்காத மொழியிலே படர்க்கையிடமாகவுள்ள மந்திரங்களைச் சொல்லி இறைவனை மலர்தூவிப் போற்றுவதிலும், தேவார திருவாசகப் பாடல்களினால் மலர் தூவுதலே அன்பினை வளர்த்து அருளினை மல்குவிக்க வல்லதாம் என்க. 'தூமறை பாடும் வாயார்' என்றது சுத்ததத்துவங்களில் எழும் ஓங்காரத் தொடர்பான நால்வகை வாக்குகளையுந் தோற்றுவிப்பவர் என்பது பொருள். உலகப்படைப்பு முதல் இறுதிவரை தூய மந்திரமாகிய ஓங்காரத்தை எப்பொருளின் உள்ளத்தும் ஒலித்துக்கொண்டிருப்பவர் என்றும் பொருள் கொள்ளலாம். இங்கே 'தூமறை' என்றது வடமொழி நான்மறை அல்லவென்பது திருநான்மறை விளக்கத்துள் விரித்துரைக்கப்பட்டது. ஆண்டுக் காண்க.

'ஐந்தெழுத்தும் பாடிய பொருளாய் உள்ளான்' என்றமையால், ஐந்தெழுத்தையுமே தூயமறை என்றுங் கொள்ளலாம். ஐந்தெழுத்தானது உயிரின் பந்தநிலையையும் வீட்டுநிலையையும் விளக்குவதாய் இறைவனது

மறைப்புச் சத்தியினியல்பையும் அருட் சத்தியினியல் பையும் நன்கு குறிப்பித்துச் சிவத்தை யடைவிப்பது. சிவத்தினியல்பையும் அவன் உயிர்களின் அருளால் மன்னி அம்மையப்பராய்ச் செறிவொழியாது நிற்குந் தன்மையை யும் இனிது விளக்குதலால், இறைவனே ஐந்தெழுத்தின் பொருளாவான் என்றனர். ஆசிரியர் சேக்கிழார் நமது நாயனுர் வீட்டின்பத்தையே விரும்பும் பெருந்தகையாராத லின், அதற்கறிகுறியாக 'இறைவன் திருமன்றினுள் எடுத்த திருவடியையே நினைந்து பாடத் தொடங்கினுர்' என்ருர். தம்மை இறைவன் ஆட்கொண்டபோதும் 'மன்றுளீர் செயலோ வந்து வலிய ஆட்கொண்ட' தென்ருர்.

சிவபெருமான் அந்தணவடிவத்துடன் எழுந்தருளி நாயனுரை நோக்கி நீ எனக்கு அடிமை என்று மொழிந் ததே இறைவன் மானுடச் சட்டை சாத்தி வந்து குரு மொழி வைத்ததாமென்றும், விடைமேற்ருேன்றி முன் னுணர்வு நல்கியதே ஞானத்தைக் கொடுத்ததாமென்றுங் கருதுப. 'உய்யக் கொண்ட கோதிலா அமுதே' என்றது, அழிவில்லாத பேரின்பத்தை இறைவன் தமக்கு ஈந்தருளி னமையா லென்க. விண்ணவரமுது, பிறவியை ஒழிக்கும் ஆற்றலுடைய தன்ருதலின், அது திருவருளமுதம் போலக் குற்றமற்றதன்று. அளவற்ற பேரின்பத்தை எதிர் பாராது, முழுதும் நுகரப்பெற்ற அன்பர்க்குத் தன்பாற் கழிபே ரிரக்கமும், இறைவன்பால் உள நிறைந்து எல்லை யின்றிப் பொங்கித் ததும்பும் உவகையும் உளவாய விடத்து ஒன்றும் உரைக்க இயலாததோர் பெருநிலை வாய்ந்தமைதலின், 'குணப்பெருங் கடலை நாயேன் யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன்' என்றனர்.

வேதிய னாகி யென்னை வழக்கினுல் வெல்ல வந்த
ஊதிய மறியா தேனுக் குணர்வுதந் துய்யக் கொண்ட

கோதிலா வமுதே யின்றுன் குணப்பெருங் கடலை நாயேன்
யாதினை யறிந்தென் சொல்லிப் பாடுகே னெனமொழிந்தார்.

நமது நாயனாரது திருவருட்பாடல்கள் இம்மை, மறுமை, வீடென்னும் மும்மைக்கும் பெரும்பயன் தருவ தாதலின், வாரேனும் அதனைக் கற்றுப் பயனடைதல் கூடும். ஆதலால் இத் ‘ தரணிமுதல் உலகெல்லா முய்ய வெடுத்தார் ’ என்றனர். இந்தளப்பண்ணில் இசை நயம் மிக நமது நாயனார் பாடினமையால் அவர் இசையினும் நிகரில்லாதவரென்றுந் தெரிகின்றது. அவருடைய அன்பின் பாடலே இறைவனுக்கு ஏற்றதாகலின், ‘இறையான் மகிழிசை பாடினன் எல்லாம் நிகரில்லான் ’ என்றனர்.

நமது நாயனாரையே தமது வழிபடு கடவுளாக இடைவிடாத பேரன்போடு நினைந்து சிவலோகம் பெற்றவர்களுள் முதல் நின்றவர் அவரை மணக்கவிருந்த சடங்கவி சிவாசாரியாரின் புதல்வியாவர். வேறு மணங்கருதாது நமது நாயனாரையே ஒழியாதுணர்ந்து உயர் சிவலோகம் பெற்ற இந்நங்கை கற்பிற்சிறந்த திலகவதியார் போலச் சிறந்த பெண்ணரசியா மென்பது தெளிவு.

## ௫. தில்லைவணங்கித் திருவாரூரடைதல்

திருவெண்ணெய் நல்லூரிலே நமது நாயனார் திருவருள்பெற்ற பின்னர் அவர் திருநாவலூரை யடைந்து அங்கு வீற்றிருக்குஞ் சிவபெருமானைப் பாடினர். பின்னர்த் திருத்துறையூருக்குச் சென்று திருப்பதிகம்பாடி இறைவனை மலர்கொண்டு போற்றினர். பிற பல தலங்களையும் பணிந்து தில்லைக் கூத்தரை வழிபடுங் கருத்துடன் சிதம்பரத்திற்குப் புறப்பட்டார். சந்தனமும், அகிலும், மயிற்பீலிகளும் மலர்களும் மணிகளும் வீசி வரும் பெண்ணையாற்றினைக் கடந்து நமது நாயனார் திருவதிகை யடைந்து திருநாவுக்கரசர் திருத்தொண் டியற்றிய அத்திருப்பதியை மிதித்துச் செல்வதற்கு அஞ்சிச் சித்தவடம் என்னுமிடத்திலுள்ள மடத்திலே தங்கிப் பரிசனங்களோடு துயிலும்போது திருவீரட்டானப் பெருமானார் ஒரு முதிய மறையவர் வடிவோடு மடத்திற்புகுந்து, அவர் முடிமீது தமது திருவடித் தாமரைகளை வைத்துப் பள்ளி கொள்வா ராயினர். அப்போது திருநாவலூரர் அதை யுணர்ந்து அங்ஙனம் பள்ளிகொண்டவரை நோக்கித் தன்னுடைய தலைமேல் அவருடைய காலினை வைத்தது எதனாலென்று வினவ, மறையவர் என்னுடைய மூப்பினாலே திசையறியாது அங்ஙனம் செய்துவிட்டேன் என்றனர். நாயனார் அதனை ஒப்புக்கொண்டு வேறோரிடத்திற் சென்று துயின்றனர். அங்கேயும் அம் மறையவர் தமது திருவடிகளை நீட்டியருள இங்கேயும் வந்து பலகால் மிதிக்கிற நீர் யார் என்று உசாவியவுடன் நீ என்னை யறியாயோவென்று சொல்லி அவர் மறைந்தருளினார். அப்போது திடுக்கிட்டு என் செய்தேனெனக் கழிவிரக்கமுற்று நமது நாயனார் 'தம்மானை யறியாத சாதியாருளரே' என்னுந் திருப்பதிகம் பாடித் திருவதிகைமுதல்வரைப் பணிந்தனர்.

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானை கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைக்கொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னு
மாசையால் வாழ்கின்ற வறிவிலா நாயே
னெம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே.

பொன்னும் மணியும் யானைமருப்பும் ஒள்ளிய முத்தும் நறுமலருமாகியவற்றை அலை யென்னுங் கைகளாற் கொண்டுவந்திட்டுத் திருவதிகைப் பெருமானை வழிபாடு செய்யுந் திருக்கெடில நதியிற் படிந்து திருவீரட்டான முதல்வரை வணங்கிய பின்னர், நமது நாயனூர் குறளுரு வாய் மூவடி மண்ணளந்த வாமனர் வழிபட்ட திருமாணி குழியைச் சேர்ந்து அத் திருப்பதியிலுறையு மாணிக்க வரதரை வணங்கித் திருத்தினைநகரைப் பணிந்து பாடி, யாழும் முழவும் மந்திரமும் அரம்பையர் இன்னிசையும் நீங்காத தில்லை நகர்ப்புறத் தடைந்தார். கயல்மீன்கள் பாய்ந்து செந்தாமரை மலர்களை யசைக்கும் புள்ளொலி மிக்க வாவிகளும், மலங்குமீன்கள் திரியும் வளம் பொருந் திய வயல்களுஞ் சூழ்ந்ததாய்த், தொழுவார்களது மும் மலங்களையுங் கெடுத்து வீடு நல்குந் தில்லைப்பதியின் எல்லையை வணங்கிப் புன்னை, மா, மகிழ், சிவதை, தென்னை, இலவங்கம், நாரத்தை, கமுகு, குங்குமம், வாழை, இலுப்பை, வஞ்சி முதலிய பல மரங்கள் எங்கும் நெருங்கிய முகிற்கூட்டங்கள் தங்குஞ் சோலைகளை உடையதாய்க் குயில்கள் மிடைந்து கூவுவதாய் விண்ண வர் நாட்டிலுஞ் சிறந்து விளங்குந் திலலையின் புறத்துள்ள மருத நிலங்களைக் கடந்து அந்நகர் மருங்கு சென்றார். வன்னி, கொன்றை, சுரபுன்னை, சண்பகம், சந்தனம்,

பலாசு, செருந்தி, மந்தாரம், கோங்கு, குரவு, புன்னை, பாதிரி, கூவிள முதலிய மரங்களும், சிறுசண்பகம், முல்லை, மல்லிகை, நந்தியாவர்த்தம், அலரி முதலிய பன் மலர்களும் பொருந்திப் புனிதம்பெற்ற நந்தவனங்களை இறைவன் வடிவாக வணங்கிச் சென்றுர். உமையும்மை காணவும் ஏழுலக முய்யவுந் திருநடன மியற்றும் இறைவர் திருக்கூத்தினைக் காண்பான் மேகமண்டல மளாவிய தில்லை மதிலைக் கடல்சூழ்வதுபோலச் சூழ்ந்து கிடந்த அகழியை நமது நாயனுர் கண்டு மகிழ்வடைந்தார். அவ்வகழியிற் படர்ந்ததாமரையிலுள்ள வண்டுகள் அதன் கரையிலுள்ள தாழம்பூவின் வெண்தாதுவிற் படிந்து தூயவெண்ணீ றணிந்து அடியார்கள்போன்று முரல் வதைக் கண்டு நம்பியாரூரர் மிகுந்த அன்போடு சென்ற னர். நான்மறை யொலியுங் கொடிமணி யொலியும் நாற்றிசையிலும் வெளிவருதற்கேதுவாய் அயனது நான்கு முகங்கள்போல விளங்குந் தில்லையின் நான்கு திருவாயில் களுள், வடக்கு வாயிலின்முன் சென்று நம்பியாரூரர் தம்மை எதிர்கொள்ளவந்த அடியார்களோ தாமோ முன் வணங்கினு ரென்றறிய முடியாதபடி வணங்கி மகிழ்ந்து கூத்தப்பிரானைக் காணும் பேரவாவுடன் அழகிய திருமாளிகைகள் விளங்குந் திருவீதியுட் புகுந்தார். பல்வகை இன்னிசைகளும் நிறைந்த வீதியின்கண், உயர்ந்த திருமாளிகைகளிடத்துக் கட்டப்பட்ட வெண்கொடிகள் ஓமப் புகையாலாகிய முகில்களின் நடுவே மின்னிய மின்னல்போலத் தோன்றி மிளிர்ந்தன. எல்லா உலகத்தி லுள்ள அழகும் தில்லைப்பதியில் வந்துற்றனவென்று சொல்லும்படி பல்வகை வளங்களும் மிகுந்திலங்கிய தேரோடுந் திருவீதியை நம்பியாரூரர் வணங்கினர். தேவர் கூட்டம் நெருங்கித் திருநந்திதேவரால் ஒழுங்கு படுத்தப் பட்டுத் திருக்கூத்துக் காண்பான் அமயம் பார்த்தொரு

புறம் நிற்ப, பேரன்பர்களுங் கணநாதர்களுந் தடையின்றிச் செல்லும் மாண்புமிக்க திருக்கோயில்வாயிலைத் தாழ்ந்திறைஞ்சிச் சென்னியிற் குவிந்த செங்கைகளோடு நமது நாயனார் திருக்கோயிலுட் சென்றனர். பெருமதில் சூழ்ந்த பேரம்பலமாகிய மேருவை வணங்கி வலம்வந்து மறைகளின் முதலிலும் இடையிலுங் கடையிலும், அடியார்களது உள்ளக்கமலத்திலும் வெளிப்பட்டுத் தோன்றிச் சீர் வளரும் ஒளிமிக்க திருச்சிற்றம்பலத்தின் கண்ணே அணுக்கன் றிருவாயிலை யடைந்து திருக்களிற்றுப்படியின் பாங்கர்ச் சென்று, மாலயனறியா வண்ணம், மண்ணவர் மகிழ, மறைச்சிலம் பொலிப்ப, மன்றுளாடும் பெருமானைத் திருநாவலூரர் கண்டு, தமது கண்ணுங் கையுங் கரணமும் ஒருவழிச் செல்லத் தாழ்ந் திறைஞ்சி ஐம்புல உணர்ச்சியையுங் கட்புலனே கொண்டு மேற்பட, அந்தக்கரணங்கள் நான்குஞ் சிந்தை என்னும் ஒரு கரணத்திலே யடங்கி நிற்க, முக்குணங்களினும் முதனின்ற நற்குணமே தலைப்படப், பிறைசூடிய பெருமானது அளவில்லாத ஒப்பற்ற திருக்கூத்தினால் விளையும் பேரின் பக்கடலுள் திளைத்தும் நீங்காத பெருங்களிப்பால் திருமேனி தளிர்க்கப் பெற்றார். கூத்தப்பிரானது திரு நடனங் காண்பான் தமக்கு இந்நிலவுலகத்திற் கிடைத்த மனிதப் பிறவியே மேலான இன்பமாமென்று கருதி நமது நாயனார் கண்ணருவி பொழிந்து கைம்மல ருச்சிமேற் குவித்து இசை நிறைந்த திருப்பதிகம் பாடிப் பரவிப் பணிந்தார்.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக

இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

தாண்டவ முதல்வரை வணங்கி நின்ற காலை அவருடைய திருவருளால் 'காவிரி பாயும் வயல் புடை சூழ்ந்த திருவாரூர்க்கு வருக' என்ற ஓர் வான்நிழல் மொழியை நம்பியாரூரர் செவிமடுத்தனர். உடனே அவர் திருவாரூர்க்குச் செல்ல விருப்பங்கொண்டு திருவம்பலத்தை வலம்வந்து வெளிப்போந்து எழுநிலைக் கோபுரத்தை வணங்கி, ஆவண வீதி வழியே போய்த் தெற்கு வாயிலைக் கடந்து கொள்ளிடமென்னுந் திருநதிக்கு அப்பாற் சென்றனர்.

## ஆராய்ச்சி

திருநாவலூர் தம்முடைய ஊராதலின் நமது நாயனார் திருவெண்ணெய்நல்லூரி னின்று அப்பதிக்குச் சென்று இறைவனை வழுத்தினார். திருவெண்ணெய் நல்லூரிலே தம்மை ஆட்கொண்ட குறிப்பைத் திருநாவலூர்த் தேவாரத்தில் அமைத்தனர். 'வெண்ணெய்நல்லூரில் வைத்தெனை யாளுங்கொண்ட நாவலனார்க்கிட மாவதுநந்திரு நாவலூரே' என்றமை காண்க. பெண்ணோடு வாழும் உலக நெறியிலே தம்மைத் தமது வினை செலுத்திவிடக்

கூடாதென்றஞ்சி ஞானநெறியிலேயே நிற்கக் கருதினமையால் அவர் திருத்துறையூர்த் திருப்பதிகத்தில் "தலைவா உனைவேண்டிக்கொள்வேன் தவநெறியே" என்றனர். அத் திருப்பதியில் இறைவனை மலரால் அர்ச்சித்து வழிபட்டமையால் சிவஞானிகள் புறம்பேயும் பூசனை செய்ய விரும்பின் அதனைச்செய்வர் என்பது தெளியப்படும். தில்லையம்பலவரிடம் நாயனார் ஆராத காதலுடையாரென்பது முன்னமே யறிந்தோம். திருத்துறையூரில் இறைவனைத் தவநெறிவேண்டி வழிபட்டவுடன் காட்சியால் வீடு நல்குந் தில்லைக்குச் செல்ல மனமெழுதலியல்பே.

அப்பர் பெருமான்மாட்டுவைத்த பேரன்பு காரணமாகவுந் தாம் வழிபடற்குரிய பெருந்தொண்டர் அவரென்று கருதினமையாலும், அவரது திருக்கரத்தால் உழவாரப் பணி செய்யப்பெற்ற திருவிடத்தைத் தாம் மிதித்துச் செல்வதற்குச் சுந்தரமூர்த்திகள் அஞ்சுவாராயினர்.

இதனால் நமது நாயனாரது ஒப்பற்ற அடியார் பத்தி இனிது விளங்குகின்றது. இறைவனாரது திருவடியினையே பெரிதும் புகழ்ந்து பாடித் தமது சென்னிமேற் றிருவடி சூட்டப்பெற்ற திருநாவுக்கரசர்க்கு அருளிய வண்ணமே திருநாவலூரர்க்கும் அருள்செய்வான் அவரது திருமுடிமேல் தமது திருவடிக் கமலங்களைப் பன்முறையும் இறைவர் வைத்தருளினர் போலும். சிவபெருமான் தாமே வலிந்து நமது நாயனாரைத் தடுத்தாட் கொண்டதுபோலத் தாமே வலிந்து அவருக்குத் திருவடி சூட்டுவாராயினர். தவநெறி விரும்பிய தமிழ்நாதருக்குத் திருவடி ஞானம் அருளியவாறுமாம். சுந்தரமூர்த்திகளுடன் பரிசனங்களும் பலர் சென்றனரென்றும், சென்றவிடங்களிலே எல்லாரோடும் நமது நாயனார் நிலத்திலே யாதொரு அமளியை

யும் விரும்பாது படுத்திருந்தனரென்றும் சரித்திரத்தாலே தெரியவருகின்றது.

நமது நாயனூர் தமக்கென ஒருதனி யிடத்தை விரும்பவில்லை. பிறர் தமக்குச் செய்யக்கூடிய உபசாரங்களையும் அவர் பொருட்படுத்தவில்லை. யாவரும் படுக்கும் பொதுவிடத்திலேயே தாமும் துயின்றனராதலின், பொதுமடத்திற் புகுந்த மறையவர் சுந்தரமூர்த்தி மீது திருவடி வைப்பதற்கு இடம் வாய்த்தது போலும். இதனுல் நமது நாயனூரது தவநெறிச் சார்பாகிய துறவுநிலை வெளியாகின்றது. இவர் தமது தோழராதலின் சிவபெருமான் அவரோடு விளையாடினர் போலும். அவர்முடிமேற் றிருவடி சூட்டினமைக்குத் திருவதிகைத் தேவாரத்துள் அகச்சான் றமைந்திருக்கின்றது. கெடிலப்புனலுமுடையாரென்று அப்பர் கெடிலத்தைச் சிறப்பித்தமையால் ஆசிரியர் சேக்கிழார் தென்றிசைக் கங்கை என்று அதனை விதந்தனர். நடனத்திற்குப் பல்வகை இசையும் உடன் பயில வேண்டுமாதலின், எப்பொழுதும் நடக்குந் தில்லைத் திருக்கூத்திற்கு உடன் முழங்கும் ஒலிகளும் எப்போதும் உள்ளன என்பார்,

நரம்புடையா ழொலிமுழவி னுதவொலி வேதவொலி
அரம்பையர்தங் கீதவொலி யறுத்தில்லை மருங்கணைந்தார்

என்ருர்.

இயற்கை நயங்களை இயற்கை முறையில் எடுத்துக் காட்டுவதே நல்லிசைப் புலவரின் தன்மையாதலின், அவ்வாறே ஆசிரியர் சேக்கிழார் தில்லை வரைப்பிலுள்ள இயற்கைப் பொருள்களின் நயத்தை எடுத்துக் காட்டினர். பல்வகை மரங்களை ஈண்டுத் தொகுத்துக் கூறுவது சிறந்ததோர் மரபாகும். வெளிப்படையாகப் போகமும், சிறப்பாக வீடும் அருளவல்ல திருப்பதியாதலின், 'போக

பூமியினும் மிக்கு விளங்கும் பூம்புறம்பணை' என்றும் 'மும்மை மாமலங்களற வீடருடில்லை' யென்றும் புனைந்தனர். தில்லைக்கு மதிலும் அகழியும் அக்காலத்திலிருந்தன வென்று இச் சரித்திரத்தால் விளங்குகின்றது. பேரன்பர்கள் ஏவற்றையுஞ் சிவமயமாகவே கருதுவாரென்பது வெண்தாதுவினால் மூடப்பெற்ற வண்டினைத் தூய நீறு புனைந்த தொண்டரென விசேடித்தமையால் விளங்கும். நமது நாயனார் தில்லைக்கு வடபாலிருந்து வந்தமையால், தில்லையின் வடக்குவாயில் வழியாக அப்பதியிற் புகுந்தனரென்க. எதிர்கொண்டவரை அவர் வணங்குவதற்கு முன்னேயே தாம் வணங்கினது, அவரது தாழ்மை மிக்க உள்ளத்தையும் அடியார்மாட்டுவைத்த பேரன்பையும் விளக்கும். திருவம்பலத்திற் றிருக்கூத்துக் கண்டு கும்பிடச் செல்லும் பெரு மக்கள் இருபெரு வகுப்பினரென்று விளங்குகின்றது. மால், அயன், இந்திரன் முதலிய பெருந்தேவர்களும் பல முனிவர்களுஞ் சமயம் பார்த்து ஒரு புறம் நெருங்கிய விடத்துத் திருநந்தி தேவரால் அடக்கி ஒழுங்குபடுத்தப்பட்டு நிற்பதாதலின், அன்னோர் விடைபெற்றுச் சில காலங்களிலே சென்று கும்பிடும் பான்மையராவர். இவர்கள் ஒரு புறம் நிற்ப, இறைவனை அன்பு வடிவமாகவே வழிபடும் ஞானிகளும் உருத்திர பதவியில் வைகுங் கணநாதருந் தடையின்றித் திருவம்பலம் புக்கு இறைஞ்சுந் தகுதியினராய்ப் பிறிதொரு வகையராவர். இவ்விரு வகையாரும் முறையே பயன் கருதியும் பயன் கருதாதும் வழிபடுவோரென்று தெளிக.

திருவம்பலமானது பெரு மதில்களாற் புடைசூழப் பெற்று அவற்றிற்கு மேற்பட விளங்குஞ் செம்பொன்னோடு வேயப்பெற்றுப் பொன்மலையின் கொடுமுடிகள் போன்ற பொற்குடங்கள் வைக்கப்பட்டிலங்குதலால், அது 'மேரு' என்று சிறப்பித்துக் கூறப்பட்டது. திருவம்

பலத்தினுள்ளே அறிவொளிமயமாய் விளங்கும் இறைவர் திருநடஞ் செய்யுஞ் சீரிடமே சிற்றம்பலம் எனப்பட்டது. கூத்தப் பெருமான் திருவடிவத்திற்கு அருகிலுள்ள திருவாயிலைத் திரு அணுக்கன் வாயிலென்ப. சிற்றம்பலம் என்பது உபநிடதங்களில் தகர ஆகாசம் என்னப்படும். அஃது உயிர்க்குயிராய இறைவன் உள்ளக் கமலமிசை ஐந்தொழில் நடத்துமிடத்திற்கு அறிகுறியாகும். வீடு விரும்புவோர் அதர்வ சிரசு என்னும் உபநிடத்திற் கூறிய வாறு ஒன்றியிருந்து முதல்வனை நினைக்கும் இடம் அதுவே யாகும்.

'மலர்மிசை யேகினன் மாணடி சேர்தல்' என்றது இவ் வழிபாடே. அது மிகவும் நுட்ப மாதலால் நுண்ணிய திருக்கோயிலென்னும் பொருளில், (சிறு அம்பலம்) சிற்றம் பலம் எனப்பட்டது. அச்சிற்றம்பலத்தின் வடிவம் பிரணவ வடிவமென்ப. 'உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற' என்றதுமது. மறை பயில்வார் பிரணவத்தை முதலிடை கடை என்னு மூன்றிடத்தும் ஓதியே பயில்வாராதலானும், அன்பர் திருவுள்ளம் திருவம்பல மாதலானும், புராண வாசிரியர் 'அருமறை முதலி னடுவினிற் கடையி லன்பர்தஞ் சிந்தையி லலர்ந்த' என்றனர். இருவகைத் திருவும் நல்குஞ் சிவசத்தியே இறைவர்க்குத் திருமேனியாதலால் 'திருவளர் ஒளி சூழ் திருச்சிற்றம் பலம்' என்றனர். ஒலியுலகிற் கடிப்படையாய மந்திரங் களின் தொகுதியே மறைச்சிலம் பெனப்பட்டது. ஒலி யுலகமே பொருளுலகத்திற்குக் காரணமாதலின் 'வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப' என்றனர். சிவஞானிகள் வழிபாடு முற்றிலும் அன்பு மயமே யாதலின், உள்நின் றெழுந்த அன்பானது அந்தக்கரணத்தொடு கலந்து திருக் கூத்தினைக் கண்கள் கண்டவுடனேயே கைகளை விரைவிற் குவியச் செய்யுமாதலினாலும் 'முன்குவித்த கைகளோ,

திளைத்த கண்களோ அந்தக் கரணமோ கலந்த அன்பு உந்தச் செய்தவம் பெரியோன் என்றனர். காட்சியும், கைகுவித்தலும் மனநெகிழ்ச்சியும் உடனே ஒரு நொடிப் பொழுதில் நிகழ்தலின், இச்செயல்களுள் எது முற்பட்ட தென்று கூறவொண்ணாதென்பார் இவ்வாறு கூறினார். திருச்சிற்றம்பலத் திரு அணுக்கன் வாயிலின்படி ஐந்தினை யும் அவற்றின் இருமருங்குமுள்ள இரண்டு யானை வடிவங்கள் தாங்கி நிற்பதுபோல அமைக்கப்பட்டிருத்த லின், அவை 'திருக்களிற்றுப்படி' என்னப்படும்.

'உள்நிறைந்த ஞானத்து எழும் ஒரு பெருந் தனிக் கூத்தும்' என்ற வண்ணம் ஞான வழிபாட்டின் பயன் சிவ நுகர்ச்சியாய பேரின்பமாதலின் அதனை 'ஐந்து பேரறிவும்' என்றார். அதற்குப் பெயர்கின்ற தன்மை யுடைய ஐம்புல அறிவு என்பது பொருள். பேரறிவு என்பதற்குப் பெரிய அறிவு என்று கொள்வாருமுளர். அளவின்றி விரிந்து புற உலகத்தில் யாண்டுந் திரிந்து, பொருளினை அறியும் இயல்பினவாய ஐம்பொறியுணர்வை 'ஐந்து பேரறிவு' என்பர். கட்பொறிவாயிலாகக் கூத்தப் பெருமான் திருவடிவத்தினையே ஆன்ம உணர்ச்சி முழுவதுஞ் சென்று பற்றவே, பிறபொருள்களின் வாயி லாக அது செல்லாதாயிற்று.

உயிர் ஒன்றினை அழுந்தி அறியுங்காற் பிறவற்றை யுணருந் தன்மையதன்று. காட்சியுட் கண் முற்றிலும் ஈடுபட்டகாலைக் காது ஒன்றினையுங் கேளாது. நாவு ஒன்றினையுஞ் சுவைக்காது. மூக்கு ஒன்றினையும் முகராது. தொடுவதை மெய் அறியாது. ஆதலின் கட்புலனிற் பிறபுலன்கள் அடங்கி யொழிந்தன வென்பார், 'ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள' என்றார். மனம் புத்தி அகங்காரம் சித்தம் என உட்கருவிகள் நான்காகும். மனம் ஒரு பொருளை இன்னதென ஆராய்தற்குரிய கருவி. இஃது

இன்னதென்று தீர்மானிப்பேனென்று ஒருப்பட்டெழுதற்குரிய கருவி அகங்காரம். இஃது இன்னதென்று துணிவது புத்தி. முன்னுணர்ச்சியால் இஃது இன்னதென்று நினைப்பது சித்தம். இவற்றுள் ஒன்றை நினைத்து நிற்பதற்கு ஏதுவாகியது சித்தமாதலினுலும் இவ்விடத்தில் நமது நாயனுரது திருவுள்ளம் இறைவரது திருவடிவத்தையே நினைந்து நின்றதாதலினுலும் ஏனை மூன்று கரணங்களுஞ் 'சிந்தையேயாக' என்ருர்.

அறிவு விளக்கத்திற்கு ஏதுவாகிய குணம் சாத்துவிகமாதலானும், ஞானிகளுக்கு உலகத்திற் செல்லாது சிவத்தின்பாற் செல்லும் உணர்வே மேற்பட்டு விளங்குமாதலாலுங் 'குணமொரு மூன்றுந் திருந்து சாத்துவிகமே' என்ருர். அருளமுதம் பொழியும் அளவிலாற்றல் உடையான் இறைவன் ஆதலின் 'இந்து வாழ் சடையான்' என்றனர். இந்து அமுதத்திற்கும் சடை அளவிலாற்றலுக்கும் அடையாளமாகும். உயிர்கட்கு வீட்டின்பமளித்தற்பொருட்டு எக்காலத்தும் ஐந்தொழில் இயற்றுதலினுலும் முழுமுதற் கடவுள் ஒருவனே ஐந்தொழிலியற்ற வல்லவனுதலாலும், தன் பயன் குறியாது எவ்வுயிரும் உய்தி கூடுதற்பொருட்டு அவற்றை அவன் நடத்துவதாலும் 'ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்து' என்ருர். அத்தகைய கூத்தை அன்பால் நினைவாரது உள்ளத்திற் பேரின்ப வெள்ளந் ததும்பி என்றும் நிலைக்கும் உவகையை விளைக்குமாதலின் 'வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்' என்றனர். இறைவனது திருநடனமே பேரின்பத்தை 'அளிக்கின்றமையால், இப்பிறவியை நன்றென்று சிறப்பித்தார். இங்ஙனம் மனிதப் பிறவியைச் சிறப்பிப்பது அப்பர் சுவாமிகள் தேவாரத்துங் காணப்படும்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற்
பால்வெண் ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே.

ஆசிரியர் சேக்கிழார் பல இடங்களில் இக்கருத்தைத் தழுவிச் செய்யுள் செய்துள்ளார்.

"தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பளித்த
திருவாளன்
வாசமலர்மென் கழல்வணங்க வந்தபிறப்பை
வணங்குவாம்."

தில்லைப் பெருமான் சுந்தரமூர்த்தியைத் திருவாரூருக்கு வரும்படி பணித்தது, போகியாயிருந் துயிர்க்குப் போகம் புரியுந் திருமேனிகொண் டெழுந்தருளியிருக்குந் திருப்பதி திருவாரூராதலினாற்போலும். தில்லை வீட்டினையே நல்குஞ் சிறப்பிடமாயினும், ஐந்தொழிலையும் இறைவன் நடத்துவதால் போகப் பேற்றிற் குரிய இடத்தை அவன் சுட்டியருளினரென்க.

# ரு. பரவையார் திருமணம்

திருநாவலூரர் தில்லை நீங்கியபின் திருஞானசம்பந்தப் பெருமான் திருவருள் பெற்ற திருக்கழுமலத்தினை அடைந்து ஆளுடைய பிள்ளையார் தோன்றிய அத்திருப் பதியின் எல்லையை மிதிக்க அஞ்சி அவ்வூரை வலமாக வரும்போது உமையம்மையோடு தோணியப்பர் அவருக் குக் காட்சி கொடுத்தருளக் கழிபேரன்பொடு அம்மை யப்பரைத் தாழ்ந்திறைஞ்சிக் கயிலையில் வீற்றிருந்தபடி கடவுளைக் கண்டுகொண்டேனென்று திருப்பதிகம் பாடி னர். தோணியப்பர் மறைந்தருளவும் வெருக்கொண்டு தெளிந்து திருக்கோலக்காவினிற் சென்று திருப்பதிகம் பாடியருளினர். பின்னர்த் திருப்பன்கூர்ச் சிவலோக நாதரைப் பணிந்து பாடித் திருநீடூர் முதலிய தலங்களைக் கும்பிட்டுக் காவிரிப் பேராற்றில் மூழ்கித் திருமயிலாடு துறை, திருஅம்பர் மாகாளம், திருப்புகலூர் முதலிய திருப்பதிகளைப் பணிந்து திருவாரூரை அணைந்தார். திரு வாரூரில் வாழும் அடியார்கட்குச் சிவபெருமான் கனவிற் றோன்றி 'நமது ஆரூரன் நாமழைக்க இங்கு வருகின்றான், அவனை நீங்கள் யாவரும் எதிர்கொள்ளுவீர்களாக' என்று பணித்தனர். சிவபெருமான் அங்ஙனம் பணித்ததைக் கண்டு வியப்புற்று அத்துணைப் பெருமையுடையவர் நமக் கெல்லாந் தலைவராவர் என்று நினைந்து திருத்தொண்ட ரெல்லாரும், தேவருலகம் நிலமிசை வந்தாற்போல அவரை எதிர்கொள்ளப் புறப்பட்டார்கள். வீடுகளிலும், மண்ட பங்களிலும், பெரிய கொடிகள் எடுத்தனர். நெடிய தோரணங்களும், கமுகும், வாழையும் அங்கங்கு நாட்டிய கால்களிற் கட்டிக் கடைவாயில்தோறும் பொன்னிறு லாகிய நிறைகுடமும் அழகிய மணிவிளக்குகளும் வரிசை யாக வைத்தார்கள். தெள்ளிய மணிபதித்த திண்ணைகளிற்

சந்தனக் குழம்பினால் மெழுகிக் குற்றமற்ற பொரியும் பொற்சுண்ணமும் முத்துமணிகளும் பரப்பி, நறுமலர்ப் பூம்பந்தர்களமைத்துத் திருவீதியின்கட் புழுதி யடங்கப் பனி நீரைத் தெளித்தார்கள். இன்னிசைப் பாடல்களும், முகிலனைய பேரிகை முதலிய இசைக்கருவிகளும் முழங்கவும், செங்கயல்போன்ற கண்களை யுடையவராய் நயமிக்க நல்லணிகள் அணிந்த மகளிர் திண்ணைதொறும் நடம்பயிலவும், அடியாரெல்லாரும் திருவாரூர்த் திருமதிலுக்கு வெளியே சென்று சுந்தரமூர்த்தியை எதிர்கொண்டார்கள். எதிர்கொண்டவரை வணங்கி மிக மகிழ்ச்சியோடு திருவீதி வழியே செல்லும்போது திருத்தொண்டர்களை நோக்கி 'எந்தை யிருப்பதும் ஆரூர், அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' என்னும் முடிவுடைய சந்தவிசைத் திருப்பதிகம் பாடிக்கொண்டு நமது நாயனார் திருக்கோயிற் றிருவாயிலை யடைந்தனர். அவண் வானளாவிய திருவாயிலை ஐந்துறுப்பும் நிலத்திற் றோய வழிபட்டுத் தேவாசிரியன் மண்டபத்தையுந் தொழுது ஊனையும் உயிரையும் உருக்கும் பேரன்போடு சென்னிமேற் குவித்த கையராய்த் திருமூலத்தானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலை யடைந்து புற்றிடங்கொண்டு பூங்கோயில் வீற்றிருந்து திருமகட்கு அருள்புரிந்த அண்ணலை மண்மிசை வீழ்ந்திறைஞ்சி ஐம்புலனும் ஒருங்கப் பெற்றும் பேரின்ப வெள்ளத்தின் மூழ்கி இன்னிசைப் பாமாலை இறைவருக்குச் சாத்தினர். அப்போது புற்றிடங்கொண்ட பெருமானார் திருவருளால் ஓர் மொழியானது திருநாவலூரர் கேட்க எழுந்தது. 'உனக்கு நம்மைத் தோழமையாகத் தந்தனம்' நாம் உன்னைத் தடுத்தாட்கொண்ட திருமணத்தில் நீ கொண்ட கோலத்தையே எப்பொழுதும் உடையவனாய் நின் வேட்கை தீர மண்மிசை விளையாடுவாய்' என்ற மொழியைக் கேட்ட வன்றொண்டர் இறைவன்பாற் கழிபெரு நன்றியுணர்ந்தவ

ராய்ப் பன்முறை வணங்கி எழுந்து உள்ளக் களிப்போடு வெற்றி மிகுந்த காளைபோல் நடந்து வீதிவிடங்கப் பெருமானைத் தொழுது திருக்கோயிலை வலம்வந்து புறம்போந்தார். அன்றுமுதல் அடியார்களெல்லாரும் அவரைத் 'தம்பிரான் தோழர்' என்றனர். சிவபெருமான் திருவருளினாலே தமிழ் நாவலர் பெருமானாகிய சுந்தரமூர்த்தி அழகிய சைவவேடந்தரித்துச் சந்தனமும் முத்துமாலையும் மலர்மாலையும் முதலிய அலங்காரப் பொருள்கள் இலங்கும் திருமேனியுடையராய்த் தலைசிறந்த தவவேந்தராய்த் திகழ்ந்தனர். நாடோறும் அவர் புற்றிடங் கொண்டாரை வணங்கிப் பாடிச் சிவானந்தத்திற் றிளைத்துப் பெருமகிழ்வோடு செல்வாராயினர்.

இவர் இங்ஙனமிருப்பத் திருக் கயிலாயத்திலே உமையம்மைக்குச் சிறப்புப் பணிவிடை செய்யுஞ் சேடியருள் ஒருவராகிய கமலினி என்பாள் திருவாரூரிற் பிறந்தனள். சிப்பியினிடத்து முத்துப் பிறந்தாற்போல, அவள் உருத்திர கணிகையர் மரபிற் பிறந்து திருவாதிரை நாளன்று பெரியோராற் பரவையாரென்னுந் திருநாமஞ் சாத்தப் பெற்றுச் சுற்றத்தாரால் மிக்க கவலையோடு பாதுகாத்து வளர்க்கப்பட்டுச் செங்கீரை முதலிய பருவங்கள்தோறும் விழாவணி செய்யப் பெற்றுத் திருமகளினும் அழகு மிக்காளாய் வளர்ந்து தளர்நடைப் பருவமடைந்தாள். இளம் பெண்மானோ, விண்ணில் வளர்கின்ற உயர் மரத்தின் இள அரும்போ, நறுந்தேனின் இளம்பதமோ, கடலிற் காணப்படும் பவளக் காட்டின் இளங்கொடியோ, ஒண் மதியின் ஓர் இளங் கலையோ, காமன் இளம் பருவத்தில் விற்கலை பயிலுதற்குரிய ஒப்பற்ற இனிமையான ஓர் கருப்பு வில்லோ என்று சொல்லத் தக்க அவளுடைய அழகானது நாள்தோறும் வளர்ந்து பொங்கக் கழங்கும், பந்தும், அம்மனையும், ஊசலும் ஆகிய விளையாடல்கள்

புரியுங் காலங்களில் இறைவியை மனம் உருகப் பாடுங் குறிப்புடையவளாய்ப் பிள்ளைப் பருவமும், பேதைப் பருவ முங் கடந்து வனப்பு மிக்க மங்கைப் பருவ மடைந்தனள். உமையம்மையாருக்குத் தோழியா யிருக்கப்பெற்ற நங்கை யார், பாங்கியரோடு புற்றிடங்கொண்டாரை நாள் தோறுஞ் சென்று வணங்கிவருவாராயினர். ஒருநாள் அங்ஙனம் திருக்கோயிலுக்கு வழிபடப் புகும்போது பெருமானைத் தமது பரிசனங்களோடு வணங்கி வருகின்ற ஆளுடைய நம்பி, திருவருளினாலே அவளைக் கண்டனர். கண்டவுடன் "கற்பகமரத்தின் பூங்கொம்போ, காமன் மனைவியோ, அழகுறு நலத்திற் றோன்றிய நற்றவ வடிவோ, கருமுகிலைச் சுமந்து வில்லை யுடையதாய்க் குவளையும், பவளமும், மலர்களும் மலரப் பெற்றுத் திங்க ளும் அமையப்பெற்ற ஓர் நறுமணக் கொடியோ, இவை யல்லாத வியப்பான பிறிதொன்றோ, சிவனருளால் வந்த ஓர் வடிவமோ இன்னதென்றறிய முடியவில்லை' என்று வியப்புற்றார். வியந்து 'அயன் கையா லெழுதமுடியாமல் அவன் உள்ளத்தாற் படைத்ததொரு மணிவிளக்கோ, மூவுலகி லுள்ளாருங் கண்டு களிப்படையத் தக்கதாய் என்முன் நின்றது யாதோ' வெனத் திருநாவலூரரர் நினைந் தனர். தம் கண்கள் வியக்கும்படி பரவையார் சிவபெரு மான் திருவருளால் நம்பியாரூரரைப் பார்த்து முன்வினை கூட்டுவிக்கக் களவுப் புணர்ச்சியைத் தாமும் விரும்பின வராயினர். பார்வைக்கு அடங்காத அழகுநிறைந்த சுந்தரமூர்த்திகளது திருமேனியானது வானிலடங்காத பேரொளிக் கதிர் வீச, அவரால் எதிர்நோக்கப்பட்ட பரவையார்க்கு அளவிடப்படாத காதலினால், இதுவரை இல்லாத ஒரு பெருவிருப்பானது அவளது நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் கீழ்ப் படுத்திப் பொங்கி மேலெழுந்தது. 'எதிரிலே தோன்று

கின்ற அண்ணல் முருகக்கடவுளோ, ஒளியால் ஒப்பில்லாத தொரு காமனோ, நன்மாலை யணிந்த மந்திரம் வல்ல ஓர் விண்ணவனோ, சிவபெருமானது மெய்யருள் பெற்றவனோ, ஈடுபடாத என் மனத்தைத் தன்வயமாகத் திரித்த இவன் யாரோ' என்று நினைந்தார். இங்ஙனம் எல்லையற்ற காதலினால் மகளிர் குணங்களெல்லாம் மடங்கப்பெற்று லுங் கடவுளைத் தொழும் அன்பானது அவரை யீர்த்து மேற்செலுத்தினமையாற் சிவபெருமானது திருக்கோயி லுட் புகுந்தனர். அதைக்கண்ட வன்றொண்டர் என் மனத்தைக் கவர்ந்த மயிற்சாயலும் கொவ்வைக்கனி போன்ற இதழும் உடைய இளங்கொடிதான் யாரென்ன, அப்போது அவரருகே நின்றவர்கள், 'இவர் பரவை என் னும் பெண்மணி; விண்ணவர்களும் நெருங்குதற்கு அரிய வள்' என்று தெரிவித்தார்கள்.

முற்பிறவியில் ஏற்பட்ட காதற் பான்மையாற் றொடக்குண்டு நமது நாயனார் சிவபெருமான் திருக்கோயி லுட் புகுந்தார். அப்போது பரவையாருஞ் சிவபெரு மானைக் கும்பிட்டு மீண்டு புறம் போந்தனர். நமது நாய னார் இறைவனை வணங்கி அவளைத் தமக்குத் தரவேண்டு மென்று வேண்டிக்கொண்டு வெளியே வந்து என் 'இன் னுயிராம் அன்னம் போல்வாள் எவ்வழிச் சென்றா' ளென்று தேடுவாராயினர். மலப் பிணிப்பால் வரும் இருவினைத்தொடர் பொழிக்கப்பெற்றமையால் இறை வன்பாற் செல்லும் என் அன்பினையு மேற்பட்டுச் செல் லும் ஆசை விளைவிப்பதாய், மிகவும் பொங்கிவரும் ஒளி யொடும் விளங்கி எனது உள்ளத்தை மயக்கிய சிவனாரது திருவருள் எவ்வழிச் சென்றது? வானவர் தலைவராகிய சிவபெருமானது திருவடியல்லாது வேறொன்றையும் விரும்புமாறு அறியாத என்னை வருத்தமுறும்படி புதுமை யாக மயல் விளைத்துக் கற்பகக்கொடிபோல் நுடங்கிய

எம்பிரானுடைய திருவருள் இப்போது எவ்வழிச் சென்றது? பந்தத்திற்கும் வீட்டிற்குங் காரணராகிய பரமரது திருவடிகளை நெஞ்சார நினைத்திருக்கும் எனது உள்ளத்தை மயக்கி மான்போல விழித்த எம்மிறைவரது திருவருள் எவ்வழிச் சென்றது?

பாச மாம்வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலுமோ ராசை யளிப்பதோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
ஈச னாருரு ளெங்கெறிச் சென்றதே.
உம்பர் நாயகர் தங்கழ லல்லது
நம்பு மாறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியி னெல்கியின்
றெம்பி ரானரு ளெங்கெறிச் சென்றதே.
பந்தம் வீடு தரும்பர மன்கழல்
சிந்தை யார்வர வுன்னுமென் சிந்தையை
வந்து மால்செய்து மானெனவே விழித்
தெந்தை யாரரு ளெங்கெறிச் சென்றதே.

இவ்வாறு கூறிக் காதன் மீக்கூர்ந்தவராய்த் தேவாசிரியன் மண்டபத்தை யடைந்து ஒருவரோடும் உரையாடாது திருவாரூர் ஆண்டவர் பரவையைத் தமக்குக் கொடுத்துத் தம்முயிரைக் காப்பாற்றுவா ரென்று கருதியிருக்கும் பொழுது கதிரவன் மறைந்தான்.

பறவைகள் தம்முடைய பெடையோடு இரைதேடியுண்டு பகற்பொழுதைக் கழித்து அந்திப்பொழுதிலே தமது கூடுகளை யடைந்தன. மாலைக் காலமுந் தனித்தவரைத் துன்புறுத்தும் வண்ணம் வந்தது. மகளிர் மனமும், படிற்றொழுக்க முடையோரது கொடிய தீவினையும், திருவைந்தெழுத்தை உணராத மடவோரது நெஞ்சமும் போல நெடியவானம் இருளடைந்தது. 'குற்றமற்ற திருவுள்ளமுடைய வன்றொண்டர் இவ்வாறு வருந்தினால்

மகளிர் காதலைத் தப்பி யார் பிழைக்கக்கூடும்' என்று இரவென்னும் நங்கையானவள் புன்சிரிப்புக் கொள்வது போலத் திங்கள் உதயமாயிற்று. அந்நிய நாயகர் கைக்குப் பயந்து வருந்தித் தங்கள் நாயகர் தொடுங்கால் முக மலர்ச்சியடையுங் குலமகளிர் போல ஆம்பல் மலரானது வெய்யோன் விளங்கும் பகற்காலத்திற் கூம்பித் தண்மதியின் கதிர்கள் தீண்ட மலர்ந்தன. நிலவுலகில் வாழும் உயிர்கட்கெல்லாம் புனிதத்தையும் இன்பத்தையுந் தண்ணளியையுங் கொடுத்து அண்டமெல்லாம் ஒளிபரப்புவதாற் சிவபெருமானது திருவெண்ணீற்றை ஒத்தது திங்களின் தோற்றம்.

பறவைகளின் ஒலியெல்லாம் அடங்கிய மாலைக் காலத்திலே திருநாவலூரர் பரவையால் ஏற்பட்ட காதன் மயமாய்த் தம் உயிரைச் சூழ்ந்த தனிமையை உணர்ந்து வேறொன்றும் நினைவில்லாதவராயினர். சிவபெருமானது நெற்றிக்கண் பொறியால் அழிவுற்ற மன்மதன் இப்பொழுது உருவமெடுத்து வெளியே வந்து என் முன்னின்று அம்புதொடுப்ப தெப்படி? சிவபெருமானது திருவருள் இருந்த திவ்வாறோ என்பார். திங்களைப் பார்த்து அவர் 'என் துன்பத்தைக்கண்டும் நீ தீப்போன்ற கதிர்களை என்மேல் வீசலாமா? என்னை யாண்ட கடவுளுடைய திருமுடிமேல் இருக்கும் வெண்மதிபோலத் தண்ணிய தன்மையுடையை யல்லை' என்றனர். கடலைப் பார்த்துக் 'கடலே, நீ என்னை யாண்டவருக்கு உண்ணும் பொருட்டு நஞ்சினைக் கொடுத்தாய். அவருக்கு அடிமை பூண்ட எனக்கு நீ இப்போது யாது செய்யமாட்டாய்' என்றனர். பின்னர்த் தென்றற் காற்றைப் பார்த்துத் 'தமிழ் மாருதமே, நீ பிறந்தது எங்கள் பெருமான் வீற்றிருக்கும் பொதிகையினிடத்து; வந்தடைந்தது கடவுட்டன்மையுடைய சோழநாட்டின் மருதத் திணையிலுள்ள

தடாகங்களிலே; நீ இவ்விடங்களுக்குரிய குளிர்ச்சியை யும் நன்மணத்தையும் மென்மையையுங் கொடுக்காமல் வெம்மையைக் கொடுக்கப் பழகியது எவ்விடத்து? என் றிவ்வாறு பலவா றியம்பிச் சுந்தரமூர்த்திக ளிருப்ப, அவர் நெஞ்சம் பற்றிய அன்னவர் நெஞ்சம் எவ்வாறிருந்த தெனக் காண்பாம்.

சிவபெருமானது திருவடிகளை வணங்கிச் சென்ற பரவையார், திருநாவலூரரைக் கணவராகப் பெறுவதற் குச் சென்று மீண்டார்போலத் தோழியர்கள் புடைசூழத் திருக்கோயிலிலிருந்து தம்வீட்டிற்குச் சென்று, பெருங் காதலால் மயக்கம் உடையவராய்ச் சிலம்புகள் மெல்ல ஒலிப்ப நடந்து, ஒருவரோடும் பேசாது மலரணையின்மேல் நிலாமுற்றத்திற்கருகே யிருந்தனர். இருந்து பக்கத்தி லிருந்த தோழியைப் பார்த்து 'நாம் திருக்கோயிலுக்குப் போம்போது வீதியில் எதிரே வந்தவர் யார்' என்று வினவ, 'அவர் சிவபெருமானது திருவருள் பெற்ற ஆதி சைவ முதற்றொண்டர்; தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப்பெயர் பெற்றவர்' என்று தோழி மறுமொழி கூறினாள். சிவபெருமானது அடியார் என்று கேட்ட வுடனேயே காதல் அளவின்றி வளர்ந்து பொங்கினமை யால், நிறை இழந்து மகளிரது நான்கு இயற்கைக் குணங் களையும் அகலவிட்டு உயிர் ஒன்றையுந் தாங்கிப் பெருமூச் செறிந்து பரவையார் மெல்லணைமேல் வீழ்ந்தனர்.

சேடியர் அவள்மீது நறுமணமுடைய சந்தணக் குழம்பு பூசிப், பனிநீர் தெளித்து, இளந்தளிர்களையும் நீர்க்குளிரி என்னுந் தண்கொடியையும் இட்டு வெப்பம் நீக்கச் செய்த உபாயங்களெல்லாம் எரிகின்ற தீயிலிட்ட நெய்யை யொத்தன. அத்தழலிற் சமித்திட்டாற்போலக் காமனுந் தன்வில்லின் வலிமையைக் காட்டி மலர்வாளி சொரிந்தான். பரவையார் இவை காரணமாக மலர்ப்

படுக்கையிலே துயில முடியாதவளாய்த் தென்றற்காற்றை யும் நிலவினையும் பொறுக்கலாற்ருது படுக்கைவிட் டெழுந்து கூந்தலின் பாரத்திற்கு வருந்திச் சேடியரிடம் சொல்வாராஞர். 'திங்களானது என்னைச் சுடுதல் எத ஞல்? சந்தனக்குழம்பாகிய நெருப்பைப் பனிநீரோடு விரவிப் பூசுகின்ற கொடியவர்களே! இதை நீங்கள் செய்யாதீர்கள்; இங்கே உலவுகின்ற நிலவும் தென்றலுந் தீயாய் வருகின்றன. சிவபெருமானிடம் அருள் பெற்றவர் நமக்கு அருள்செய்கின்ருரில்லை. இந்த நெடிய இராப் பொழுது எனக்கு விடியுமென்று தோன்றவில்லை. அடக்க முஞ் சால்பும் என்னிடத்திற் றங்கமாட்டா. என்நெஞ் சும் மார்பும் உலந்து போகின்றன. இத்துன்பம் என் னவோ. பலரும் கூடிச் செய்கின்ற செய்கையால் விளை வதோ தெரியவில்லை. காமன் அருகினின்றும் விலக மாட் டான். சிவபெருமானது திருவருள் பெற்ற நம்பியாரூரர் யான் படுந்துயரத்தை யறிய மாட்டார். திருவாரூர்க் கடவுளே, உம்மைத்தவிர என் துயரத்தை யாரறிவார்? உம்மிடம் அன்பிலாதவர் போல நான் இவ்வாறு தளர்ச்சி யுறலாமா' என்றுரைத்து வருந்தினர். அப்போது பரவை யார்க்கும் வன்ருெண்டர்க்கும் மணம் நடத்தும்படியாகத் திருவாரூர்ப்பெருமான் தமது அடியார்கட்குக் கட்டளை யிட்டார். விடிந்தவுடன் அடியார்கள் இருவருக்கும் மங் கலம் நிகழ்வித்தார்கள். திருநாவலூரர் பரவையின் துணைகொண்டு யோக நெறியிற் பயின்றனர். அவர் சிவ பெருமானது திருவடிகளைச் சிந்தையிலுஞ் சென்னியிலும் அமைத்துப் பாமாலை சூட்டி வழிபாடு செய்வதோடு பரவை யுடன் கூடி விளையாட்டயர்ந்தார்.

பரவையாருடன் சுந்தரமூர்த்தி திருமாளிகையிலும், பொழில்களிலும், தாமரைத்தடாகக் கரைகளிலுஞ் செய்குன்றிலும், திண்ணைகளிலும் இருந்து விளையாடிக்,

குளிர்ந்த முத்துப்பந்தலின் கீழ் இட்ட மலரணையினுந் தங்கி மகிழ்ந்திருக்கும் நாளிலே ஒருநாள் சிவபெருமானைத் திருக்கோயிலிற்சென்று தொழும் விருப்பத்தோடு விண்ணவரும் புகழும் அழகிய பட்டாடையுடுத்து, சந்தனக் குழம்பொடு கலந்த குங்குமச்சாந்து பூசி, சுழிய மென்னும் தலையணியும், பிற ஒள்ளிய மணிக்கலன்களு மணிந்து, இந்திரச் செல்வத்திற்கு மேற்பட்ட செல்வச்சிறப்பு விளங்கக் கையினில் அழகிய பொற்கோலுங் காதினில் இலங்குங் காதணியுந் தோளின்மேற் பூணூலும் நெற்றியிலே திருநீறுந் தரித்துக்கொண்டு, இக்கோலம் இவருக்கு அழகாயிருக்கிறதென்று அணியிழைமகளிர் புகழ, விளங்குஞ் சைவத்திருக்கோலத்தோடு நம்பியாரூரர் திருவீதியில் எழுந்தருளினார். இருபக்கத்திலும் வேறு வேறாக வருகின்ற கூட்டங்கள் திருநாவலூரில் அவதரித்த நற்றவக் களிறே என்றும், சிவபெருமானுக்கு அடியவரே என்றும், 'திருவாரூர் மறையவர் தலைவரே' என்றும் வன்றொண்டரைப் போற்றித் துதித்துச் சென்றனர். முன் போகின்றவர்கள் தங்கள் கையில் ஆட்டுக்கடா, குரங்கு, கோழி, காடை, கவுதாரி, இவைகளைப் பிடித்துக்கொண்டு அவைகளுக்குரிய குறிப்பு மொழிகளைப் பயிற்றிச்செல்ல, உயர்ந்த மலர்ப் பூங்கூடை சுமப்பாரும் நறுமணங்கள் ஏந்துவாரும் அடைப்பை தாங்குகின்றவர்களுஞ் சூழ்ந்து வர, மாதர்கள் மயல்கொள்ளத் திருநாவலூரர் திருவீதியிலெழுந்தருளிப் புற்றிடங்கொண்டார் திருக்கோயிலை வந்தடைந்தார். திருக்கோயிலின் முன்னுள்ள தேவாசிரியன் மண்டபத்திலே, நிலவுலகத்தில் வாழும் அடியார்கள் எண்ணிலாதோர் கூடியிருந்தபொழுது சுந்தரமூர்த்திகள், இறைவன் என்னை இவர்களுக்கு அடியவனாக்குங்காலம் எப்பொழுதோவென நினைந்து திருநெடுவாயிலை வணங்கிச், சிவபெருமான் எதிராகத் தோன்றிக் காட்சி கொடுக்க

அவரது திருவடிகளை வணங்கிச் சென்னிமேற்கொண்டு திருவடிப் புகழ்மாலை செப்பினர். அன்பர்களது உள்ளத்தில் அலர்ந்த செந்தாமரையாய் நிலைத்த பேரின்பத்தைத் தரவல்ல மலரவடிகள் சிறியேனுகிய எனக்கும் அத்தேனை ஈந்தன, உலகுய்யும்பொருட்டுப் பொன்னம்பலத்தில் நடனஞ் செய்தன, எமன் உயிர் போகும்படி சின்ந்தன, உமையவள் திருக்கையால் தடவச் சிவந்தன, தவருத பெருந் தவத்தினருடைய நெஞ்சில் விளங்கின, தம்மை நினையாதவரைப் பிறவித்துன்பத்தில் அழுத்தின, நாத தத்துவத்திற்கும் அப்பாற்பட்ட ஒளியுடையன, மாலும் அயனுங் காணுத எல்லையுடையன, மறைக்குதிரைமேலே ஏறிவருவன, அறிவிலாதேனுடைய பிழைகளைப் பொறுத்து ஆண்டு கொண்டன, மேல்வருந் துன்பத்தைத் தீர்ப்பதற்கு இசைந்தன என்றிவ்வாறு துதித்து நின்ற நம்பியாரூரர்க்கு அடியார்க் கடியராந் தன்மையை அருள் செய்யக் கருதி அடியார்களது பரம்பரைத் தொண்டை அவர்க்கு உணர்த்தி அவர்கள் பெருமையை இனிது விளக்கினுர்.

'பெருமையாற் றம்மையொப்பார்
பேணலா லெம்மைப் பெற்ருர்
ஒருமையா லுலகை வெல்வா
ரூனமே லொன்று மில்லார்
அருமையா நிலையினின்ரு
ரன்பினு லின்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்ரு
ரிவரைநீ யடைவா யென்று'

சிவபெருமான் அருளிச்செய்ய, திருநாவலூரர் குற்றந் தீரும் வழியைத் தாம் பெற்றதாகக் கருதிச் சிவபெருமானை எதிர் வணங்கித் துதிக்கச், சிவபெருமான் 'நீ அவர்கள் மீது நிறைசொன்மாலை பாடுக' என்றனர். அப்போது

சுந்தரமூர்த்தி 'பாடும் வகையை அடியேன் அறியேன்: நீ  ரே   அடியெடுத்துக்கொடுத்தருள்செய்யவேண்டு' மெனச், சிவபெருமான் 'தில்லைவாழந்தணர்த மடியார்க்கு மடியே' னென்று அடிஎடுத்துக்கொடுக்க, வன்றொண்டர் திருவருளினாலே பாடத் தொடங்கினர்.

சிவ்பெருமான் மறைந்துவிட, நமது நாயனார் அடியார் களை அடைதற் பொருட்டுத் தேவாசிரியன் மண்டபத்திற் குச் செல்லுவாராய்த் தமது உயர்காட்சிக்குப் புலனாய திருக்கூட்டத்தைப் பன்முறை நிலமுறத் தாழ்ந்திறைஞ்சி, அழியா வீரமுடைய அன்பர்களைத் தனித்தனி அடியே னென்று வைத்துப் பாடித் தொகை யடியாரையும் பாடித் திருத்தொண்டத் தொகையை முடித்தார். பின்னர்ச் சிவ னடியார் எல்லாரும் பேருவகை யெய்தும் வண்ணம் திருக் கூட்டத்தின் நடுவிற்சென்றிருந்தார். திருத்தொண்டத் தொகையிற் கூறியமுறையிலேயே ஆசிரியர் சேக்கிழார் பெரியபுராண நாயன்மார் வரலாற்றை வகுத்து விரித் துரைசெய்தனர்.

## ஆராய்ச்சி

நமது நாயனார் சீர்காழிக்குச் சென்றகாலை சிவபெரு மான் திருஞான சம்பந்தருக்குக் காட்சி கொடுத்தவாறே இவர்க்கும் அம்மையப்பராய் எழுந்தருளிக் காட்சி கொடுத்தது வியக்கற்பாலதே. மேலுங் கயிலையில் வீற் றிருந்தபடியே அங்கே காட்சி கொடுத்ததாகவும் அறிகின் றோம். கயிலையில் இறைவன் அம்மையப்பராய் வீற்றிருக் குந் தன்மை இதனாலும் உணரப்படும். அதனை ஆசிரியர் சேக்கிழார் திருநாவுக்கரசு நாயனார் புராணத்துள்ளும் விளக்கினார். திருநாவலூரர் அப்பர் சுவாமிகள் தொண்டு செய்த திருவதிகையை மிதித்தற்கு அஞ்சியதுபோலவே ஆளுடைய பிள்ளையார் அவதரித்த இடத்தையும் மிதித்

தற்கு அஞ்சினர். சம்பந்தருக்கு முற்பிறப்பின் சார்பினுல் இறைவன் அம்மையப்பராய்த் தோன்றி யருளியதுபோலச் சுந்தரமூர்த்தி நாயனுருக்கும் அவரது கயிலைச்சார்பு காரணமாகக் கயிலைத் திருக்கோலங் காட்டினர் போலும். தேவார முதல்வர் மூவரும் இந்நிலவுலகத்திலேயே சிவனுரது கயிலைத் திருக்கோலங்கண்டனரென்பது பெறப்படுகின்றது. சிவபெருமான் திருவடி சூட்டுதலையே திருநாவுக்கரசர் பெரிதும் வேண்டிப் பெற்றனராதலின், அவரை அன்போடு நினைந்திருந்த சுந்தரமூர்த்திகளுக்கும் இறைவன் திருவதிகையிலே திருவடி சூட்டினர். திருஞானசம்பந்தர் தோணியப்பரை நோக்கி அவரது திருக்கோலங் காண்பான் அம்மே யப்பாவென் றழுதனராதலின், அவருக்கு நல்கின திருக்கோலக் காட்சியினையே திருநாவலூரர்க்கும் அவ்விடத்து நல்கினுரென்க.

சுந்தரமூர்த்திகளும் திருவெண்ணெய் நல்லூரிலே சிவபெருமானை இன்னுரென்று அறிய விரும்பினமையால், அவருக்கும் விடைமேற் ரேன்றித் தமது வடிவத்தைக் காட்டியருளினுர். இவற்ருற் பேரன்பர்க்கும் அவரைச் சார்ந்தார்க்கும் அன்னேர் வேண்டியமுறையிலே வேண்டிய உருவொடு தோன்றி இறைவர் அருள் செய்வரென்று தெளிக.

மந்திரங்களாலும் எளிதில் அறியமுடியாது ஞானத்தாலேயே இறைவன் அறியற்பாலனுகலின், அவனை ஆசிரியர் சேக்கிழார் 'இருக்கு ஓலமிடும் பெருமா' னென்ருர். இறைவனது திருக்கோலக் காட்சியில் அழுந்திப் பேரின்பந் துய்த்த திருநாவலூரற்குத் திருக்கோல மறைந்தவுடன் வெருக்கொள்ளுதல் இயல்பாமன்ரே? திருநாவுக்கரசருந் திருவையாற்றிற் கயிலைக்காட்சி கண்டபோது அது மறைந்தவுடன் அயர்ந்தனரென்பது குறிக்கப்பட்டது. 'உணர்வில் நேர்வருஞ் சிவபோகத்தை' ஐம்புலனளவினுங்

தமது திருக்காட்சியால் இறைவன் அருளைப் பெற்றவருக்கு அவ்வெளிய இனிய நுகர்ச்சி மாறியவுடன் சிறிது அயர்வு வருதல் இயல்பேயா மென்க.

இறைவன் தனது பேரன்பர்க்குச் சிறப்பாகத் திருவருள் புரிதல் நமது நாயனார் திருவாரூர்க்குச் சென்றகாலை அவரை எதிர்கொள்ளும்படி அவ்வூர் அடியார்களுக்குக் கட்டளையிட்டமையால் இனிது விளங்கும். அவர் எவ்வாறு கட்டளையிட்டாரென்று ஆசிரியர் சேக்கிழார் விளக்கவில்லை. உள்நின் றுணர்த்துவதைப் பலர் அறிய மாட்டாராதலாலும், வெளிப்பட்டுணர்த்துவது பேரன்பர்க்கேயா மாதலாலுங் கனவிற்றோன்றி இறைவன் கட்டளையிட்டனரென்று கொள்ள இடமுண்டு. 'எம்பிரானருள்தான் இருந்த பரிசு இது' வென்று அடியார்கள் வியப்புற்றதனாலும் அது தெளியப்படும். சிவஞானிகள் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவன்பா லொப்புவித்து யானெனதென்னுஞ் செருக்கற்று அவனருள்வழி நிற்பாராதலின், அவர்கட்குரியவைகளை இறைவனே முற்பட்டுச்செய்விப்பன் என்பதையும், இச்சரித்திரப் பகுதி விளக்குகின்றது. திருநாவலூரரை வரவேற்கும்படி இறைவன் பணித்தது அவருடைய பெருமையைப் பிற அடியார்கட்கு இனிது விளக்குதற் பொருட்டும், அவருக்கு முன் வினைப் பயனாய் வரும் போக நுகர்ச்சிக்கு அன்னார் துணைநிற்றற் பொருட்டு மென்க. மணஞ்செய்ய வருவாரை மகிழ்ச்சியோடு வரவேற்றல் பெரிதும் பொருத்தமுடைய தொன்றாமாதலின், இறைவன் அங்ஙனம் செய்வித்தனனென்க. தில்லைக்கு நமது நாயனார் சென்றகாலை ஆங்கிருந்த அடியார்தாமே வரவேற்றனர். தில்லை திருநாவலூர்க்குச் சேயதன்றாகலின், அங்குள்ளார் அவர் பெருமையை எளிதாகக் கேட்டறிந்திருத்தல் கூடும். திருவாரூர் சேய்த்தாதலின், அவ்வூரார் அவர் பெருமையை நன்கறியா

திருத்தலுங்கூடும். ஆதலா லவர்கட்கு நாயனுரின் பெருமையை இறைவர் உணர்த்தினர்போலும். மேலுந் 'திருவாரூர்க்கு வா' எனத் தில்லையிலே சுந்தரமூர்த்திகளுக்கு இறைவர் ஆணை தந்தமையால், தாமழைக்க வருகின்றவரைத் தாம் எதிர்கொள்வித்தலுங் கடனுதல் தெளிக. மன்னர் ஆணையால் மன்னரிடத்திற்குச் செல்லுகின்றவரை மன்னரது ஏவலாளர் வரவேற்றல் உரியதொன்றுதல்போல ஈண்டுங் கொள்க. இறைவன் கட்டளை பெற்ற அடியார் நாயனுர் பெருமையை உணர்ந்தாரென்பது 'நம்பிரானுவா ரவரன்றே' என்று அவர்கள் எழுந்தமையால் அறியப்படும். அவர்களுள் ஒருவருஞ் சுந்தரமூர்த்திகளைப்போல இறைவன் திருவருளினை அளவற்ற முறையிற் பெறுமையால், அவரைத் தம்பிரானுக அவர்கள் கருதியதும் பொருந்துவதே.

திருவாரூரினை விண்ணவருலகென அணிபெறச் செய்து நாயனுரை அடியவர்கள் வரவேற்கக் கருதினமையால் 'உம்பர்நா டிழிந்ததென, எதிர்கொள்ள உடனெழுந்தார்,' என்றனர் ஆசிரியர் சேக்கிழார். கொடி எடுத்தல், தோரணங்கட்டுதல், கமுகு, மாவிலை, வாழை முதலியவற்றுற் கவினுறுவித்தல், பொன்னுலாகிய நிறைகுடமமைத்தல், மணிவிளக்கு வைத்தல், திண்ணைகளில் மணிகள் பதித்தல், சந்தனக் குழம்பால் மெழுக்கிடுதல், உமியற்ற பொரியும் பொற்சுண்ணமும் முத்தும் மணியும் நிறைகுடம் வைக்குந் திண்ணைகளிற் பரப்புதல், மகரந்தஞ் சொரிதல், நறுமலர் மாலை நாற்றுதல், பூம்பந்தர் அமைத்தல், வீதிகளிற் பன்னீர் தெளித்தல், இனிய குரலாலும் இசைக் கருவிகளாலும் இசை பாடுதல், மேடைகளிற் பெண்டிர் நடம் பயிலுதல் என்னும் இவைகள் வருவோர்க்கு உயர்வு செய்யும் அக்காலத்து வழக்கங்கள் போலும். மாளிகை என்பது தனித்தனி மக்கட்குரிய

இல்லங்களையும், மண்டபமென்பது பொது விடங்களையும் உணர்த்தும் போலும்!

நம்பியாரூரர் இறைவனது பெருமையுணருஞ் சால்பும் தம் குறையுணருந் தாழ்வும் அடியாரைப் பெரியரென மதிக்கும் ஆர்வமும் உடையராதலின், திருவீதியிற் சென்ற காலை 'அவர் எம்மையுமாள்வரோ கேளீர்' என்று நவின்றனர் போலும். அடியாரைத் தொழுது ஆண்டானை வணங்கும் முறை திருவாரூரின்கண் நிகழ்ந்தது. அடியாருறையுந் தேவாசிரியன் மண்டபம் திருக்கோவிலுக்கு முன் இருந்தமையால் அம்மண்டபத்தைத் தொழுது திருக்கோயிலுட் செல்லுதல் வழக்கமாயிற்று. அவ்வண்ணமே சுந்தரமூர்த்திகளும் தேவாசிரியனைத் தொழுது திருக்கோயிலுட் புகுந்தார். உயிரானது தனக்குயிராகிய இறைவனோடு அன்பாற் கலந்த விடத்துப் பாசக்கட்டற்று வியாபகமுறுதலினாலும், அதனால் மெய்ப்பாடு நிகழ்ந்து உடம்பிலுள்ள நரம்புகள் நெகிழ்ந்து அருளமுதந்தோய்தலாலும், உள்ளத்திலெழும் அன்பு காரணமாக உச்சிமேற் கைகுவித்தல் முதலிய புறவழிபாடு நிகழ்தலாலும் 'ஊனும் உயிரும் உருக்குமன்பால் உச்சிகுவித்த செங்கைகளோடும்' என்றார்.

சிவபெருமான் அவரை வரவேற்றதனால் திருக்கோயிலுக்கே முதல் முதல் விரைந்து சென்றாரேயொழியத் திருமடம் முதலிய பிற இடங்களிற் சென்று தங்கவில்லை. திருமகள் இறைவனை வழிபட்டு அருள்பெற்ற தலமாதலின், அவ்வூருக்கும் அவ்வூரிலுள்ள திருக்குளத்திற்கும் அவளுடைய பெயர் அமைந்தது. அவ்வூரைக் கமலை என்றும் திருக்குளத்தைக் கமலாலயமென்றுங் கூறுப. திருவாரூர் என்ற சொல்லும் இக்கருத்துப்பற்றி வந்ததே. அச்சொல் திரு ஆர் ஊர் என்று பிரிந்து இலக்குமி பொருந்திய இடம் என்று பொருள்படும். புற்றினைத் தமக்கு

ஆண்டு இடமாகக் கொண்டமையால் அது முதற்பூதத்தல மென்றுங் கூறுப.

விண்ணுறை தேவர்கள் நிலவுலகத்திலுள்ள பல திருப்பதிகளிற் கடவுளைப் பூசனை புரிந்தனரென்று கேள்விப்படுகின்றோம்.

"வானிடத் தவருமண்மேல் வந்தரன் றனையர்ச்சிக்கில்"

என்றதுங் காண்க.

"எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானெனன
இறைஞ்சி இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவளர் தீபமொடு தூபமலி
வாய்மையதனால்"

என்ற தேவாரமும் இதனை வற்புறுத்தும். மக்களாக உடம்பெடுத்தோர் எடுத்த உடம்பை நீத்து விண்ணுலகம் புகுந்தகாலையும், நிலவுலகத்தில் இறைவனை வழிபட்ட உணர்ச்சியானது சில உயிர்களுக்கு மாறாதிருக்கு மென்றும், விண்ணவர்கள் ஓரிடத்திற் சென்று தங்கி ஓர் எல்லைக்குட்படாமல், விரும்பிய இடங்கட்கு நுண்ணுடம் போடு செல்லும் ஆற்றல் படைத்தோரென்றும், நில உலகத்திலுள்ள திருக்கோயில்களில் மக்கள் கண்ணிற்குப் புலனாகாது சென்று இறைவனை வழுத்துதல் இயல்வதொன்றே யாமெனவும், பிற்பிறப்பாராய்ச்சி வல்லார் கூறுப. இறந்தோர் மக்களுக்கு ஆவேசமுகத்தாற் றம்மையறிவித்தல் கூடுமென்றும், மக்களுள்ளுந் தக்க யோகிகள் யோகக் காட்சியால் விண்ணவ ரியக்கத்தை யறிதல் கூடுமென்றும், உடல் நீத்தார் நிலையை ஆராயும் அறிஞர் முற்காலத்தில் இந்நாட்டிலும், இக்காலத்தில் மேலைநாட்டிலுங் கருதுகின்றார்கள். இவ்வாராய்ச்சியைக் கண்கொண்டு பார்ப்பவருக்குத் திருமகள் திருவாரூரில் இறைவனைப் பூசித்த சரிதம் பொய்யாகத் தோன்றாது.

ஐந்துறுப்பாலும் எட்டுறுப்பாலும் வழிபடும் முறை இக் காலத்திலும், முறையே பெண்டிர்மாட்டும் ஆடவர்பாலும், நிகழக்காண்கின்றோம். சுந்தரமூர்த்திகள் திருவாயிலுக் கருகேஐந்துறுப்பால் வணங்கினரெனவும், திருக்கோயி லுட் சென்றகாலை இருவகை வணக்கமுஞ் செய்தனரென வும் புராணங் கூறுவதால் ஆடவர்க்கு இருவகை வணக்க மும் உரியன என்று அறிகின்றோம். சிவபெருமான் உமை யம்மையோடு விளங்கித் திருவிளையாடல்க ளியற்றுவது போலச் சுந்தரமூர்த்தியும் ஓர் வாழ்க்கைத் துணையோடு முன்வினைப்பயனால் நுகரவேண்டியதை நுகர்ந்தின்புற்று அடியார் நடுவே நற்றவத்திற் சாரும் உள்ளமும், புறத்தே இன்ப வாழ்க்கைக்குரிய கவினுரு வேடமுங்கொண்டு நிலவுவது ஓர் விளையாட்டாமாகலின், 'மண்மேல் விளை யாடுவா' யென்ற அருள்வாக்கு எழுந்ததுபோலும். முன் வினைக்குத் தக்கவாறு சுந்தரமூர்த்திகள் கூடிவாழ்தற் குரிய நங்கை திருவாரூரில் உதித்தமையால் அவ்விடத்தே மணக்கோலங்கொள்ளும்படி இறைவன் கட்டளையிட்டன னென்க. தடுத்தாட்கொண்ட காலத்தும் அதற்குப் பின்னும் இறைவன் சுந்தரமூர்த்திகளைத் தோழமைக் குரிய முறையிலேயே நடத்திவந்தமையால், 'தோழமை யாக உமக்கு நம்மைத் தந்தனம்' என்று அருளிச்செய் தனர் என்க. சுந்தரமூர்த்திகள் தமக்குக் கிடைத்தற்கரிய பெருநிலையை நினைதொறும் நினைதொறும் இறைவனது பேரருட்பெற்றியையும் தமது தோழமையையும் உணர் வதாலெழும் பேரானந்தப் பெருவெள்ளத்தில் திளைத் தாடினமையால், இறுமாப்படைந்தனர் என்பார் 'வென்றி அடல் விடைபோல் நடந்து' என்றார். திருநாவுக்கரசர் இறுமாந் திருப்பன்கொலோ என்றதுங் காண்க. அங்ஙனம் இறுமாப் படைதல் செருக்காகமாட்டாது. தற்பெருமை பாராட்டி மகிழ்வெய்துவோனே அகந்தையுடையான் என்னப்படு

வான். பாசக்கட்டு நீங்கிச் சிவப்பேறுற்ற உயிரானது மனக்கவலை நீங்கி மாண்பெரு மகிழ்ச்சி யெய்துதல் இயல்பே. அகமகிழ்ச்சியால்வந்த மெய்ப்பாடே இங்கே இறுமாப்பெனப்பட்டது. இறைவன் தம்மைத் தோழமை யாகக் கொண்டமையாலும் விளையாடுவா யென்று பணித் தமையாலும் தமது குறைகளை இறைவன் எளிதிற் பொறுத்தருள்வ னென்ற நம்பிக்கையும் இறைவன்பாற் குறையிரந்து நிறைவெய்துந் தனி உரிமையுணர்ச்சியுமே சுந்தரமூர்த்திகளுக்கு மனக்கவலையை மாற்றியன. இறை வன் சுந்தரவேடங் கொள்ளும்படி தம்மைக் கட்டளை யிட்டதற்காக அவர் மகிழவில்லை. அச்சமயத்தில் தான் ஒருத்தியை மணக்கவேண்டுமென்ற எண்ணங்கூட அவ ருக்கு இல்லை. இறைவனது கட்டளையை மருதபடி அழகிய திருக்கோலங் கொண்டவிடத்தும் திருவெண் ணீறு, கண்டிகை என்னு மிவற்றை அவர் அழகுபெற அணிந்துகொண்டமையால், 'சைவ விடங்கி னணிபுனைந்து' என்றார்.

திருவாரூர் மிகவும் பழமையான திருப்பதி என்பது திருநாவுக்கரசரது "ஒருவனு யுலகேத்த நின்ற நாளோ" என்று தொடங்குந் திருத்தாண்டகத்திற் குறிக்கப்பட்டதாகலின், அதனை 'எல்லையில்லாத் திருநகர்' என்றனர் ஆசிரியர் சேக் கிழார். சகலர்க்குரிய புவனங்களிலெல்லாஞ் சிறந்ததாய்ப் பிரகிருதி முடிவிலுள்ள சிவலோகமே பிற எவற்றினுஞ் சிறத்தலால் அதனை 'முதற்பெருங்கயிலை' என்றார். சிவ பெருமான் தேவர் முனிவர்கட்கு அருள்செய்வான் அம்மை அப்பராய்ச் சிறந்து விளங்கும் இடம் கயிலையெனப்படும். அத்தகைய இடங்கள் இமயமலைக்கண்ணும், மேருவிலும், அண்டத்தின் முடிவிலும் உள்ளன. அவையாவுங் கயிலை என்ற பெயரால் அழைக்கப்படும். அவை யாவற்றினுஞ் சிறந்த இடத்தையே 'முதற்பெருங் கயிலை' என்றார்.

இமயமலைக்கயிலை நிலவுலகத்தினர் போற்றுதற்குரிய முதலிடமாகலின், 'முதற்பெருங்கயிலை' என்றுரென்றலு மொன்று. சிவயோகத்தின் பயனாக அக்கயிலைக்கட் சாரூபம் பெற்ற பெண் அடியார்களுட் சிறந்தவர் கமலினி என்பவராவர். திருமகளொத்த பெருமையுடையராகலின் இலக்குமி பூசனை புரிந்த திருப்பதியின்கண்ணேயே அவள் பிறந்தனள்போலும். எல்லாராலும் பரவப்படுதலின் பரவையர் என்றபெயர் அவளுக்கு அமைந்ததுபோலும்! உருத்திர கணிகையர் என்பவர்கள் உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானுக்குத் தொண்டுசெய்யும் பணிப்பெண்களாவர்; அன்னோர் ஆதியில் தம் பெற்றோருக்கு வரத்தினாலுதித்து இறைவர் பணிக்கேயென விடுக்கப்பட்ட பெண்மணிகளென்பர். அவ் வழக்கம் செங்குந்தர் மரபில் உண்டென்பர். இறைவர் பணியையே தமது கடமையாகக்கொண்டு மக்கள் பணிசெய்யக்கருதாமையின், அவர்கள் மணஞ்செய்து கொள்ளாமல் வாழ்ந்தாராதலின்' 'பதியிலார்' எனப்பட்டார்கள்! ஆதியில் அவர்கள் துறவுநிலையி லிருந்தனர் எனவும், பிற்றைக்காலத்தில் ஆடவரொடு கூடி வாழ்தலை மேற்கொண்டாரெனவுங் கூறுப. இவர்கள் விதிமுறையின்றி விரும்பியவாறு பல ஆண்மக்களொடுகூடி வாழ்க்கை நடத்தும் வேசையர் போலாது உயர்குல மக்களுள் விரும்பிய ஒருவரைக் கணவராகக்கொண்டு திருக்கோயிலில் ஆடல்பாடல் புரிந்தோராவர். அன்னோர் இன்பவாழ்க்கையிற் றலைசிறந்தவராதலின் போகப்பயன் துய்க்கவந்த நாயனார்க்கு உரிய கமலினி இம்மரபினுள் தோன்றினார்போலும்! கண்ணிற்குப் பிணையினையும், ஒள்ளிய சிறிய பற்களுக்கு அரும்பினையும், எயிற்றின் நீரிற்குத் தேனினையும், இதழுக்குப் பவழத்தையும், சாயலுக்குக் கொடியினையும், நுதலுக்குப் பிறையினையும், புருவத்திற்கு வில்லினையும் உவமை கூறு

வது பாவலர் மரபாகலின், அவையனைத்தையும் ஆசிரியர் ஒரு செய்யுளுள் அழகாகத் தொகுத்துரைத்தார். அக்காலத்திற் சிறுமிகள் கழங்கு பந்து அம்மனை ஊசல் முதலிய விளையாட்டுகளிற் பயில்வதும், இன்னிசை பாடுவதும் வழக்கமென்று தெரிகிறது. ஒருவருக்கு அன்பு விளைதல் முன்னைத் தவப்பயனென்பது பரவையார்க்கு இளமையிலேயே உமையம்மையை அன்பொடு பாடுங் குறிப்புத் தோன்றியதின் வைத்துணர்க. இறைவனை ஒருவனென்றும் ஒருவரென்றும் பகர்வது ஆசிரியர் சேக்கிழாரது வழக்கம். இப்புராணத்தில் 'ஓங்கு பூங்கோயிலுள்ளார் ஒருவரை அன்பினேடும் பூங்கழல் வணங்க' என்றதுபோலத், திருநாவுக்கரசர் புராணத்தில் 'எவ்வுயிருக்கும் சான்ருகும் ஒருவனைத் தண்டமிழ் மாலைகள் சாத்தினரே' என்றனர். காஞ்சி என்பது பெண்டிர் இடைக்கண் அணியும் எண்கோவைமணி. மணிமேகலை என்பது எழுகோவை மணி. இவை பண்டையன. இக்காலத்திற் பெண்குழந்தைகள் அரைச் சதங்கையும், ஏனைப்பெண்டிர் ஒட்டியாணமும் அணிவது வழக்கமாக இருக்கிறது.

அகப்பொருள் நூலிற் கூறியவண்ணம் ஒத்த தலைவனுந் தலைவியுந் தாமே எதிர்ப்பட்டு மணத்தல் ஊழ்வினையின் பயனுமாதலின், ஆசிரியர் 'நற்பெரும் பான்மை கூட்ட' என்றனர். காட்சித் துறைக்குப் பின் ஐயம் குறிப்பறிதல் தெளிவு என்னுந் துறைகள் வரற்பாலன. பண்டை நூல்களிலே காட்சியானது பொழிலகத்தே நிகழ்ந்ததாகக் குறித்திருப்பினும், அது பிற இடங்களிலும் நிகழ்தல் கூடும் என்பது இதனுல் விளங்குகின்றது. கம்பராமாயணம் மிதிலைக்காட்சிப் படலத்தில் இராமர் வீதி வழியாகச் செல்லுங்காலை ஒரு வீட்டின் மேலிடத்திற் சீதையை முதன்முதற் கண்டதாகக் குறிப்பிட்டிருக்கின்றது. சிவபெருமானது திருவருளினுலே நமது நாயனு

ரது திருமணம் நிகழ்ந்ததாகலின், அக்கடவுளுடைய திருக்கோயில் வாயிலிலேயே நாயனூர்க்கும் பரவையார்க்குங் காட்சி நிகழ்ந்தது பெரிதும் பொருத்தமா மென்க. காட்சியின் பின் நிகழும் ஐயத்துறையினைக் 'கற்பகத்தின் பூங்கொம்போ" என்று தொடங்கும் பாட்டில் ஆசிரியர் விரித்துரைத்தார். பரவையார்க்கும் ஐயம் நிகழ்ந்ததாகத் தெரிகின்றது. ஐயத்தினைத் தெரித்தல் தலைவனுக்கே சிறக்குமாயினும் நினைவின்கண் ஐயப்பாடுறுதல் தலைவிக்கும் இயல்வதொன்றே. "இவன் யாரோ என நினைந்தார்" என்றது காண்க. நாயனூர் கருத்தும் பரவையார் கருத்தும் மிகவும் ஒத்த இயல்புடையன என்பது அவர்களது ஐயப்பாட்டு முறையால் தெளியப்படும். "கற்பகத்தின் பூங்கொம்போ" என்பது "இந்திரன் மகளோ" என்னுங் குறிப்புப்பொருளை யுணர்த்தும். இதற்கேற்பப் பரவையார் சுந்தரமூர்த்தியை 'இந்திரன்மகளை மணந்த முருகனே!' என்று ஐயுற்றூர். "காமன்தன் பெருவாழ்வோ" என்றதால் காமன் மனைவிபோன்ற ஒரு மடக்கொடியோ! என்று நாயனூர் ஐயுற்றனர் என்பது புலனும். இதற்கொத்த முறையிலேயே பரவையாரும் "பெருகொளியால் தன்னேரில் மாரனோ" என நினைந்தார். அழகிய திருவுரு உடைமையாலும் பெறலருந்திருவருள் பெற்றமையாலும் 'நிகரற்ற காமன்' என்று நம் நாயனூர் கருதப்பட்டார். பரவையார் இறைவனைத் தொழும் பெரும்பேறு பெற்றவராதலின், "பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ" என்று கருதப்பட்டார். புண்ணியம் என்ற சொல் காவமைத்தல் குளந்தொடுதல் முதலிய அறச்செயல்களை உணர்த்தும். இவற்றினுஞ் சிறந்தது இறைவனை வழிபடுதல். ஆதலால் இறை வழிபாடு 'புண்ணியத்தின் புண்ணியம்' எனப்பட்டது. பயன்கருதாது முழுமுதற்கடவுளை வழிபடச்செல்லும் ஆர்வமிகுதியின்

அழகுதோன்றப் 'பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ' என்ருர். "உண்ணிறையுங் குணநான்கும் ஒருபுடைசாய்ந்தன எனினுங், கண்ணுதலைத் தொழுமன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப" என்றது இதனை வலியுறுத்துதல் காண்க. நமது நாயனுர் பெரும்பாவலராதலின் பரவையரது வனப்பினை உவமையால் விரித்துணர்ந்தார். முகில்போன்ற கூந்தலையும், வில்லனைய புருவத்தையும், குவளைபோன்ற கண்ணையும், பவள இதழையும், மதியனைய திருமுகத்தையும், கொடியனைய ஒல்கிய தோற்றத்தையும், இயற்கை நன்மணமுடைய மேனியையும் உடையவர் பரவையாரென்பார், "புயல் சுமந்து விற்குவளைப் பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ" என்ருர்.

'தன்னேரில் மாரனே' என்ற பரவையார் நாயனுரது அழகினைப் பெறவைத்தார். நாயனுர் அற்புதமோ என்று வியந்ததற்கொப்பப் பரவையார் 'தார்மார்பின் விஞ்சையனே' என்று கருதினுர். விஞ்சையன் என்பது மந்திரம் வல்லான் என்ற பொருளையுடையது. மந்திரத்தால் மனத்தைக் கவர்வதுபோலத் தன்மனம் திரித்தவரை 'விஞ்சையன்' என்னல் இயல்பு. மனந் திரிபுற்று மாலையிடற் குரியானென்று எண்ணினமையால் "தார்மார்பன்" என்ருர். நமது நாயனுரும் திருவெண்ணெய்நல்லூரில் இறைவனது திருவருள்பெற்றபின்னர்ப் பரவையாரைக்காணும் வரை தூய தவநெறியிலே சென்ற திருவுள்ளமுடையராயிருந்தமையின், பரவையாரது காட்சியால் உள்ளம் திரிபுற்றகாலை அதனையோர் புதுமையாக உணர்ந்து இஃதோர் 'அற்புதமோ' என்ருர். எவற்றையும் அருட்கண்ணுற் காணுந் திருநாவலூரர் பரவையாரையுஞ் சிவனுரது திருவருளோடு தொடர்புபடுத்தச் 'சிவனருளோ' என்றனர். இதற்கேற்பப் பரவையாரும் "மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனே" என்கின்ருர். திரு

வருட்பேற்றின் வலியை வெல்லும் வலிமை பிற எதற்கும் உண்டோ என்ற ஐயப்பாட்டினுல் நமது நாயனுர் "அறியேன் என்று 'அதிசயித்தார்." மெய்யருள்பெற் றுடையவன் என்றமையால் இவன் மக்களுட் சிறந்ததோர் அண்ணல் என்ற தெளிவும், என்மனந்திரித்த இவன் என்றமையால் குறிப்புணர்தலும் ஆகிய துறைகள் பெறப்பட்டன. 'விரைக்கொடியோ' என்றதனுல் நானிலமடந்தை என்னுந் தெளிவும், சிவனுரால் அருளப்பட்ட பெண்மணி என்றபொருளைச் 'சிவனருள்' என்ற சொற்ருெடர் உணர்த்துவதாற் குறிப்பறிதலும் நாயனுர்க்கும் நிகழ்ந்தன என்பது பெறப்பட்டது. மனத்துட் புகாது மனந்திரித்த வின்மையின் ஒத்தகாதல் பெறப்பட்டது.

அறிவு விளங்கச்செய்தலின் உடம்பானது விளக்கெனப்படும். 'மாயாதனுவிளக்கம்' என்றது மது. கவின் மிகுந்த உடம்பினை மணிவிளக்கென்ருர். எண்ணிய வண்ணம் ஒன்றைத் தோற்றுவிக்கும் ஆற்றல் திருவருட் சத்தியால் அயன் பெற்றுள்ளானுதலின், 'உள்ளத்தான் விதித்ததொரு மணிவிளக்' கென்ருர். கையினுல் எழுத முடியாமையால் அதனுல் வந்த வருத்தத்தைத் தீர்த்தற் பொருட்டு மனத்தால் எத்துணை அழகாக நினைக்கமுடியுமோ அத்துணை நயம்பெற அமைத்தனரென்பார் 'தன் வருத்தம்உற விதித்ததொரு மணிவிளக்' கென்ருர். மூவுலகிலும் இன்பத்தை விரும்பினுர் தலைசிறந்ததாகக் கருதற்குரிய வனப்புடைய நங்கை என்பார், 'மூவுலகின்பயனுகி' என்ருர். மன்மதனுர் இருவருக்கும் ஒத்தகாதலை விளைத்தலின் 'நடுநின்ருர் படைமதனுர்' என்ருர். காதலானது அகத்தால் உணரப்படுவதாதலின், பிறர்க்கு எளிதிற் புலனுகாது ஆதலின் 'அயலறியா மனம்விரும்ப' என்ருர். பரவையார் சுந்தரமூர்த்தியை மணப்பதற்கு முன் தூய நன்னெறியிலேயே நின்றமையால், 'உம்பர்தரத்

தார்க்கும் சேர்வரியர்' என்றனர். "பேர்பரவை" என்று தொடங்கும் பாட்டிற்குப் பரவை என்ற சொல் ஆறு அல்லது ஏழுபொருள்களில் வழங்கப்பட்டுள்ளது. இங்ஙனம் சொல்லணியமைத்தல் பெரியபுராணத்திற்குப் பிற்காலத்திலேதான் அந்தாதியிற் பெரிதும் வழங்கலாயிற்று.

முன்வினைப்பயனைத் திருவருள்பெற்ற பேரறிஞரும் நுகர்வராதலின், "முன்றொடர்ந்து வருங்காதல் முறைமையினாற் றொடக்குண்டு" என்றனர். "இடுக்கண்பட்டிருக்கினும் இரந்து யாரையும் விடுக்கிற் பிரானென்று வினவு வோமல்லோம்" என்றபடி, பேரன்பர்கள் தமது குறைகளைப் பிறர் யாவருக்கும் எடுத்துரையாமல் இறைவனையே வேண்டி அவைகளை நிறைவு செய்யப் பெறுவாராகலின், எனை 'ஆட்கொண்டவர்பால் நண்ணுவன்' என்று நமது நாயனார் திருக்கோயிலுட் சென்று வேண்டுவார் வேண்டுவதே கடவுளிடம் 'மெல்லியலார் தமை வேண்டி' அடிபணிந்தார். இரண்டுடற்கு உயிர் ஒன்றானாற்போலப் பரவையாருந் திருநாவலூரருங் காதலாற் பிணிப்புண்டமையின் நாயனார் பரவையாரை 'இன்னுயிராம் அன்ன' மெனக் கருதித் தேடுவாராயினர். பாச நீக்கமுற்றுச் சிவன்கழற்கே மிகுந்த அன்புடையராய்த் திகழ்ந்த நாயனார் அவர் அன்பினும் மேம்பட்டதோர் பற்றினைப் பரவையாரைக் காணும்வரை அறியாதிருந்தனர். கண்ட பின்னர் தமது பேரன்பினையுங் கீழ்ப்படுத்து மேற்செல்லுமோர் அவாவினைக் கண்டு வியப்புற்றும், அவ்வவாவினையுந் திருவருளின்பாலே சார்த்தும் இயல்புடையாராதலின் "ஈசனார் அருள் எந்நெறிச் சென்றதே" என்றனர். இங்ஙனந் திருவருளுடன் தமது அறிவை ஒட்டிப் பொருள்களை அறியும் அறிவே பேரறிஞர்க்குச் சிறப்பாகும். புள்ளினங்கள் மாலைக்காலத்திற் றமது கூட்டிற்குச் சென்று தமது பெடையுடன் துயில்வதை நினைந்து

பிரிவுற்றகாதலர் வருந்துவாராதலின், "பையுண்மாலைத் தமியோர் பனிப்புற" வந்ததென்றார். வானம் இருண்டதற்கு மூன்று அழகான உவமைகளை ஆசிரியர் சேக்கிழார் ஒரு செய்யுளின்கண் அமைத்துள்ளார். பெண்பாலார் ஆடவரினும் அடக்கத்திற் சிறந்தராதலின் தமது கருத்தினைத் தெளிவுபட எடுத்துரைக்கமாட்டார். ஆதலால் பெண்டிருள்ளத்தைத் தெளிபளிங்கிற்கு ஒப்பிடாமல் இருட்செறிவுக்கு ஒப்பிட்டார். பரவையாரது உள்ளத்தைத் திருநாவலூரர் எளிதின் அறியமுடியாதிருந்த நிலையில் வான்படர்ந்த இருள் 'மகளிர் மன' மெனத் தோன்றியதுபோலும்! பரவையாருந் தமது துயரத்தை "அலரும் நிலவும் மலரும் முடியார் அருள்பெற்றுடையார் அவரோ அறியார்" என்றார். அகனன்பினையுங் கீழ்ப்படுத்தி மேலெழுந்த அவாவிற் கேதுவாகிய தமது முன்னை வல்வினை வஞ்சமாக்கள்தம் வல்வினையெனத் தோன்றியதுபோலும்! வஞ்சனையால் மறைத்து நின்று இறைவன்மீதும் மலர்மாரி சொரிந்த காமன் தம்மாட்டுச் செய்யுங் கொடுஞ்செயலானது 'வஞ்சமாக்கள்தம் வல்வினையெனத் தோன்றிய' தென்பாரும் உளர். பரவையாரும் "பலரும் புரியும் துயர்தா னிதுவோ படைமன் மதனார் புடைநின் றகலார்" என்றது காண்க. மலவிருளை ஓட்டுந் திருவைந்தெழுத்தினை உணர்ந்தோதா ருள்ளம் அறியாமையாற் கவரப்பட்டிருத்தலின் 'அஞ்செழுத்தும் உணரா நெஞ்சம்போல வானம் இருண்ட' தென்றார். பரவை மாட்டுள்ள காதலினால் இறைவன் திருவருளில்லாதார்போலத் தாமே தமக்குத் தோன்றினமையால், அஞ்செழுத்துணரா நெஞ்சத்தை அது நினைப்பூட்டிற்று. பரவையாரும் "உமதன்பிலர்போல் யானோ உறுவேன்" என்றனர். இவற்றால் இருவர்கருத்தொருமை காணப்படும்.

மூவகைப் பற்றினுள்ளும் நடுநின்ற பெண்பற்று கடத்தற்கரிய தென்றும், பெருந்தவ முனிவர்பால் தோன்றியவிடத்து அதன் வலிமை தெற்றென விளங்குமென்றும், ஆடவர் வீரங்குன்றிப் பெண்டிர்பாற் பற்றுவைத்தல் அவரது ஆண்மையைப் பெண்டிர் பழித்து நகையாடற் கேதுவென்றும் நகைச்சுவை தோன்றப் புனைந்துரைக்கும் ஆசிரியர்,

"மறுவில் சிந்தை வன்றொண்டர் வருந்தினுல்
இறுமருங்குலார்க் கியார்பிழைப்பா ரென்று
நறுமலர்க் கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவலென்ன முகிழ்த்தது வெண்ணிலா"

என்றனர். குமுதத்தின் மலர்ச்சியைப் பயிர்ப்பு மிக்க குலமாதர் மகிழ்ச்சிக்கு உவமித்தது சிறந்ததோர் பாநயமாம். இங்ஙனங் குறிப்பாக நற்பெண்ணினது கடமையை வற்புறுத்துதல் சிறந்ததோர் முறையாம். பரவையார் குமுதம் போன்றதோர் செவ்வியுடையார் என்று குறித்தவாறுமாம். பரவையார் குமுதத்திற் கொப்பவராயின் திருநாவலூரர் வெண்ணிலாவிற்கு ஒப்பவராவர். அவரது திருநீற்றொளியினை நிலவொளிக்கு ஒப்புரைக்கு மாற்ருல் திருவெண்ணீற்றுப் பெருமையை ஆசிரியர் குறிப்பாக விளக்கிப்போந்தது காண்க. திருவெண்ணீருனது பற்றற்ற தூயநிலையை உயிர்கட்கு அறிவுறுத்துஞ் சிவப்பேற்றை உணர்த்துதலால் புனிதத்தோடு இன்பத்தையும் அது வலியுறுத்தும் பிறவிவெம்மையை நீக்குந் திருவருட்சத்தியின் இயல்பினை விளக்குதலால் அது தண்மையையும் உணர்த்தும். திருநீற்றுப்பதிகத்தினைப் பரையின் வரலாறு என்றதும் இக்கருத்துப்பற்றியே. அருள்வெளியின் ஒளிக்குத் திருவெண்ணீற்றின் ஒளியே அறிகுறியாமாதலானும் "அருள் ஒளிக்குளே அகிலாண்டகோடியெல்லாந் தங்குமாதலானும், "ஆற்ற அண்டமெலாம் பரந்து

அண்ணல்வெண்ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா'' என்றனர். நிலவுங் கடலுந் தென்றலுங் காதலை மிகுவிப்பன ஆதலின், காதலால் வருந்துவோர்கள் அவற்றைப் பழித்தல் இயல்பே. தண்மதி வெம்மையுடையதாகத் தோன்றுவது தீயசேர்க்கையால். நல்லியற்கை மாறிய போது எழும் இரக்கச்சுவை நிலவினைப்பழிக்குஞ் செய்யுட்கண்ணும், கொடுமைசெய்யும் பேராற்றலால் எழும் அச்சச்சுவை ஆண்டவனுக்கே நஞ்சினைக்கொடுத்த கடலைப் பழிக்கும் பாட்டின்கண்ணும், பொதியைச் சந்தனக் காவினிற் றோன்றி நீர் நாட்டினில் தண்வயல்களிற் பொருந்தி உலவும் இனியமாருதம் எங்ஙனங் கொடிய தன்மையுற்றது என்று வியப்புச்சுவை தென்றலைப் பழிக்கும் பாட்டின்கண்ணும் நயமுற அமைக்கப்பட்டிருத்தல் காண்க. வியப்புச் சுவைக்குரிய பாட்டு வருமாறு:

" பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடை
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினிற்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம்.''

தமிழென்றவிடத்துத் தமிழ் என்ற சொல் இனிமை என்னும் பொருளுடையது. திருநாவலூரர் யாரொடும் பேசாது திருவருட்குறிப்பினை நோக்கியே இருந்தது போலப், பரவையாரும் வேறொருவருடன் பேசாதவராய் நிலாமுற்றத்தி லிருந்தார். திருநாவலூரர் 'சைவமுதற் றிருத்தொண்டர் தம்பிரான்தோழனர்' என்றறிந்த உடனே அளவற்ற காதலால் விழுங்கப்பெற்றார். இருவரையும் பெருங்காதலாற் பிணித்தது யாதெனின், இறைவன்மாட்டுள்ள பேரன்பேயாம். ஒத்த உணர்ச்சி யென்பது இஃதே. வெப்பந்தீர்வதற்கு அக்காலத்திற் பன்னீர் சந்தனக்குழம்பு முதலியவைகளைப் பயன்படுத்துவதுடன் இளந்தளிரையும் வெப்புடையார் மேனிமேலி

டுதல் ஒரு வழக்காகத் தெரிகிறது. குளிரிக்கொடி என்பதனையுந் தட்பத்திற்காக மேற்கொள்வர்போலும். உடல் வெப்பத்தைத் தணிக்கும் இவைகள் உள்நின்றெழுங் காதல் வெம்மையைப் பெருக்குவனவேயாதலால் அவை கடியப்பட்டன. நிலவினையுந் தென்றலினையும் பழித்ததும் இக்கருத்தைப் பற்றியே. எந்நோவுற்றோர்க்கும் இரவு நீடித்துத் தோன்றுதல் இயல்பு. காதல்நோயுற்றார்க்கு அது மிகநெடிதாக இருத்தலைக் கூறுதல் வேண்டுமோ? உள்ளமானது பகலிற்போலப் பலசெயல்களிற்செல்லாது ஒன்றினை நினைந்து வருந்துவதிலேயே அழுந்திநிற்பதால் இரவு அங்ஙனந் தோன்றுமென்க. திருவருள்பெற்ற பேரறிஞராதலின் திருநாவலூரர் தமது காதல் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு இறையருள் வழி நிற்பப், பரவையார் நாயனர் தந்நிலையை அறிந்திலரே அருள் செய்திலரே எனப் புகன்று அயர்ச்சியுற்று இறைவனைக் குறையிரந்தனர். அவருடைய வேண்டுகோட்கு இரங்கிய கடவுள் இருவர்க்கும் மணத்தினை அடியார் வாயிலாக நிகழ்வித்தனர். சிவனடியார்க்குரியவற்றைத் தாமே இறைவன் வெளிப்படையாக இயற்றுவிப்பன். அங்ஙனஞ் செய்வித்தல் சிவனடியார் பெருமையையுந் தாம் அவர்கட்கு எளிதில் அருளும் இயற்கையையும் ஏனையோர்க்கு அறிவுறுத்தியவாறும். உலகத்திலே ஒத்த மனமுடைய காதலனுங் காதலியும் மணம்புரிய நேர்தலும் இறைவனது திருவருளேயாமாயினும் ஆண்டுந் திருவருள் பாலின் நெய்போல வெளிப்படாது நிற்றலின், அது நல்வினைப்பயனே யாமென்று யாருங்கொள்வர். ஈண்டு பரவையாரது திருமணம் இறைவன் நேர்நின்று இயற்றுவித்ததாகலின், அது திருவருட் செயலென்றே தெளியப்படும். சிவனடிபேரன்பில் எழுந்த பெருங்காதலாற் பிணிக்கப்பட்

டார்க்குக் குலங்கோத்திரம் முதலியன கருதுதன் மிகை. மணத்திற்கு அறிகுறியாகத் திருமங்கலநாண் பூட்டுதல் நிகழ்ந்ததாக ஆசிரியர் விதந்தோதவில்லை. 'வதுவை தகு நீர்மையினால் நிகழச்செய்தார்' என்ற அளவே விடுத்தார். மணத்தினைக் குறிப்பதற்கு யாதாவதொரு நெறிச்செயல் நிகழ்ந்திருக்கவேண்டும். மாலைமாற்றோ, மங்கலநாண் பூட்டோ, ஆழியணிதலோ இவற்றுள் யாதோ என்று ஆசிரியர் விளக்கவில்லை. மலைத்தலைமீதிருந்து சிவயோகம் பயில்வார் சிவபெருமானை ஒன்றி நினைந்திருப்பர். பேரன்பர்போலத் தாம் பெற்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாக நுகர வல்ல மெய்யுணர்ச்சிசான்ற திருநாவலூரர் பரவையின் மார்பத்தையே தமக்குரிய குன்றமாகவும், அவள் புணர்ப்பையே பலநாளும் பயில்கின்ற யோகமாகவுங் கொண்டார்போலும். திருநாவுக்கரசர் முன்னிலையில் தமக்கு நேர்ந்த துன்பத்தைப் பேரின்பமாக நுகர்ந்தது போலத், திருநாவலூரர் தமக்கு நேர்ந்த சிற்றின்பத்தைப் பேரின்பமாகத் துய்த்தவரென்க. பரவையாருடன்கூடி விளையாடும் வெளித்தோற்றத்தை உடையராயினுந் தமது சென்னியிலுஞ் சிந்தையிலுஞ் சிவபிரானது திருவடித்தாமரை மலரின் வரும் பேரின்பத் தேனை நுகர்ந்து திருவருட்பதிகம் பாடினரென்பதால் அது வலியுறும்.

> "தன்னையா ளுடையபிரான் சரணார விந்தமலர்
> சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம்
> பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
> மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றார்."

பொருட்செல்வமுந் திருவருட்செல்வமும் ஒருங்கு நுகரும் பெரும்பேறு உற்றமையால் ஆடை அணிகலன் முதலியவற்றால் உளதாம் இன்பத் திருக்கோலத்தையுந் திருநீறு கண்மணி முதலியவற்றால் விளங்குஞ் சைவத் திருக்

கோலத்தையும் நமது நாயனர் ஒருங்கே உடையராயினர். விலங்கு புள் என்பவற்றுள் விளையாட்டிற்குரியவற்றை அவரது பரிசனங்கள் கொண்டுசென்றதும் நான்மறை முனிவர் சூழச்சென்றதும் இக்கருத்துப்பற்றியே என்க. இருவகை அழகும் ஒருங்குடைமையினால் இவர்க்கு அழகர் என்ற பெயர் அமைந்ததுபோலும். கழிபெருஞ் செல்வச் செழும்பயன் துய்த்தும் அடியார்களுடன் இருக்கும் மகிழ்வினையே குறிக்கொண்டிருந்தமை தாமரை யிலையில் நீர்போலப் பற்றற்ற நமது நாயனர் நிலைமையை விளக்குவதாகும். தொண்டர் நிலையமாகிய தேவாசிரி யனைத் தொழுது அடியார்க்கடியனுகும் பெருவிருப்புடன் திருக்கோயிலுள் நமது நாயனர் சென்றகாலை இறைவனே திருக்காட்சிகொடுத்து அடியார்கள் பெறும் வீட்டின்பத் திற் கேதுவாகிய திருவடிகளைச் சூட்டினர் என்க. அடி யாரைத் துதிக்குந் திருத்தொண்டத்தொகை பாடுமுன் இறைவனது திருவடிகளை வழுத்துதல் இயைபுடைய தாகலின், அவற்றின் பெருமையை நாயனர் வியந்தோதி னர்போலும். மெய்யடியாரது நற்சார்பினால் தீயன ஒழி தலுஞ் சிவப்பேறு கைகூடுதலும் எளிதாமாகலின், பிறவியறுத்தற்குரிய வாயில் அவர்களது இணக்கமே யென்று ஞான நூல்களெல்லாங் கூறுதல் காண்க. "அம்மலங்கழீஇ அன்பரொடுமரீஇ" என்றது மறிக. அடியார்களது இயல்பை இறைவனே எடுத்து மொழிந் தது அவர்கள் பெருமையை விளக்குதற் கென்க. "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்றது அக்காலத்திலே நல்லொழுக்கமுஞ் சிவனடிப்பேரன்பு முடையரா யிருந்த அந்தணரையே வாழ்த்தியதாம். தொகையடியாரென்னும் வகுப்பினுள் எல்லா அடியார் களும் அடங்குவாராயினுந் தமிழ்நாட்டினிற்குச் சிறப் பாக எடுத்தோதற்குரிய தனியடியார்கள் எல்லாருந் தமிழ்

நாட்டினராகவே இருப்பது காண்க. தனி அடியார்கள் அறுபத்துமூவர் திருப்பெயரையும் பெருமையையும் அறிவதற்கு நமது நாயனார் யாதொரு ஆராய்ச்சியுஞ் செய்ததாகத் தெரியவில்லை. திருவருள் விளக்கத்தினாலேயே அவற்றை உணர்ந்து கூறினமையால் திருத்தொண்டத் தொகையின் உயர்வு நனி விளங்குமென்க. இறைவன் தில்லையில் திருநடனம் இயற்றியகாலை, அதனைக் காண்பான் விழைவுற்ற தாபதர் கூட்டத்தினையே ஈண்டுத் தில்லைவாழந்தணர் என்பாருமுளர். சிவபெருமான் அடியார்கள் பெருமையை உணர்த்தியபாட்டாவது,

"பெருமையால் தம்மை யொப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமே லொன்று மில்லார்
அருமையாம் நிலையி னின்றார்
அன்பினால் இன்ப மார்வார்
இருமையுங் கடந்து நின்றார்
இவரைநீ அடைவா யென்று"

என்பது. உயிர்களுள் 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் படுமோ' என்றபடி தொண்டர்களே பிறரினும் பெரியோராதலின், அவருக்கு ஒப்பார் எவரு மில்லை. ஆதலால் அவர்களுக்கு அவர்களே ஒப்பாவார் என்னுங் கருத்தால் பெருமையால் தம்மை யொப்பா ரென்றார். அன்பொடு வழிபடுதலால், இறைவனைத் தொண்டர்களடைந்தனர். இறைவன்பாற் செலுத்தும் பேரன்பினாலே இறைவனை அம்மையே என்றும் அப்பனே என்றும் தழுவி மொழியத்தக்க தகுதியுடையவர்கள் தொண்டர். ஆதலினாலே 'பேணலால் எம்மைப் பெற்றார்' என்றனர். பல்பொருள்களிலுங் கவர்பட்டுச் சென்றோடும் மனத்தை ஒருமுகப்படுத்திக் கடவுளோடு இரண்டறக்கலந்த

அன்பர்கள் இறைவன் பற்றினைப்பற்றி உலகப்பற்றினை வென்றவராதலால், ஒருமையால் 'உலகைவெல்வார்' என்றனர். சித்தஞ் சிவமாகப் பெற்ற மெய்யன்பர்கள் செய்வனயாவுந் தவமாதலால் அவர்பாற் குறையாகக் காணப்படுவது அவரது முன்வினைப்பயன் நிகழ்ச்சியே யன்றிப் பிறிதன்மையின் 'ஊனமே லொன்று மில்லார்' என்றனர். தொண்டர்கள் ஒவ்வொருவருஞ் செயற்கருஞ் செயல்கள் செய்தற்குரிய உயர் ஒழுக்கத்தில் நின்றூராதலின், 'அருமையாம் நிலையில் நின்றூர்' என்றூர். கூடும் அன்பினிற் கும்பிடுத லிலேயே. இணையற்ற இன்பமெய்தி வீடும் வேண்டா விறலின் விளங்கினூராதலின், 'அன்பினூல் இன்ப மார்வார்' என்றனர். இருவினையையுங் கடந்துள்ள அன்பர்கள் பிறவிக் கேதுவாகிய இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் சற்றுங் கருதாது வீடு பெறும் பெருநிலையில் நின்றூராதலின், 'இருமையுங் கடந்த' என்றனர். அன்பர் கூட்டத்தையே அடியார் விரும்புவாராதலின், 'இவரைநீ யடைவா' யென்றனர்.

## ரு. நெல்பெற்ற அற்புதம்

திருநாவலூரர் திருவாரூரில் தங்கியிருக்கும் நாளிலே குண்டையூர்க் கிழவரென்னும் ஒரு வேளாளர், செந்நெல்லும் பொன்போன்ற நல்ல பருப்புஞ் சர்க்கரையு முதலிய பலபொருள்களைப் பரவையார் மாளிகைக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும் பணிபூண்டிருந்தார். அக்காலத்திலே மழை குறைந்து நிலவளஞ் சுருங்கினமையால் வன்றொண்டர் திருமாளிகைக்கு வேண்டிய அளவு நெல் எடுத்துக்கொடுக்க வியலாமைபற்றி வருந்தி உணவு கொள்ளாது அக்கிழவர் இரவில் துயிலும்போது சிவபெருமான் அவருக்குத் தோன்றி 'நம்பியாரூரர்க்கு வேண்டிய நெல் உனக்கு இப்போது தந்தோம்' என்றருளிச்செய்து நிதிக்கோமானை ஏவி அவ்வூர் முழுதும் நிறையும்படியாக நெல்மலையைத் தோன்றுவித்தார். விடிந்ததும் குண்டையூர்க்கிழவர் நெல்மலையைக்கண்டு பெருவியப்புற்றுத் திருவருளைப் போற்றிப் பரவை கணவரைக் கண்டு தொழுவான் சென்றனர். நம்பியாரூரரும் இறைவர் கட்டளைப்படி எதிர்செல்லக் குண்டையூர்க்கிழவர் அவரைக்கண்டு வணங்கி 'நெடுநாளாக அடியேன் செய்து வந்த பணிக்குத் தடை ஏற்பட்ட காலைச், சிவபெருமான் தாமே நெல்மலையைக் கொடுத்தார்; அது மனிதரால் எடுக்கும் அளவினதன்று; அஃது என்னால் ஆகத்தக்க பணியன்று என்று செப்பினார்.

அதனைக்கேட்ட திருநாவலூரர் சிவபெருமானன்றோ உமக்கு நெல்கொடுத்தது; அஃது அப்பெற்றியாகத்தானிருக்குமென்று நல்லன கூறிக், குண்டையூர் சென்று நெல்மலையைக் கண்டு வியப்புற்றுப் பரவையாரின் வீட்டிற்கு இந்நெல்லை எடுத்துக்கொண்டு போவதற்கு ஆளுஞ் சிவபெருமான்தான் தரவேண்டுமென்று பக்கத்தி

லுள்ள திருப்பதியான திருக்கோளிலிக்குச் சென்று பாடினர்.

" நீளநினைந்தடி யேனுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாள்அவள்வாடி வருந்தாமே [றேன்
கோளிலியெம்பெரு மான்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்
ஆளிலையெம்பெரு மான்அவையட்டித் தரப்பணியே."

அப்போது சிவபெருமான்றிருவருளால் 'பகற்பொழுது கழிந்தபிற்பாடு நமது பூதங்கள் பரவைமனையின் மாத்திரமல்லாமல், திருவாரூர் நிறையும்படியாக நெல்லினைக் கொணர்ந்து சேர்க்கும்' என்ற ஒருமொழி எழுந்தது. உடனே திருவருளைப் போற்றித் தரையின் மேல் வீழ்ந்திறைஞ்சிப் பிறதலங்களையுந் தொழுது திருவாரூரை யடைந்து புற்றிடங்கொண்டாரை வணங்கிப் புறம்போந்து பரவையார் திருமாளிகையை அடைந்தனர். ஆண்டுப் பரவையாரோடு இன்புற்றிருந்தகாலை உமையொருபாகர் திருவருளால் பூதப்படைகள் குண்டையூரிலிருந்து நெல்மலையை எடுத்துக் கொணர்ந்து, பரவை மாளிகையிலுந் திருவாரூரிலும் நிறைவித்துப் பார்ப்பவர்களுக்கெல்லாம் ஒரு வியப்பான புதுமைக்காட்சியை நல்கின. விடியற்காலத்திலே அவ்வூரார் யாவருங் கண்டு, இவ்வளவு மிகுதியான நெல் எந்த உலகத்தில் விளைந்ததென்று இறும்பூதெய்திப் பரவையாருக்கு ஆளுடைய நம்பி அளித்ததென உணர்ந்தார்கள். போக்குவரவு செய்ய இடமில்லாமல் நிறைந்திருந்ததைப் பரவையாருக்கு அவர்கள் அறிவிக்க, அவரும் 'அவரவர் மனையின் எல்லைக்குட்பட்ட நெல்லை அவரவர்களே எடுத்து வைத்துக்கொள்ளலாம்' என்று பறை யறைவித்தார். எல்லாரும் தங்கட்கு வேண்டிய நெல்லை எடுத்துப் பயன்படுத்தி மகிழ்ந்தார்கள்.

## ஆராய்ச்சி

வன்றொண்டர் காலத்திலே வேளாளச் செல்வர்கள் வள்ளன்மையுடையவராய் அரனன்பர்க்கு உணவுப் பொருள்கள் முதலியன கொடுக்கு மியல்பினரா யிருந்தா ரென்பது குண்டையூர்க்கிழவர் வரலாற்றிஞல் இனிது விளங்குகின்றது. குண்டையூர்க்கிழவர் வேளாளராதலின் செந்நெல்லும், செழும்பருப்பும், தீங்கரும்பின்கட்டியும் உதவினர்போலும்! அவர் முல்லைநில முடையரா யிருந் திருப்பின் பால், தயிர், நெய் முதலியவற்றைச் சிறப்பாக வழங்கியிருத்தல் கூடும். சர்க்கரையைக் கரும்பின் இன் னமுதமாகக் கூறுதல், தமிழ் வழக்கு. 'இன்னமுது பால் கற்கண்டு தேன்' என்றவிடத்து இன்னமுதமென்பது சர்க்கரையைக் குறிக்கும் என்பாருமுளர். அமுதென்பது சிறந்த உணவுப் பொருள்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல். கறியமுது, இலையமுது என்று வருஞ் சொற்களைக் காண்க. உண்ணும் உணவினைக் குறிப்பதற்கும் அச் சொல் வழங்குகின்றது. வன்றொண்டருக்கு 'அமுதாக்கி' என்று வருதல் காண்க. பரவையார் மாளிகைக்குப் படி சமைத்தார் என்பதால், ஒவ்வொரு நாளும் வேண்டிய பொருள்களைக் குண்டையூர்க்கிழவர் கொண்டுபோய்ச் சேர்ப்பித்தாரென்று தெரிகிறது. அவற்றை மிகுதியாகக் கொடுத்தால் எஞ்சியவற்றைப் பாதுகாத்துவைக்குங் கவலை சுந்தரமூர்த்திக்கும் பரவையாருக்கும் ஏற்படு மாதலின், அது நிகழாமைப் பொருட்டுப் படிசமைத்தார் போலும். படியளவு குறைந்தவுடன் தம்முடைய உண வையுங் கருதாது நமது நாயனுர்க்கு நல்கவேண்டிய பொருள் குறைந்ததே யென்னுங் கவலையாற் றுயில் கொண்டது குண்டையூர்க்கிழவரது அடியார்பத்தியை இனிதுவிளக்கும். ஆதலால் சிவபெருமானும் அவர் வாயிலாகவே சுந்தரமூர்த்திக்கு நெல்வளத்தைக் கொடுத்

தருளினார். பொருளிற்கு உரிய கடவுள் குபேரனாதலால் அவனை ஏவி நெல்வளந் தருவித்தார் என்று கூறுதல் மரபாயிற்று. இறைவனது ஏவலாளர்களாய் வெவ்வேறு திசையில் நின்று வெவ்வேறு கடமைகளைச் செய்யும் விண்ணவர்கள் பலர் உளரென்றும், குற்றேவல் செய்யுங் குறுகிய வடிவுடைய பூதங்கள் பல உளவென்றும், அவை கள் யாவும் வெவ்வேறு பக்குவ நிலையிலுள்ள உயிர்களே யா மெனவும் அறிவனூல் கூறுதலால், அக்கொள்கைகள் நம்பத்தக்கனவேயா மென்க. ஐம்பூதத்தினின்றும் நெல் முதலியவற்றை விரைவில் மிகுதியாக உண்டாக்கும் ஆற்றல் நிதிக்கோமானுக்கு உண்டுபோலும்! மக்களால் விளைவிக்கக்கூடாத பேரளவினதாகிய நென்மலையை இறைவன் ஈந்தருளியது திருவருட்செயலின் பெருமையை விளக்குதற்பொருட்டும், வன்றொண்டரின் பெருந்தவத் தினைப் பிறர்க்கு உறுதியாக உணர்த்துதற்பொருட்டும், "நல்லா ரொருவ ருளரேல் அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யும் மழை" என்றபடி சுந்தரமூர்த்தியின் தவப் பயனாகத் திருவாரூரி லுள்ளவரெல்லாரும் வறுமை நீங்கிச் சிறப்படையும் பொருட்டும் என்க. உலகப்பயனை நாடு கின்றவர்களும் உண்மையன்போடு சிவபெருமானை வழி பட்டால் எண்ணியவற்றை எண்ணியாங் கெய்துவ ரென்று உலகிற்கு விளக்குமுகத்தால் நாயனார் திருப் பதிகத்தை அருளிச்செய்தனர். பரவையார் வள்ளன்மை யுடையராதலின், நெல்லின் மிகுதிப் பாகத்தைத் தமக் கெனச் சேமித்து வைக்க முயலாது திருப்பதியிலுள்ளா ரனைவரும் எடுத்துக் கொள்ளும்படி முரசறைவித்தா ரென்க. சுந்தரமூர்த்திகள் தமது தவத்தால் நெல்மலை வந்ததென்று கருதாது குண்டையூர்க்கிழவரை நோக்கிப் "பனிமதி முடியார் உமக்கு நெல் அளித்தார்" என்றது உற்று நோக்கத்தக்கது.

## ௬௯. செங்கல் பொன்னுக்கப் பெற்றதும், இறைவன் வழிகாட்டப் பெற்றதும்

நமது நாயனார் திருவாரூரில் வீற்றிருந்தகாலே, கோட்புலி நாயனார் தமது திருப்பதிக்கு எழுந்தருளும்படி வேண்ட அதற்கிசைந்து திருவாரூர்ப் பெருமானிடம் விடைபெற்றுப் பல பதிகளையும் வணங்கிச் சென்று கோட்புலி நாயனாரது ஊராகிய திருநாட்டியத்தான் குடியை, நெருங்கியகாலே, அவர் தம் ஊரைக் கவினுறச் செய்து நாயனாரை எதிர்கொண்டு வரவேற்றுப் பேரார் வத்துடன் தமது திருமாளிகைக்கு அழைத்துச் சென்று தூய பொற்பீடத்தில் இருத்தி நற்புனல் கொண்டு அவரது திருவடிகளை விளக்கி அவ்விளக்கிய நீரால் வீடெங்குந் தன்மேலுந் தெளித்துக்கொண்டு மலர் தூவிப் போற்றினர். செஞ்சந்தனக் குழம்பு, அகிற்சாந்து, கத்தூரிக் கலவை, பச்சைக் கருப்பூரம் முதலியன கலந்த வெற்றிலேச் சுருள் முதலியவற்றைப் பல பல பொற்றட்டு களில் ஏந்திப் பலவகை நறுமலர் மாலேகள், மணிகளா லியன்ற அணிகலன்கள், பல்வகைப் பரிவட்டங்கள் முதலியவற்றை வரிசை வரிசையாக எடுத்துக் கொடுத்து நாயனாருக்கு அளவற்ற சிறப்புச் செய்தனர். அரசனுக்கு உரிமைப் படைத்தலைவராகிய கோட்புலியார் நாவலூர்ப் பெருமானைத் தமது திருமனையில் திருவமுது செய்வித்துத் தமது அருமைப் புதல்வியராகிய சிங்கடியார் வனப்பகையார் என்னும் இருகன்னியரையும் அவரது திருவடிகளை வணங்கும்படி செய்து தாமும் தொழுது அடியேன் பெற்ற மக்கள் இவ்விருவரையும் அடிமையாகக் கொண்டருளி அவர்கள் உமது தாளைத் தொழுதுய்யும்படி கருணை யளிக்க வேண்டுமென்றார். அவர்கள் எனக்கு நற்புதல்வி யரென்று நமது நாயனார் தமது மடிமிசை வைத்துத் தூய

உள்ளன்போடு உச்சி மோந்து அவர்களுக்கு வேண்டுவன வற்றைக் கொடுத்தருளித் திருக்கோயிலை அடைந்து 'பூணுணுவதொ' ரென்றெடுத்த திருப்பதிகத்திலே கோட்புலியாரது அருளுரிமையைச் சிறப்பித்துப் பாடி அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பதனிற் சிங்கடியப்பனென்று தம்மைச் சிங்கடியாரின் தந்தையாகக் குறிப்பித்தருளினர்.

பின்னர் அவ்விடத்தினின்றும் புறப்பட்டுத் திருவலிவலத்தைச் சேர்ந்து மங்கை பாகரை அவ்விடத்துக் கண்டதாகத் தமிழ்மாலை பாடித் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் என்னும் பெரியாரது பாட்டினை நீர் உவந்தீரென்று கடவுளைச் சிறப்பித்து விடைபெற்றுத் திருவாரூரடைந்து பரவையோடு வீற்றிருக்கு நாளில் பங்குனி உத்திரத் திருநாள் நெருங்குதலும், பரவையார் திருநாளில் வந்த அடியாருக்கு வேண்டுவன யாவுங் கொடுத்துக் குறைவறுத்தற் பொருட்டுப், பொன் தேடிக் கொண்டு வருவான் திருப்புகலூர்ப் பெருமானை வணங்கப் புறப்பட்டார். திருப்புகலூரினை யடைந்து சிவபெருமானை இறைஞ்சித் திருப்பதிகம் பாடி ஒரு திருமடத்தில் அன்பர்கள் பலருடன் முற்றத்தி லிருந்தபோது தூக்கம்வர அங்கே திருப்பணிக்காகக் குவித்துக்கிடந்த சில செங்கற்களை எடுத்துத் தலைக்குயரமாக வைத்து அதன்மேல் வெண்பட்டு மேலாடை விரித்துத் தலைவைத்துத் துயில்கொண்டார். பிற தொண்டர்களுந் துயின்றனர். நமது நாயனுர் துயில் நீங்கியவுடன் சிவபெருமானது திருவருளினுலே செங்கற்கள் செம்பொற் கற்களாக விருக்கக்கண்டு திருவருளை வியந்து திருக்கோயில் புகுந்து அளவிற்கடங்காத காதலுடன் 'தம்மையே புகழ்ந்து' என்ற இன்னிசைப் பதிகம் பாடினுர். பின்னர் நிதிக்குவையினை எடுத்துக்கொண்டு திருப்பனையூருக்குச் சென்று இறைவரது திருக்கூத்துக் காட்சியைக்கண்டு பெருவிருப்பொடு வீழ்ந்திறைஞ்சித்

திருப்பதிகம் பாடிச் செம்பொற் செங்கற்களை ஓர் ஆளிடங் கொடுத்துப் பரவையார் திருமனைக்கு அனுப்பி விட்டுத் தாம் திருக்கோயில் புக்குச் சிவபெருமானை வணங்கிப் பரவையார்மனை சேர்ந்தனர். அங்கிருக்கு நாளில், திருவாரூருக்கு அருகிலுள்ள பல திருப்பதிகளையும் வணங்கினர். பின்னர்த் திருநன்னிலத்திற்குப் போய் இறைவனை வணங்கித் 'தண்ணியல் வெம்மையினன்' என்னுந் திருப்பதிகம் பாடினர். அப்பால், நமது நாயனர் திருவீழிமிழலைக்குச் செல்ல அங்கே அந்தணர்களெல்லாரும் நடைப்பந்தலிட்டு மிக்க சிறப்புடன் அவரை எதிர்கொள்ள மிகுந்த உவகையுடன் அத்திருப்பதியின் கண் விண்ணிழி விமானத்தில் வீற்றிருக்கும் முதல்வனைப் பணிந்து பாடிப் பரவினர். பின்னர்த் திருவாஞ்சியம், அரிசிற்கரைப் புத்தூர் முதலிய பதிகளை வணங்கி யேத்தித் திருப்புத்தூரின்கண், புகழ்த்துணை நாயனரது பெருமையைப் புகழ்ந்து பாடினர். திருவாவடுதுறை யடைந்து இறைவனை இறைஞ்சி 'மறையவன்' என்றெடுத்த திருப்பதிகத்திற் செங்கணன் பிறப்பைச் சிறப்பித்தனர்.

காவிரியின் தென்கரையில் திகழ்ந்த திருப்பதிகள் பலவும் பணிந்துபோய்த் திருவிடைமருதை யணைந்து பரமர்க்குத் தமிழ்மாலை சாத்தித் திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலயநல்லூர், திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருவாலம்பொழில் முதலிய திருப்பதிகளை வணங்கித் திருவாலம்பொழிலிலே ஓர் இரவு தூங்கும்போது சிவபெருமான் தம்முடைய இளந்திருக்கோலத்தைக் காட்டி, 'மழபாடிக்கு வர மறந்தாயோ' என அருளிச்செய்ததை உணர்ந்து, காவிரியின் வடகரைக்குச் சென்று திருமழபாடியை யணைந்து அங்குறையும் அண்ணலைத் தொழுது "பொன்னார் மேனியனே"

என்னுந் திருப்பதிகம் பாடி அங்குச் சிலநாள் தங்கினர். பின்னர்த் திருவானைக்காவினை யடைந்து 'மறைகளாய நான்கும்' என்ற செஞ்சொன்மாலை சாத்தி, உறையூர்ச் சோழனது மணியாரமானது காவிரியில் நழுவிவிட இறைவன் அதைத் திருமஞ்சனக் குடத்திற் புகுவித்துத் திருமஞ்சன மாடுங்காலை அதனைத் திருமேனியிற்கொண்டு வளவனுக்குக் காட்டி அவனது தளர்ச்சி நீக்கிய திறத்தைத் திருப்பதிகத்தின்கண் வித்தோதினுர். பின்னர்த் திருப்பாச்சிலாச்சிராமத்தை யடைந்து பரமனை வணங்கித் தமது பொருள் விருப்பினைத் தெரிவிக்க, நினைந்த வண்ணம் பொருள் பெறுமையின் உள்ளம் புழுங்கி "பித்தரே யொத்தோர் நச்சிலராகில் இவரலா தில்லையோ பிரானுர்" என்பதுபோன்ற முடிவுடைய திருப்பதிகத்தைப் பாடித் திருக்கடைக்காப்புச் சாற்றியவுடன் சிவபெருமான் சிறந்த நிதிக்குவியலை அளித்தருளப், பின்னர்த் திருப்பைஞ்ஞீலி யடைந்து சிவபெருமானது பிச்சைபுகும் வடிவத்தைக் கண்டு பேரன்பினுல் கண்மழை பொழிந்து கைகுவித் திறைஞ்சிச் சிவபெருமான் ஐயம் ஏற்று ஊண் எடுத்த வடிவத்தைக் கண்டவர்கள் மயல்கொண்டு வினவிய கூற்ருகக் "காருலாவிய" என்னுந் திருப்பதிகம் பாடினர். பின்னர் ஈங்கோய்மலை முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொங்குநாட்டிலுள்ள திருப்பாண்டிக்கொடுமுடி யடைந்தார். அவ்விடத்தில் "மற்றுப் பற்றெனக்கின்றி" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளினர். பின்னர்த் திருப்பேரூர்க்குச் சென்று அவ்வூர்த் திருக்கோயிலின்கண் தில்லைப்பிரானது திருக்கூத்து வடிவங் கண்டு அளவற்ற அன்புடன் வணங்கிப் பேரின்ப வெள்ளத்துட் டிளைத்தாடினர். பின்னர்த் தில்லைப் பெருமான் திருக்கோலத்தைக் காண்பான் எழுந்தருளினர். திருவெஞ்சமாக்கூடல், திருக்கற்குடி, திருவாறை மேற்

றளி, திரு இன்னம்பர், திருப்புறம்பயம் முதலிய தலங்களை வணங்கினர். பின்னர்ப் பல திருப்பதிகளையும் வணங்கிக் கூடலையாற்றூர்க் கருகாகச் சென்று அப்பதிக்கு ஏகாது திருமுதுகுன்றை நோக்கிப் புறப்பட்டார். அப்போது இறைவர் நமது நாயனுர் செல்லும் வழியிலே ஓர் அந்தணர் வடிவத்தோடு நின்றனர். அவரிடம் திருநாவலூரர் திரு முதுகுன்றத்துக்கு வழி யாதென வினவ, அவ்வந்தணர் கூடலையாற்றூர்க்குச் செல்லும் இவ்வழிதான் அவ்வழி என்று சொல்லி வழித்துணையாகச் சிறிது தூரஞ் சென்று மறைந்துவிடவே, "வடிவுடை மழு" வென்னுந் திருப் பதிகந்தொடங்கி ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் "அடிகள் இவ்வழி போந்த அதிசய மறியேனே" என்னுஞ் சொற்றொட ரமைத்துப் பாடிக்கொண்டு கூடலையாற்றூர் புகுந்து இறைவனை வணங்கிப்போற்றித் திருமுதுகுன்றினை அடைந்து பரமர்க்குச் செஞ்சொன் மாலை சாத்தினர். ஆண்டுப் பொருள் வேண்டுங் குறிப் போடு இன்னிசைப்பதிகம் பாட, இறைவர் பன்னீராயிரம் பொன் கொடுத்தருளினர்.

திருமுதுகுன்றத்து முதல்வரிடந் தாம் பெற்ற பொன்னனைத்தையும் யாவரும் வியக்கும்படியாகத் திருவாரூரிலே கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று நம் நாயனுர் வேண்டிக்கொள்ள இறைவனும் மணிமுத்தாற் றினிற் பொருள் முழுவதையும் இட்டுத் திருவாரூர்க் குளத்திற் போய்க் கொள்க' என்றருளினர். வன் றொண்டர் அவ்வாறே செய்வதற்குமுன் பொன்னின் ஒரு துண்டினை வெட்டி மச்சமாகக் கைக்கொண்டு எஞ்சி யதனை மணிமுத்தாற்றினில் இட்டு விட்டு 'என்னை வலிந்தாட் கொண்ட அருளினை இதில் அறிவேன்' என்று கூறிக்கொண்டு தில்லை நோக்கிச் சென்று வழியிலே கடம்பூர் முதலிய திருப்பதிகளை வணங்கித் தில்லைமூதூ

ரணைந்து திருவம்பலம் நண்ணிக், கூத்தப்பெருமான் பொற்ருள்களைக் கழிபேரன்போடு தொழுது, தாம் இறைவனைப் பேரூரிற்கண்ட நிலையைச் சிறப்பித்து 'மடித்தாடு மடிமைக்கண்' என்னுந் திருப்பதிகத்தைப் பாடி மீளாதருள்பெற் றமர்ந்தார்.

பின்னர் அங்குநின்றும் பெயர்ந்துபோய்த் திருக்கருப்பறியலூர், திருக்குரக்குக்கா முதலிய திருப்பதிகளை வணங்கிப் பாடித் திருவாழ்கொளிபுத்தூரைத் தொழுது திருக்கானுட்டு முள்ளூரை அடைந்தனர். அவ்விடத்தே இறைவன் எதிர்நின்று காட்சி கொடுப்பக் கண்டு 'வள்வாய' என்னும் வண்டமிழின் தொடைமாலை சாத்தினர். பின்னர்த் திருஎதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி முதலிய திருப்பதிகளைத் தொழுது பாடித் திருவாரூரினை அடைந்து தொண்டருடன் புற்றிடங்கொண்டாரைத் தொழுது போந்து பரவையார் திருமாளிகையினை அடைந்தார்.

பரவையார் தம் தோழியருடன் சென்று நாயனுர் திருவடிகளை வணங்கி எங்களையும் நினைத்தருளினீரென இன்மொழிபகர அதற்கு உவந்து அவரோடு மகிழ்ந்துறையும் நாளில் ஒருநாள் முதுகுன்றர் நமக்கு அளித்த பொன்னனைத்தையும் மணிமுத்தாற்றினிற் புகவிட்டேம்; இறைவரது திருக்கோயிலுக்கு மேல்பால் திருக்குளத்துக்குச் சென்று அதனை எடுத்துக்கொண்டு வருவோம் வாவென்று கூறினுர். இஃது என்ன புதுமையென்று பரவையார் புன்முறுவல் செய்ய, என்னுடைய தலைவனது அருளால் திருக்குளத்தினின்றும் பொன் முழுவதையும் எடுத்துக்கொடுப்பது திண்ணம்; நான் சொல்வது பொய்யாது' என்றனர். உடனிசைந்து அவருடன் திருக்கோயில் வலம்வந்து பரவையாரும் திருக்குளத்தின் வடகீழ்பால் கரையை அடைந்தனர். திருநாவலூரர் இறை

வனைக் கைதொழுது குளத்திலிறங்கிப் பொன்னினை எடுத்தற்குத் தடவினர். சிவபெருமான் இவருடைய திருப்பாட்டினைப் பெறுவதற்கு விரும்பிச் செம்பொனை வருவியாதிருப்பப் பரவையாரும் 'ஆற்றிலிட்டுக் குளத்திற் றேடுகின்றீரே; இதுவோ திருவருள்? சொல்லும்' என்ற அளவில், இறைவனை நோக்கிப் பரவை நகையாடாத வண்ணம் முன்னே நீர் அருள்செய்தபடிப் பொன்னினைத் தாருமென்று "பொன்செய்த மேனியினீர்" என்று திருப் பதிகம் இசைத்தனர். எட்டாவது திருப்பாட்டளவும் பொன்னினை நாயனார்க்குக் காட்டாதிருந்தனர். "ஏத் தாதே இருந்தறியேன்" என்னுந் திருப்பாட்டினைப் பாடியவுடன் பொன் திரளானது கைக்குவர அதனைக் கரையிலிட்டனர். அப்பொழுது விண்ணவர் மலர்மாரி பொழிந்தனர். மண்ணவர் எல்லையற்ற வியப்பெய்தினர். எடுத்த பொன்னினை ஆணியி லுரைத்து முன்வைத்திருந்த மச்சத்தோ டொத்துப் பார்க்கும்பொழுது எடுத்தபொன் மாற்றுக் குறைதலைக் கண்டு மீட்டும் இறைவனைத் திருப் பதிகம் பாடித் தொழுது மாற்றுரைப்புக் கண்டபின் பொன்னினை ஆளின்மேற் சுமத்தி வீட்டிற்கு அனுப்பி விட்டுத் தாம் திருமூலநாதரைத்தொழுது திருமாளிகையை அடைந்து சேயிழையாருடன் உள்ளநிறை வெய்தி யிருந்தார். அங்குறையும் நாளிலே நம்நாயனார் பல திருப் பதிகங்கள் பாடியருளினார்.

## ஆராய்ச்சி

திருநாவலூரர்க்குக் கோட்புலிநாயனார் செய்த விருந்தினை நோக்குமிடத்துப் பெரியோர்கள் திருவடியை விளக்கிய நீரை மாளிகை யெங்குந் தெளித்தலும், மான்மத முதலிய நறும்பொருள்கள் கலந்த சந்தனக் கலவை, மணியணிகள், பலவகைப் பூந்துகில்கள் முதலிய

வற்றை எடுத்து ஏந்துதலும் அக்காலவழக்கென்று அறியக்கிடக்கின்றது. திருநாவலூரர் வேளாளராகிய கோட்புலியாரது இல்லத்தின்கண் திருவமுது செய்ததும் ஈண்டு நோக்கத் தகுந்தது. அக்காலத்தில் அடியார்களுக்குள் சாதிக்கட்டுப்பாடுகள் இருந்ததாகத் தெரியவில்லை. கோட்புலியார் சிவனடியார்பால் எல்லையற்ற பேரன்புடையார் என்பது தம் புதல்வியர் இருவரையும் நம் நாயனுர்க்கு அளிக்கக் கருதினமையான் நன்கு விளங்கும். நம் நாயனுர் ஊழின் வலியால் வந்த மணத்தினையன்றி வேறெவ்வகையான இணைவிழைச்சியையும் விரும்பாராதலினுலும், எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணப்பெருவள்ளலா ராதலினுலுங் கோட்புலியாரைத் தம்மோடு உடன்பிறந்தாராகக் கருதி அவரோ டளவளாவும் பெருநட்புடையராதலாலும் அவர் புதல்வியரைத் தம்மக்களாகவே போற்றிப் பாராட்டினர் என்க. கோட்புலியார் குழவிகளிடத்துத் திருநாவலூரர் உண்மையான உள்ளன்புடையா ரென்பது "கருத்துட்கசிவால் அணைத்துச்சிமீது கண்ணீர் விழ மோந்து வேண்டுவனவுங் கொடுத்தருளி" என்றமையாற் றெளியப்படும். சிங்கடியார் என்பவர் மூத்த புதல்வியராதலின் அவரைவிதந்து சிறப்பித்தன ரென்க. மணப்பருவம் உற்ற காரணத்தாற் சிங்கடியாரைச் சிறப்பித்துத் தம்மைச் சிங்கடியப்பன் என்றனர்போலும்! இதனுல் அப்புதல்வியை மணஞ்செய்யுங் கருத்துத் தமக்கில்லை யென்பதைத் தெற்றெனவிளக்கியவாறுகும். சிங்கடியார்க்கு இளைய வனப்பகையார் மணப்பருவம் அடைந்திராமையால் அவரை விதக்கவேண்டாவாயிற்று. கோட்புலியார் சிவனடியாரிற் சிறந்தவராதலின் திருப்பதிகத்துள் அவர் பெருமையை வியந்தனர். திருவலிவலத்துத் திருப்பதிகத்தில் மங்கை பாகரைத் தாம் கண்டதாக நாயனுர் அருளிச்செய்திருப்

பதால், அவ்விடத்திற் சிறப்பாக இறைவன் நாயனுர்க்குக் காட்சி கொடுத்திருத்தல்கூடும். தமக்குமுன் திருவருள் பெற்ற ஆளுடைய பிள்ளையாரையும் ஆளுடைய அரச ரையும் அப்பதிகத்தின்கண் விதந்திருப்பதுங் காண்க. திருவாரூர்ப் பங்குனி உத்திரத்தின் நாளிலே அவ்வூர்ச் செல்வர்கள், வருகின்ற அடியார்களுக்கு உண்டி உறையுள் முதலியன உதவி அன்னோரைப் போற்றுதல் மர பென்பது "பரவையார் கொடைக்கு விழாவிற் குறை வறுக்க நிறையும் பொன்கொண் டணைவதற்கு" என்ற மையால் இனிது விளங்கும். அக்காலத்தில் இறைவனது திருவிழா நடக்கும் திருப்பதியி லுள்ளவர்கள் திருவிழாக் காண்பான் அயலூர்களிலிருந்து வருகின்ற அடியார்களை வரவேற் றமுதளித்தல் பெருவழக்காக இருந்தது. "உருத்திர பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்" என்று ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்திருத்தலுங் காண்க. திருவாரூர்த் திருவிழா வைச் சிறப்பித்தற்குத் திருவாரூர்ப்பெருமானிடமே பொன் கொள்ளுதல் தக்கதன் றென்று கருதியோ, ஒன்றை விரும்பினுர் புகலடைந்து விரும்பினதைப் பெறுவதற் குரிய இடம் புகலூர் என்று கருதியோ, திருப்புகலூர் சென்று இறைவனை வழிபட நினைந்த கருத்தும் ஒரே பொழுதில் திருவுள்ளத்தில் நிகழ்ந்தமை கருதியோ, பிற எவ்வேதுவினுலேயோ திருப்புகலூர்ப் பெருமானிடம் பொன்கொள்ள நம் நாயனுர் சென்றன ரென்க.

அத் திருப்பதிக்குச் சென்ற காலை, பரிவாரங்களோடு ஆடம்பரமாகச் சென்றதாகத் தெரியவில்லை. இறைவன் திருமுன் பெய்திச் சிறிது பொழுது கும்பிட்ட உடனேயே இறைவனோடு இரண்டறக் கலந்தெய்தும் இன்ப நிலையை எய்தினமையான் "சிறுபொழுது கும்பிட்டுச் சிந்தை முன்னம் அங்கொழிய" என்ருர் ஆசிரியர் சேக்கிழார்.

சிவஞானச் செல்வராகிய நமது நாயனார் தாம் தங்கிய மடத்தின் முற்றத்திற் பொது மக்களைப்போல் அன்பர் யாருடனும் அளவளாவி யிருந்ததும், துயில் வந்த காலைத் திருப்பணிக்காகக் குவித்துக்கிடந்த செங்கற்கள் சில வற்றை எடுத்துத் தலையணையாக வைத்து மேலாடையை அதன்மேல் விரித்துப் பள்ளிகொண்டதும் அவரது ஒப்பற்ற உள்ளத்துறவினைக் காட்டும். அவரது மேலாடை வெண்பட்டாயிருந்ததொன்றே அவரது செல்வப் பெரு மையை நினைப்பூட்டும்.

சிவபெருமான் நம் நாயனார் விரும்பியபொருளை நேரிற் கொடாது இங்ஙனஞ் செங்கல்லைப் பொன்கல்லாக்கிப் பொருளீந்தது தமது எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவியாதிருந்த நாயனார்க்குத் தாமும் தோழமை பாராட்டி ஒரு விளையாட்டாகவே எவ்வாறு இறைவன் பொன்னைக் கொடுத்தார் என்று அறியவொண்ணாதபடி அவருக்குப் பொருள் நல்கத் திருவுள்ளம் வைத்தமையாற் போலும்! நாயனார் பெருமையையும் அவரோடிருந் தார்க்கும் ஏனையோர்க்கும் வியப்புமிக்கதோர் அருட் செயலால் விளக்கியவாறுமாம். குறையிரந்து நிற்கும் தம் அன்பர்க்கு இறைவன் தோன்றாத்துணையாய் நின்று அருள் புரியு முறையினைச் சுட்டியவாறுமாம். அது "தம்மையே புகழ்ந்து" என்னுந் திருப்பதிகத்தில் நம் நாயனாரால் இனிது விளக்கப்பட்டது. திருநாவலூரர் அம்பலத்து ளாடும் பெருமானையே வீடு எய்தும்பொருட்டுப் பெரிதும் போற்றும் இயல்பினராதலின், திருப்பனையூர்ப் புறத்தே இறைவன் திருக்கூத்துக் காட்சியை அவருக்கு நல்கினனென்க. அக்காட்சியால் தாங்கொணர்ந்த செம் பொன்கூட ஒரு சுமையாகத் தோன்றினமையால், ஆட்கள் வாயிலாகப் பரவையார் திருமனைக்குப் பொற்குவையை அனுப்பிவிட்டுத் தாம் பெருமானை வணங்கச் சென்றன

ரென்க. திருவீழிமிழலையானது அக்காலத்திலும் அந்தணர் நிறைந்ததோர் திருப்பதியாக விளங்கிற்றென்பது தெரி கின்றது. ஆதலினால் 'அந்தணாளர் நிறைந்தீண்டி' நமது நாயனாரை வரவேற்றனர். திருப்புத்தூரில் அறுபான் மும்மை நாயனாருள் ஒருவராகிய புகழ்த்துணையார் நமது நாயனாரால் சிறப்பித்துப் பாடப்பெற்றிருக்கின்றனர். இதனால் அவர் நாயனார் காலத்தவர் என்பது தெரிகின்றது.

திருவாவடுதுறைப் பதிகத்தில் கோச்செங்கட் சோழனது பிறப்புச் சிறப்பிக்கப்பட்டது. சோழ நாட்டிற் கொரு சிறந்த தலைநகராகிய துறைசைத் திருப்பதிகத்திற் சோழமன்னருட் சிறந்த திருப்பணி இயற்றிய அரசனது பெருமையை எடுத்து இயம்புதல் பெருமையுடையதே. திருக்கலயநல்லூரின்கண் மனமொழிமெய் மூன்றும் இறைவன் திருவடிக் கீழ்ப் படிந்து கிடக்கப்பெற்றார் என்பார், 'மும்மை வணக்கம்பெற இறைஞ்சி' என்றார். திருமழபாடி முதல்வர் நம் நாயனார்க்குத் தமது இளந் திருக்கோலக் காட்சி கொடுத்தருளி 'மழபாடிக்கு வர மறந்தாயோ' என்று நட்புமிக்க இயன்மொழி வழங்கிய தெற்றாலோவெனின், மழபாடியி லுறைகின்றவர்களும் நம் நாயனாரது திருப்பதிகத்தின் நலனை உய்த்துணர்ந்து தூய்க்கும் பான்மையினரா யிருந்தமையாற்போலுமென்க. சிவபெருமான் தம் பேரன்பர்மீது தாம் வைத்த பேரருளி னாலே அவர்களது இன்னிசைத் தொண்டினைப் பான்மை வாய்த்தபொழுதெல்லாம் ஊக்கி நலனளிப்பரென்னும் உண்மையும் இதனாற் புலனாதல் காண்க. சிவமும், அன்பு மயமாய்ப் பேரன்பரது அன்பில் தாமும் ஈடுபட்டு அன்னோரை ஆட்கொள்ளும் பல்வகை மாண்புகளில், இஃதும் ஒன்றுபோலும். நம் நாயனாரோடு இறைவன் தோழமை பாராட்டும் வகையுள் இஃதும் ஒன்றென்க. திருவானைக்காத் திருப்பதிகத்துள் உறையூர்ச் சோழனது

மணியாரத்தை இறைவன் தன்பால் எய்துவித்த திறம் பாராட்டப்பட்டது. அச்சோழன் இன்னுனென்று விளங்க வில்லை. அவன் சிவனடிப்பேரன்பு மிக்கவதனுல்பற்றியே தேவாரத்துள் விதந்தோதப்:பெற்ருனென்க. பேரன்பர் மாட்டு இறைவன் திருவிளையாடல்கள் நிகழ்த்தி அன்னேரை மகிழ்வித்தல் இயல்பென்பது இதனுல் விளங்கும். இறைவன் அன்பர் எண்ணியவற்றை எண்ணியாங்கீதல் வழக்கே யெனினும் பாடற்ருெண்டுடையார் ஒன்றினை வேண்டியக்கால் அன்னேர் அத்தொண்டினை நிறைவேற்றும்வரை அவர் நினைந்த பொருளை நல்காதிருத்தல் அவன் நடிப்புக்களில் ஒன்றுபோலும்! பாடுமடியார் தங்கள் பாட்டின் பயனுகவே நினைத்ததைப் பெறும் பான்மையுடையர்போலும்! விட்டகுறையை நிரப்புதற்குப் பாடற்ருெண்டு பயன்படுவதுபோலும்! இறைவன் தாம் விரும்பிய பொன்னை நல்காமையினுல், நினைத்தது பெருது வருந்தும் உலகவர்போல நம் நாயனர் மனம் புழுங்கவில்லை. வேண்டுவார் வேண்டியதே ஈயும் கடவுளின் பேரருளிற்குத் தாம் இலக்காகாது பணியிற் றவறு தம்பால் நிகழ்ந்ததோவென்னும் அச்சங் காரணமாக வருத்தங்கொண்டு முதல்வற்கேற்ற அடிமை தாமல்லரென்று நினைந்து அம்முதல்வனின் வேருகத் தமக்கு வேறு புகலில்லை என்னுங் கருத்தை நட்புநலன் பொதிந்த நகைமொழிகளாற் குறிப்பார் "இவரலா தில்லையோ பிரானுர்" என்ருர். இடரினுந் தளரினும் இறைபணி நிற்றலையே தமது கடனுகக்கொண்டன ரென்பார் 'வைத்தனன் தனக்கே தலையுமென் னுவும்' என்றனர்.

• திருப்பாண்டிக்கொடுமுடித் தேவாரமாகிய நமச்சிவாயத் திருப்பதிகத்தின்கண் "உனைநான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றருளிச் செய்ததும், சிவஞானம் பெற்ருேர்கட்கும் ஊழ்வயத்தால் நிகழும்

வாசனுமலத்தி லீடுபட்டு அறிவானது ஓரிமையளவு வேறு செல்லினும் அன்னோர் விதிப்படி எண்ணும் அஞ்செழுத் தானது அவ்வறிவினை ஈர்த்து இறைவன் திருவடிக் கண்ணே நிலைநிறுத்துதலை வற்புறுத்தற் பொருட்டென்க. ஐந்தெழுத் தோதுதல் 'அவாவினை ஆற்ற அறுக்கும் தவா வினை' யா மென்க.

கொங்குநாட்டுப் பேரூரானது இப்பொழுதும் மேலைச் சிதம்பரம் என்று வழங்கப்படுகின்றது. தில்லைக் கூத்தினை இறைவன் நம் நாயனார்க்கு ஆங்குக் காட்டி யருளினமையான் அப்பெயர் அவ்வூர்க்கு ஏற்பட்டிருத்தல் கூடும். வீடெய்தும் பேருவப்புடைய நம் நாயனார் திருக் கூத்துக் காட்சியால் எய்திய தலைசிறந்த இன்ப அன்பினை ஆசிரியர் சேக்கிழாரே அழகாக எடுத்துரைக்க வல்லார். அவரது திருப்பாட்டு வருமாறு:—

"காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னுரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
வாண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை
விளைவையா ரளவறிந் துரைப்பார்."

அப்பர்சுவாமிகள் தென்கயிலையைத் தொழுதவுடன் வடகயிலையை வழிபடநினைந்து சென்றாற்போலத் திரு நாவலூராரும் மேலைச் சிதம்பரத்திற் றிருக்கூத்துக் கண்ட வுடன் கீழைச் சிதம்பரமாகிய தில்லையின்கண் திருநடங் காண்பான் விரைந்து சென்றனரென்க.

திருநாவலூரார்க்குத் திருமுதுகுன்றத்துக்கு வழி காட்டும்பொருட்டு இறைவன் தானே முன் வந்து கூடலை யாற்றூரினருகே வேதியராய் நின்றமை, பானினைந்

தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து அன்பர்க்கு அருளுந் தன்மையை இனிது விளக்கும். 'தன்னடியார்க்கு இங்கே என் றருள்புரியும்' பெருமானது இயல்பும் ஈண்டு வெளிப் படுதல் காண்க. திருமழபாடிக்கு நாயனரது திருப்பதிகப் பெருமையை இறைவன் அமைவித்ததுபோலக் கூடலை யாற்றூர்க்கு அமைவிக்கத் திருவுளங்கொண்ட காரணத் தால் அங்ஙனம் செய்தானென்றலும் ஒன்று.

திருமுதுகுன்றத்திலே திருநாவலூரர் எல்லையற்ற அன்பின் திருவடிவாகவே திகழ்ந்து பதிகம் பாடினமை யால், தமதெண்ணத்திற் கருதியவாறே பன்னீராயிரம் பொன் பெற்றதனேடமையாது மணிமுத்தாற்றி லிட்டுத் திருவாரூர்க் குளத்திலெடுக்கும் வரமும் பெற்றார். இறை வன் பன்னீராயிரம் பொன்னை எவ்வாறு கொடுத்தன ரென்பது தெரியவில்லை. திருஞான சம்பந்தர்க்கு ஆயிரம் பொன்னை ஒரு பூதம்வாயிலாக ஒரு பீடத்திலிட்டது போல நம் நாயனர்க்கும் இறைவன் பொன்னினை அளித் திருக்கலாம். அல்லது இறைவனே மக்கள் யாக்கையொடு தோன்றி ஒரு பொற்கிழியினை அளித்திருக்கலாம். அல் லது ஆளுடைய பிள்ளையார் கையிற் பொற்றாளம்போல் நாயனர் முன்பு பொற்கிழி யாருமறியாவண்ணம் இறைவ னது திருவருளால் வந்து தோன்றியிருக்கலாம்.

நம் நாயனர் பொற்றிரளை மணிமுத்தாற்றினில் இட்டகாலை மச்சம்வெட்டிக் கைக்கொண்டது இறை வனது பெருமையினை உணர்த்தும்பொருட்டும் இறை வனது திருவிளையாடற்கேற்பத் தாமுந் தோழமை பாராட் டக் கருதியு மென்க. 'அன்றென்னை வலிந்தாட்கொண்ட அருள் இதில் அறிவேன்' றென்று நம் நாயனர் கூறியதும் நட்பின் செய்கையேயாகும். இறைவனது திருவருளை முற்றப்பெற்றுந் தம்மை அத்திருவருட்பேற்றிற்குத் தகுதியில்ராக்கக் கருதும் நினைவானது நம் நாயனரின்

தாழ்மை மிக்க திருவுள்ளத்திலே தோன்றியபோதெல்லாம் இறைவனது திருவருளினின்று தாம் விலகிவிடக் கூடுமோ என்ற அச்சங் காரணமாக இறைவனை மீட்டு மீட்டுந் தம்மை ஆட்கொண்டருள வேண்டுமென்று குறையிரப்பார் இங்ஙனங் கூறினார். இறைவன் திருமுதுகுன்றத்தி லளித்த உயர்தரப் பொன்னினையே திருவாரூரின் கண்ணுந் தமக்கு நல்கும் பெருங்கருணையாளன் என்பதைப் பரவையாரும் பிறரும் இனிதறிந்து திருவருளைப் போற்றும்பொருட்டுத் திருமுதுகுன்றிற்கிடைத்த பொன்னின் மாற்றினை அன்னோர்க்குக் காட்டுவான் மச்சம் வெட்டிக் கைக்கொண்டாரென்க.

திருவாரூர்க்குச் சென்று பரவையாரை அழைத்துத் திருக்குளத்தின் கரையில் நிறுத்திவிட்டு நம் நாயனார் குளத்திலிறங்கிப் பொன்னினைத் தேடியபோது அதனை இறைவன் வருவியாமைக்குக் காரணம், திருப்பாச்சிலாச்சிராமத்திற் பொன்னினை விரும்பியவுடன் இறைவன் நல்காமைக்குக் கூறிய காரணமேயாகும். நாயனார் பொன் தேடுவதை ஒரு புதுமைச் செயலாகக் கருதி நகையாடிய பரவையார் திருவருளின் பெருவலியையும் அதற்கு உரியராயிருந்த நாயனாரது பெருமாண்பினையுந் தெற்றெனை உணர்ந்தடங்குதற்பொருட்டு இறைவன் பொன்னினை நல்கக் காலந்தாழ்த்தினு னென்றலுமொன்று. திருவருளினையே தமது வாழ்வாகவும் வைப்பாகவும் நம் நாயனார் கருதினமையால், பொற்குவையைக் கண்டெடுத்தபின்னும், நேரே தமது திருமாளிகைக்குச் செல்லாது திருக்கோயிலுட் புகுந்து திருமூலட்டானரைத் தொழுதலையே மேற்கொண்டனரென்றறிக.

## ஏ. தண்ணீரும் பொதிசோறும் பெற்றது

பரவையாருடன் திருவாரூரில் வீற்றிருக்கு நாளிற் "பாறு தாங்கிய" என்னும் வினைத் திருப்பதிகம் பாடி ஏத்தி மகிழ்ந் தின்புற்றார். அங்கிருக்கு நாளிலே இறைவரது திருப்பதிகள் பலவும் வணங்குங் கருத்துடன் பரிசனங்களுடன் புறப்பட்டுத் திருநள்ளாறு, திருக்கடவூர் மயானம், திருவீரட்டானம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி, திருநின்றியூர் முதலிய திருப்பதிகளை வணங்கிப் பாடினார். திருநின்றியூர்த் திருப்பதிகத்தின் கண் பல வரலாற்றுக் குறிப்புகள் அமைந்துகிடக்கின்றன. திருநாவுக்கரசர் ஏழெழு நூறு திருப்பதிகம் பாடியதை அதனுட் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

> "இணைகொ ளேழெழு நூறிரு பனுவ
> லீன்ற வன்திரு நாவினுக் கரையன்"

என்றனர். திருநின்றியூரினின்று சென்ற காலைத் திருநீடூர் முதலிற் செல்லாது போய்ப் பின்னர் அத்திருப்பதியை நினைந்து மீண்டு அவ்வூர்க்குச் சென்று இறைவனைத் தொழுது தண்டமிழ் மாலை சாத்தினர். திருநீடூர்ப் பதிகத்தில்;

> "நிறைபுனற் கழனிச் செல்வ நீடூர்
> பாருளார் பரவித் தொழநின்ற
> பரமனைப் பணியா விடலாமே"

என்றமையான் அது விளங்கும். பின்னர்த் திருப்புன்கூரினை அடைந்து இறைஞ்சித் திருக்கோலக்காவிற் கருகே சென்றபோது இறைவன் எதிர் காட்சி கொடுத்தருளப் பேரன்போடு திருப்பதிகம் இசைத்தனர். அத் திருப்பதிகத்தில் இறைவன் தம்மை வெண்ணெய் நல்லூ

ரில் ஆட்கொண்டதையும், ஞானசம்பந்தர்க்கு அத்திருப் பதியில் பொற்றாளங் கொடுத்ததையுஞ் சிறப்பித்துப் பாடினார்.

"அன்று வந்தெனை யகலிடத் தவர்மு
ளை தாகவென் னுவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த
நித்தி லத்திரட் டொத்தினை"

என்றும்,

"நாளும் இன்னிசை யாற்றமிழ் பரப்பு
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
றாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை"

என்றும், அருளிச் செய்தமை காண்க. திருக்கோலக்கா, திருக்கழுமலம் என்னுந் திருப்பதிகளை வழிபட்ட பின்னர்த் திருக்குருகாவூர்க்குச் சென்றனர். அங்ஙனஞ் செல்லுங் காலை நீர் வேட்கையும் பசியும் நம் நாயனாருக்கு நேர்ந்ததைக் கண்ட முதல்வன் தண்ணீரும் பொதிசோறுந் தாங்கிவரும் ஒரு மறையவர் வடிவங் கொண்டு, வெயிலின் வெம்மை தணித்தற்கு ஒரு குளிர்ந்த பந்தலமைத்து நம் நாயனாரை எதிர்பார்த்துச் சில மறையவரோடு ஐந்தெழுத்தோதி அதன்கண் இருந்துகொண்டிருந்தார். நாயனார் அருகில் வந்தவுடன் அவரை எதிர்கொண்டு 'நீர் மிகவும் பசித்திருக்கின்றீர். இங்கே இனிதமர்ந்து இப்பொதி சோற்றினை உண்டு தண்ணீரருந்தி இளைப்புத் தீர்த்துக் கொள்க' என்றனர். வன்றொண்டர் அதனைக் கேட்டு மறையவர் தருகின்ற பொதிசோற்றினை விலக்குதல் தகாதென்று கருதி அதனை யேற்றுத் தம்முடன் வந்தாரெல்லாருடனுந் திருவமுது செய்தருளினார். பின் அவ்விடத்திற்கு வந்த யாவரும் உண்ணும்படியாகப் பொதி சோறானது குறையாது மிகுந்திருந்தது. இறைவனது

திருவருள் போன்ற தீம்புனலையும் அருந்தி அவரை வாழ்த்தி அயர்வினாலே எல்லாருந் துயின்றார்கள். அப்போது இறைவர் பந்தரோடு மறைந்தார். உடனே துயில் நீங்கிய திருநாவலூரர் இதனை யறிந்து திருவருளை வியந்து "இத்தனையா மாற்றம் அறிந்திலேன் எம்பெருமாள்" என்னுந் திருப்பதிக மிசைத்தனர். பின்னர்த் திருக்குருகாவூரை யடைந்து பெருங் காதலுடன் பெருமானைப் பணிந்தேத்திப் புறம்போந்து திருக்கழிப்பாலையை வணங்கித் தில்லையை யடைந்து பொன்னம்பலவரை இறைஞ்சித் திருத்தினைமாநகர் சென்றனர். அங்கே தொண்டர்களாற் சிறப்பாக எதிர்கொள்ளப்பெற்று அர வென்ற ஓசை மூவுலகும்போ யொலிக்கும் வண்ணம் நெருங்கிய அடியார் குழாத்துடன் முதல்வனார் முன்பெய்திக் 'கோவலன் நான் முகன்' என்னுந் திருப்பதிகம் இசைத்துக் கும்பிட்டார்.

பின்னர்த் தொண்டைநாடடைந்து திருக்கழுக்குன்றத்தை வணங்கித் திருக்கச்சூர் ஆலக் கோயிலை அடைந்த காலை அமுது செய்யும் நேரம் வந்தது. அமுதாக்கும் பரிசனங்கள் வராமையினாலே பசியோடு இறைவனது திருக்கோயிற் றிருவாயிலை யடுத்த மதிற்புறத்தில் அமர்ந்திருந்தார். அவரது பசியைத் தீர்க்கக் கருதிய கடவுள் ஓரந்தணர் வடிவத்தோடு அவர்முன் தோன்றி 'நீர் பசியால் இளைத்தீர்; நான் ஐயமெடுத்து உணவு தருகின்றேன். இவ்விடத்தைவிட்டு அகலாதீர்; சற்று நேரம் பொறும்' என்று கூறிச்சென்று திருக்கச்சூர் மனைதோறும் இரந்து இன்னடிசிலுங் கறியுங் கொணர்ந்து நம் நாயனாரிடங் கொடுத்தார். அவ் வந்தணரது அருட் செயலைப் போற்றி அதனை வாங்கித் தம்முடைய தொண்டருடன் பசியார உண்டு உவந்திருந்தபோது அருகே நின்ற மறையவர் மறைந்தனர். இறைவன் இவ்வாறு கடும்பகற்கண் தம் பொருட்டு எழுந்தருளி வந்து திருவடித்தாமரை வருந்த

இரந்தளித்த பேரருட் செயலைப் பெரிதும் போற்றிக் கண்ணீர் மழை பொழிந்து பயிர்ப்புளகங் கொண்டு "முது வா யோரி" என்னுந் திருப்பதிகம் இசைத்தனர். பின்னர் அந்நகர்ப் பெருமானைப் பணிந்து பாடித் திருக்காஞ்சிமா நகர் அடைந்தார்.

## ஆராய்ச்சி

'பாறுதாங்கிய' என்று தொடங்குந் திருவாரூர்ப் பதி கத்தில் சிவபெருமானது சிறப்பியல்புகளை விளுக்களாக விதந்தோதினமையின், "துணிவாய பொருள் வினவி" என்ருர் ஆசிரியர் சேக்கிழார். துணிவாய பொருளது என்றது மெய்ப்பரம் பொருளை. திருநின்றியூர்த் திருப் பதிகத்துள் திருநாவுக்கரசர் மிகப்பல திருப்பதிகங்களை உலகம் உய்யும் பொருட்டு ஈந்தமையைக் குறிப்பான், 'பனுவல் ஈன்றவன்' என்றதற்கேற்ப, ஆசிரியர் சேக்கிழார் 'என்றும் உலகு இடர் நீங்கப் பாடிய ஏழெழுநூறும்' என்று சிறப்பித்தார். 'இணை கொள், ஏழு எழுநூறு' என்றமையான் நூறு என்பதை இரண்டு ஏழொடும் இணைத்து எழுநூறு எழுநூறு எனக்கொண்டு திருநாவுக் கரசர் திருப்பதிகங்கள் நாற்பத்தொன்பதினுயிரமாதல் காண்க. திருக்கோலக்காவினில் இறைவன் காட்சி கொடுத் தருளியதை, அவ்வூர்த் திருப்பதிகத்தின் ஒவ்வொரு திருப் பாட்டின் இறுதியிலுங் "கோலக்காவினிற் கண்டுகொண் டேனே" என்றியம்பினமையாற் றெளியலாம். திருஞான சம்பந்தரது இயலிசைத் தமிழ் நயங்களில் நம் நாயனுர் ஈடுபட்டமை, "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தனுக்கு" என்றமையால் தெள்ளிதிற் புலனுகும். சிவனடிப்பேரன்பர்க்கு இன்றியமையாதன வற்றை அவர் வேண்டாது இறைவன் தானே குறிக் கொண்டு அவர்கட்கு எய்துவிப்பன் என்பதைத் திருக்

குருகாவூர்ப் பெருமான் நம் நாயனர்க்குத் தண்ணீரும் பொதிசோறும் அவ்வூர்க்குச் செல்லும் வழிக் கண்ணே எதிர்பார்த்திருந்து அளித்தமையாற் றெளியப்படும். மிகுந்த பசியையும் நீர் வேட்கையினையும் ஒரு பொருட் படுத்தாது இறைவனது பல திருப்பதிகளுக்குஞ் சென்று தொழுது தொண்டர் குடிவாழ்க்கையைச் செம்மை செய் வதிலேயே கருத்தூன்றி யெழுந்த வன்றொண்டர்க்கு, அவர்க்கு வேண்டியன யாவற்றையுஞ் செவ்விதின் அமைத்து ஓர் பந்தரின்கீழ் எதிர்பார்த்திருந்தமை

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என்னுந் திருக்குறளை நினைப்பூட்டுதல் காண்க.

வன்றொண்டர் திருவைந்தெழுத்து என்னும் பெரு மறையினைப் பேசும் மறைமுனிவராகிய அடியார் தருவ தனை வாங்கி யுண்ண மறாராதலின், "பெருகார்வஞ் செல இருந்தார் சிவாயநம எனப்பேசி" என்றார் சேக்கிழார். மறைமுனிவர் தரும் பொதிசோறு 'இன்று நமக்கு எதிர் விலக் காகாதென் றிசைந்தருளி' என்றதுங் காண்க. புன லினைத் திருவருளுக்கு ஒப்பிடுதல் வழக்காதலின் "சங்கர னார் திருவருள்போல் தண்ணீரின் சுவையார்ந்து" என்றார். தொண்டர் குழாத்தினர் உண்ட அயர்வால் துயின்றலுந் திருநாவலூர்மன்னர் அறிதுயில் அமரும் பெருந்தகையா ராதலினாலும், அயரா அன்பின்பேருள்ளத்தினராதலா லும், துயின் முதலியவற்றால் மயக்கங் கொள்ளாதவரென் பார் "சித்த நிலை திரியாத திருநாவலூரர்" என்றார். சித்தநிலை திரியாமையினாற்றான் பிறர் அயர்ந்து தூங்குங் காலை இறைவர் பந்தரொடு மறைந்ததை நாயனர் உடனே உணர்ந்து திருவருளை வியந்து பதிகம் பாடியருளினார். தூங்காமற் றூங்குஞ் சிவஞானிகளது தனிப்பெருமை இதனாற் றெளியப்படும்.

திருக்குருகாவூரிலே தண்ணீரும் பொதிசோறும் வைத்துக் காத்துக்கொண்டிருந்த கடவுள் திருக்கச்சூர் ஆலக்கோயிலில் நமது நாயனார் பசிவருத்தத்தால் திரு மதிற்புறத்திருந்தபோது அவ்வூர் வீடுதோறுஞ்சென்று ஐயமெடுத்துச் சோறு கொணர்ந்து கொடுத்தனர். உணவினை உண்ணுதற்குரிய பொழுதும் மக்கள் யாவர்க்கும் ஊழினாலே அமைவதாகலானும், உடலெடுத்த பேரன்பர்க்கும் முன்வினைப் பயனை நுகர்தல் பெறப்படுதலானும் நம் நாயனார் கச்சூர் ஆலக்கோயில் அடைந்தஞான்று அவர் உணவு கோடற்குரிய அமயம் வரும்வரையில் காலந்தாழ்த்தற்பொருட்டு இறைவன் தனக்குரிய ஐயமேற்குந் திருவிளையாடலை நிகழ்த்தினன் என்க.

உண்ணுதற்குரிய அமயத்திலேயே அமுதினைப் பொருக்கெனத் தோற்றுவியாது சிறிது நேரத்திற்கு முன்னமேயே இறைவன் ஓர் அந்தணர் வடிவொடு தோன்றி ஆறுதல் கூறியது வன்றொண்டருடன் வந்த பரிசனங்கள் உணவுதேடி அலமராமைப் பொருட்டென்க.

"அப்புறம்நீர் அகலாதே சிறிதுபொழு தமருமென" இறைவன் செப்பியதும் இதனை வலியுறுத்தும்.

வன்றொண்டரது திருமேனி பசியினால் வாட்ட மடைவதனையே ஆசிரியர் சேக்கிழார் 'பசிவருத்த' மென்றார். இடையறாப் பேரின்பத்தை நுகரும் அவரது திருவுள்ளம் பசியின்பொருட்டுக் கலக்கமடையாதென்று தெளிக. இங்ஙனமே, ஆளுடையபிள்ளையும் ஆளுடைய அரசும் திருவீழிமிழலையிற் பஞ்சம் வந்தகாலை வாடுந்தன்மையர் அல்லர் என்றும், அவ்விருபேரன்பருடன் கூடிய தொண்டர்பொருட்டே இறைவன் படிக்காசு அருளினன் என்றும் மொழிந்ததை உற்றுநோக்குக. சித்தஞ் சிவமாகிய பெரியோர் மாட்டு உறும் வினைப்பயனைச் சிவனே நுகர்வ

னென்னும் மெய்ந்நூல் உண்மைக்கேற்ப இறைவனே இரந்து நம் நாயனர் வினைப்பயனை நுகர்ந்தனர் போலு மென்க.

இறைவன் நுகர்தலென்பது தோற்றத்தின் அளவே யாம். நுகர்ச்சிக்குரிய செயல் நிகழ்வதேயன்றிச் செயலி ஞல் வரும் இன்பதுன்பங்கள் அவனையும் அவனருள் பெற்ருேரையும் பற்ருவென்று தெளிக. திருவருள்வழி நிற்கும் பெரியார்க்கு வினைப்பயன் நுகர்ச்சி பிறவிக்கு வித்தாகாது திருவருட்பெருக்கின் பேருணர்விற்கே ஏது வாம் என்க. இறைவன் செய்த இச்செயலிஞலே அவனது பெருங்கருணையை வியந்து நமது நாயனர் "கண்ணீர் மழையருவிப் புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையத்" திருப்பதிகம் இசைத்தமையாற் றெளியப்படும்.

## அ. சங்கிலியார் திருமணம்

நம் நாயனார் அடியார்களாற் சிறப்பாக எதிர் கொள்ளப் பெற்றுத் திரு ஏகாம்பரஞ் சென்று பெருங் காதலுடன் மலைமகள் தழுவக்குழைந்த பெருமானை வழிபட்டு, அந்நகர்க்கண்ணே தங்கியகாலை அதன் சுற்றுப்புறங்களிலுள்ள பல திருத்தளிகளையும் ஆரா அன்புடன் சென்று வணங்கிப்பாடினர். வணங்கிய தளிகளாவன திருக்காமக் கோட்டம், திருமேற்றளி, திரு ஓணகாந்தன்றளி, திரு அநேகதங்காவதம் முதலியன. பின்னர்த் திருப்பனங் காட்டூர்ப் பெருமானை வணங்கி "விடையின்மேல் வருவானை" என்னும் வண்டமிழ்ப்பதிகம் பாடினர். திருமாற்பேறு, திருவல்லம் முதலிய திருப்பதிகளை வணங்கிக்கொண்டு திருக்காளத்தி மலையைச் சேர்ந்தனர்.

அன்பின் பேராறு உள்ளலைப்பத் திருக்காளத்திப் பெருமானையுங் கண்ணப்பரையுந் தாழ்ந்திறைஞ்சிச் "செண்டாடும் தொண்டையாய்" என்று தொடங்குந் திருப்பதிகம் பாடினார். தொண்டருடன் அவண் இருக்கும் நாளிலே திருப்பருப்பதம் திருக்கேதாரம் முதலிய வடநாட்டுத் திருப்பதிகளெல்லாவற்றையும் உள்ளத்தாற் றொழுதிறைஞ்சிப் பதிகம் பாடினர். சிலநாள் கழிந்த பின்னர்த் தென்புலம் நோக்கிப் புறப்பட்டு நிலவுலகத்தின் கண் சிவலோகம்போல் விளங்குந் திருவொற்றியூருக்கு வந்து சேர்ந்தார். அங்கே அடியார்களெல்லாராலும் மிகச் சிறப்பாக வரவேற்கப் பெற்றுத் தம்பிரான்தோழர் திருக்கோயிலினை அடைந்து பெருமானை அளவற்ற காதலுடன் பணிந்து "பாட்டும்பாடி" என்னுந் திருப்பதிகம் இசைத்தனர். பின்பு அவ்வூரிற் றங்கிக் காலங்கள்தோறும் திருக்கோயிலிற் சென்று தொழுதுவந்தனர்.

இவ்வூரின்கண்ணே அநிந்திதையாரென்னும் உமை

யம்மையின் சிறப்புத்தோழியருள் ஒருத்தி திருக்கயிலை மலையினின்றும் இழிந்துவந்து வேளாளர் மரபிலே ஞாயிறு கிழவர் என்பார்க்கு அருமைமகளாய்த் தோன்றிச் சங்கிலியார் என்னும் பெயர் பெற்று மலைமடந்தைபால் மறவா அன்புபூண்டு வளர்ந்தனர். அவளுக்கு மணப்பருவம் உற்றகாலை அவளது பெற்ருேர் அவளுக்கு மணம் நிகழ்த்தக் கருதியதுகண்டு சங்கிலியார் தாம் இறைவன் திருவருள்பெற்ற ஒருவர்க்கே உரியராகக் கருதி, பெற்ருேர் முயற்சியால் யாதுவிளையுமோ என்று கவன்று உணர்வுமயங்கி அயர்ந்து நிலமிசை வீழ்ந்துகிடந்தார். அதைப்பார்த்த பெற்ருேர் மிகவும் பரிந்து இவளுக்கு எந்நோயுற்றதோ என்று வருந்தி அவளுக்குப் பன்னீர் தெளித்துத் தடவினர். அப்போது அவள் எழவும் நினக்கு யாதுநேர்ந்ததென்று அவள் பெற்ருேர் வினவினர். அப்போது அவள் 'நீங்கள் பேசிக்கொண்டது எனக்கு ஒவ்வாது; சிவபெருமானது அடியார் ஒருவர்க்கு யான் உரியவள்; ஆதலினுல் திருவொற்றியூர்ப் பெருமான் அருள் வழிச்செல்வேன்' என்றனள். இதைக்கேட்ட பெற்ருேர் அயர்வும் அச்சமுங் கொண்டு அவள் மொழிந்ததை வெளிப்படுத்தாமல் இருந்தனர். இதனை அறியாத அவர் குலத்திலே அவரோடொத்த இயல்புடைய வொருவன் சிலரை அவர்பால் மகட்பேசி வரவிடுத்தான். வந்ததற்கு உண்மை விளக்காது சங்கிலியின் தந்தையார், அவர்கள் வருந்தாவாறு சில நன்மொழிகளைப் புகன்று அவரை அனுப்பி விட்டனர். அவர்கள் மீளுமுன்னர் அவர்களை விடுத்தவன்பெருங் குற்றஞ் செய்திருந்தவன்போல உயிர் நீத்தனன். இதனைக்கேட்ட ஞாயிறு கிழவர் முதலியோர் மனமறுகி மயக்கமுற்றனர். இந்நிகழ்ச்சியால் மிகவும் அச்சமுற்ற அனைவரும் சங்கிலியார் செயலுக்கு உடம்பட்டுப் பிறமுயற்சியின்றி யிருந்தார்கள். சங்கிலியார் திருவொற்றி

யூரின்கண்ணே தன் பெற்ரேரமைத்த கன்னிமாடம் ஒன் றிற்றங்கித் தவம்புரிந்தாள். பல்வகை மலர்களையும் எடுத்து மாலைகள் தொடுத்துக் காலங்கள் தோறும் சிவ பிரானுக்குச் சாத்தும்படி கொடுத்துவந்தார்.

ஒருநாள் முதல்வரது திருக்கோயிலுட் புகுந்து ஆளு டைய நம்பி இறைவனைத் தொழுது, தொண்டு செய்வா ருடைய திருப்பணிகளைக் கண்டுமகிழ்ந்து செல்லுங்கால், தாமரைப்பொய்கைபோலும் மாலை மண்டபத்துட் சென் ருர். அன்பினையே நாராகவும் அஞ்செழுத்தினை மலராக வும் நெஞ்சானது அகத்தே இறைவற்கு மாலை தொடுக்கப், புறத்தே தம்முடைய கைகளாற்றெடுத்த பூமாலைகளை இறைவற்குச் சாத்தும்பொருட்டுத் திரையை நீக்கிக் கொடுத்துவிட்டு மின்போல மறைந்த சங்கிலியாரை நம் நாயனுர் பான்மையாற் கண்ணுற்ருர். கண்ணுற்ற அளவி லேயே நிறை இழந்து அவள்பாற் காதல்மீதூரப்பெற்ருர். அப்போது அவர் 'பொன்னின் ஒளியினையும் மணியின் ஒளியினையும் அமுதத்திற் ருேய்த்து மதியின் தண்மை யொடு கூட்டியமைத்த மின்னுக்கொடிபோல இத்திரைக் குள்ளேயே இருப்பவள் எனது உள்ளத்தைத் திரித்த னள்; இவள்யார்? என்று அங்கு நின்ருரை வினவுதலும், அவர்கள் பெருந்தவத்தால் இறைவர் பணியிற் றலைநிற் கும் இக்கன்னி சங்கிலியார் என்னும் நங்கையார் என்று உரைப்ப, இருபெண்டிர் காரணமாக இப்பிறவியை எம் பெருமான் எனக்கெய்துவித்தார்: ஒருத்தி பரவையார்; மற்றெருத்தி இவளென நம் நாயனுர் உன்னினுர். 'பெரு மான் திருவடிக்கு ஆளாகும் பெருநெறியில் நிற்கும் என்னை அவன் பேரருளைத் தடையின்றியெய்தாவண்ணம், தடுத்து எனதுயிரையும் அழகிய மலரையும் ஒருசேரப் பிணைக்கும் பெண்மணியை முதல்வனுர் திருவருளாற் பெறுவேன்' என்று சென்றனர்.

சென்று திருவொற்றியூர்ப் பெருமானைத் தொழுது 'உம்முடைய இடப்பாகத்தில் ஒருபெண்ணினைக் கொண்டது மல்லாமல் உமது திருமுடியின்மீதும் கங்கையாகிய மற்றொரு பெண்ணையும் வைத்தருளுங் காதலுடையீரே! உமக்குத் திருமாலை தொடுப்பதோடு நில்லாது எனது உள்ளத்தொடையையும் அவிழ்த்த மதிமுகச் சங்கிலியாரை அடியேனுக்குக் கொடுத்து என் வருத்தத்தைத் தீரு'மென்றார். இங்ஙனம் இறைவனை வேண்டிக்கொண்டு திருக்கோயிற்புறத்தோர் மருங்கிருப்பக் கதிரவன் மேலைக் கடலுண் மறைந்தனன். மாலைக்கடலைக் கடக்கமாட்டாது வருந்தும் நம் நாயனார்மாட்டு இறைவன் சென்று 'யாவர்க்கும் எய்துதற்கரிய நங்கையை உனக்குத் தருகின்றோம்; நீ கவலை ஒழிக' என்றருளினர். அதைக்கேட்ட நம்பி அளவற்றவுணர்வுடன் இறைவன் திருவடிக் கமலங்களை வணங்கி வணங்கி மகிழ்ந்தார். பின்னர்த் திருவொற்றியூர்ப் பெருமான் சங்கிலியார்க்குக் கனவில்தோன்றி 'என்பாற் பேரன்புடையவளாய், என்னால் யாவருங்காணத் திருவெண்ணெய்நல்லூரில் ஆட்கொள்ளப்பெற்றவனாய திருநாவலூரன் உன்னை என்பால் இரந்தனன்; ஆதலின், நீ அவனை மணந்து மகிழ்க' என்றார். அங்ஙனங்கூறிய முதல்வரது திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சி யெழுந்து நடுக்கத்துடன் 'ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன்' என்று கூசிமொழிவாராய் 'திருவாரூரின்கண் பரவையாரை அவர் மணந்துள்ளார்' என்றார். அதற்குச் சிவபெருமான் அவன் உன்னை நீங்கிப்போகாமல் உனக்கு உறுதிமொழி பகர்வானென்று அருளி மறைந்தனர். மறைந்து வன்றொண்டர்பாற் சென்று 'நின் மணவிருப்பத்தைச் சங்கிலியார்க்குத் தெரிவித்தேன்: உன்பால் அவள் கருதுங் குறையொன்றினைத் தவிர்த்தற்பொருட்டு நீ இன்றிரவே அவள் முன்பு போய் ஒரு சூளுரைக்கவேண்டும்' என்றார். அதற்

கவர் என்செய்தால் இது முடியுமோ அது செய்வல் என்ருர். மங்கையைப் பிரியாவகைச் சூளுரைத்தல்வேண்டுமென்பதை அறிந்த அவர் திருப்பதிகள் தோறுஞ் சென்று இறைவனை வழிபடுந் தமக்கு இஃது ஒவ்வாதென்ற குறிப்பால், இறைவனை நோக்கித் திருக்கோயிலிற் றிருமுன்பு சூளுரைக்குங்காலை நீர் அவ்விடம் விட்டு மகிழடிக்கீழ்த் தங்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அதற்குத் தாம் இணங்கியதாகப் பெருமான் கூறியதனைக்கேட்டு நம்பியாரூரர் மகிழ்ந்திருப்ப, முதல்வர் சங்கிலிபாற் சென்று 'திருநாவலூரன் உனக்குச் சூளுரைக்குங்காலைத் திருக்கோயிலின்கண் அது நிகழ்தற்குடன்படாது மகிழ மரத்தடியின்கீழ் அதனை நிகழ்வித்துக்கொள்' என்றியம்பி மறைந்தார். சங்கிலியார் துயில் நீங்கித் திருவருட்டிறத்தை நினைந்துருகி வியந்து தனது பாங்கியர்க்குக் கனவில் இறைவன் அருளிச்செய்ததைப் பகர்ந்தார். அன்னோர் வியப்பும் அச்சமுங்கொண்டு சங்கிலியாரைப் பணிந்தார். பின்னர்ச் சங்கிலியார் திருப்பள்ளியெழுச்சிக்கு மலர் தொடுக்குங்காலம் வரச் சேடியருடன் திருக்கோயிலுக்குச் சென்றபோது ஆளுடைய நம்பியும் ஆங்கடைந்து திருவருளின் திறத்தை நேரிழையார்க்குக் கூற, அவரும் அதற்குடன்பட்டு ஒன்றுங் கூருது தோழியுடன் ஒருபுறம் ஒதுங்கித் திருக்கோயிலுட் சென்றனர். திருநாவலூரரும் அவர்பின் சென்று தாம் இறைவர்முன் சூளுரைக்குங் கருத்தினைத் தெரிவிக்க அவர் சேடியர்கள் இங்கே அது செய்தல் தகாது என்ன, வன்ருெண்டர் அங்ஙனமாயின் யான் எவ்விடத்திற் சூளுரைக்கவேண்டும் என்று வினவ, அப்பெண்டிர் மகிழடிக்கீழே செய்யவேண்டும் என்ன, நம்பியாரூரர், மனமருண்டு 'இவர்கள் சொன்னபடி செய்யாது மறுக்கில் தம்மைப்பற்றி யொரு இகழ்ச்சியுரை பரவுதலுங்கூடும் ஆதலின், அதற்கு உடம்படுதலே பொருந்துவதொன்ருவ'

தென்று துணிந்து மகிழடிக்கீழ்ச்சென்று அம்மரத்தினை மும்முறைவலம் வந்து சூளுரைத்தனர். இதனைக்கண்ட சங்கிலியாரும் மனங்கலங்கி இறைவர் கட்டளையால் பாவியேன் இதனைக் காண நேர்ந்தது என்று வருந்தி ஒரு புடை மறைந்து அயர்வுற்றார். ஆளுடைய நம்பி திருக்கோயிலிற் புகுந்து இறைவனை வணங்கி 'நீர் செய்தவாறு மிக அழகிது' என நகையுரை மொழிந்து வணங்கிப் புறம்போந்து நின்றார். சங்கிலியாருங் கன்னிமாடம் புகுந்திருந்தார்.

இறைவன் அடியார்களுக்குக் கனவிற் சென்று இருவருக்கும் மணம்செய்விக்கும்படி கட்டளையிட்டனர். இருவர்க்கும் அளவற்ற சிறப்புடன் மண்ணவர் யாவருங் காண விண்ணவர் பூமழைபொழியத் திருமணம் நிகழ்ந்தது. வன்றொண்டர் திருவிலுஞ் சிறந்த பூங்குழலாரது பெருநலத்தைக் 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்' றமர்ந்திருந்தார். ஒருகணம் ஊழியாகத் தோன்றும் புலவியையும் ஓர் ஊழி ஒருகணமாகத் தோன்றும் புணர்ச்சியையும் உடையராய் நம்பியாரூரர் திருவொற்றியூரின்கண்ணே பன்னாட் கழித்தனர்.

## ஆராய்ச்சி

நமது நாயனாரும் திருஞானசம்பந்தரைப் போலவே திருக்காஞ்சியிலிருந்து திருக்காளத்திக்குச் சென்று மீண்டு திருவொற்றியூர் வந்ததாகத் தெரிகிறது. அங்ஙனஞ் செல்லுதல் அக்காலத்து வழக்கம் போலும்! திருஞானசம்பந்தரைப்போலவே இவரும் மிக்க பேரன்போடு கண்ணப்பரைத் தொழுது காளத்தியில் தங்கியிருந்தே திருப்பருப்பதம் திருக்கேதார முதலிய வடநாட்டுத் திருப்பதிகளை வணங்கிப் பாடினர். அப்பமூர்த்தி ஒருவரே வடநாட்டுக்குச் சென்றனர். ஆதலால் மற்றை இருவருடைய

திருப்பதி யாத்திரைக்கு வடஎல்லை திருக்காளத்தியாக அமைந்தது காண்க.

திருவொற்றியூரினைப் 'புவியிற் சிவலோகம் போல்வ தென்றூர் ஆசிரியர் சேக்கிழார். சிவலோகத்தில் அநிந்திதையை நாயஞர் பூக்கொய்யுமிடத்துக் கண்டு காதலித்தது போலத், திருவொற்றியூரிலும் அவ் வநிந்திதையாகிய சங்கிலியாரை மலர் தொடுக்கு மாடத்தே கண்டு விழைவுற்றனராதலின் திருவொற்றியூரினைச் சிவலோகத்திற்கு உவமித்தனரென்க. திருவொற்றியூர்ப் பெருமான்பால் திருநாவலூரர்க்கு உள்ள பேரன்பினை ஆசிரியர் சேக்கிழார் நயமுற இயம்பினர். அது வருமாறு:

"ஊனு முயிருங் கரைந்துருக உச்சி குவித்த செங்கையுட
னை காத லுடன்வீழ்ந்தார் ஆரா வன்பி னூரர்."

முன்னெருகாலத்தில் ஓரரசன் பல திருப்பதிகளிலும் உள்ள சிவாலயங்கட்குத் தீர்வை ஏற்படுத்தி வாங்குங் காலத்தில் 'திருவொற்றியூர் நீங்க' என்று வரிவிதிக்கும் ஏட்டிற் காணும்படி இறைவ னருள்செய்து அத் திருப்பதிக்கு வரியில்லாது செய்த கருணைத்திறத்தை வியப்பார் 'ஏட்டுவரி யொற்றியூர் நீங்கவென்ன எழுத்தறியும்' என்றூர். இத்திருவருட் செயலைத் திருக்குறிப்புத்தொண்டர் புராணம் ௩௯-ம் பாட்டிலும் விதந்தமை காண்க.

இத்திருப்பதியின்கண் மிகுந்த உவப்புடைமையால் அவண் தங்கிக் காலங்கள்தோறும் நமது நாயஞர் இறைவனை வழிபட்டு வந்தனர். சங்கிலியாரை மணக்கும் பான்மை இருத்தலின், அங்கு அவர் தங்க நேர்ந்தது போலும்! 'பாடி அறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம் போந்து' என்ற சேக்கிழார் திருவாக்கு இருபொருளுடைத்து. 'இறைவனைப்பாடி அவன் அருள்வழியாகவே தம்மறிவு நின்றெழுகும் பெருநிலையுற்று வெளிச்

சென்று' என்பது ஒரு பொருள். 'தம்மறிவு தம் வயப் படாமல் ஒருத்தி வயப்பட்டு வருந்தும் நிலைவந்தடைய அவன்பால் நின்றும் புறம்போந்து அவளைப் பெறுவதற் காக இறைவனைப்பாடி' என்பது மற்றொரு பொருள்.

அநிந்திதையே சங்கிலியாராக அவதரித்தாரென்று ஆசிரியர் சேக்கிழார் கூறுகின்றார். அதனை அவர் எவ்வா றுணர்ந்தாரென்பது தெரியவில்லை. சங்கிலியார் பிறந்த வேளாண்குலத்தை நாலாங் குலமென்று ஆசிரியர் கூறியது, அக்குலம் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் பாகு பாட்டில் நான்காவதாக நிற்றல்பற்றி என்க. நாலாங்குல மென்றமையால் படும் இழுக்கு யாதுமிலை என்பார் 'மேலாங்கொள்கை வேளாண்மை மிக்க' என்றனர். நெடுநாட்கு முன்னேயே நாற்குலப்பிரிவுகள் தென் னாட்டில் ஏற்பட்டிருந்தபோதிலும் ஆரியசாதிப் பிரி வினுள் நான்காவதாகக் கருதப்படும் சூத்திரர் இழிகுலத் தினராகக் கருதப்படுதல் போலத் தென்னாட்டிலே வேளாண்குலம் கருதப்படுவதில்லை. "உழுதுண்டு வாழ் வாரே வாழ்வா"ரென்றும், 'உழுதுண்பார் தொழு துண்பாரின் வேறுவ'ரென்றும், "உழுவார் உலகத்தார்க் காணி" என்றும் திருவள்ளுவர் கூறினமை காண்க. பிற மரபினருக்குக் குற்றேவல் செய்தலே சூத்திரர் கடமை என்று வடநூல் கூறும். அக்கடமை வேளாளருக்கு இன்றாதலின், வேளாளரைச் சூத்திரரென்றல் தவறு. கொலை கடிந்து புலவுநீக்கிக் கடவுட்பேணும் வேளாண் மரபின் ஒரு பகுதியாரே தமிழ்நாட்டுப் பார்ப்பாராகவும், வேளாளரால் முடிசூட்டப்பெறும் வேளாண் டலைவரே தமிழ்மன்னரெனவும், விளைவித்த பொருளைப் பண்டமாற் றின்பொருட்டுப் பல இடங்களுக்குக் கொண்டுபோகும் வேளாளரே தமிழ்நாட்டு வணிகரெனவும் ஆராய்ச்சி வல்லுநர் முடிவுகட்டியிருப்பதால், மருத நிலத்துப் பெரு

மரபினராகிய உழவரே தமிழ்நாட்டிலே நான்குவகை யாகப் பகுக்கப்பட்டனரென்றுந் தெளிக. சூத்திர மென்ற சொல் கயிறென்று பொருள்படுமிடத்துச் சூத்திரர் என்பது 'கயிற்றிற்ற் பாவையை ஆட்டுவது போல எல்லாவற்றையும் ஆட்டுவிக்குந் திறனுடையார்' என்று பொருள்படும். அப்பொருளிலே வேளாளரைச் சூத்திரரென்று கூறுதல் பொருத்தமான தென்பாருமுளர். அங்ஙனங் கொள்ளுங்கால் சூத்திரரென்ற சொல் சாதிப் பெயராகாது.

திருஞாயிறு கிழவர் என்பார் சங்கிலியாரின் தந்தை யார். ஞாயிறு என்பது அவரது இயற்பெயர் போலும்! கதிரவன் பெயரை மக்கட்கிட்டு வழங்குதல் இக்காலத் துங் காணப்படும். இக்காலத்திற் பெரும்பான்மையும் வடமொழிப் பெயர்களே தமிழ்மக்களுக்கிட்டு வழங்கப் படுகின்றன. ஆனால் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னே பெரும்பான்மையுந் தமிழ்ப் பெயர்களே மக்கட்கு இட்டு வழங்கிவந்தன என்பது ஞாயிறுகிழவர், சங்கிலியார், பரவையார், நம்பியாரூரர் என்னும் பெயர்களால் தெளி யப்படும். கிழவர் என்ற சொல்லே முற்காலத்திற் கிழார் என்று வழங்கியதுபோலும்! அச்சொல் உரியவரென்று பொருள்படும். நிலத்திற்கு உரிமைபூண்டிருந்த வேளா ளருக்குக் கிழார் என்ற சொல் பட்டப்பெயராய் ஆதியில் வழங்கிற்று. முதலியார், பிள்ளை என்ற பட்டப்பெயர்கள் பிற்காலத்தில் ஏற்பட்டன. அக்காலத்திலே ஒருவரது பெயருக்குமுன் திரு என்ற அடைமொழி கொடுக்கப் பட்டதென்பது திருஞாயிறு கிழவர் என்ற சொற் றொடரால் இனிது விளங்கும்.

சங்கிலியார் என்ற பெயர் சங்கிலிபோலத் தொடர் புடையார் என்று பொருள்படும். நிலவுலகிற் பிறப்பதற்கு

முன் கயிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியின் உணர்ச்சி சங்கிலி யாருக்கு இருந்ததென்பது

"மலையான் மடந்தை மலர்ப்பாத மறவா வன்பால் தந்தநெறி
தலையா முணர்வு வந்தணையத் தாமே யறிந்த சங்கிலியார்"

என்று ஆசிரியர் சேக்கிழார் செப்பினமையால் தெளிவுபடும். அவரது பெற்றோர் அவருக்கு மணம்புரியக் கருதியகாலை அவர் 'வென்றி விடையா ரருள் செய்தா ரொருவர்க்குரியேன் யான்' என்றதுங் காண்க.

சங்கிலியாரின் தந்தையார்பால் மகட்பேசச் சிலரை விடுத்த ஆண்மகன், பேசச்சென்றவர் வருவதற்குமுன் இறந்தமை, பெருங்கேடு செய்தவன் அதன் பயனாக உடனே இறந்தமைபோன்றது என்று ஆசிரியர் சேக்கிழார் செப்பியது, குருவியிருக்கப் பனம்பழம் விழுந்த தென்பதோ டொக்கு மெனினும், உலக வழக்கிலுள்ள மக்கள் மனப்பான்மையைத் தெரிவித்தவாறாகும். ஒருவனை அவன் பகைவன் வைது அடித்துத் துன்புறுத்திய சின்னாட்களுள் இறந்துவிடுவானாயின் அவன்செய்த பெருங்கொடுமையால் உடனே அவன் இறந்தானென்று கருதுதலும், ஒரு கூட்டத்தாரை எதிர்க்குங்காலை மடியின், எதிர்த்த பாவத்தால் இறந்தானென்று பேசுதலும் உலவழக்கிற் காணப்படுகின்றன.

சங்கிலியாரை விரும்பி மகட்பேசுதல் தகாதென்ற அச்சம் அவர் பெற்றோர்பாலும் பொதுமக்களுள்ளும் நிலைபெற்றமைக்கு முதலில் மகட் பேசியவன் இறந்தமையே காரணமாயிற்று. நம்பியாண்டார்நம்பி திருவந்தாதியில் 'தகுமகட் பேசியோன் வீயவே நூல்போன சங்கிலிபால் நகும் வழக்கே செய்தான்' என்றதற்குத் தக்க பொருளினை உணராத சிலர், கைம்பெண் மணத்திற்கு அது மேற்கோளாமென்று தவறாகக் கருதுவர். மகட்

பேசியோன் பேசி முடியுமுன் வீந்தமையால், நூல்போன என்பதற்குப் பிறர்பால் மணம்வேண்டாத என்ற பொருளே கொள்ளற்பாலது. 'நகும் வழக்கு' என்றது மணம் வேண்டாமென்றிருந்தவரை மணத்திற்கு இசை வித்துக் கொண்டதேயாமென்க.

திருவொற்றியூரிற் சென்று கன்னிமாடத்திற் சங்கிலி யார் தவம்புரிய நேர்ந்தது நமது நாயனரைக் காண்டற் குரியபான்மை இருந்தமையாற் போலும். இருவருக்குந் தொடர்பாயுள்ள இறைவனது கோயிலின்கண் பூந்திரு மண்டபத்திற் காட்சி நிகழ்ந்தது முன்வினைப் பொருத்த மென்பதைத் தெளிவுபடுத்தியவாருகும். முன்வினைத் தொடர்பாலேயே காட்சி நிகழ்ந்த அப்பொழுதே காதலும் மிக்கெழுந்தது. இருவரும் திருவருள்வழி நின்ருராதலின் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி நிகழ்த்துங் களவொழுக் கத்தி வீடுபடாது இறைவனுல் தொடர் பெய்தும் பொழுதை எதிர்நோக்கியிருந்தனர். நமது நாயனர் பிறமாதர்பால் எள்ளளவேனுங் காதல் உணர்ந்திலராத லாலும், தவத்தினுல் முன்னுணர்ச்சியுடையா ராதலாலும் 'இருவரால் இப்பிறவியை எம்பெருமான் அருளால் எய்துவித்தார்' என்று கருதினுர். புறத்தே நாரினுல் மலர் மாலையைத் தொடுப்ப தொப்ப, அகத்தே அன்பென் னும் நாரினுல் அஞ்செழுத்து மாலையைச் சங்கிலியாரது உள்ளம் தொடுத்தது என்றமையால் உள்ளும் புறமும் ஒத்த சங்கிலியாரது பேரன்பு நன்கு விளங்கும்.

திருநாவலூரரது உள்ளத்தையும் நாரில் மலரைப் பிணிப்பதுபோல அன்பினுற் பிணித்தமையின் சங்கிலி, யாருக்கும் நாயனுர்பாற் காதல் உண்டென்பது கருதப் படும். அறவே பிறர்பாற் காதலில்லார் பிறருள்ளம் புகாரென்பது அறிஞர் கருத்தாதல் காண்க.

" மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டிராயிற் பிறர்நெஞ்சு புகார்அர்
புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன்
முத்தீப்பேணு முறைஎனக் கில்லென "

என்ருர் மணிமேகலையார். ஒன்றினை ஒரு காலத்தே வேண்டா மென்பார் பிறிதொரு காலத்தே அதனை வேண்டுதல் உலகியல்பாதலின் வழக்கு என்ற சொல் அமைக்கப்பட்டது.

இருபெண்களை மணத்தல் பொருந்துமோ என்ற ஓர் விஞவுக்கு விடையாக இறைவனை நோக்கி நமது நாயனுர் 'திருமேனியி னிடப்பாகத்திலொரு பெண்ணையுந் திருமுடி மீது மற்ருெரு பெண்ணையும் உடையீர்' என்று விளித்தனர். நமது நாயனுரது வேண்டுகோளிஞல் அறியக் கிடப்பது யாதெனில், கிடைத்தற்கரியதோர் பொருளின் கண் அளவுகடந்த விழைவினை உடையோர்கள், எல்லாம், வல்ல இறைவனை வணங்கி வேண்டி அதனைப்பெற முயல்வதே தக்கதென்பதாம். அடியார்க்கு வேண்டியவற்றை வேண்டியவண்ண மீதல் இறைவனது பெருங் கருணையாமென்பது.

'இம்ப ருலகில் யாவருக்கு
மெய்த வொண்ணு விருந்தவத்துக்
கொம்பை யுனக்குத் தருகின்ருேங்
கொண்ட கவலை யொழிகென்ன [1]

என்றருளிச் செய்தமையால் இனிது விளங்கும்.

திருவொற்றியூர்ப் பெருமானுர் வன்ருெண்டருக்குக் கனவிற் ருேன்ருது நேரேதோன்றி யருள்செய்தாரென்று கருத இடமுண்டு.

சங்கிலியாருக்கு அவர் கனவிற் ருேன்றிஞரென்பது தெளிவாகக் கூறப்பட்டது. கனவிலும் கற்பினைப்

பெரிதும் பாராட்டும்'பெருந்தகை யுடையார் சங்கிலியா ரென்பது, நமது நாயனரை மணக்க இசைவதற்கு முன் அவர் பரவையார் வசப்பட்டிருத்தலை இறைவன்பால் வின்வினமையாற் றெளியப்படும். இறைவரே நாயனரை மணக்கும்படி கட்டளையிட்டபோதுங் கற்பின் கொள்கையை' மறவாது வின எழுப்பினமையால், இவர் 'குன்ரு விளக்கனையார்' என்ருர் ஆசிரியர் சேக்கிழார். சங்கிலியாரைப் பிரியேனென்று திருநாவலூரரர் சூளுரைப்பா ரென இறைவன் விடைபகர்ந்தவுடன் 'பரவையாரை நாயனர் பிரிந்து தம்மோடென்றும் இருத்தற் கேது வென்னை' என்னும் வினவெழுப்பாது சங்கிலியார் மணத்திற் கிசைந்தமையால் அவருக்கு நாயனர் பா லிருந்த காதன் மிகுதி தோன்றும். நனவாயிருப்பின் அவ்வினவை அவர் எழுப்பியிருத்தல் கூடுமென்று கருது வாருமுளர்.

மீக்கூர்ந்த காதலின்ற் சூளுரைத்தாவது சங்கிலியாரைப் பெறவேண்டுமென்ற பேரெண்ணத்தினல் நமது நாயனர் தவருகவுஞ் சூளுரைக்கக் கருதினர். அறநெறியிற் சிறிது வழுவின் எத்தகையோர்க்கும் இடர் நேருமென்பது இதனற் றெளிவாமன்ருே? இறைவனும் உயிர்களுடைய தகுதிக்கேற்பவே வெவ்வேறு முறையாக அருள்புரிவனுதலின், இங்ஙனஞ் செய்விக்கத் திருவுளங் கொண்டார்போலும்! மக்கள் மூவகைப்படுவர். தீய தொன்றைத் தீயதென இயற்கையாகவே யுணர்ந்து அதன்கணின்றும் விலகிச் செல்வார் முதல் வகையின ராவர். தீயதொன்றைத் தீயதெனவே ஆராய்ச்சியா லறிந்து அதனைத் தவிர்ப்பார் இரண்டாவது வகையின ராவர். தீயதனை நுகர்ந்தே அதன் தன்மைகண்டு விலகுவார் மூன்ருவது வகையினராவர். நுகர்ச்சியால் உண்மை யறிதற் குரியாருக்கு ஆராய்ச்சி மாத்திரம் போதாது.

இருபெண் விளேவின் கேட்டினே நுகர்ந்து ஒழிக்கவந்த நாயனுர்க்குத் தவருகச் சூளுரைத்தல் ஊழ்விளேயின் பயனுக வந்து முடிந்தது. சூள்பிழைத்தாற் கேடுநேருதல் இறைவன் திருவருள் வலியினுலாவதென்றும், திருவருள் விளக்கம் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்குந் திருமுன்பு சிறப்பாக நிகழுமென்றுங் கருதினமையாற் றிருக்கோயிலே விட்டு மகிழ்க்கீழ்த் தங்கும்படி இறைவனே வேண்டினரென்க. ஒருவரை வஞ்சித்துப் பொய்புகலுவோரைக் கடவுள் ஒறுப்பரென்பது யாவருக்கும் ஒப்பமுடிந்ததே. ஆனுல் கடவுள் நினேவில்லாமற் குற்றஞ் செய்வதிலுங் கடவுளது திருவருள் விளக்கம் உள்ள இடத்தே கடவுள் நினேவோடு தவறுசெய்தல் மிகக் கொடியது. அப்பெருங்குற்ற மிழைப்போரை மிகத் தெளிவாகக் கடவுள் தண்டிப்பாரென்ற கருத்துப்பற்றித் திருக்கோயில் முதலிய இடங்களிற் றிருமுன்பு உறுதிமொழி கூறுதல் உலக வழக்கில் நிகழ்கின்றது. உறுதிமொழி கூறுவோன் கடவுள் முன்னே நெஞ்சறிவது பொய்த்தல் கூடாதென்று உணராவிடில் தன் குற்றம் பெரிதென்று கருதமாட்டான். ஆகவே, கூறியது பொய்ப்பின் தான் பெருங்குற்றஞ் செய்தவனுகத் தன்னே எண்ணமாட்டான். தனக்குவருந் தண்டனேயைத் தக்கதென்று கருதமாட்டான். இக்காரணம் பற்றியே மகிழடிக்கீழ் வைகும்படி இறைவனே நாயனுர் வேண்டியதும், இறைவன் நாயனுரை மகிழடிக்கீழ்ச் சூளுரைக்கும்படி கேட்கும் வண்ணம் சங்கிலியாருக்குக் கட்டளேயிட்டதும் நிகழ்ந்தன போலும்! எவ்விடத்தில் உறுதிமொழி கூறினுலும் அம்மொழியிற் றப்பி நடத்தல் தகாதென்ற நல்லுணர்ச்சி சான்ற நாயனுர் பொதுமக்கள் நினேவதுபோல் நினேந்து இறைவனே வேண்டியது ஊழ்விளே வலியின் வயப்பட்டமையா னென்க.

'தையலார் மையலிற்பட்டால் தமக்கொரு மதியுண்டாமோ' என்ற திருவாக்கினை இவர் நிலை நினைவுறுத்துமன்றோ? மற்றொருவகையாக இதனை நோக்குவோர் சூள் பிழைத்தால் ஒறுத்தலாகாது என்று இறைவனை வேண்டிக் கொள்ளுவார் 'மகிழடிக்கீழ் இருக்க என்றார்' என்று கருதுப.

இறைவனும் நாயனார் வேண்டுகோளை மறுத்துப் பொய்யுறுதி கூறுதல் தகாதென்று தடுத்தாட் கொள்ளாமல் அவர் வேண்டுகோளுக்கு இசைவார்போன்று சங்கிலியார் வாயிலாக மகிழடிக்கீழ்ச் சபதம் நிகழ்வித்தது எதனால் எனின், சங்கிலியார் மணத்தினை நிகழ்த்தி நாயனாருக்கு ஊழ்வினைப் பயனை ஊட்டுவித்தற் பொருட்டும், இறைவன் பெரியோர்க்குஞ் சிறியோர்க்கும் நடுநின்று ஒருபாற் கோடாது அருள்புரிவன் என்னும் உண்மையை யாவருக்கும் வற்புறுத்தியருளுதற் பொருட்டும் என்றறிக. நாயனார் சூளுரைத்ததைக் கண்டகாலை சங்கிலியார் மனங் கலங்கியது எதனாலோவெனின், நம்பியாரூரரைப் போன்ற பேரன்பர் சொல்லினைச் சொன்ன அளவிலேயே நம்பி அவரை ஏற்றுக் கொள்ளாது மகிழ்க்கீழ் உறுதிகூறக் கேட்டது அவருடைய பெருமைக்குந் தம்முடைய தாழ்மைக்கு முரணும் மிகையானதோர் செயலென் றுணர்ந்தமையால் என்க. சங்கிலியார் கனவிலுங்கூட நாயனார் சூளுற வேண்டுமென்று இறைவன்பாற் கேட்கவில்லை. இறைவனே நாயனார் சபதஞ் செய்வாரென்று கூறினர். மகிழடிக்கீழ்ச் சூளுறுதலைத் தந்திரமாய் முற்றுவித்ததும் இறைவனே. இறைவன் ஒரு திருவிளையாடல் நிகழ்த்தக் கருதியே இவ்வாறு செய்தனன் போலும்! நாயனார் கருதியபடியே மணத்தினை இறைவன் முடித்தானெனினும் பின் வரும் இடருக்கு வித்திட்டமையால், திருநாவலூரர் 'அருள் நாளுந் தரவிருந்தீர் செய்தவாறழகி' தென்றார்.

ஐந்திணை அன்பின் நயஞ்செறிந்த இந்நாயனார் மணவாழ்க்கையைத் திருவள்ளுவரது அழகிய சொற்றொடரினால் ஆசிரியர் சேக்கிழார் சிறப்பித்தார். 'புணர்ச்சி மகிழ்த' லென்னு மதிகாரத்தின் முதலடியை யமைத்த பெரிய புராண அடிகள் வருமாறு :

'புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்.'

ஊடுதல் காமத்திற் கின்பமாமாதலின், புணர்ச்சியொடு புலவியையும் உடன் கூறினார். காற்றும் இடையிற் செல்லப் பொறுக்காத காதலர்க்கு ஒரு கணம் நிகழும் ஊடல் நெடுங்காலத்ததாகத் தோன்றுதலும், நெடிது நிலவியபோகம் ஒரு கணத்ததாகத் தோன்றுதலும் இயல் பென்பதனை 'ஊழியாம் ஒரு கணந்தா னவ்வூழி யொரு கணமாம்' என்பதால் விளக்கினர். பிரிவாற்றாமையால் வருந்துந் தலைவி 'இந்நாள் நெடிய கழியு மிரா' என்றதும், புணர்ச்சி விரும்பிய தலைமகன் 'நீடுக மன்னோ விரா என்றதுங் காண்க.

## ௧௰. திருவாரூர்க்குத் திரும்பி இறைவனைத் தூது விடுதல்

திருநாவலூரர் திருவொற்றியூரிலே வீற்றிருக்கும் போது இளவேனிற்காலம் வந்தது. பொதியமலைச் சந்தனக்காவிலே உலாவிவருந் தென்றற்காற்று வீசியவுடன், திருவாரூரின்கண் வீதிவிடங்கப் பெருமானுக்கு நிகழும் இள்வேனிற் றிருவிழாவிலே பரவையார் பாடலாடலியற்றுவதை நினைந்தும், திருவாரூர்ப் பெருமான் தமக்குப் பல்லாற்ருனும் ஆட்கொண்ட பேரருளின் றிறத்தை நினைந்தும் பிரிவாற்ருமையை உணர்ந்தனர். திருவாரூர்க்குப்போய் இறைவனை வழிபட வேண்டுமென்னும் அவாமேலீட்டினுல் எழுந்த 'பத்திமையும் அடிமையையும்' என்னுந் திருப்பதிகத்தின் ஒரு பாட்டு வருமாறு:

"ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமா யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே."

திருவாரூர் நினைவு மிகவும் விஞ்சியபோது ஒருநாள் திருவொற்றியூர்ப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு அவ்வூருக்கப்புறஞ் செல்லத் தொடங்கியவுடன், சூள்பிழைத்தமைபற்றி நாயனுர் கண்கள் மறைவுற்றன. அப்போது செய்வதறியாது திகைத்து நெடிதுயிர்த்து இத்துயர் நீங்க இறைவனைப் பாடுவேனென்று 'அழுக்கு மெய்கொடுன் திருவடி யடைந்தேன்' என்னுந் திருப்பதிகம் பாடினர்.

'அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே
னதுவுநான்படப் பாலதொன் றானற்
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள்
பிழைப்ப னாகிலுந் திருவடிப் பிழையேன்

வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான்
மற்று நானறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையா
யொற்றி யூரெனு மூருறை வானே."

பின்னர்த் திருவாரூரை எவ்வகையானும் அடைய வேண்டுமென்னுங் காதல் மிகுதியினாலே, வழிச்செல்வார் வழிகாட்ட மேற்சென்று திருமுல்லைவாயிலடைந்து பாடிய திருப்பதிகத்திற் சங்கிலிக்காக என் கண்களை மறைத்தீ ரென்று சாற்றினர்.

"விண்பணிந் தேத்தும் வேதியர் மாதர்
வெருவிட வேழமன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் தேவர்தம் மரசே
தண்பொழி லொற்றி மாநக ருடையாய்
சங்கிலிக் காகவென் கண்கொண்ட
பண்பநின் னடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே."

இத்திருப்பதிகத்துள் தொண்டமானுக்கு அத்தலத்தில் இறைவனருள்புரிந்ததை விதந்தோதினர். தொண்டமான் யானைமீது அவண் வந்தபோது முல்லைக்கொடிகள் அவனது யானையின் கால்களைப் பற்றிப் பிணித்தன. அவற்றை அவன் சேதிக்கவே அக்கொடிகளி னடுவேயிருந்த சிவலிங்கப் பெருமான்மீது வாள்பட்டு உதிரம் பெருகிற்று. அதனைக் கண்டு அரசன் வருந்தியவுடன் இறைவன் வெளிப்பட்டருளினன்.

"சொல்லரும் புகழான் றொண்டமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட்
டருளிய விறைவனே"

என்றது காண்க.

பின்னர்த் திருவெண்பாக்கமென்னுந் திருப்பதியினை யடைந்து இறைவனை வணங்கி 'நீர் கோயிலில் இருக்கின்றீரா? என்று வினவ, ஊன்றுகோல் கொடுத்தருளி 'நாம் உள்ளோம் நீர்போம்' என்று அன்பிலாதவர்போல இறைவன் மொழிந்ததைக்கேட்டுப் பரிவுடன் அருளிச்செய்த திருப்பதிகத்தின் முதற் பாட்டு:

"பிழையுளன பொறுத்திடுவ ரென்றடியேன் பிழைத்தக்காற்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
வுழையுடையா னுள்ளிருந்து வுளோம்போகீ ரென்றானே."

பின்னர்ப் பழையனூருக்கருகிலுள்ள திருவாலங்காட்டின் மருங்குசென்று 'முத்தா முத்தி தரவல்ல' என்னுந் திருப்பதிகம் பாடிச்சென்று திருவூறல் என்னுந் திருப்பதியை வணங்கிக் காஞ்சீபுரம் அடைந்தார். அங்கே உயிர்க்கெல்லாம் படியளிக்கும் அம்மை திருக்கோயிலினை வணங்கித் திருவேகம்பரைத் துதித்துக் கண்கொடுத்தருள வேண்டுமென்று வேண்ட, இறைவன் இடக்கண் தெரியும்படி செய்தார். அம்மையப்பரைப் பேரன்புட னிறைஞ்சி 'ஆலந்தானுகந் தமுது செய்தானை' என்றெடுத்தபாட்டில், 'அம்மானைக்காணக் கண்ணடியேன் பெற்றவாறே' என்றார். அத்திருப்பதிகத்தை முடித்துச் சிலநாள் தொண்டருடன் அங்கு வைகி 'அப்பாற்செல்லும்போது திருவாரூரினை என்றுகொ லெய்துவது' என்னும் முடிவுடைச் சந்த இசைப்பதிகம் பாடினர். திரு ஆமாத்தூர், திருவரத்துறை, திருவாவடுதுறை, திருத்துருத்தி முதலிய தலங்களை வழியில் வணங்கிச்சென்றார். திருத்துருத்தியில் வடகுளமென்னும் நீர்த்துறையில் தமது திருமேனியிலுற்ற பிணி நீங்கும்படி இறைவர் கட்டளைப்படி மூழ்கி எழுந்து 'மணியொளிசேர் திருமேனி' உடையரானர். அத்திருப்பதிக்குந் திருவேள்விக் குடிக்கும் 'மின்னுமாமேக' மென்னும் ஒரு

திருப்பதிகம் பாடினர். பின்னர்த் திருவாரூரினையடைந்து இறைவனை வழிபட்டுத் 'தூவாய' ரென்னுந் திருப்பதிகம் பாடி மற்றொருகண்ணும் வேண்டுமென்று குறையிரந் தனர்.

"விண்டானே மேலையார் மேலையார் மேலாய
எண்டானே எழுத்தோடு சொற்பொரு ளெல்லாமுன்
கண்டானே கண்டனைக் கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண் மண்டளி யம்மானே."

பின்னர் அடியார்களுடன் திருமூலட்டானரை நள்ளிரவில் வணங்கிக் 'குருகுபாய' வென்னுந் திருப்பதிகம் பாடினர். பின்னுங் கண்பெருமையால் மனம் வருந்தித் தோழமைதோன்ற 'மீளா அடிமை' என்று தொடங்குந் திருப்பதிகத்தினைச் சினந்து பாடினர்.

"பாரூ ரறிய வென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே"

என்றியம்பிய வளவில், இறைவன் இரங்கி மற்றொரு கண்ணையுங் கொடுத்துவிடவே, நாயனுர் முகமலர்ந்து பரமனைப் பன்முறை பணிந்து பரவசப்பட்டுத் திருவருட் கடலிற் றிளைத்தாடினுர்.

பின்பு திருக்கோயிலினின்றும் புறம்போந்து தேவா சிரியன் மண்டபத் திருந்தார்.

இவர் திருவாரூரை யகன்றுபோன நாள்முதல் தனிமையினுல் மிகத் தளர்வெய்திய பரவையார் திருவொற்றியூரில் நிகழ்ந்த சங்கிலியார் திருமணச்செய்திக ளனைத்துங் கேள்விப்பட்டு அளவிறந்த வெகுளியுடையராய்ப் பெருங் கவலைக் கடலுள் ஆழ்ந்தனர். திருநாவலூரருடைய பரிசனங்கள் பரவையார் வீட்டுப் புறப்பக்கத்தும் போகப் பெருத செய்தியை வன்றொண்ட ரறிந்து உலகியல் கற்ற

மாந்தர் சிலரைப் பரவைபாற் றூதுவிட்டனர். அவர்களா லும் பரவையார் புலவி தீர்க்கப்படாமை கண்டு நமது நாயனுர் திருவாரூர்ப் பெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்திருந்தனர். தோழரது குறைமுடித்தற்பொருட்டு இறைவனே அவருக்கு எதிர்ப்பட்டனர். அவருடைய திருவடித்தாமரைகளில் வீழ்ந்திறைஞ்சிப் பரவையின் புலவியைத் தீர்க்கும்படி வேண்டினர். இறைவனும் நாய னுரை நோக்கித்,

" துன்ப மொழிநீ யாமுனக்கோர்
தூத னுகி யிப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபாற்
போகின் றேமென் றருள்செய்தார்."

அதனுல் வன்றொண்டர் அளவற்ற மகிழ்ச்சியுற்றனர்.

பின்பு சிவபெருமான் தேவர் முனிவர் கணநாதர் முதலியவர்களோடு திருவீதியிற் புறப்பட்டகாலை அது சிவலோகம்போ லிருந்தது. பரவையார் வீட்டினை நண்ணிய வுடன் இறைவர் அருச்சகவடிவங் கொண்டு தனியே சென்று பரவை வீட்டுக் கதவினைத் தட்டிப் பரவையை எழுப்பினர். அவள் துயில் நீங்கி அர்ச்சகரை வணங்கி 'நள்ளிரவில் நீர் வந்தது எதனுலோ' என்று வினவினர். 'நான்சொன்னதை நீ மறுது செய்வாயாகில் நான் வந்த காரணஞ் சொல்லுவேன்' என்றனர். அதற்குப் பரவை யார் 'நீர் அதனைச் சொல்லியருளுவீராயின், அது பொருத்தமாலுல் நான் அதற்கிசைவே'னென்ருர். அப் போது பெருமானுர், 'இங்கு நம்பியாரூரர் வருவதற்கு இசைய வேண்டு'மென்றனர். அதற்குப் பரவையார் 'அஃது இயலாததொன்று; அது நமது பெருமைக்குப் பொருந் தாதது: பங்குனித்திருநாளுக்கு வருவேனென்று சொல் லிப் போய்த் திருவொற்றியூரிலே சங்கிலியாரோடு தொடர்புகொண்டார்க்கு இங்கு எவ்வகைச் சார்புண்டு?

நீர் கங்குலில் வந்து சொன்ன காரியம் அழகிது' என்றார். அதனைக்கேட்ட இறைவன் பரவையாரை நோக்கி 'நம்பியாரூரர் செய்த குற்றங்களை நீர் மனத்துட் கொள்ளாது சினத்தை யொழித்துப் புலவியைத் தவிர்தற் பொருட்டன்றோ யான் வந்து உம்மை வேண்டிக்கொண்டது; ஆதலின் நீர் மறுத்தல் செய்தல் அடாது' என்று இரந்தனர். அதனையும் பொருட்படுத்தாது பரவையார் 'இந்தக் காரியத்திற்காக நீர் இந்த வீட்டுவாயிலுக்கு வருவது நும்முடைய பெருமைக்குத் தக்கதன்று; அவர் வருவதற்கிசையேன்; நீரும் போம்;' என்றார். அப்போது அர்ச்சக வடிவினராகிய அண்ணலும் தமது மெய்வடிவைப் பரவையாருக்குக் காட்டாது தம்முள் நகையாடி நாயனாரது காதல்நோயினைக் காணுந் திருவிளையாட்டினை விரும்பி மீண்டனர். தூதுபோன பரமரது வரவை எதிர்பார்த்து அவரைத் தூதுவிடுத்தற்குக் கழிவிரக்கங் கொண்டு பரவையின் புலவிதீர்த்தே வருவரென்ற நம்பிக்கையோடு வன்றொண்டர் கவலையுற்றிருந்தார். பெருமானார் மீண்டதும் அவரைப்பார்த்து நாயனார் புன்முறுவல் செய்து அவர் புலவிதீர்த்ததாகவே கருதி நிகழ்ச்சி உசாவினர். அப்போது ஐயர் 'நம்மை நீ சொல்ல' நாம் போய்ப் பரவைதன் இல்லம் நண்ணி உன் திறமெல்லாம் அவளுக்குக் கூறி அவளைக் குறையிரப்பவும் 'அவள் மறுத்தாள்' என்றார். இதனைக்கேட்ட நம்பியாரூரர் விரைவில் நடுக்கமுற்று இறைவரைத் தொழுது 'நீர் சொல்லவும் பரவை மறுப்பாளோ? நீர் உமது அடியார்கட்காக நஞ்சையுண்டீர், கூற்றினை யுதைத்தீர், திரிபுரமெரித்தீர்; என்னுடைய அடிமை உமக்கு வேண்டாம் போலும்! அதற்குத் தக்க வண்ணமே நீர் இப்போது காரியமுஞ் செய்தீர். அடியேன் வேண்டாமாயின் என்னையேன் வலிய ஆட்கொண்டீர். எனது நோயினையும்

அதனால் வருங் கேட்டினையும் அறிந்த நீர் பரவைபா லென்னைச் சேர்ப்பிக்கமாட்டீராயின், என்னுயிர் போய் விடுமென்று கூறிக் கீழே விழுந்தார். அப்போது பெரு மானார் இரக்கங்கொண்டு நாம் இன்னொருமுறை அவள் பாற் போய் நீ அவளை நண்ணும்படி பேசிவருகின்றோம். நீ துயரொழிந்திரு என்று அருளிச் செய்தனர். இந்த அமுத வாக்கைக் கேட்ட நாயனார் கலக்கம் நீங்கி, இங்ஙனமா என்னைப் பணிகொள்வதென்றியம்பி இறை வனைப் போற்றினர். இறைவனும் பரவை மாளிகைக்குச் சென்றனர். முதலில் அவர்சென்று மீண்டபோது வந்தவர் இறைவரோ என்று நினைத்தற்கேதுவாகிய வியப்புக் குறிகள் காணப்பெற்ற பரவையார் அச்சமுற்றுத், தமது தோழர்க்காக அருச்சக வேடங்கொண்டு வந்த இறைவர் கட்டளையிட்டருளியதைப் பாவியேன் செய்ய மறுத் தேனே யென்று கவன்று, கடைவாயிலைப் பார்த்துச் சேடிய ரோடுங் கலங்கி நிற்கும்போது, தேவர் முனிவர் சித்தர் இயக்கர் பூதகணங்கள் முதலியோர் புடைசூழப் பரவை யார் மாளிகைக்கு இறைவர் எழுந்தருளினர். இதனைக் கண்ட பரவையார் விதிர்விதிர்ப் பெய்திப் பொங்கி எழும் மகிழ்ச்சியோடு பெருமான் திருவடிக்கண் விரைந்து சென்று வீழ்ந்தனர்.

அப்போது இறைவர் நங்கையாரை நோக்கித் 'திரு நாவலூரன் உரிமையினாலே மீளவுந் தூதுவிடுப்ப நாம் உன்பால் வந்தோம்; முன்புபோல் நீ இப்பொழுது மறுதே' என்றனர். அப்போது பரவையார் மிகவும் அஞ்சிச் சென்னிமேற் குவித்த கையராய்க் கண்களில் நீர் ததும்ப இறைவனைத் தொழுது 'அன்பர்க்காக நீர் அங்கு மிங்கும் அலைந்தருள்வீராயின், அடியேன் இசையாது என் செய்ய முடியும்' என்றனர். பின்னர் முதல்வனார் நம்பி யாரூரர்பால் மீண்டபோது 'நீர் என்ன செய்தியொடும்

வந்தீர்' என்று நாயனுர் வினவினுர். அதற்கு இறைவன் 'அவளுடைய செற்றத்தைத் தணிவித்து வந்தோம்; இனி நீ அவள்பாற் போகலாம்' என்றருளிச் செய்தார். நாயனுரும் மிகுந்த மகிழ்ச்சியெய்திப் 'பந்தமும் வீடும் படைக்கும் நீவிர் திருவருள் செய்தபின் இனி இடர் யாதுமில்லை' என்று கூறித் திருவடித் தாமரையில் வீழ்ந்திறைஞ்சினுர். அவருக்கு விடைகொடுத்து இறைவர் திருக்கோயிலுக்கு எழுந்தருளினுர். தம்பிரான்றேழர் கோயில் வாயிலிற் றூங்கி எழுந்த பரிசனங்களுடன் பரவையார் மாளிகைக்கு எழுந்தருளிச் சென்று பரவையார் முன் றேன்றியவுடனே, அவர் காதல் வெள்ளத்தின் கரைகாணுது வன்றெண்டர் திருவடியில் அச்சத்தோடும் நாணத்தோடும் வீழ்ந்திறைஞ்சினுர். அவரது செங்கைகளைப் பற்றிக்கொண்டு திருநாவலூரர் அவரது திருமாளிகையிற் புகுந்தனர். இருவருந் தமது ஊடல் தீர்த்த இறைவரது பெருங் கருணைத் திறத்தினை வியந்து போற்றி ஒருமையுற்ற உள்ளத்தினராய் ஒருவரையொருவர் அளவளாவி உடலிரண்டும் உயிரொன்றுமாக ஆயினர்.

## ஆராய்ச்சி

இளவேனிற் காலத்திலே தென்றல் வீசியவுடன் இன்ப நினைவு எழுதல் இயல்பே. நமது நாயனுருக்குத் திருவாரூர்ப் பெருமானது இளவேனிற் றிருநாளே நினைவுக்கு வந்தது. இறைவன்பால் அன்பினுல் பெறும் இன்பமே சிறந்ததாதலின் அஃதே முதற்கண் பேரன்பராகிய திருநாவலூரரது நினைவிற் றேன்றிற்று. திருவாரூரின்கண் இளவேனிற் றிருவிழா மிகச் சிறப்பாக அக்காலத்தில் நிகழ்ந்தமையால், திருவாரூர்த் திருவிழா நாயனுரது உள்ளத்தைக் கவர்ந்ததுபோலும்! பங்குனி

உத்திரத் திருநாளுக்குத் திருவாரூர்க்கு மீள்வதாகப் பரவையிடந் தெரிவித்தமை நினைவிற்கு வந்திருத்தலுங் கூடும். அது,

"பங்குனித் திருநாளுக்குப் பண்டுபோல் வருவாராக
விங்கெனைப் பிரிந்துபோகி யொற்றியூ ரெய்தியங்கே"

என்று பரவையார் கூறினமையாலும் விளங்கும். வீதி விடங்கப் பெருமானது திருவோலக்கத்தை அகக்கண்ணாற் பார்த்த நாயனாருக்கு ஆண்டுப் பாடலாட லியற்றும் பரவையார் காட்சியும் புலப்படுத லியல்பே. எனினும் பரவையாரினுந் திருவாரூர்ப் பெருமானைப் பிரிந்திருக்க இயலாது ஆற்றாமை யுணர்ந்தாரென்பது அவர் பாடிய பதிகத்தினாலே தெற்றெனப் புலப்படும். இதனாற் சிற்றின்ப நுகர்ச்சியினும் பேரின்ப நுகர்ச்சியினையே நமது நாயனார் பெரிதும் பாராட்டினரென் றுணர்க. திருவாரூரின் கண்ணுந் திருவொற்றியூரின் கண்ணும் இறைவன் ஒருவனே நாயனாருக்குப் பேரருள் புரிந்து நின்றாலும், வெவ்வேறு சிறப்புக்களை வெவ்வேறிடங்களில் இறைவன் தமக்கு நல்கினனாதலின், சங்கிலியாரைத் தந்ததற்காக அவனைத் திருவொற்றியூரிலும் பரவையாரைத் தந்ததற்காக அவனைத் திருவாரூரின்கண்ணும் வழிபடக் கருதினார் என்று அறிக. முதல்வனை உலகர் முறையில் வழிபடக் கருதுதல் ஞானிகளது பேரறிவு உலகின்கட் சென்றகாலை நிகழ்வதொன்றே என்பது மெய்ந்நூன் முடிபு. உலகின்கண்ணே செல்லாத காலத்தே அவர்கள் அறிவு எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சுட்டற உணர்ந்து சிவலோகம் நுகரும். ஊழ்வினைப் பயனை நுகர்தற்பொருட்டு நாயனாரது அறிவு உலகர் வழியிலே சென்றது.

திருவொற்றியூரைக் கடந்தவுடனே நாயனாருக்குக் கண் மறைவுற்றமை சத்தியந் தவறினவர்களுக்குத்

தண்டனை கிடைத்தல் திண்ணமென்பதை உலகத்தாருக்கு அறிவுறுத்தியவாருயிற்று. நாயனுர்மாட்டு அஃது இறைவனது ஒரு திருவிளையாடலாக அமைந்ததே எனினும் இறைவனது ஒப்பற்ற நடுவுநிலைமையை யாவருள்ளத்தும் தெள்ளிதிற் பதிவித்ததாகும். தம்முடைய தோழர் என்பதைப் பாராட்டாது குற்றங்கண்டவிடத்து அதற்குத்தக ஒறுத்தல் இறைவனியல்பாதலின், 'இன்ன உரு இன்ன நிறம் என்றறிவதேலரிது நீதி பலவும் தன்னவுருவாமென மிகுத்தவன்' என்ருர் திருஞானசம்பந்தர். 'மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய்' என்ற அப்பர் தேவாரமுங் காண்க.

கடவுளையும் கடவுளுடைய நீதியையும் உறுதியாக நம்பிச் சூள்பிழைப்பின் பிழைத்தாரைக் கடவுள் உடனே ஒறுத்தல் வேண்டுமென்று கருதிய அன்பர் விரும்பியவாறே, பேரருளராகிய இறைவன் தண்டனை விதித்தருள்வன் என்பது திருவருள் வழி நிற்பார் கண்ட உண்மை. சத்தியந்தவறினல் தண்டனை உடனே வராது என்று எண்ணுவாருக்கு இவ்வுண்மை பொய்யாகத் தோன்றும். இறைவனை 'மெய்ம்மையும் பொய்ம்மையுமாயினு' ரென்றதும் அது. நாயனுருக்குக் கண் மறைவுற்றுந் திருவொற்றியூரின்கண் தங்காது திருவாரூருக்கே அவர் செல்லத் துணிந்தது ஊழ்வினைப்பயனை நுகர்ந்து ஒழிக்கவேண்டுமென்பது கருதினமையாலும், இறைவன் றிருவருளால் கண் திறக்கப்பெறலாமென்னும் உறுதியாலுமென்க. சூள்பிழைத்தபோதே ஒறுத்தல் நிகழுமென்றும், அதன் கண்ணின்று இறைவன் நம்மை விடுவிப்பானென்றும் நாயனு ரெண்ணினமையால், 'அருள் தந்திர்' என்று கூருது 'அருள்நாளும் தரவிருந்தீர் செய்தவா றழகிது' என்று முன்னமே இயம்பின ரென்க. தண்டனையையும் இறைவன் அருளாகவே கருதினமையால், 'அங்கு நாதர்

செய் அருளதுவாக' என்றனர் சேக்கிழார். ஞானக் கண்ணினாலே இறைவனை நாடும் அடியவர்க்கு ஊனக் கண்ணிற்கு ஈனம் வந்ததாற்படும் இழுக்குயாதுமில்லை எனினும், தவறு நிகழ்வதற் கேதுவாயிருந்த தமது சிறுமையையும், பிறர்க்கு நல்லதோர் எடுத்துக் காட்டானமைக்கு ஏதுவாகிய தன்வினையையும் நொந்து நாயனார் வருந்தினாராவர். இறைவனடியார்க்கு ஊனம் வராதென்ற உண்மையைத் தமது வாழ்க்கையால் நிலை நாட்டப்பெற்றிலாமைபற்றியும் நாயனார் துயருற்றனர்போலும்!

திருமுல்லைவாயிலிலே தொண்டமானுக்கு அருள் புரிந்தமையை இவர் விதந்தமையாலும், அத்திருப்பதி ஆளுடைய பிள்ளையார் முதலியோர்களாற் பாடப்பட்டமையாலுந் தேவார காலத்துக்கு நெடுநாட்கு முன்னேயே ஆங்குத் திருவருள்பெற்ற தொண்டமான் அரசாண்டிருக்க வேண்டும். அவன் தொண்டமான் இளந்திரையனோ அவன் வழிவந்த பிறனொருவனோ தெரியவில்லை.

திருவெண்பாக்கத்திலே தமது பிழையைப் பொறுத்தருள்வதற்கு இறைவன் திருக்கோயிலி லிருக்கின்றானா என்று வினவியது இறைவனது பெருங் கருணைத் திறத்தைப் பாராட்டியவாறாகும். தம்பாற் பிழையிருப்பினும் அதனைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டியபோது இறைவன் பொறுத்தருள்வனன்றே! அங்ஙனந் தமது குற்றத்தைப் பொறுத்திடாமைகண்டு அவ்வாறு நாயனார் வினவினர். தோழமைபற்றி அத்தகைய வினா எழுந்ததாகும். அவ்வேதுப்பற்றியே இறைவனும் 'உளோம் போகீ' றென்றான். இதனால் இரக்கத்தோடு நீதியும் உடையோமென்று இறைவன் அறிவுறுத்தினன் என்று கோடலு மொன்று. எவ்வாறாயினும் அன்பர் மனங் கசந்தவழி அவருக்கு அமைதி உண்டாதற்பொருட்டு ஒரு சிறிது அருளொளி காட்டுதல் இறைவன் பேரியல்பாத

லின் அவ்விடத்து ஊன்றுகோல் நல்கியருளினன் போலும்!

திருவாலங்காட்டிலே காரைக்காலம்மையார் திருத் தலையாலே இறைவனை வலம் வந்தமையால், அத்திருப் பதியை மிதிக்க அஞ்சி அதன் அயல்நின்று பதிகம்பாடி அப்பால் திருவூறல் சென்றனர். திருவூறல் என்பதே கூவம் என்று இக்காலத்து வழங்குகின்றது. காஞ்சி நகரின்கண், அறம்வளர்த்த அம்மை திருக்கோயிலை முதற்கண் வணங்கியதாகக் கூறப்பட்டது. அம்மை திருவருளால் அவ்விடத்தில் நாயனூர் இடக்கண் பெற்றன ரென்க. இறைவனது இடப்பாகத்தில் அம்மை உறைதல் இதனை வற்புறுத்துமென்க. கண்மறைவோடு நாயனூரை உடற்பிணியுஞ் சிறிது வருத்திற்றென்பது திருத்துருத்தி யில் அவர் திருக்குளத்தில் மூழ்கிப் பிணிதீர்ந்தாரென்ற இடத்தேதான் குறிக்கப்பட்டது. அஃது எவ்வகைத்தான பிணி என்று விளங்கவில்லை. திருக்கோயிலின் வடபால் அத்தீர்த்தம் இருந்தமையால், அக்குளம் வடகுளம் எனப் பட்டதுபோலும்! திருக்குளமானது இறைவனது தண் ணருள் வடிவமாகக் கருதப்படும். அங்ஙனம் அதைக்கருதி இதனுள் அன்புடன் மூழ்குவார்க்கு இறைவன் அருள் புரிவனென்னுங் கொள்கை பலசமயங்களிலுங் காணப் படுவதொன்று. கிறித்து மதத்திலும் பழைய ஏற்பாட்டில் அக்கொள்கை காணப்படுகின்றது. சில இடங்களில் உள்ள குளமானது நிலக்கனிச் சத்துடைமையால் நோய் தீர்க்கும் ஆற்றலுடையது என்பாருமுளர். திருப்பதிகம் பாடாது திருப்புனல் மூழ்கியே நோய்தீரப் பெற்றமை யால், 'வேறுகத் திருவருள் புரிவார்' என்றூர் ஆசிரியர் சேக்கிழார். 'புதிய பிணியது நீங்கி' என்றமையால், கண் மறைவுற்றகாலத்தில் உடன்றேன்றுது இடையில் வந்துற்ற நோய் அஃதென்பது தெளிவு. திருக்குளத்தின்

மூழ்கி மணியொளிசேர் திருமேனியாயினர் என்றமை யால், கவலையாலும் வழிநடையாலும் நாயனார் திரு மேனிக்கு வாட்டந்தந்த நோய் அஃதென்பது கருதப்படும். திருத்துருத்திக்கும் திருவேள்விக்குடிக்கும் நடுவே பொதுவாயமைந்த திருக்குளமே இத்தீர்த்தமென்பது இரண்டு திருப்பதியையும் ஒருங்கு பாடினமையாற் கருதப்படும்.

திருவாரூர் சென்றவுடன் இறைவனை வணங்கித் திறவாத வலக்கண் உடனே திறக்கப் பெறுமையால், அது திறக்கும்வரை இறைவனைத் தொழுதற்பொருட்டுத் திருக்கோயிலின் புறத்தே தங்கியிருந்து அத்தயாமத்தில் இறைவனை வணங்கச் செல்லும்போது, உடன் வந்த அன்பர்களை விளித்து இறைவன் தம்மை உவக்கும் வண்ணம் அவன்பால் அன்பு செலுத்தும் வகையைக் கேட்டுத் தெளிவார் போலவும், இறைவன் தம்மாட்டு அருள் பொழியாது நிற்பத் தாம் அவன்மாட்டு ஒரு தலைக்காதல் மிக்கவர் போலவுங் 'குருகுபாய' என்று தொடங்குந் திருப்பதிகத்தை அருளிச் செய்தமையால்,

"ஏதிலார் போல்வினவி யேசறவாற் றிருப்பதிகங்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைந்தார்"

என்றார் ஆசிரியர் சேக்கிழார்.

உள்ளத்தில் மிகும் உணர்ச்சி உடம்பில் வெளிப் படுதல் இயல்பென்பதை விளக்குவான் 'ஆர்வமிகு பெருங் காதலால் அவனிமேல் வீழ்ந்தார்' என்றார். கண்பெற்ற பயன் கடல்நஞ்சுண்ட கண்டன்றன்னைக் காண்பதே யா மாதலின், திருவாரூர் வீற்றிருந்த பெருமானைக் கண்களாற் பருகுதற்கு மற்றைக்கண் தாரீர் என்று திருநாவலூர் மன்னர் வணங்கினர். வணங்கியவுடன் கண்திறக்க இறைவன் தாழ்த்தமையால், புலவி மிகப்

பெற்று இறைவனேடு சினங்கொண்டாற்போல 'மீளா வடிமை' என்னும் பதிகம் பாடினர் என்க. புலவி என்பது கலவிக்கு உப்புப் போல்வதென்றும், உணவிற்கு உப்பை எப்படி மிகுதிப்படுத்தக்கூடாதோ அவ்வாறே புலவியை யும் மிகும்படி விடுதல் கூடாதென்றுந் திருவள்ளுவர் கூறிய வண்ணமே, திருவாரூர்ப் பெருமானுந் தமது தோழரது புலவி மிகாவண்ணம் மற்றைக் கண்ணையுந் திறப்பித்தருளினரென்க. கண் திறக்கப் பெருமுன் துயர வெள்ளத்திலழுந்தியது போலவே அதைத் திறக்கப்பெற்ற பின் இன்ப வெள்ளத்திலழுந்தினராதலின், அவர் விழுந்தும் எழுந்தும் ஆடியும் பாடியும் அருளைப் பருகித் திளைத்தனரென்று கூறப்பட்டது. சுந்தரமூர்த்திகள் திருவா ரூருக்கு மீண்டகாலை அங்கு அவரோடு அளவளாவிய அன்பர்கள் முன்னே அவரோடு பயின்றவராதலின், அவர் களை 'ஆதிதிரு அன்பர்' என்ருர். அயனும் மாலும் திருக் கோயில் வாயிலின் வலப்புறத்தும் இடப்புறத்தும் காவலாளராயிருப்பாரென்பது சைவநூற் கொள்கையாத லின், 'மாலும் அயனும் முறையிருக்கும் வாயில்' என்ருர். இறைவனது திருமேனியில் வலப்புறத்து அயனும் இடப் புறத்தில் அரியும் நடுவில் அரனும் தோன்றினர் என்று புராணங் கூறியதுங் காண்க. 'தேவர் மூவராய் நின்ற தோரார்' என்றது மது. பரவையார் பிரிவாற்ருமையால் இரவு துயிலாமையாலும், பகலிலே உணவு கொள்ளாது சோர்ந்தமையாலுங் கங்குல் பகலாய்ப் பகல் கங்குலாகி நாள் கழித்தனரென்று கூறப்பட்டது. பிரிவிஞற் புலவிமுற்றிச் சங்கிலியார் மணத்தால் அது வெறுப்பாய் மாறிற்று. ஆற்ருமை மிகுந்தகாலை அஃது ஆற்றுவ தொன்றனைப் பற்றும். ஈண்டுப் பரவையாரது ஆற்ருமை மிகுதிக்கு நாயனுர்பால் வெறுப்பே ஆற்றுங் கருவியாய மைந்தது. காதலுக்கு ஈடாகக் காதல் இல்வழி வெறுப்புத் தோன்

றுத லியல்பே. வெறுப்புப், பிரிவினை நிலையுறச் செய்யு மாதலின், நாயனாரை எப்பொழுதும் பிரிந்திருக்கவே கருதிப் பரவையார் அவர்க்கு வாயின்மறுத்தனர். நாயனா ரைக் காணாதவிடத்து வெறுப்புத் தோன்றினுங் கண்ட விடத்து உள்ளடங்கிய காதல் வெளிப்பட்டு மீக்கூரு மென்னும் உண்மை வற்புறுத்த வல்லாரையே 'உலகியல்பு கற்ற மாந்த' ரென்றார்.

"காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை"

என்றமையால், தலைவனைக் காணாக்கால் தலைவனது பிரிவின் குற்றமே தலைவிக்குத் தோன்று மென்றும், அவனைக் கண்டவிடத்தே குற்றமானது ஒன்றுந் தோன்றா தென்றும் உய்த்துணரற்பாற்று. நாயனார் தாமே பரவை யார் வீட்டிற்குச் செல்லாது உலகியல் வல்லாரை முதற்கண் தூது விடுத்தமை பரவையாரது புலவி முதிர்ச்சி சிறிதுசிறிதாய்த் தணிந்து நாயனாரை வரவேற்கு மனநிலை உளதாதற் பொருட்டென்க. குற்ற நினைவு மாறு தற்கு, நாயனாரைக் காணவேண்டுங் காட்சியை மறுதிருப் பதற்குக், காழ்த்த புலவியுற்ற மனம் வெறுப்பு வேகங் குறைந்து ஏற்கும் நிலையடைதல் வேண்டும். வாயில்கள் தலைவனுடைய நலங்களைத் தலைவிக்கு நினைவூட்ட, அந் நினைவின் வலி நினைப்பற்ற வெறுப்பு வேகத்தைக் குறைவு படுத்தும். இக்கருத்துப்பற்றியே வாயில்கள் அறத்தொடு நிற்றல் அகப்பொரு ளிலக்கணத்து ளமைக்கப்பட்டது. விண்ணுலகிற்கில்லாத ஒரு சிறப்பு இந் நிலவுலகின்கண் ணுள்ளது. அது தலைவன் தலைவியர் ஊடலாதலின் ஆசிரியர் திருவள்ளுவனார்

"புலத்தலிற் புத்தேளா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து"

என்ருர். இவ்வுலகின் இடையூறுகளைத் தீர்ப்பதற்கு இவ்வுலகியலறிந்தாரே தக்க வாயில்களாவாரேயன்றி அதனைத் தெரியமுயலாது இறைவனையே வழிபட்டிருக்கு மடியார்கள் பெரிதும் பயன்படுவாரல்லரென்ற குறிப்பும் ஈண்டு பெறப்படுதல் காண்க. நாயனுர் உலகியல் கற்ற மாந்தர்கள் சிலரைப் பரவைபால் விடுத்தமை

" இதனை இதனு லிவன்முடிக்கு மென்ருய்ந்து
அதனை அவன்கண் விடல் "

என்ற திருக்குறளை நினைவூட்டுகின்றது.

நிலவுலகின்கண் ஆதரவில்லார் கடவுளையே துணையாக நாடுதல் உலக வழக்கிற் காணப்படுவதொன்றே எனினும், இறைவன் வெளிப்பட்டு அருளப்பெறுதல் அரியவற்று ளரியது. அங்ஙனம் அருமையானதை இயற்றுவித்தமையால், நமது நாயனுர் பெரியரிற் பெரியராவர். நமது நாயனுர் பரவையின் புலவிதீர்க்க முயன்றபோது தமது முன்னை வினையை நினைத்துத் தம்மை நொந்து நிலையாமை யுணர்ச்சி யெய்தினரெனினும், பரவையின் வருத்தத்திற்குத் தாம் ஏதுவானமையால் அவள் வருத்தத்தைத் தீர்க்குங் கடமை தமக்கு வந்தெய்துதலின், அக்கடமை முற்றுவித்தற் பொருட்டு இறைவனது பேருதவியை வேண்டிநின்றன ரென்றுணர்க. ஞானிகளுக்கு நேர்வனவற்றை இறைவனே நுகர்வனென்னுங் கருத்திற்கிணங்க, நமது நாயனுருக்குத் திருவாரூர்ப் பெருமானே தூதுபோகத் தலைப்பட்டாரென்க.

சிவபெருமானைத் தோழராகவுடைமையால், அவர் தூது நன்மையாய் முடிதல் திண்ணம் என்று நாயனுர் தம்முள் நினைத்துக் கொண்டது தன்னுணர்ச்சியின்பாற் படும்.

" ஆயக் கடவேன் நானேதான் என்னதோவிங் கதிகாரம் "

என்றபடி சிவபெருமான் எவ்வாறு முடிவுசெய்வாரோ அவ்வாறு இசைந்து நிற்றலே முறைமையாதலினால், அம் முறைமையை அறிவுறுத்தற்பொருட்டு முதற்கண்ணேயே ஊடலைத் தீர்த்திலர் போலும். முதற் கண்ணேயே தமது மெய்த்திரு வடிவத்தைக் காணுதற்குரிய உள்ளப்பான்மை பரவையாருக் கில்லாமையால், அருச்சக வடிவங்கொண்டு போந்தனரென்று கருதுதல் கூடும். முதலிலேயே இறைவன் மெய்வடிவொடு தோன்றின், சங்கிலியார் கனவில் வாதாடியது போலப் பரவையாரும் வழக்குத் தொடுத்திருத்தல் கூடும். அருச்சகவடிவங்கொண்டு வந்தவர் இறைவனே என்று குறிப்பால் உணர்ந்தவுடன் தாம் முதலிற் சொன்ன மறுமொழி தவறுடையதென்று பரவையார் கருதுவாராயினர். இறைவனும் பரவையார் தமது கட்டளையை மறுத்த பின்னர்தான் கடவுளென்ற உணர்ச்சி யவர்க்கு நிகழ்வித்தனராதலின், பரவையார் கழிவிரக்க மிகுந்து சினமும் வெறுப்பும் ஒழிந்து நாயனாரது ஒப்பற்ற பெருமையை யோர்ந்து கழிவிரக்க மிகுதியினாலே, இறைவன் மீண்டு வந்தபோது யாதொரு தடையுமின்றி நாயனாரை ஏற்றுக்கொள்ள இசைந்தனரென்க.

எவ்வெவ்வகையில் எவ்வெவரை யாட்கொள்ள வேண்டுமோ அங்ஙனம் இறைவன் ஆட்கொண்டருளுவன். போகியாயிருந்து உலகிற்குப் போகத்தைப் புரிதலாற் 'போகமீன்ற புண்ணியன்' என்று சிந்தாமணியாசிரியர் கூறினார். போகம் ஈவார் அதற்குத் தடையாகிய புலவியைத் தீர்த்தல் வேண்டுமாதலின் பரவையார் ஊடல் தீர்த்தனர். நாயனாருக்குத் தோழராதலின், அவர்பால் திருவிளையாட லியற்றினர். பரவை வீட்டிற் கெழுந்தருளும்போது அவள் உள்ளத்தைக் கவர்தற்கேற்ற முறையில் தேவர் இயக்கர் பூதகணங்கள் முதலிய ஆடம்பரப்

பரிவாரங்களோடு புறப்பட்டருளினர். மணிவாசகப் பெருமானை ஆட்கொண்டகாலை அவருள்ளப் பான்மைக் கேற்ப அடியார் குழாம் நடுவில் திகழ்ந்தனர். இது பற்றியே

"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகி லளவில்லை"

என்றார் ஆளுடைய பிள்ளையார்.

நாயனார்மீதுள்ள செற்றம் நீங்கிவிடவே அவர்காட்சி பரவைக்கு அளவற்ற காதலைவிளைத்தது. ஆதலால் அவர் வந்த உடனேயே அவரது திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சித் தாமொழிந்த மாற்றத்தினை நினைந்து நாணமும் அச்சமும் உடையவரானார். இருவரையும் ஒன்றுபடுத்தி நிற்பது இறைவனது திருவருள் தொடர்பே யாதலால், அவர்கள் தம்முள் அளவளாவிப் பேசுதற்கு எடுத்துக்கொண்ட அரும்பொருள், 'தம்பிரானார் தாமிடையாடிச் செய்த திருவருட் கருணை வெள்ளத்திறமை'. இஃதே இன்பக் கடலிற் றிளைத்ததுமாகும். இதனாற்றான் 'பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே' என்றார்.

## ௬௦. ஏயர்கோனுக்குச் சினந் தீர்த்தது

திருநாவலூரர் வீதிவிடங்கப் பெருமானை நாள் தோறும் பணிந்து செஞ்சொற்பாமாலைகள் சாத்திப் பரவையாரோடு மகிழ்ந்துறையும் நாளிலே, பெருமங்கல மென்னும் ஊரிலே வேளாண்மரபிலே தோன்றிய பேரன்பராகிய ஏயர்கோன் கலிக்காம நாயனார், சுந்தரமூர்த்திகள் பரவையார்பால் இறைவனைத் தூது விடுத்தமையைக்கேட்டு, ஆண்டானை அடியான் ஒரு பெண்ணின் பொருட்டுத் தூது விடுதல் பெருந்தவறென்று கருதி, அதனைக் கேட்கும் பாவம் தனக்கு வந்ததே என்று வெகுண்டார். இறைவன் இருவரையும் இணக்குவித்தற் பொருட்டு ஏயர்கோனுக்குச் சூலைநோயைக் கொடுத்தருளினார். அதன் கொடுமையைத் தாங்கலாற்ருது ஏயர்கோன் இறைவனை வேண்ட. இறைவன் வன்ருெண்டன் தீர்த்தாலன்றி அஃது ஒழியாது என்றருளினர். அன்றியும் வன்ருெண்டர்பாற் சென்று ஏயர்கோனுக் குற்ற சூலையைத் தீர்ப்பாயாக என்று இறைவர் கட்டளையிட்டார். வன்ருெண்ட ரதற்கிசைந்து தாம் சூலை நோய் தீர்க்க வருவதைக் கலிக்காமர்க்குத் தெரிவித்தற் பொருட்டு ஆளனுப்பினர். கலிக்காமர் வன்ருெண்டர் வந்து தீர்ப்பதைப் பார்க்கிலும் உயிரை விட்டுவிடுவதே நலமென்று கருதி உடைவாளினல் வயிற்றைக் கிழித்துக்கொண்டு உயிரையுஞ் சூலையையும் ஒன்ருக ஒழித்தார். கலிக்காமருடைய தேவியாருங் கணவரோடு உடன்செல்லக் கருதியிருந்த காலை சுந்தரமூர்த்தியின் வரவினைக் கேள்விப்பட்டு ஒருவரையும் அழக்கூடாதென்று தடுத்துக் கணவர் செய்கையையும் மறைத்து விளக்கு நிறைகுடம் முதலியன வைத்து மலர்மாலை தூக்கி வீட்டினை அணி பெறச்செய்து நாயனரை எதிர்கொள்ளும் பொருட்டு ஆளனுப்பினர்.

ஆளுடைய நம்பியும் எல்லாராலும் எதிர்கொள்ளப் பெற்றுக் கலிக்காமர் மாளிகையுட்புகுந்து அழகிய மலரிருக்கையில் வீற்றிருந்தருளி அருச்சனை முதலிய வழி பாடுகளெல்லாம் முறையாக ஏற்றுக்கொண்ட பின் 'ஏயர் கோன் கலிக்காம நாயனர் எங்கே? அவருடைய சூலை நோயை நீக்கி அவருடன் இருப்பதற்கு நான் மிக விரும்பு கின்றேன்' என்றார். வீட்டு வேலையாளர் 'அவர் உள்ளே பள்ளி கொண்டுள்ளார். கெடுதியாதுமில்லை' என்றார் கள். கெடுதியில்லையாயினும் என்மனத்திற்குத் தெளி வில்லை யாதலால், அவரை நான் காணவேண்டுமென்று நம்பியாரூரர் வற்புறுத்தினர். உடனே அவர்கள் வன் றொண்டருக்கு ஏயர்கோனைக் காட்டக், குருதிவெள்ளம் பொங்க உடல்சரிந்து ஆவி நீங்கிக் கிடந்தமை கண்டு தாமும் உயிர்விடுவதாக உடைவாளைப் பற்றியவள விலே, இறைவரது திருவருளினாலே ஏயர்கோன் கலிக் காமர் உயிர்பெற் றெழுந்து வன்றொண்டர் கையி லுள்ள வாளினைப் பிடித்துக்கொள்ளவே, வன்றொண் டர் அவர் திருவடியில் வீழ்ந்திறைஞ்சினர். உடனே கலிக்காமரும் வாளினை ஒருபுறம் வைத்துவிட்டு ஆளுடைய நம்பி கழல்களைப் பணிந்தனர். இந்த வியத்தகு செயல்களைக் கண்டு விண்ணவர் மலர்மாரி பொழிந்தனர். இருபேரன்பரும் ஒருவரையொருவர் தழுவி அளவளாவி மிக்க நண்புடன் கூடிச்சென்று திருப்புன் கூர்ப்பெருமானை வழிபட்டனர். ஆளுடையநம்பி 'அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத' வென்னுந் திருப்பதிகம் பாடினர். பின்னர் இருவருந் திருவாரூரினை யடைந்து பூங்கோயிலில் வீற்றிருக்கும் புற்றிடங் கொண்டானைப் போற்றித் தொழுதனர். அதற்குப்பின் ஏயர்கோன் தம் மூருக்கு மீண்டனர்.

## ஆராய்ச்சி

ஏயர்கோன் கலிக்காமர் சிவனடியாரினுஞ் சிவ பெருமானையே பெரிதும் போற்றினர். சிவபெருமானது பேரியல்புகளை முற்றும் உணர்ந்து அவன்பாற் பேரன்பு செலுத்தியவர். சிவபெருமானிடத்தே முறையான அன்பு செலுத்தும் அடியார்களையே வழிபடுதலை மேற்கொண்டனர். சிவபெருமானுக்கு என்றும் மீளாவடிமைகளாதலால், அவனை ஆண்டவனாகவே அவர்கள் கருதல் வேண்டும். அவனைத் தோழனாகக் கருதுதற்கு உரிமைபெற்ற சுந்தரமூர்த்திகளும் அவனை ஆண்டவனென்று கருதிப் பெரிதும் பெருமைப்படுத்த வேண்டுமேயொழியத் தோழமை பாராட்டித் தூது விடுத்தல் கூடாதென்றும், அஃது ஆண்டவனை இழிவுபடுத்துதலாகுமென்றும் ஏயர்கோன் கருதினர். இறைவனே தூது செல்ல இசைந்தமையாற் படும் இழுக்கு யாதெனக்கருதவில்லை. இறைவன் பேரருளாளனாதலின் அன்பர்க்கு எளிவந்து அருள் செய்வனென்பது திண்ணமாயினும், அவனது ஒப்பற்ற உயர்வினை அடியார் பாராட்டாதிருத்தல் தவறென்பது கலிக்காமரது கருத்து. சுந்தரமூர்த்திகள் எத்துணைப் பெரியாராயினும் உயிர்வகையைச் சார்ந்தவராகலின், இறைவனது உயர்வினைப் பொருட்படுத்தியே வினைமுடித்தல் வேண்டுமென்பது கலிக்காமர் கருத்தாதலின், அவர்பால் மிகுந்த சினங்கொண்டார். இறைவரோடு இரண்டறக் கலந்து நிற்கும் பெருந் தோழமையுடையார் சுந்தரமூர்த்திகளென்பதையும், அடியார்க்கெளிவந்து எதனையும் முடிப்பித்தல் தனது பேரியல்பு என்பதையுங் கலிக்காமர்க்கு அறிவுறுத்தற் பொருட்டு இறைவன் அவர்க்குச் சூலை நோயைக் கொடுத்தருளினன். வன்றொண்டர் பெருமையைக் கலிக்காமர்க்கு உணர்த்தும் பொருட்டு இறைவனே வன்றொண்டரினால்தான் சூலைநோய் தீரு

மென்று மொழிந்தருளியுந் தாம் கொண்ட கொள்கை கைவிடாது வன்றொண்டராற் சூலைத்துன்பம் நீங்கி யிருப்பதைப் பார்க்கிலும் அதனால் வருந்துவதே தக்க தென்று கருதினமை இவரது இணையற்ற மனவுறுதியை விளக்கும். இத்துணை மனவுறுதி உலகியற்கு அப்பாற் பட்டது. இறைவன் மொழிந்ததைக் குற்றஞ் செய்யி னுங் குணமெனக்கொள்ளும் அவரது பேரருளின்பாற் படுத்தி வன்றொண்டரையே குறையுடையாராகக் கரு தினமையால், இவரது கடவுட்பேரன்பு அளவற்றதென் பது தெளிவு. மிகுந்த துன்பம் வந்த காலையும் இறைவனை இகழாது தங்கொள்கை தவறித் துன்பந் தீருவதினுந் துன்புறவே விரும்பினமையால், இவர் தாம் உண்மை என்று கண்டதைத் தமது உயிரினும் உடம்பினுஞ் சிறந்த தாகப் போற்றிப்பாராட்டும் அரியதோர் உறுதிநிலையின ரென்பது தெளிவு. இஃதே இவரது தனிப்பெருஞ்சால்பு. மிக்கதுன்பம் வந்தகாலை நிலையிற் றவறுதல் உலகியல்பு. துன்பம் ஒன்றினை ஒழித்தற்பொருட்டுப் பகைவரோடும் மக்கள் நட்புக்கொள்வர். தாமே அங்ஙனம் நட்புக் கொள்ளா விட்டாலும் தக்க அறிஞர் அன்பர் முதலாயி னோர் நட்புறுவித்தால் அதற்கிணங்கி நடப்பர். இணங்க விருப்பில்லையாயின் நட்புறுவித்தாரை இகழ்வர். பரவை யார், அருச்சகவடிவங் கொண்டு வந்த கடவுள் ஊடல் தீர்க்க முயன்றகாலை அவரை இகழ்ந்தமை காண்க. ஆனால் இறைவன் தனது மெய்வடிவோடு தோன்றிய காலைப் பரவையார் உடனே இசைந்தார். ஏயர்கோன் கலிக்காமர் இறைவனைக் குறைகூறாமலும் அவர் கூறிய தற்கு இணங்காமலும் பொறுமையாக இருந்தது மிகவும் பாராட்டற்பாலது. வன்றொண்டர் வரவைக்கேட்டவுடன் உயிர்விடக் கருதியது தமது நோய்த் துன்பத்தைத் தாங்க லாற்றாமையா னன்று. இறைவனை அலைத்த வன்றொண்

டரைக் காணக்கூடா'தென்ற கருத்துப்பற்றியே. இதனுல் இவரது மெய்ப்பேருறுதி மிகவும் நன்ருக உலகிற்கு விளங்கியவாருகும். கலிக்காமர் வன்ருெண்டர்பால் வராரென்பது திண்ணமாதலின், வன்ருெண்டரை அவர் பாற் சென்று சூலை நோயைத் தீர்க்கும்படி இறைவன் ஏவினன். கலிக்காமர் மனைவியார் தலைமைக்கற்புடைய ரென்பது தம் கணவர் உயிர் விடுத்த காலைத் தாமும் உயிர் விடுக்கக் கருதினமையால் இனிது விளங்கும். அவர் விருந்தோம்புதலிலுந் தலைநின்றவர். விருந்தினருள் மிகச் சிறந்த சிவனடிப்பேரன்பராகிய திருநாவலூர் மன்னர் தமது மாளிகைக்கு வருவதைக் கேட்டவுடன் அவரை வர வேற்றற்பொருட்டு உயிர் வைத்துக்கொண்டிருந்தது மாத்திரமல்லாமல் யாவரும் அழுதலைத் தவிர்த்து எங்கும் மங்கலத்தோற்றமே யிருக்கும்வண்ணம் விளக்கு முதலிய வற்ருல் வீட்டினைக் கவினுறச் செய்தமை இப்பெண்மணி கரையற்ற கற்புங் கடவுட் பேரன்பும் ஒருங்கே யுடையா ரென்பதை வற்புறுத்துமன்ருே? கணவனை யிழந்த பெருந்துயர் வந்தகாலத்துஞ் சிவனடியாரைப் பேணுங் கடமை மறவாமை அரியவற்றுளெல்லாம் அரியதோர் செயலாகும். ஒரு தலைவனும் ஒரு தலைவியும் ஒத்த அன் புடையராய் இல்லறம் நடாத்துங்கால் தலைவனுக் கில்லாத சிறப்புக்கள் தலைவியின்பாலுந் தலைவிக்கில்லாத சிறப் பியல்புகள் தலைவன்பாலும் உளவாமாயின் வாழ்க்கை நிறைந்த இன்பம்பயக்கும் என்பது அறிஞர் கொள்கை. சிவனடிப் பேரன்பு கலிக்காமர்பால் மிகுந்திருந்தது: சிவனடியாரை வரவேற்கும் ஆர்வம் அவர் தேவியார்பால் மிகுந்திருந்தது. ஆதலினுல் ஏயர்கோனைப்போல அவர் மனைவியார் சுந்தரமூர்த்திகளைப் பார்த்தல் கூடா தென்று கருதாது அவரைச் செவ்விதின் வரவேற்ற னர். சுந்தரமூர்த்திகட்கு யாதொரு மனவருத்தமும்

நேரக்கூடாதென்று 'இங்கு யாதுமில்லை; கலிக்காமர் உள்ளே பள்ளிகொள்கின்றார்' என்னும் விடை பகர் வித்தமை நாகரிகத்தின் பெருநயத்தின் பாற்படும். திருவருளாலே தூண்டப்பட்ட மனத்தடுமாற்றத்தால் திருநாவலூரர் ஏயர்கோனைக் காணவேண்டுமென்று வற்புறுத்தாவிட்டால் வேலையாளர் அவரைக் காட்டாமலு மிருந்திருப்பார். துயர்மிகுதற்குரிய ஏயர்கோனது நிலையை வாயினாற் கூறவொண்ணாமை சிறந்ததொரு நாகரிகமாம். திருநாவுக்கரசருக்கு அப்பூதியடிகள் தம் மகன் பிணத்தை மறைத்தகாலை திருவருள் அதனையுணர்த்தியதுபோலவே சுந்தரமூர்த்திக்கும் ஏயர்கோன் நிலையைப் பற்றித் திருவருள் உணர்த்தியது காண்க. சுந்தரமூர்த்திகள் ஏயர்கோன் உயிர் நீத்துக் கிடந்தமையைக் கண்டவுடன் பதிகம்பாடி அவரை உயிர்ப்பிக்கக் கருதாது தாமும் உயிர்விடக் கருதினமை அடியார்பால் வைத்த அளவற்ற பேரன்பினையும் அடியார்க்கு இடுக்கண் வந்துழித் தாமும் அதனை உடன் நுகரும் உயர்கொள்கையினையுந் தெள்ளிதின் விளக்கிற்று. திடீரென்று பெருந்துயர் மிகுந்தகாலை அதனைத் தீர்க்கு முறைகள் புலப்படா. காளத்தியப்பர் ஊறு கண்டவிடத்துக் கண்ணப்பர் முதலிலே துயர்க்கடலிலாழ்ந்த பின்னர் மருந்து தேடுவாராயினர். தம்மால் ஏயர்கோன் உயிர் விடுத்தனரென்றுதல் சுந்தரமூர்த்திகள் நினைந்திருந்தால் தாமும் உயிர்விடற் பாலரென்று கருதல் அவர் பேரியற்கைக்குப் பொருந்துவதொன்றே. ஏயர்கோன் மீள உயிர்பெற்றகாலை முன் வெறுப்பொழிந்து சுந்தரமூர்த்திகள் கையிலுள்ள வாளைப்பற்றிக்கொண்டது திருவருளொளியினால் அவர்பெற்ற அறிவு விளக்கத்தின் பயனேயாமென்க. வானவருந் தாஞ் செய்தற்கரிய அருஞ் செயலையும் அருட்டிறத்தையுங் கண்டவிடத்து வியப்புற்று மலர்மாரி பொழித லியல்பே. ஒருவர்க்கொருவர் உயிர்கொடுக்கத் துணிந்த இருபெரு நண்பரும் இடைவிடா நட்புப் பாராட்டிப் பெருமகிழ் வெய்துதலு மியல்பே.

# கக. சேரமான் பெருமாள் நட்பு

நமது நாயனுர் சேரமான்பெருமாளோடு நட்புக் கொண்ட வரலாறு தெரிப்பாம். சேரநாட்டிலே கொடுங் கோளூரிலே சேரமன்னராய்த் திகழ்ந்த சேரமான் பெருமாள் உலக நிலையாமை கண்டு, இறைவனைப் பூசனை புரிதலி லேயே தமது பொழுதைப் பயன்படுத்திவந்தார். எல்லா உயிர்களுந் தத்தங்கருத்தறிவிக்கும் முறையினை அவர் உணர்ந்திருந்தமையாற் களவு கொலை முதலியவற்றைக் கடிந்து எவ்வுயிரும் இன்பமடையும்படி அரசாண்டு வந்தார். அவர் அன்பொடு செய்யுஞ் சிவவழிபாட்டு முடிவில் கூத்தப்பெருமான் தமது சிலம்பொலி இசைத் தலைக் கேட்பித்தல் வழக்கமாயிருந்தது. ஒருநாட் பூசை முடிவின் அவ்வாறு சிலம்பிெனலி கேளாமையால் உடைவாளை எடுத்துத் தமது மார்பினில் நாட்டத் தொடங்கியபோது இறைவன் திருச்சிலம்பினேசையை இசைத்தனர். உடனே சேரமான் பெருமாள் உடைவாளை அகற்றிவிட்டு இறைவனை விழுந்து தொழுது சிலம்பொலி கேட்பித்ததற்குக் காலந்தாழ்த்தது எதனுலென்று உசா வியபோது, இறைவர் தோன்ருது இசைத்த மறுமொழி யாவது, நமது திருநடத்தினை வன்ருெண்டன் வந்து வணங்கி ஒருமையுணர்வொடு பாடிய திருப்பதிகத்தினைக் கேட்டுவரக் காலந்தாழ்த்ததென்ருர். உடனே சேரர் பெருமான் அடியார்க்கு எளிவந்தருளுங் கருணையை உணர்ந்து தில்லைக்குப் புறப்பட்டுச் சென்று அம்பல வாண ரடிதொழுது ‘பொன்வண்ணத் திருவந்தாதி’ பாடி யருளினர். அவண் இறைவரது திருச்சிலம்பொலியை நேரேகேட்டுப் பெரும்பேரின்ப மெய்தினர். பின்னர்த் திருநாவலூர் மன்னரைக் காணும் பெருங் காதலுடன் அவர் தில்லை நீங்கிச் சீர்காழி முதலிய திருப்பதிகளை

வணங்கிச் சென்று திருவாரூரினை யடைந்தார். அதற்கு முன் நம்பியாரூரர் திருநாகைக் காரோணத்துக்குச் சென்று இறைவனைப்பாடி, அணிகலன்களும் நவமணிகளும் உயர்ந்த ஆடைகளும் நறுமணப்பொருள்களும் வலிமிக்க குதிரையும் பைம்பொன்னாற் செய்த உறையுடைய் உடைவாளும் பிறவும் பெற்றுத் திருவாரூரில் வந்திருந்தார். சேரமான் பெருமாள் வரவுகேட் டின்புற்று அவரைச் சிறப்பாக வரவேற்றனர். சேரமான் பெருமாள் அவரைத் தாழ்ந்திறைஞ்ச அவரும் பணிந்து தழுவி யளவளாவினர். இருபேரன்பரும் இன்பவெள்ளத்திடை நின்று ஏறமாட்டாதவர்போல ஒருமைப்பட்டவராய் இசைந்திருந்தமையால், சுந்தரமூர்த்திகளைச் சேரமான் தோழரென்றும் உலகவர் கூறுவாராயினர். வன்றொண்டர் சேரமான் பெருமாளுடன் திருக்கோயிலுக்குச் சென்று வீதிவிடங்கப் பெருமானை இறைஞ்சி ஏத்தினர். சேரமான் பெருமாளுந் திருவாரூர் மும்மணிக்கோவை பாடியருளினர். பின்னர் ஆளுடைய நம்பி சேரமன்னரைப் பரவையார் திருமாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே பெண்டிர் பலர் விளக்கும் நிறைகுடமும் பூமாலைகளும் அகிற்புகையும் எடுத்தேந்தி எதிர்கொண்டனர். சேரமான் பெருமாளைப் பசும் பொற்கால்களமைந்த இருக்கைமீ திருத்தி நம்பியாரூரர் தாமும் உடனிருந்தனர். பின் இருவரையும் பரவையார் வழிபட்டுப் பல்வேறு வகைப்பட்ட கறிகளுடன் அறுசுவையுண்டி சமைப்பித்து யாவருக்கும் விருந்து செய்தனர். நம்பியாரூரர் வேண்டுகோட்கிணங்கிச் சேரமான் மிக அச்சத்துடன் அவருடனிருந்து திருவமுதருந்தினர். உணவு கொண்ட பின்னர்ப் பரவையார் பனிநீர் பச்சைக் கருப்பூர முதலிய நறுமணப்பொருள்கள் கலந்த சந்தனத்தையும், கத்தூரிச் சாந்தினையும், நறும்பூ மாலைகளையும் விருந்தினருக்கு எடுத்துக்

கொடுத்து, ஐவகை வாசனைப் பொருள்களோடு கலந்த வெற்றிலையும் பாக்கும் எடுத்தேந்தினர்.

அங்ஙனஞ் செய்த சிறப்புக்களையெல்லா மேற்றுக் கொண்டு சேரமான் பெருமாள் தூய திருநீறு வாங்கி நெற்றியி லணிந்துகொண்டு தமது மெய்த்தொண்டின் பெரும்பயனை விரைவி லடைந்ததாகக் கருதி ஆளுடைய நம்பிகளின் திருவடிகளை யடைந்தனர். அவருஞ் சேர மன்னரை எதிர்வணங்கித் தழுவி அவருடைய அரிய நட்பை இறைவன் நல்கியதற்காக அவனுடைய திருவருளைப் போற்றித் துதித்தனர். வித்தகர் இருவரும் வீதி விடங்கப் பெருமானது பவனிகண்டு வணங்கி உடனிருக்கு நாளில் பல திருப்பதிகளையும் வணங்குங் கருத்துடன் புறப்பட்டுச்சென்று பலதலங்களையும் பணிந்து பின்னர்த் திருவாரூர்ப்பெருமான் விடைபெற்றுத் திருவாலவாய் முதலிய பாண்டி நாட்டுத் திருப்பதிகளை வணங்குவான், அளவிலாத பரிசனங்களோடும் பணியாளரோடும் பண்டங்களும் பணமும் எடுத்துக்கொண்டு ஊர்திகளிற் புறப்பட்டார்கள். திருக்கீழ்வேளூர் திருநாகைக்காரோணம் திருமறைக்காடு முதலிய பதிகளையடைந்து இறைவனைப் பாடிப் பணிந்தனர். திருமறைக் காட்டில் நம்பியாரூரர் 'யாழைப்பழித்' தென்று தொடங்குந் திருப்பதிகம் பாடினர். பின்னர் அகத்தியான்பள்ளி, திருக்கோடிக்கா என்னுந் திருப்பதிகளுக்குச் சென்றனர். திருக்கோடிக்குழகர் தனியே கடற்கரையிலே கோயில்கொண்டிருப்பதைக் கேட்டுக் 'கடிதாய்க் கடற்காற்று வந்தெற்ற' வென்னுந் திருப்பதிகத்தினைப் பாடினர்.

"கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேற்
குடிதா னயலே யிருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீ
ரடிகே ளுமக்கார் துணையாக விருந்தீரே."

இருபேரன்பருஞ் சோழநாட்டைக் கடந்து பாண்டிநாட்டிற்குச் சென்று திருப்பத்தூர் இறைஞ்சி மதுரைமூதூரடைந்தார். அங்கே பாண்டியமன்னன் மிகவுஞ் சிறப்பாகத் தனது நகரை அணிபெறச் செய்து இருவரையும் வரவேற்றனன். அவ்விடத்திற் பாண்டிய மன்னன் மகளை மணந்த சோழமன்னனும் வந்துசேர்ந்தான். ஆகவே தமிழ் வேந்தரும் வன்றொண்டருடன் திருவாலவாய்ப் பெருமானைத் தொழுதனர். பாண்டியனார் தமது அரண்மனையில் யாவர்க்கும் பெருவிருந்தியற்றினர். சிலநாள் அவண் தங்கியகாலை மதுரைக்குப் பக்கத்திலுள்ள திருப்பதிகளை இடையிடையே வன்றொண்டர் மூவேந்தருடன் சென்று வணங்கினர். அவைகளாவன திருப்பூவணம், திருஆப்பனூர்,திருவேடகம், திருப்பரங்குன்றம்என்பன. திருப்பரங்குன்றத்தில் மாதொரு பாகனாரை 'அடிகேளுமக்காட்செய அஞ்சுதுமே' என்னு முடிவுடைய தேவாரத் திருப்பதிகம் பாடினர். பின்னர்ப் பாண்டி நாட்டிலுள்ள பிறபதிகளுக்கும் வன்றொண்டர் செல்லக்கருதினர். அப்போது பாண்டிய மன்னன் அவருக்குங் கழறிற்றறிவார்க்கும் வேண்டுவன அமைத்தற்பொருட்டு அவர் செல்லுந் திருப்பதிகட்கெல்லாம் ஆளனுப்பினான். இரு பெரு நண்பரும் புறப்பட்டுக் குற்றாலஞ் சென்று கூத்தர் குரை கழல் வணங்கிக் குறும்பலாவைத் தொழுது திருநெல்வேலிக்கு வந்து நீற்றழகரைப் பணிந்து திரு இராமேச்சுரம்போய் வணங்கிப்பாடித் திருமாதோட்டம் திருக்கேதீச்சுரம் என்னும் ஈழமண்டலத் தலங்களைப் பாடித்தொழுது திருச்சுழியல் வந்து சேர்ந்தனர். அங்கே பெருமானை இறைஞ்சி 'ஊனாய உயிராய்' என்னும் பாமாலை புனைந்தனர். அத்தலத்திலே வன்றொண்டருக்குக் கனவில், இறைவன் திருக்கையில் பொற்செண்டுந் திருமுடியில் உச்சிக்கொண்டையணியுஞ் சுழியமும் உடைய காளைப் பருவத்தினராய்த்

தோன்றியருளி, 'யாமிருப்பது கானப்பே'ரென்று கூறி மறைந்தனன். உடனே வன்றொண்டர் எழுந்து திருவருளை வியந்து கழறிற்றறிவார்க்கு அதனை மொழிந்து அவருடன் திருக்கானப்பேரை யணையும்பொழுது 'தொண்டரடித்தொழலு' மென்னுந் திருப்பதிகம் பாடினர். திருக்கானப்பேரினை யடைந்து இறைவனை வணங்கிச் செழுந்தமிழ் மாலைகள் பாடிச் சின்னாள் அங்கமர்ந்திருந்து திருப்புனவாயிலையடைந்து 'சித்தம் நீ நினை என்னொடு' என்னுந் திருப்பதிகம் பாடினர். அங்குநின்றும் எழுந்தருளி அன்பரிருவரும் பொன்னிநா டடைந்து திருப்பாதாளீச்சரந் தொழுது அடியார் பலர் எதிர்கொள்ளத் திருவாரூரினை யடைந்து இறைவனை நெடும்பொழுது பரவிப்பாடிப் பரவையார் மாளிகையை எய்தி அவர் இயற்றிய சிறப்பாய விருந்தினையேற்றுத் திருவமுது செய்து நிறைவுடன் அமர்ந்தனர்.

அங்ஙனமிருக்கு நாளிலே பல விளையாடல்களை நிகழ்த்தி இன்புற்றார்கள். நின்று செண்டெறிந்து விளையாடும் நிலைச்செண்டும், குதிரைமேலேறிச் செண்டு வீசி விளையாடும் பரிச்செண்டும், ஆட்டுச்சண்டை கோழிச்சண்டை முதலிய பல புள்ளினங்களின் போரும் நிகழ்ந்தன. ஒவ்வோருயிர்களின் கருத்தினை யறிந்து அவ்வவற்றிற்குரிய பொருள்களை வேண்டியவாறே கொடுக்க வல்ல சேரமன்னர் திருநாவலூரரைத் தம்முடைய நாட்டிற்கு எழுந்தருளும்படி இடைவிடாது வேண்ட, அவரும் அதற்கிசைந்தருளினார். பரவையாருள்ளத்தையும் அதற்கிசைவித்த பின் அடியார்களுக்குத் திருவமுது செய்வித்துத் திருக்கோயிலுக்குச் சென்று திருவாரூர்ப் பெருமானைத் தொழுது விடை பெற்றுக்கொண்டு இரு பெருநண்பருந் திருவாரூர் எல்லையைக் கடந்து காவிரித் தென்கரையிலுள்ள திருக்கண்டியூர் முலியத தலங்களை

வணங்கித் திருவையாற்றின் மருங்கோடும் காவிரிக் கரையை அடைந்தனர். காவிரியானது இருகரையும் பெருக்கெடுத்து ஓடங்கள் செல்லவொண்ணாதபடி மிக விரைவுடன் சென்றதைக் கண்டு 'பரவும்பரி'சென்று தொடங்கும் திருப்பதிகம் பாடினர். அவருடைய திருப் பாட்டிற்கு இரங்கி இறைவன் ஓலமென்று அபயங் கொடுத்து ஆறுவிலகி வழிகாட்டும்படி அருள்செய்தான். வரும் வெள்ளமானது பளிங்குச்சுவர்போல் திரண்டு ஒரு புறம் நிற்ப, போக்கு நீரானது வடிந்து மணற்பரம்பு வெளிப்பட்டது. சேரமானும் ஆளுடைய நம்பியும் ஒரு வரையொருவர் வணங்கித் திருவருளை வியந்து தமது பரி சனங்களுடன் நதியைக் கடந்து ஐயாற்று முதல்வரை வழி பட்டனர். வழிபட்டு மீண்டு நதியின் ஊடே சென்று அக்கரை செல்லும்வரை பிரிந்து நின்ற காவிரியானது முன்போலத் தொடர்ந்து பெருகியது. நம்பியாரூரரும் சேரமன்னரோடு வழியிலுள்ள பல திருப்பதிகளையும் வணங்கிச்சென்று கொங்குநாடு கடந்து மலைநாட்டெல் லையை யடைந்தனர். அந்நாட்டிலுள்ள யாவரும் இரு பெருந்தகையாரும் வருவதைக் கேட்டு நாடெங்குங் கவி னுறச்செய்து ஒவ்வொரு ஊரிலுள்ளாரும் அவர்களை எதிர்கொண்டு இன்புற்றார்கள். வழி முழுமையும் குளிர்ந்த பந்தல்கள் இடப்பட்டிருந்தன. வீடுகளெங்கும் அகிற் புகை கமழ்ந்துகொண் டிருந்தன. ஆறுகளெல் லாம் மலர்க்குவியல்கள் நிறைந்திருந்தன. காணுமிடங் களிலெல்லாம் இன்னிசைக் கருவிகள் ஒலித்தன. நில முழுவதிலும் பொன்மலர் தூவப்பட்டிருந்தன. ஊரெங் கும் தோரணங்களும் பலவகை அணிகளும் அமைக்கப் பட்டிருந்தன. திசைகளெல்லாம் நால்வகைச் சேனைகளின் வெள்ளமும் அவைகட்குரிய சோற்று வெள்ளமுங் கண்டு நம்பியாரூரர் இன்புற்றுக் கொடுங்கோளூரை யடைந்

தனர். கொடுங்கோளூரிலே அந்நகர மாந்தர் அரண் மனைவாயிலை அலங்கரித்து, வானளாவிய கோபுரங்கள் மாடங்கள் குளிர்ந்த சாலைகள் மேடைகள் நடனசாலைகள் முதலியவற்றைக் கமுகினாலும் பூமாலைகளாலும் மணிக் கோவைகளாலுங் கவினுறுவித்து, நாயனாரை வரவேற்ற னர். சேரமன்னர் நம்பியாரூரரைத் திருவஞ்சைக் களத்தி லுள்ள திருக் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். நாயனார் திருவஞ்சைக்களத்து முதல்வரை வணங்கி 'முடிப் பது கங்கை' என்னுந் திருப்பதிகம் பாடினர். பின்னர் யானை மேல் ஆளுடைய நம்பியை ஏற்றிச் சேரமான் அவருக்கு பின்னே தாமும் ஏறியிருந்து சாமரைவீசினர். இதனைக் கண்ட நகரவாசிகள் 'நமது மன்னருக்குச் சிறந்த அருள் தோழர் இவர்; யாம் இவரைக்காண அளவற்ற தவஞ் செய்தோம்; இதைவிடச் சிறந்த பேறு மலைநாட்டிற்கு வேறு என்னுள்ளது' என்று தம்முண் மகிழ்ந்து பேசிப் பூவும் பொரியும் பொற்பொடியுந் தூவிப் போற்றினர். திருமாளிகைக்கு முன் யானை வந்தவுடன் அதனினின் றும் இழிந்து இருவரும் அரண்மனையுட் புகுந்தனர். சேர மான் பெருமாள் நம்பியாரூரரைச் சிங்காசனத்திலிருத்தித் தேவிமார் எடுத்துக்கொடுத்த நறுமண நீரை வாங்கி அவர் திருவடிகளை விளக்கினர். சுந்தரமூர்த்தி தமது திருவடிகளை விளக்குதல் கூடாதென்று தடுத்துஞ் சேர மான் அதற்கிசையாது அவரைத் தொழுது தாம் செய்வன எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற் புறுத்தினர். ஆளுடைய நம்பி அவரை மறுக்கமுடிய வில்லை. சேரமான் பூசனைகள் யாவும் புரிந்து மிக்க வள மாகத் திருவமுது செய்வித்தனர். பின்னர் மெல்லிய நறு மணமிக்க சந்தனக்கலவை, மான்மதச்சாந்து, உயர்ந்த ஆடைகள், அழகிய மணிக்கலன்கள், மென்மலர் மாலைகள் முதலியவற்றையும் வன்றொண்டருக்குச் சேரமான் சாத்தி

மகிழ்ந்தார். ஆடல்பாடல்கள் இன்னிசைக்கருவிப் பயிற்சி முதலிய சிறப்புகளும் நிகழ்ந்தன. செண்டுவிளையாட்டும் பூங்காவுகளிற் சிறு சோற்றுவிழாவும் பொய்கைநீர்விளையாட்டும் யானைப்போரும், மற்போரும் நம்பியாரூரர்க்கு உவப்பளிக்கும் வகையில் நடைபெற்றன. அங்கிருக்கு நாளில் ஒரு நாள் திருவாரூர்ப் பிரானை மிகவும் நினைந்து 'பொன்னுமெய்ப் பொருளுந் தருவானை' என்னுந் திருப்பதிகம் பாடினர். பின்னர் மிகு ஆர்வத்துடன் திருவாரூர்க்கு அவர் புறப்பட்டகாலை பிரிவாற்றாமையால் சேரர் பெருமானும் பின்னேயே சென்று தமது அளவற்ற ஆற்றாமையை வன்றொண்டருக்கு அறிவித்தார். வன்றொண்டர் அவருக்கு ஆறுதல் கூறி அரசாட்சிக் கடன்களை இயற்றும்படி பணித்தார். பின்னர்ச் சேரமன்னரும் ஒருவாறு வன்றொண்டர் கட்டளைக்கு இணங்கியிருந்தார். சுந்தரமூர்த்திகளுக்குக் கொடையாகப் பல்வகைப் பொருள்களையும் மணிக்கலன்களையும் பொன்களையும் பூந்துகில்வகைகளையும் பொதிசுமக்கும் தொழிலாளர் மேல் ஏற்றி வன்றொண்டருக்குமுன் செலவிடுத்தார். வன்றொண்டர் சேரமன்னரைத் தழுவி விடைபெற்றுக் கொண்டு மலைநாட்டினைக் கடந்து திருமுருகன் பூண்டிக்குச்செல்லும் வழியினை அடைந்தார். அவ்வூருக்கு அருகே செல்லும்போது நம்பியாரூரர்க்குத் தாங்கொடுக்கும் பொன்னைத் தவிரப் பிறர்பாற் பொன் கொள்ளக்கூடாதென்று அறிவுறுத்தக்கருதியோ வேறு யாதுபற்றியோ இறைவன் நிதியைப் பறித்தற்பொருட்டுப் பூதங்களை ஏவ, பூதங்கள்வேடர் வடிவாய்ச் சென்று நிதிப்பொதிசுமப்பார் மீது அம்பு தொடுத்து 'உம்முடைய பண்டாரத்தை இங்கே வைத்துவிட்டுப் போங்கள்; அங்ஙனஞ் செய்யாவிட்டால் உங்களைக் கொன்றுவிடுவோ' மென்றச்சுறுத்தி நிதிகளனைத்தையுங் கவர்ந்தோடின. அப்பூதங்கள் நம்பியாரூரர்

பால் யாதுஞ் செய்யவில்லை. நிதிகளைப் பறிகொடுத்தவர்கள் அவர்பாற் சென்று முறையிட அவர் திருமுருகன் பூண்டிக்கு அவர்களோடு சென்று அங்கு வீற்றிருக்குஞ் சிவபெருமானைத் தொழுது பாடியருளிய 'கொடுகு வெஞ் சிலை' என்னுந் திருப்பதிகத்தின் முடிவில் 'எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரான் நீரே' என்றனர். திருப்பதிக முடிவில் வேடுவர் தாங் கைக்கொண்ட பொருளனைத்தையுந் திருக்கோயிலின் முன்னே குவித்துவிட்டமையால், சுமப்பார்மீது அவற்றை ஏற்றிக்கொண்டு அண்ணல் திருவாரூர்ப் போய்ச் சேர்ந்தார்.

## ஆராய்ச்சி

சேரநாட்டிலே நெடுநாளாகச் சைவநெறியே தலைத் தோங்கிற்று. சிலப்பதிகாரத்துக் கூறப்பட்ட செங்குட்டுவனென்னுஞ் சேரமன்னன் சிவபெருமானையே சிறப்பாக வழிபட்டனன் என்பது அந்நூலில் இனிது விளங்குகின்றது. சேரமான்பெருமாள் நாயனாருக்குப் பிற்காலத்திலே தான், சுமார்த்த மதமும் வைணவமதமும் அந்நாட்டிலே தலை எடுக்கலாயின. காலடியிற் பிறந்த சங்கராச்சாரியாருங் குலசேகரப்பெருமாளும் அச்சமயங்களை ஆங்கு நிலையுறச் செய்தனர்.

சுந்தரமூர்த்திகள் காலத்திலே திகழ்ந்த மூவேந்தருள் சேரமன்னரே சிவனடிப்பேரன்பிற் சிறந்தவராயிருந்தமையால் அவரே பிறமன்னரினும் நமது நாயனார்க்கு நெருங்கிய நண்பராகும் பெரும்பேறு பெற்றனர். இவர் மன்னர் மரபினராயிருந்தும் 'வாழ்வெனு மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித் தாழ்வெனுந் தன்மையோடுஞ் சைவமாம்' பெருநெறி நின்றவர். நடுநிலையில் நின்று எவ்வுயிர்க்கும் நன்மை செய்யக் கருதினமையால், அவையாவுந் தெரிக்குங்கருத்தினை அறியவல்ல ஆற்றலை இறைவனது திருவருளினாலே பெற்றுக் கழறிற்றறிவா ரென்னும் பெயருடையவரானார்.

பெருஞ்செல்வத்துட் பிறங்கியும் நிலையாமை உணர்ச்சி சான்றவரா யிருந்தமையால், உலக நிலையாமையையுந் திருவருட் பேற்றினையும் ஒருங்கே நினைவுறுத்துந் திருநீற்றினைப் பெரிதும் போற்றிவந்தனர். நிலையாமையை நினைவுறுத்திய வண்ணனையும் இவர் வணங்கினமையால், இவர் யானெனதென்னுஞ் செருக்கு அற்றவரென்பது தெளியப்படும். முடிவிலின்பமாகிய வீட்டினை நல்குங் கூத்தப்பெருமானது தூக்கிய திருவடியையே இவர் தமது பெருந்துணையாகக் கருதி வழிபட்டமையும் இவரது உள்ளத் துறவினை இனிது விளக்கும். முற்காலத்திற் சனகனென்னும் அரசன் ஞானநிலையுற்று அரசியல் நடாத்தி வந்தனனென்ப. நிலையாமை உணர்ச்சியால் அவன் இவர்போல பரம்பொருளை வழிபட்டனன் என்ற கதை கேட்கப்படவில்லை. இவர் ஒவ்வொருநாளும் பூசைமுடிவிலே திருச்சிலம்பொலி கேட்கப்பெற்றவர்.

இவர் சிவயோகநெறி நின்ற அருந்தவத்தினராய் நாதாந்தங் கண்டவராயிருத்தல் கூடும். சிவயோகியருக்கு ஓசைகாட்டியும் இறைவன் அருள்புரிவனென்பதை 'ஓசையும் ஈசன் உரைவல்லார்க்கே' என்றதால் காண்க.

இறைவன் அகவழிபாட்டின் முடிவில் தோன்றியருளுவரென்பது சைவநூற் கருத்து. சிவயோகிகளின் அகத்தே பத்துவகை நாதங்கள் எழுமென்று திருமூலமாமுனிவர் செப்பினர்.

"மணிகடல் யானை வளர்குழன் மேக
மணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தேழு நாதங்க ளாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே"

என்றதிற் காண்க.

இவர் அகத்தேசெய்யும் வழிபாடுபோலவே புறப்பூசனையையு மியற்றியதனல் அகவழிபாட்டினர்க்கு

அருளும் முறையிலேயே புறப்பூசையின்கண்ணும் இறைவன் சிலம்போசைகாட்டி யாட்கொண்டனன். திருவருட்பேற்றினையே பெரிதும் நாடி அதனை உயிரினும் விழுமியதாகக் கருதினமையாற் சிலம்போசை கேட்கக் காலந் தாழ்த்தவுடன் உயிர்விடக் கருதினர். 'நினைந்த னைப்பொழு தும்மறந் துய்வனோ' என்றபடி தினையளவு இறை பணி தவறினுந் தமக்கு உய்தி இல்லை என்னுங் கொள்கை யினைச் சேரமான் கடைப்பிடித்தமையாலும் 'நின் அருட் கண்ணால் நோக்காதா ரல்லாதாரே' என்றபடி அருளில்லாது வாழ்வதினும் வாழாமையே நன்றென்று கொண்டமை யாலும் இவர் உயிர்விடக் கருதினர். பூசனையில் ஏதோ தவறு நிகழ்ந்தமையாற் சிலம்பொலி கேட்கவில்லை என்று நினைந்து அப்பிழைக்குத் தக்கதண்டனை உயிர் நீத்தலே என்று இவர் கருதி இருத்தல் கூடும். உடைவாளென்பது அரசரணியுங் கவசத்தில் தற்காப்பிற்கு இணைக்கப்பட்ட தாயுள்ள வாளாகும். உடையொடு பொருந்திக் கிடப் பதால் அஃது அப்பெயர்த்தாயிற்றுப்போலும்.

வன்றொண்டர் பெருமையைச் சேரமானுக்கு அறி வித்து இவர் வாயிலாகச் சேரமானைத் திருக்கயிலை நண்ணும்படி கருதியதால், வன்றொண்டர் சேரமானுக்கு அருமருந்தன்ன தோழர் நிலையில் நிற்கும் ஆசிரியராவர். 'அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்' என்ற வண்ணம் வன்றொண்டருடன் அவரது திருக்குழாத்துள் இருக்கப்பெறுதல் பெரியதோர் பேறுதலின் அதனை இறைவன் அவருக்கு அருளுதற்பொருட்டுச் சிலம்போசை ஒலிக்கக் காலந்தாழ்த்தினன். பெரியதொரு பேறு பெறு தற்குமுன் இறைவன் சிறியதொரு துன்பத்தைக் கொடுத் தல் இயல்பு. திருஞானசம்பந்தர் ஞானப்பால் பெறுவ தற்குமுன் புனிதவாய் மலர்ந்தழுதார். திருநாவுக்கரசர் சூலைநோயால் வருந்தினர். சுந்தரமூர்த்திகள் ஓர் அந்தண

னுக்கு அடிமையாகவேண்டுமே என்னுங் கவலை பூண்டிருந்தார். சேரமான் பெருமாளும் சிலம்பொலி கேளாது உயிர் விடுதற்குரிய கவலையுற்றனர். சுடச்சுட ஒளிரும் பொன்போலத் துன்புறுதற்குத் தக்கபடி பேரின்பத்தின் பயனை மக்கள் நுகர்வர். கொடுங்கோளூர் அரசநகராயும் திருவஞ்சைக்களம் இறைவர் திருக்கோயில் உள்ள இடமாயு மிருந்தன. தமது நகரைவிட்டுப் புறப்படுங்காலை அவ்வூரிலே திருக்கோயில் கொண்டருளும் இறைவனைத் தொழுது விடைபெற்றேகுதல் சிறந்த மரபாதலின், சேரமான் தில்லைக்குப் புறப்படுங்காலைத் திருவஞ்சைக் களத்து முதல்வரை வணங்கிப் புறம்போந்தனர். வன்றொண்டர் பெருமையினைத் தமக்கு அறிவுறுத்திய இறைவனது பெருநன்றியை உணர்ந்து வழிபடுதற் பொருட்டுத் தில்லைக்குச் சென்றனர். பொன்னம்பலத்தே பொன்னார் மேனியோடு இறைவன் திருக்கூத்து நல்கினமையாற் பொன்வண்ணத் தந்தாதி பாடினர். சிவயோகியர்க்கு இறைவன் தயிரின் நெய்போல விளங்கித் தெள்ளிய திருக்கூத்துக் காட்சி தருதலின், சேரமான் பெருமாள் நேரே சிலம்பொலி கேட்பாராயினர். சேரமான் திருவாரூருக்குச் சென்ற காலை நம்பியாரூரரும் வடிவிலும் அரசநண்பராய்த் திகழ்தற்குரிய மணிக்கலன்கள், உயர்ந்த ஆடைகள், அடற்பரிமா, பொற்சுரிகை முதலியவைகளைத் திருநாகைக்காரோணப் பெருமானிடம் பெற்றிருந்தனர். இவற்றை அவர் வேண்டுமென்று விரும்பிப் பெற்றதாகத் தெரியவில்லை. இறைவனே சிவஞானிகள் நுகற்தற்குரிய அணிகளை நுகரவேண்டிய காலத்தே அளித்தருளுவன். அரசர் பெருமானுக்கு ஓர் அருந்துணையாக அந்தணர் பெருமான் திகழவேண்டிய காலத்தே இறைவன் இவற்றை நல்கினமை காண்க. ஒத்த கிழவனுங் கிழத்தியுங் கண்டாற் போல இருபேரன்பரும் அளவளாவித் தழுவினர்.

உடம்பின் வனப்புப்பற்றி எழும் வேட்கை இல்லாத விடத்து உயிரும் உயிரும் அன்பினாற் கலக்கு முறை நட்பிலுங் காதலிலும் ஒரு தன்மையதென்றே தோன்று கிறது. ஆசிரியர் சேக்கிழார் இருபெரு நண்பருங் கலந் ததைக் காதலர் கலந்தமை போலவே புனைந்துரைத்தமை காண்க.

" முன்பு பணிந்த பெருமானைத் தாமும் பணிந்து
முகந்தெடுத்தே
யன்பு பெருகத் தழுவவிரைந் தவரு மார்வத்
தொடுதழுவ
வின்ப வெள்ளத் திடைநின்று மேற மாட்டா
தலைவார்போ
லென்பு முருகி யுயிரொன்றி யுடம்பு மொன்று
மெனவிசைந்தார்."

இருவருக்கும் பெருநட் பெழுதற்குக் காரணமாகிய பரம் பொருளை வழிபடுதற் பொருட்டு இருவரும் பரவையார் திருமாளிகைக்குப் போதரு முன்னரே திருவாரூர்த் திருக் கோயிலுக் கேகினர். அவ்வாறே சுந்தரமூர்த்திகள் கொடுங்கோளூருக்குச் சென்ற பொழுதிலும் அரண் மனைக்குப் போகுமுன் சேரமானோடு திருவஞ்சைக்களத்து அப்பரைத் தொழச் சென்றனர். இருவரும் பரவையார் வீட்டில் விருந்துண்டமையால் அக்காலத்திற் சாதிக் கட்டுப்பாடு போற்றப்படவில்லை என்பது தெளிவு. அரசர்க்குரிய பாலமுதம் முதலிய வளமான உணவு வகை களும், அடியார்க்கேற்ற இலையமுது முதலிய மெல்லிய உணவு வகைகளுஞ் சமைக்கப்பட்டன என்பது,

' அரசர்க் கமைத்த சிறப்பினுமே லடியார்க்
கேற்கும் படியாக
விரவிப் பெருகு மன்பினுடன் விரும்பு
மமுது சமைத்ததற்பின் '

என்றமையால் விளங்கும்.

பரிசனங்கள் யாவர்க்கும் வேண்டிய அளவு அறுசுவை உண்டி யளிக்கப்பட்டது. 'தக்கவகையால் அறுசுவையுந் தாம்வேண்டியவா றினிதருந்த' என்றது காண்க. அக்காலத்தில் எவ்விதப் பரிகலன்கள் விளங்கின என்பது தெரியவில்லை. வாழையிலையாதல் பொற்றட்டு வெள்ளித் தட்டு முதலியனவாதல் பயன்பட்டிருக்கலாம். இருபேரன் பர்க்கு முரிய பரிகலன்கள் இரண்டு பீடங்களின்மீது சமமாக வைக்கப்பட்டன என்று தெரிகிறது. 'பரிகலன்கள் ஏரின் விளங்கத் திருத்திக் காலிரண்டிற் படியாலேற்றுதலும்' என்றது காண்க. உண்டபின் சந்தனக் கலவை வழங்குதலும், பூமாலைகள் கொடுத்தலும், வெற்றிலைப் பாக்கு அளித்தலும், அக்காலத்து வழக்கங்களென்று தெரிகிறது. சந்தனத்திற் பனிநீரும் பச்சைக் கருப்பூரமுங் கலத்தலும், தக்கோலம் ஏலம் இலவங்கம் சாதிக்காய் பச்சைக் கருப்பூரம் என்னும் ஐவகை மணப்பொருள்களை வெற்றிலைப் பாக்குடன் கலந்தளித்தலும் நெடு நாட்கு முன்னேயே இந்நாட்டு வழக்கமென்று தெரிகிறது. 'கத்தூரிச் சாந்து' என்பது இக்காலத்தில் நெற்றியிற் பொட்டிடப் பயன்படுங் கருநிறச்சாந்திற்கு இனமாயதோ வேறோ தெரியவில்லை. உண்டபின் திருநீறணியும் மரபு சேரமான் பெருமான் செய்கையால் இனிது விளங்கும். இருபேரன்பரும் பாண்டிநாட்டிற்குச் செல்லுமுன் திருக்கோடிக் குழகரைத் தொழுதனர். அக்குழகர் குடிகளில்லாத தனியிடத்தே கோயில்கொண்டிருப்பதைக் கண்ட நமது நாயனாருக்கு அன்பு மேலீட்டினாலே இரக்கந்தோன்றிற்று. இறைவன்பால் இங்ஙனம் அடியார்க்குக் குழந்தையன்பு தோன்றுதல் முற்றிய பேரன்பின் அறிகுறியாகும். பாண்டி நாட்டிலே தமிழ் மூவேந்தரும் நமது நாயனாரை வரவேற்கப் பெற்றது ஒரு பெருஞ் சிறப்பே. சோழ மன்னரும் பாண்டிய மன்னருந் தம்முட் பெண்கொடுத்தல்

கொள்ளல் முதலியன அக்காலத்து நிகழ்ந்தனவென்று தெரிகிறது.

சுந்தரமூர்த்திகள் காலத்துச் சோழ பாண்டியரது இயற்பெயரை ஆசிரியர் கூறிற்றிலர். ஆதலால் அவர் இன்னாரென்று தெரிய இடமில்லை. திருக்குற்றாலம் திருநெல்வேலி முதலிய திருப்பதிகளுக்கு உரிய சுந்தர மூர்த்தி தேவாரம் இப்போது கிடைக்கப் பெறவில்லை. திருச்சுழியல் திருப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடலிலே 'குழகன் திருச்சுழியன்' எனவும், ஒன்பதாவது திருப் பாட்டிற் 'செண்டாடுதல் புரிந்தான்' எனவும் மொழிந் தமையால், இறைவன் அத்திருப்பதியிலே நாயனாருக்குக் கனவிலே செங்கையினிற் பொற்செண்டுந் திருமுடியிற் சுழியமும் உடையராய்த் தோன்றின னென்க. காளைப் பருவத்தினராய்த் தோன்றிக் கானப்பேர் தம்மூர் என்ற மையால் கானப்பேருக்குக் காளையார் கோயில் என்ற பெயர் ஏற்பட்டது போலும்! திருவாரூருக்கு இருபேரன் பரும் மீண்டபின் பரவையார் அவர்களுக்குப் பெருவிருந் தியற்றிய காலை 'பரிகலமும் பாவாடை பகல்விளக்கும் உடனமைத்துத் திருவமுது செய்வித்தார்' என்றமையால், அக்காலத்திற் பரிகலத்தின் கீழ்ப்பரவிய ஆடை விரிப் பதும், சிறப்பு மதிப்பின் பொருட்டுப் பகலில் விளக் கேற்றி வைத்தலும் வழக்கமென் றறிகிறோம். இக் காலத்தில் டென்னிஸ் (Tennis) முதலிய நின்றெறியும் பந்து விளையாட்டுப்போல அக்காலத்து நிலைச்செண் டென்னும் ஓர் விளையாட்டும், போலோ (Polo) முதலிய குதிரைப் பந்து விளையாட்டுப்போல அக்காலத்துப் பரிச் செண்டு என்னும் விளையாட்டும் வழக்கிலிருந்தன. இவ் விளையாட்டுக ளொருபுற மிருப்பத் தகர்ப்பாய்ச்சல், வாரணப்போர் முதலியன பலர் பார்த்து மகிழும்படி அக்காலத்து நிகழ்ந்தன. இவற்றால் உயிர்கட்கு இறுதி

விளையவில்லைபோலும்! உயிர்க்கு இன்னல் கூடாதென்ற கொள்கையுடைய நமது நாயனார் இவற்றைப் பார்க்க நேர்ந்தது அவரது ஊழ்வினையின் பயனேயா மெனினும் இவற்றின்கண்ணுந் திருவருட் செயலினையே அவர் பார்த்து மகிழ்ந்திருப்பார். களிறு, வாரணம் முதலியன தமது பெண்டுகளுடன் கூடிக் குலாவுவதைக்கண்ட அப்ப மூர்த்திகள் சிவம் சத்தி என்னும் இரண்டின் புணர்ப் பினையே கண்டு மகிழ்ந்தமைபோலத் திருநாவலூர் மன்னர் இவற்றின் போரினைத் திருவருட் சத்தியின் ஒடுக்குந் தொழிலாகவே கண்டு களித்தனரென்க.

திருநாவலூரர் செய்த விருந்தினை நுகர்ந்த சேரமான் பெருமாள் அவருக்குத் தாமும் பெருவிருந்தியற்றக் கருதுத லியல்பே. சேரமானைக் கண்டு கலந்தபின் அவர் அரண்மனைக்குச் சென்று பெருஞ் சிறப்புக்களை வன்றொண்டர் விழையாராகலின், சேரமான் அவரை இரவும் பகலுந் தொழுது வேண்டிக்கொள்வாராயினர். இருபெரு நண்பரும் மலைநாட்டுக்குச் செல்லும் வழியிலே திருவையாற்றில் நிகழ்ந்த அற்புதமானது மிகவும் வியத் தற்குரியது. இறைவன் மெய்யன்பர்க்கு அவர்கள் வேண்டியவாறே எக்காலத்துக்கும் அருள் செய்வா னென்பது இதனால் விளங்கும். 'இங்கே என் றருள்புரியு மெம்பெருமான்' என்றபடி, நாயனார் பாடியவுடன் இறைவன் ஓலமென்று அபயங் கொடுத்துப், பசுவானது தன்கன்றைத் தன்பால் அழைத்துக் கொள்வதுபோல நாயனாரையும் அவரைச் சார்ந்தாரையுந் தன்பால் அழைத் துக் கொண்டான். அடியவர் விரும்பின் ஐம்பூதங்களும் அவர் சொல்வழி நிற்கும். தண்ணீரானது பனிக்கட்டி யாக மாறியவிடத்து நிலம்போல வன்மையுடையதாகும். நிலவுருண்டையின் மேற்பகுதியிலுள்ள கடல் நீரானது இழுப்புச்சத்தியால் நிலத்தோடு ஒருங்கியைந்து நில

வுருண்டை அந்தரத்திற் சுழலும்போதுஞ் சிந்தாதிருக்கின்றது. 'அந்தரத் தகிலகோடி தாழாமல் நிலைநிற்பதும்' திருவருட் சத்தியின் வலியினாலன்றோ? திருவருட் சத்தியின் வலிமையால் நீர் திரண்டு நின்றது நிகழக்கூடியதொன்றே. விவிலிய நூலிற் செங்கடலென்னு மிடத்தே இத்தகைய அற்புதம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டது. நமது நாயனாருக்கு நெடுங் காலத்துக்குப்பின் இரட்டையர் என்னும் புலவர்கள் வேண்டுகோட் கிணங்கி இறைவன் ஆறுவிலகச் செய்ததாகக் கூறும் ஒரு கதை கேட்கப்படுகிறது. மருத்துவ நூல்வல்லார் ஒரு பச்சிலையின் உதவியால் நீரினைத் திரட்டலாமென்பர்.

சேர நாட்டிலே நதிகளிலே அவற்றின் இருகரையிலுமுள்ள மரங்களினின்று வீழும் பூக்கள் மிகுதியாக இருத்தல் கூடும். மலை நாடாதலின் பூக்களும் மலைப்பண்டங்களும் ஆறுகளில் மிகுந்து செல்லுதல் இயற்கையே. குறிஞ்சி நிலத்திற்குரிய வேங்கைப் பூக்கள் பொன் மலர்கள் போலத் தரையில் வீழ்ந்து கிடத்தலால் நிலங்களெங்கும் 'பொலஞ்சுடர் பூ' என்றார்.

சேர நாட்டிலே மலைவளங் காரணமாகச் சோற்று வளமும் நிலத்தின் பெருவிளைவின் பயனாக மிகுந்திருத்தல் கூடும்.

உதியஞ் சேரலாதன் என்பவன் பாரதப்போரில் இருதரத்தாருக்குஞ் சோறு வழங்கியதாகப் புறநானூற்றில் ஒரு பாட்டுத்தெரிக்கின்றது. பிற்காலத்திலும் பார்ப்பனருக்கு ஊட்டுப்புரை முதலியவற்றிற் பெருஞ்சோறு வழங்கினமை யாவருமறிந்ததே. மக்கள் குறைவாகவும் நெல் விளைவு வேண்டிய அளவிற்கு மிகுதியாகவும் இருப்பின் நிலத்தலைவர்கள் யாவர்க்குஞ் சோறு வழங்குதல் நிகழக்கூடியதொன்றே. சோழவளநாடு சோறுடைத்து என்றாலுஞ் சோறு வழங்கும் மரபு மலைநாட்டிற் சிறப்பாக

அமைந்துள்ளதுபோலும்! வேழமும் மலைநாட்டில் மிகுந்திருப்பதால், பெரும்பான்மையு மஃதே ஊர்தியாகவும் பயன்பட்டதுபோலும்! கொடுங்கோளூரின்கண் நாடக அரங்குகளும் மாடங்களுங் கோபுரங்களுங் குளிர்ந்த சாலைகளும் மிகக்கவினுற விளங்கினமையால் அது பெரியதோர் அரசநகராகத் திகழ்ந்தது. பாடியாடும் பெண்டிர் மகரக்குழைகள் அணிந்திருந்தனர். அஃது இப்பொழுது மலைநாட்டில் வழங்கும் பெருந்தோடு போன்றதோ பிறிதோ விளங்கவில்லை. மாதர்கள் ஆடல்பாட லியற்றுதல் ஒரு மதிப்புச் செயலாக அக்காலத்தில் நிகழ்ந்தது போலும்! சேர மன்னரும் முதலில் நம்பியாரூரரைத் திருக்கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். இறைவரைத் தொழுதே அவரை அரண்மனைக்கு யானைமேல் ஏற்றிச் சென்றார். யாவருஞ் சுந்தரமூர்த்திகளின் பெருமையை உணர்தற் பொருட்டும், தமக்குத் தலைவராகக் கொண்டு அவருக்குப் பணியியற்றுதலைத் தமக்குப் பெரும்பேறாகக் கொண்டமையாலும், நாயனாரை யானைமீது முன் ஏற்றிச் சேரர் பெருமான் பின்னிருந்து சாமரம் வீசினரென்க. அருட்பெரு மன்னராகத் திகழ்ந்தமையாற் சேரமான், சிங்காசனத்தில் வீற்றிருக்கச்செய்து அவருடைய திருவடிகளை விளக்கினார். சேரர்பெருமானைப் பேரன்பராகத் தாங் கருதினமையாலும், இத்தகைய செயல்களுக்கு நாயனார் முதலில் இணங்காதிருந்தார். பெருமாள் வேண்டுகோளை மறுக்க மாட்டாமையால் பின் இசைந்தனரென்க. திருவையாற்றில் ஆறு விலகியபோதுஞ் சேரமான் பொருட்டே இறைவன் அவ்வற்புதத்தை நிகழ்த்தினானென்று நமது நாயனார் அவருக்கு மொழிந்தமையாற் சேரமானது பெருமையை அவர் பாராட்டினரென்பது தெளிவு. 'உம்பர் நாதர் உமக்களித்ததன்றோ' என்றது காண்க. சேரமானுக்காகவே திருவையாற்றினுக்கு நாய

ஞர் சென்றது காண்க. சேர நாட்டில் நிகழ்ந்த விளையாட்டுக்களில் யானைப்போரும் மற்போருஞ் சிறந்தனவாகும். மருத நிலத்தில் யானைப்போர் நடப்பதற்கு இயைபில்லையாதலால், சேவற்போர் தகர்ப்பாய்ச்சல் முதலியனவே ஆண்டு நிகழ்ந்தன.

இறைவனைத் திருவாரூரின்கண்ணே வழிபடுதல் நாயனாருக்கு அளவுகடந்த உவகை தருவதாகும். கண்ணிணையிழந்துந் திருவொற்றியூரை விட்டுத் திருவாரூருக்கு விரைந்துசென்ற நாயனார் திருவாரூர் நினைவுவந்தபோது சேர நாட்டிற் றங்காரென்பது திண்ணம். சேரமானைப் பிரியுங்காலை

"என்னுயிருக் கின்னுயிராம் எழிலாரூர்ப் பெருமானை
வன்நெஞ்சக் கள்வனேன் மறந்திரேன்"

என்றது காண்க.

திருவொற்றியூரிற் சங்கிலியாரைப் பிரிந்தது போலவே கொடுங்கோளூரிற் சேரமன்னரைப் பிரிந்து திருவாரூருக்கு நமது நாயனார் செல்வாராயினர். திருஞானசம்பந்தர் பாண்டியமன்னரது பிரிவாற்றாமையைத் தீர்த்தற்கு அவரது அரசியற்கடமையை நினைவுறுத்தியது போல ஈண்டுஞ் சேரமான்பெருமாளுக்கு ஆட்சிக்கடனை நாயனார் நினைவுறுத்தினரென்க. 'இன்னருளா லரசளிப்பீர் நீர் இருப்பீர்' என்றது காண்க.

திருமுருகன் பூண்டிக்கருகே ஆறலைத்தல் (வழி யலைத்தல்) நிகழ்ந்தமை அரசர் பொருள் குடிகளுடையது ஆதலின், அது நாயனார்க்கு வேண்டற்பால தன்றென்று நினைவுறுத்தற்கோ, அல்லது பொருட்சுமை கொண்டுசென்ற தொழிலாளிகள் ஊழ்வினைவலியால் ஆறலைக்கப்படுதற்குரிய இயைபிருந்தமையாலோ பிற எக்காரணத்தினாலோ என்பது விளங்கவில்லை. பண்டாரமென்னுஞ் சொல்

நிதித்தொகுப்பு என்னும் பொருளில் இவ்வரலாற்றுப் பகுதிக்கண் வழங்கலாயிற்று. இறைவனளிக்கும் பேரின்பத்தை 'மூல பண்டார'மென்ருர் மணிவாசகனர். ஊழ்வினையின் வலி திருவருளாற்றலின் முன் நிலேப்பதில்லை என்பது திருமுருகன்பூண்டிப் பெருமானைப் பாடிப் பறிக்கப்பட்ட பண்டார மனைத்தையும் நாயனுர் மீட்பித்தமையால் இனிது விளங்கும்.

'எத்துக்கிங் கிருந்தீர்' என்றது தோழமையின் நயத்தைக் குறிப்பதாகும். திருமுருகன் பூண்டிப் பதிகத்துள் 'வடுகவேடுவர்' என்றமையாற் கொங்கு நாட்டிற்கு வடபாலுள்ள தெலுங்க நாட்டிலிருந்து வடுகவேடுவர் கொங்கு நாட்டுச் சுரங்களில் வந்து ஆறலைத்தலை அக்காலத்து மேற்கொண்டிருந்தனரென்பது கருத இடமுண்டு.

## கூ. வெள்ளையானைமேற் கயிலைக்குச் சென்றது

சேர நாட்டிலிருந்து திருவாரூர்க்கு மீண்டபின் நமது நாயனர் வினைப்போகந் தொலைத்துச் சிவபோக முதிர்ச்சி யுற்ருர். ஒருநாள் சேரமானைக் காணுங் கருத்துடன் திருவாரூர்ப் பெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு மலைநாட்டிற்குச் செல்லும் வழியில் மேலைக் கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூர் சென்றடைந் தார். அவ்வூரில் மறையோர் வாழும் மாடவீதி மருங்கு அவர் சென்றபொழுது ஒன்றுக்கொன்று எதிராயுள்ள இரண்டு வீடுகளில் ஒரு வீட்டில் மங்கல ஒலியும் மற் ருெரு வீட்டில் அழுகையொலியுங் கேட்டன. அதற்கு ஏது யாதென வினவியபோது 'அவ்விரண்டு வீட்டி லிருந்த இருபுதல்வர் ஐந்தாவதாண்டில் குளிக்கச் சென்ற குளத்தில், ஒருவனை முதலை விழுங்கிற்று ; மற்றவன் பிழைத்து மீண்டனன் : மீண்டவனுக்குப் பூணூற் சடங்கு நடைபெறுகின்றது ; பிள்ளையை இழந்த வீட்டி னர் அழுகையொலி எழுப்பினர்' என்று விடையிறுக்கப் பட்டது. இதனைக் கேட்டு நாயனர் திருவுள்ளத்தி லிரக் கங்கொண்டிருந்தகாலை, பிள்ளையை இழந்த மறை யோனும் அவன் மனைவியும் வந்து தங்கள் துயரத்தை மறைத்துக்கொண்டு ஆளுடையநம்பி திருவடிகளில் வீழ்ந்திறைஞ்சினர். அப்போது திருநாவலூரர் மன்னர் 'புதல்வனை இழந்தீர் நீவிரோ' என்று வினவ, அவர்கள் அச்செய்தி முன்னே நிகழ்ந்தொழிந்தது ; இப்போது எங் கள் அன்பு பழுதாகாமல் தாங்கள் எழுந்தருளப் பெற் ரேம்' என்று மறுமொழி பகர்ந்தனர். அப்போது நாயனர் மைந்தனிழந்த துயரத்தையும் மறந்து என்பா லன்புவைத்த இவர்களது சிறுவனை முதலைவாயிலிருந்து

மீட்பித்த பின்னரே, அவிநாசிப் பெருமான் கழல்பணி வேன் என்று எழுந்து, புதல்வனை முதலை விழுங்கிய பொய்கையை உசாவிச் சென்று, அதன் கரையில் நின்று திருப்பதிகம் அருளிச்செய்யத் தொடங்கினர். 'உரைப்பா ருரை யுகந்து உள்க வல்லார்' என்னுந் திருப்பாட்டு முடியு முன் சென்ற ஆண்டுகளும் நிரம்பிய பருவம் உடைய மைந்தனை அறக்கடவுள் முதலைவாயிலிட அஃது அவனைக் கரையிற் கொணர்ந்துமிழ்ந்தது. உடனே தாய் சென்று பிள்ளையை எடுத்துக்கொண்டுவந்து உயிரளித்த திரு வாளன் சேவடிக்கீழ் விடுத்தனள். விசும்பில் விண்ணவர் கள் மலர்மாரி பொழிந்தனர். மண்ணிலுள்ளோர் பெரு வியப் புற்றனர். மறையோ ரெல்லாம் மேலாடையை விண்ணிலெறிந்து பெருமுழக்கஞ் செய்தனர். மந்திர ஒலி மிக்கெழுந்தன. ஆளுடையநம்பி உயிர்ப்பித்த புதல் வனையு மழைத்துக்கொண்டு அவிநாசிப் பெருமானைப் பணிந்து பாடினர். அச்சிறுவனுக்கு நூலணிமணம் நிகழ் வித்த பின்னர், ஆளுடைய நம்பி மலைநாடடைந்து சிவ ஞானது திருப்பதிகள் பலவற்றையுந் தொழுதனர். அவர் வரவை அடியார் பலர் சேரமானுக்குத் தெரிவித்தனர். மிகுந்த மகிழ்ச்சியோடு சேரமான் அவர்களுக்குக் காசுந் தூசுங் கலன்களும் வழங்கினர்.

நாடெங்குங் கவினுறுவித்து நாயனர் வரவினை யாவரும் அறிந்து எதிர்கொள்ளும்படி முரசறைவித்தார். சேரமன்னர் யானைமேற் சென்று வன்றொண்டரைக் கண்டவுடன் அவரது திருவடித்தாமரைகளில் 'வீழ்ந் திறைஞ்சி நெருங்கிக்கலந் தளவளாவித் திருவாரூர்ச் செல்வம் வினவி இன்புற்றார். பின்னர் நாவலர் பெரு மானை வேழமிசை ஏற்றித் தாம் பின்னிருந்து அவருக்கு மேல் வெண் கொற்றக்குடை கவித்தார். மிகுந்த கிளர்ச்சி யோடும் பெருஞ் சேனைகளோடும் அமைச்சரோடுந் திரு

நீற்றன்பர் குழாத்தோடும் இருபெருந்தோழரும் வஞ்சிமா நகரின் மணிவாயிலை அடைந்தனர். பின்னர் எல்லாவகைச் சிறப்புக்களுடனும் நகரத்தார் எதிர்கொள்ள இருவரும் அரசமாளிகை யடைந்தபின் அரியணைமீதுள்ள மலரிருக் கையில் ஆளுடைய நம்பியை எழுந்தருள்வித்துச் சேர மான் பூசனைகள் புரிந்து பரிசனங்கட்கு மிகுந்த நிதியினை வழங்கினர். இருபெருந் தோழரும் பரமர் திருப்பதிகள் பலவும் பணிந்தேத்தி அவண் வைகும் நாளிலே ஒருநாள் சேரமன்னர் நீராடச்சென்றிருந்தபோது, வன்றொண்டர் திருக்கயிலைக்கு மீளும் நாள் அணித்தாகக்கண்டு திருவஞ் சைக்களத்துத் திருக்கோயிலை வலங்கொண்டு இறை வரது பூங்கழலிணை போற்றித் 'தலைக்குத் தலைமாலை' என்னுந் தமிழ்மாலை சாத்தி இவ்வுலகினிற் பாச வாழ்க்கையை அறுத்திட வேண்டுமென்று குறையிரந் தனர். கயிலைநாதர் வெள்ளானைமீது ஆளுடைய நம் பியை ஏற்றிக்கொண்டு வரும்படி அயன் முதலிய தேவர் கட்குக் கட்டளையிட்டார். அங்ஙனமே அவர்கள் திரு வஞ்சைக்களத்துக்குச் சென்று திருக்கோயில்வாயிலில் நின்ற திருநாவலூரர்க்கு இறைவரது திருவருட் கட்ட ளையை அறிவித்தனர். அவரும் அதனைப் பணிந்து ஏற் றுக்கொள்ளவே விண்ணவர் அவரை வெள்ளையானைமேல் ஏற்றி ஐவகை நாதமொலிப்ப வானவர் பூமழை பொழிய அழைத்துச் சென்றார்கள். அப்போது தமது தோழராகிய சேரமன்னரை நாயனார் திருவுள்ளத்திற் கொண்டு சென்றார்.

சேரமான்பெருமாள் சுந்தரமூர்த்திகளின் செயலை யறிந்தவுடனே பக்கத்தில் நின்றதொரு பரியினிலேறித் திருவஞ்சைக்களஞ் சென்று திருநாவலூர் மன்னர் வெள்ளையானையின்மீ தேறி விண்ணிற் செல்வதைக் கண்டு தாமேறிய குதிரையின் காதில் திருவைந்தெழுத்

தினை முறைப்பட ஓதினர். உடனே அப்புரவி வானி லெழுந்து சென்று சுந்தரமூர்த்திகள் ஏறிச்செல்லுங் களிற்றினை வலம்வந்து அதற்கு முன்னுகவே திருமலைத் திசை நோக்கிச் சென்றது. சேரமானது வீரர் பலர் விசும்பினிலே தமது தலைவன் மறைந்தவுடன் உடைவாளி னுலே தமது உடலினை வீழ்த்திவிட்டு வீரயாக்கை எடுத் துச் சேரமானது குதிரையின்முன் சென்றனர். ஆளு டைய நம்பியும் இமையவர் குழாம் முன்செல்லத் தாம் யானைமீது சென்றகாலை, 'தானெனை முன்படைத்தா' னென்னுந் தமிழ்மாலை பாடினர். பின்னர் யாவருந் திருக்கயிலை வாயிலை யடைந்தனர். சேரமான் உட்செல் லத் தடைப்பட்டு வெளியே நின்றனர். திருநாவலூரர் இறைவர் திருமுன்பு சென்று அவரால் உரிமைமொழி கூறப்பெற்றுப் பணிந்தெழுந்து, இறைவரது பெருங் கருணையை வியந்து பேரின்ப வெள்ளத்திற் றிளைத்தனர். பின்னர் வன்றொண்டர் சேரமான் வெளியே நிற்பதை இறைவர்க்குத் தெரிவித்தனர். உடனே இறைவர் திரு நந்தி வாயிலாகச் சேரமானை உள்ளே அழைப்பித்து அவர் வணக்கமேற்றுப் புன்முறுவலோடு, 'இங்கு நாம் அழையாமல் நீ எவ்வாறு வந்தனை' என்று வினவினர். அதற்கு அவர் 'நம்பியாரூரர் திருவடிகளைப் போற்றி அவர் யானைக்கு முன் வந்தேன்? இங்கு வந்தபின் உம் முடைய பெருங் கருணை வெள்ளம் அடியனேனைத் திரு முன்பு கொணர்ந்தது' என்று மொழிந்து, 'திருவுலா ஒன்று பாடியுள்ளேன். அதனைத் திருச்செவி சாய்த்தருள்க' என்று வேண்டினர். இறைவன் அதனைக் கேட்டருளிய பின் ஆலால சுந்தரருடன் அவரையுங் கணநாதர் தலைவ ராய்த் தங்கும்படி இறைவர் அருள்செய்தார். பரவை யாருஞ் சங்கிலியாருங் கமலினியாராகவும் அநிந்திதையா ராகவும் முன்போல் உமையம்மையார்க்குத் திருத்தொண்டு

புரிவாராயினர். நம்பியாரூரர் வழியில ருளிச்செய்த திருப்பதிகம் ஆழிவேந்தன் வாயிலாகத் திருவஞ்சைக்களத் திற் சேர்க்கப்பட்டது. சேரமான் பெருமானின் திருஞான உலா மாசாத்தனாரால் திருப்பிடவூர் வேதியர் சிலர்க்கு அளிக்கப்பட்டு, அவர் வாயிலாக இந்நிலவுலகில் வழங்குவ தாயிற்று.

## ஆராய்ச்சி

ஆளுடையநம்பி இந்நிலவுலகிலே தோன்றியது பரவை யார் சங்கிலியார் என்னும் பெண்மணிகளோடு இல்லறம் நடாத்துதற் பொருட்டே யென்பது பெரிய புராணத்தால் இனிது விளங்கும். இந்நிலவுலகில் அன்னோர் போகம் நுகர்ந்து ஒழித்தபின்னர், அவாவற்று இடைவிடாது சிவ போகந் திளைக்கும் பெருநிலை எய்தினர்.

> "இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்
> துன்பத்துட் டுன்பங் கெடின்"

என்றவண்ணம் அவாவற்றவிடத்தே இடையறாத இன் பந் தலைப்படுமாதலின், சிறிதவாவின் பொருட்டாக நமது நாயனாருக்கமைந்த வினைப்போகம் ஒழிந்தவுடன் இடை யறாது சிவபோகமே விளைவதாயிற்று. இதுபற்றியே "முடிவி லாத சிவபோகம் முதிர்ந்து முறுகிவளர்ந்ததால்' என்றார் ஆசிரியர் சேக்கிழார் - திருப்புக்கொளியூரில் முதலைவாய்ப் பிள்ளையை யழைத்தது, பெரியதோர் இரக்கத்தால் நிகழ்ந்த அருட் பெருஞ் செயலாகும். இறைவன் சிவஞானிகள் வேண் டியதை வேண்டியவாறே ஈந்தருள்வன். சிவஞானிகள் தம் பொருட்டு எதனையும் வேண்டார். புகழ் நாட்டுங் கருத்துடன் அவர்கள் அற்புதங்கள் செய்வதில்லை. திரு வருள் வழிநின்று உயிர்கள்மாட்டு வைத்த பெருங்கருணை யினாலே அவர்கள் அற்புதச் செயல் நிகழ்த்துவர். முத்தர் சித்தரென்ற இருதிறத்தாருட் சிவஞானிகளென்பார்

முத்தர். சித்தரினும் முத்தர் சிறந்தவர் என்பது தெளிவு. சித்தர் பெருந்தவங்கிடந்து பெறும் எண்வகைச் சித்திகளுள் ஈசத்துவமென்னுஞ் சித்தி·பிரமன் முதலியோர் மாட்டுத் தன்னுணை செலுத்தி அவராற் பூசிக்கப்படுதல்; பிரார்த்தி என்னுஞ் சித்தி மனத்தால் விழையப்பட்டன அனைத்தும் விழைந்தவாறே பெறுதல்; இச் சித்துக்களுடையார்க்கு விண்ணவரை ஏவல் கொண்டு நினைத்ததை முடித்தல் கூடுமாயின், எவ்வகைச் சித்தியையும் நினைத்த அளவிலே இறைவன்பாற் பெறவல்ல முத்தர்களுக்கு இயலாத தொன்றில்லை. நம்பியாரூரர் சீவன்முத்தராதலின், ஈண்டுக் குறித்த அற்புதச்செயலை இறைவனருளால் நிகழ்த்துதல் இயலாததொன்றன்று. ஊழின் வலியுந் திருவருள்வழி நிற்பாரைத் தடைசெய்யவொண்ணுது. இறந்த மைந்தனை மீளப்பெறும் நல்வினையுடைமை பற்றியே அம்மைந்தனின் பெற்ருேர்கள் நாயனுரைக் கண்டு வணங்கவும் அவருடைய இரக்கத்திற்கு உரியராகவும் பெற்றனர். உடம்போடு உயிர் மாய்வதில்லை என்பதை அறிந்தவர்கள் உடம்பினைநீத்த உயிர் கடவுள் கட்டளைப்படி ஓரிடத்தில் இருத்தல்வேண்டும் என்று கொள்வர். உலகிற்ருேன்றும் பருஉடம்பிற்கு உள்ளீடாகச் சூக்குமதேகமென்னும் நுண்ணுடம்பு உயிருடன் பிரியாதிருக்குமென்பது இறந்த மக்கள் ஆவியைப்பற்றி ஆராய்ச்சிசெய்யும் மேலைநாட்டுப் புலவரு மறிந்ததே. நுண்ணுடம்பே பிறிதோ ருடம்பெடுத்துப் பிறத்தற்கு மூலமாய தென்பது மறுபிறப்புக் கொள்கையுடையார் துணிபு. பூதங்களின் சேர்க்கையினுலே நுண்ணுடம்பு பருஉடம்பாய்ப் பரிணமிக்கும் ஆதலானும், முனிகருப்பம் இராத் தங்காது என்பதற்கிணங்கப் பொதுவாகப் பத்து மாதத்தில் உருவெடுத்தற்குரியன சிறப்பான் இயற்கைச் சத்திகளின் வலியால் மூன்றே முக்கால் நாழிகையில் உரு

வெடுத்தல் போலப், பூதங்களின் சேர்க்கையால் இறைவன் ஆணையின் நிற்கும் அயன் பூத உடம்பினைப் படைத்தல் கூடுமாதலானும், முதலைமுதலிய எவ்வுயிரும் இறைவன் ஆணைக்குட்பட்டதாகலான் முதலை பிள்ளைக்கு ஊறு செய்யாது உமிழ்தல் கூடுமாதலானும் முதலைவாய்ப் பிள்ளையை அழைத்தல் நிகழ்ந்திருத்தற்பாலதென்றே இறைவன் பேரருட்டிறமும் அடியார் பெருமையும் உணர்ந்தவர்கள் கொள்ளுவரென்க. பெறலருந் திருவருட் பேறுடையார் இறைவனைப்போலத் தாமும் ஐந்தொழிலியற்ற வல்லாரென்று சிலர் கருதுவர். அது சித்தாந்த நூற்கருதன்று. 'உயிர்தான் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே' என்றபடி திருவருட் பேறுடையார் சிவபோகம் ஒன்றிற்கே உரிமையுடையார். இறைவனை வேண்டியே எதனையும் நடத்துவர் என்பது சுந்தரமூர்த்திகள் காலனைப் பிள்ளை தரும்படி கட்டளையிடும் வண்ணம் இறைவனை வேண்டினமையாற் றெளியப் படும்.

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியா
யரைக்காட் டரவா வாதியு மந்தமு மாயினுய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே

என்றது காண்க. மேலாடையைத் தலைக்குமேலே எறிந்து மகிழ்ச்சி காட்டுதல் அக்காலத்து வழக்கம் போலும்! சேரமான் பெருமான் நட்புரிமை பாராட்டுந் திறத்தினை முரசறைவித்தலைக் கூறுமிடத்து ஆசிரியர் சேக்கிழார் மிக நயமாகப் புனைந்துரைத்தார்.

"செய்வ தொன்று மறியாது
சிந்தை மகிழ்ந்து களிகூர்ந்தே
ஐய னணைந்தா னெனையாளு
மண்ண லணைந்தா ரூரிற்

சைவ னணைந்தா னென்றுணையாந்
தலைவ னணைந்தான் றரணியெலா
முய்ய வணைந்தா னணைந்தானென்
றேகை முரசஞ் சாற்றுவித்தார்.''

சுந்தரமூர்த்திகளும் சேரமானும் அளவளாவிய இயல்பினை முற்கூறியதுபோலவே ஈண்டுஞ் செவ்விதின் எடுத்தோதினர். 'ஒன்றுந் தன்மையராய் முந்த எழுங் காதலிற் றெழுது முயங்கி' என்றது காண்க. இருநண்பர் கண்டபோது ஒருவரை யொருவர் ஊர் நலம் உசாவுவதைச் 'செல்வம் வினவுதல்' என்பது அக்காலத்துவழக்குப்போலும்! முதலிற் சுந்தரமூர்த்திகள் சேரநாட்டிற்கு வந்தபோது யானைமீது அவருக்குப் பின்னிருந்து கவரி இரட்டியதுபோல, இரண்டாவது முறை அவர் வந்த போது மதிவெண்குடை கவித்தார். உடல் பொருள் ஆவி மூன்றும் ஆசிரியன்பால் ஒப்புவித்தல்போல நண்பினால் உடலையும் உயிரையும் நாயனார்பால் ஒப்புவித்த சேரமான், பொருளாகிய அரசையும் அவர்பால் ஒப்புவித்தனரென்க. சுந்தரமூர்த்திகள் தமிழிலே இறைவனைப் பாடினமையால், தமிழின் பெருமாள்' என்ற பெயர் இவருக்கமைந்தது. சேரநகராகிய கொடுங்கோளூரை ஆசிரியர் சேக்கிழார் 'வஞ்சி' என்றார். 'வஞ்சிமணி வாயிலையடைந்தா'ரென்றது காண்க. நமது நாயனார் திருவஞ்சைக் களத் திருக்கோயிலுக்குப்போய் இவ்வுலக வாழ்க்கையை விட வேண்டுமென்று பாடச்சென்ற காலத்தே சேரமான் உடன்செல்ல இயலாமைக்கு ஏது, சுந்தரமூர்த்திக்குப் பின் சேரமான் கடவுள் திருமுன்பு செல்லுதற்குரிய பான்மையிருந்தமையே என்க. சுந்தரமூர்த்திகளும் திருக்கோயில் சென்று குறையிரந்த அப்பொழுதே இறைவன் தம்மை அழைத்தற் பொருட்டு வெள்ளானையை அனுப்புவனென்று எதிர்பார்த்திலர்போலும்! காதல் மிகுந்தவுடன்

பிறரொருவரையுங் கருதாது காதற் கிழத்திபாற் செல்லுங் காமுகன்போல அவாமேலீட்டினாலே இறைவனை வழிபடத் தாம் திருவஞ்சைக்களத்துக்கு எழுந்தருளினர். சேரமான் நீராடிவரும்வரை காலந்தாழ்த்திலர். இறைவன் அனுப்பிய வெள்ளானைமீது ஏறிச் செல்லுங்காலை, சேரமான் பெருமானை மனத்துள் நினைத்தனர். அதனாற் சேரமானுங் கயிலைக்கு வரப்பெற்றனர்.

"போற்றி வானவர் பூமழை பொழிந்திடப்
போதுவா ருயிரெல்லாஞ்
சாற்று மாற்றங்க ளுணர்பெருந் துணைவரை
மனத்தினிற் கொடுசார்ந்தார்"

என்றது காண்க. வெள்ளானையை ஓங்கார (பிரணவரத) மென்று மறைகள் கூறுகின்றன. அமிர்தநாத உபநிடதத்திற் பேரறிவாளர் ஓங்கார ரதத்திலேறித் திருமாலைச் சாரதியாகக் கொண்டு பிரமலோக மெனப்படுஞ் சிவலோகத்தை அடையும்பொருட்டு உருத்திரனை ஆராதிக்குங் கருத்துடையவர் என்று உரைத்தமை இதனை வலியுறுத்தும். சிவரகசியத்துள் தவயோகமுடைய ஒருவன் உடலை விடுத்த பின் கண்ணுதலார் விமானம்விட அதனிலேறிப் பிரமன் விண்டு முதலிய தேவர்கள் புடைசூழச் சென்றானென்று கூறப்பட்டது. 'தென்னாசிரியக் குருபரம்பரை' என்னும் வைணவ நூலுள், "முத்தனைப் போகுமவனை ஸ்ரீவைகுண்டநாதன் எதிர்கொள்ளுமாப்போல" என்றதுங் காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளானைமீதேறிச் செல்லும்போது பாடிய நொடித்தான்மலைத் திருப்பதிகத்தில் "இந்திரன்மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம் வந்தெதிர்கொள்ள வென்னை மத்த யானையருள் புரிந்து" என்று அருளிச் செய்தமை மேற்கூறியவற்றை வற்புறுத்துதல் காண்க. அத்திருப்பதிகத்தில் "ஊனுடல் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்த

மனே" என்றமையால் நிலவுலகில் எடுத்த உடம்பினைக் கயிலையி லிருத்தற்குரிய திருமேனியாக இறைவன் மாற்றி யருளினன் என்றறிகின்றோம். நாயனுரது திருமேனி செம்மையுற்றதேயன்றி நிலவுலகிற் கழன்றொழியவில்லை. இதனுல் அவர்க்கு இறப்பில்லை என்பது தெளிவு.

சுந்தரமூர்த்தி நாயனுர் சென்ற கயிலை எவ்விடத்தது என்பது தெளிவாக விளங்கவில்லை. அதனைச் சிவலோகம் என்பாருமுளர். மேற்கூறிய உபநிடதத்தில் ஓங்கார ரதத்தில் ஏறிச் சிவலோகத்திற்கு அறிஞர் செல்வர் என்றது காண்க. சிவலோகமானது அயனுலகத்திற்கும் அரி உலகத்திற்கும் அப்பால் உள்ளதென்று சைவ நூல்கள் கூறுகின்றன. இந்திரன் அயன் மால் முதலிய தேவர்கள் வைகும் உலகங்கட்கு அப்பாற்பட்ட இடத்திற்குச் செல்வோரை அத்தேவர்கள் எதிர்கொண்டு போற்றுதல் பொருத்தமான தொன்றே. சிவலோகத்தில் இறைவன் அம்மையோடு வீற்றிருப்பனென்றும், அங்கே கணநாதர்கள் இருப்பதாகவுஞ் சிவதருமோத்தரங் கூறுகின்றது. "வித்தக வேதகியுடனும் வீற்றிருப்பன் வினைப்பயனை விளக்கவேதான்" "கணநாதர் வரதனுக்கு குணதிசைச் சன்னிதியின் வாய்த்தார்" என்றது காண்க. சிவலோகத்தை ஒருசாரார் கயிலை என்று கூற, மற்றொரு சாரார் அஃது இமயமலைக்கு வடபால் நுட்பமாய்ப் பிறராற் காணப்படாததாய் உள்ள வெள்ளிமலை என்பர். வெள்ளிமலையிற் சிவலோகத்திற்போல இந்திரன் முதலிய தேவர்கள் வழிபடும் பொருட்டு இறைவன் உமையம்மையோடு வீற்றிருப்பதாகப் புராணங் கூறும்.

அக்கயிலை மலையானது கீழேயுள்ள உலகங்களனைத்தையுங் கடந்து கீழ்ச்சென்றும் மேலேயுள்ள உலகங்களனைத்தையுங் கடந்து மேற்சென்றும் அண்டத்தின் அடியையும் முடியையும் பொருந்திப் பெரியதொரு தூண்

வடிவமாக நிற்பதென்றும், மேரு முதலிய பெருவரைகள் அதனைச் சூழ்ந்துள்ளன என்றுங் கந்தபுராணங் கூறுகின்றது. அம்மலையின் உச்சியிற் செம்பொற் கோயிலொன்று இறைவர்க்கமைந்துள்ளதாகவும் அதன்கண்ணுள்ள திருவோலக்க மண்டபத்தில் உமையொருபாகர் வீற்றிருப்பதாகவுங் கேட்கப்படுகின்றது. கயிலையைப் பற்றிக் கந்தபுராணங் கூறும் வரலாறு சிவதருமோத்தரத்திற் சிவலோகத்தைப்பற்றிக் கூறும் வரலாற்ருேடு மிகுதியும் ஒத்திருக்கின்றது. சிவலோகத்தை உருத்திரலோகமென்பர். அதற்கிையயவே நொடித்தான்மலை என்றவிடத்து நொடித்தான் என்பது அழித்தான் என்று பொருள்பட்டு உருத்திர மூர்த்தியை உணர்த்துதல் காண்க.

இமயமலையின்கண்ணுள்ள கயிலைப்பதியானது திருஞானசம்பந்தர் முதலியோராற் பாடப்பெற்றுள்ளது. அது நிலவுலகத்திலுள்ள திருப்பதிகளில் ஒன்ருகவே கருதப்படுகின்றது.

நொடித்தான்மலைப் பதிகத்தின் இறுதிப்பாட்டினில்,

"ஏழிசையின் றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழிகடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே"

என்று நமது நாயஞர் அருளிச்செய்திருப்பதால் நமது நாயஞரே கடற்றெய்வமாகிய வருணன் வாயிலாகத் திருவஞ்சைக்களத்திற்கு நொடித்தான்மலைத் திருப்பதிகத்தை அனுப்பியதாகத் தெரிகின்ருேம். சேரமான் பெருமாள் திருவைந்தெழுத்தின் பேராற்றலினுலே நிலத்தினின்று தமது பரியை விண்ணிற் பாய்ந்து கயிலைவரை செல்லுமாறியற்றினர் என்பது பெரியதொரு வியப்பாகத் தோன்றும். திருவைந்தெழுத்தின் உண்மையை உணர்ந்து புல் பிறவிகளிலும் விதிப்படி எண்ணிப் பெருந்திறல் வாய்ந்தவர் சேரமான் பெருமாளாதலின், அவர் அம்

மந்திரத்தை ஓதியவுடன் அதற்குயிராகிய சிவசத்தியே அவரது பரியினை விண்மிசைக் கொண்டுய்த்ததாகும். மந்திர மூலங்கள் சுத்த வித்தையிலெழுவதாலும், அவைகளே கீழுள்ள தத்துவங்களின் பொருள்களை இயக்குவன ஆனதாலும் மந்திரங்களின் வலியால் பொருள்களை இயக்குதல் கூடுமென்பது தத்துவ நூலுணர்ந்தார் கொள்கை. மந்திரமென்பது நினைப்பவனைக் காப்பதென்று பொருள்படுமென்க. எத்தெய்வத்தையும் அதற்குரிய மந்திரத்தை ஓதி வழிபடின் அத்தெய்வமானது வழிபட்டவருக்குத் துணையாய்த் தன் ஆற்றலைப் பயன்படுத்தும். எல்லா மந்திரங்கட்கும் அடிப்படையாகிய சிவமூல மந்திரப் பயிற்சியிற் கைதேர்ந்த பெருமக்கள் அதனைக் கூறிய அளவிலே, அம்மந்திரத்திற்கு உரிமை பூண்ட சிவபரம் பொருளே தனது அருளாற்றலால் அவர்கள் விழைந்ததை முற்றுவிக்கும் என்று தெளிக.

'செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ'

என்ற தேவாரமும் அது. சேரமான் விசும்பினிற் சென்று மறைந்தவுடன் அவர்தம் படைவீரர் உயிர்நீத்து வீரயாக்கையை மேற்கொண்டமை அவர்களுடைய கோப்பற்றின் பெருக்கினை வலியுறுத்தும். இறக்கும்போது நினைத்த நிலையை உயிரடையும் என்ற கொள்கைக்கிணங்க அப்படைவீரர் இறந்தவுடன் சேரமான்பாற் சென்று சேவக மேற்றனர்.

"உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்"

என்றபடி உயிரிழத்தற்கு அஞ்சாது தலைவன் தம்மை வேண்டாவிடத்துந் தம்முடைய வீரங்குன்றாது இறக்கும் படைவீரரே அரசர்க்கு இணையற்ற துணையாவர். அத்தகைய சிறப்புடையோர் நிலவுலகத்திற் றிகழ்ந்

தமைக்குச் சேரமான் வீரரே சான்றுவர். சேரனுக்குச் சுந்தரமூர்த்திகளைத் தனிப்பெருந் தோழமை பூண்ட ஞானசாரியராக இறைவன் அமைத்தமையால், அவர் வாயிலாகவே சேரமானை ஆட்கொள்ளக் கருதிப்போலும் அவரைத் திருமணி வாயிலின் புறத்தே தடையுற்று நிற்கப் பணித்தனரென்க.

"இங்கு நாமழையாமை நீ யெய்தியதென்"

என்ற வினாவிற்குச் சேரமன்னர்,

'அடியனேன் ஆரூரர் கழல்போற்றிப் புரசை யானைமுன்
சேவித்து வந்தனன்'

என்று விடைபகர்ந்ததும் இதனை வற்புறுத்தும். வானிற் சென்று கயிலையடைவதற்குத் திருவைந் தெழுத்தினை ஓதியதுபோல இறைவர் திருமுன்பெய்துதற்கு 'ஞானஉலா'ப் பாடியருளினர் போலும். கணநாத ரென்பார் சிவசாரூப முடையார் என்பது

"சுத்தவொளிப் படிகமயந் துளங்குமிளம்
பிறைவிளங்கச் சூடிச் சூடு
மத்தமலர்ச் சடைமுடியர் வரமுடையர்
திரிநயனம் வாய்த்து ளார்தங்
கைத்தலங்க ளொருநான்கிற் கனன்மழுவுந்
திரிசிகையுங் கதையும் வாளும்
வைத்துடைய கணநாதர் வரதனுக்குக் குணதிசைச்சந்
நிதியின் வாய்த்தார்"

என்னுஞ் சிவதருமோத்தரச் செய்யுளால் இனிது விளங்கும். சிவசாரூபம் யோகிகள் பெறும் பேறு. யோக ஞானத்தில் தலைநின்றமையால் கணநாதர்தலைவராய் அவர் திகழ்ந்தனர். நம்பியாரூரர் நிலவுலகிற் புகுந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்டபின் ஞானம் பெற்றுச் சீவன் முத்தி நிலை யடைந்தனர். கணநாதர் தலைவராய் நின்றே அந்

நிலையை அடைதற்குரியார், சிறியதோர் வழுவினுல் ஞாலத்திடை தோன்றினர். தோன்றிய காரணமுற்றுப் பெற்றபின் அவர் தமது பழைய அதிகார நிலையினை அடைந்தனர். அந்நிலையிலிருந்து அவர் பரமுத்தி யடைதற் குரியாரென்பது சைவநூற் கருத்து. அவரை ஆசிரியராகக் கொண்டு ஞானம் பெற்றமையால் சேரமான் பெருமாளும் உயர்நிலை யடைந்தனர்.

பூதங்கள் கணநாதர் சொல்வழி நிற்குந் தொண்ட ராவர். சாத்தர் என்னுங் கடவுள் பூதநாதர் எனப்படுவர். அவர் கைலாயத்துச்சென்று கணநாதர் சொல்வழி நிற்கும் இயல்புடையாரென்பது அறிவுநூற் கருத்து. பூதநாத ரைக் குலதெய்வமாக அந்தணரும் பிறருங் கொள்ளுதல் வெளிப்படை. அறுபான்மும்மை நாயன்மார்களுள் பெரு மிழலைக் குறும்பரென்பார் மிழலைநாட்டுக் குறுநில மன்ன ராய்த் திகழ்ந்து ஆளுடைய நம்பியையே மனமொழி மெய்களால் வணங்கி எண்வகைச் சித்திகளும் பெற்றுச் சுந்தரமூர்த்திகள் கயிலாயத்திற்குச் செல்லும் நாளினை யோகத்தினு லறிந்து யோக முயற்சியாற் கபாலத்தின் மூலம் திறக்கப் பெற்றுக் கயிலை சேர்ந்தனர்.

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்ரு னென்ருல்
விளங்கிழையா ரிருவரொடு முயங்க லாமோ
உரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ னின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயிற்
சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ யறமுதனல் வகைசெய் தோயே.

(நால்வர் நான்மணிமாலை, ௧௧)

சுந்தரமூர்த்திகளைத் திருத்தொண்டத் தொகை பாடும் வண்ணங் குறிப்பாகத் தூண்டிய நாயனூர் விறன்மிண்ட

நாயனார் என்பவர். அவர் மலைநாட்டிற் செங்குன்றூரில் வெளாண் மரபில் தோன்றினவர். அவர் திருவாரூரிற் சென்று தேவாசிரியன் மண்டபத்திற் சிவனடியாரோ டிருக்கும்பொழுது சிவனடியாரை வெளிப்படையாக வணங்காது சென்ற சுந்தரமூர்த்திகள் திருக்கூட்டத் திற்குப் புறம்பு என்றும், வன்றொண்டர்க் கருள்செய்யும் இறைவனும் புறம்பு என்றுஞ் சொல்லித் திருத்தொண் டத்தொகை பாடப் பெற்றபின் பெருமகிழ்வுற்றார்.

சோமாசிமாற நாயனாரும் ஆளுடைய நம்பியைத் தொழுது சிறப்படைந்தவராவர். அவர் செய்த பெரு வேள்விக்குச் சிவபெருமான் வரவிசைந்தமை திருநாவ லூரர் வேண்டுகோளுக் கிரங்கியே யாமென்ப.

(சோமாசிமாற நாயனார் புராணம் ரு-ம் பாட்டிலே)

"வன்றொண்டர் பாதந் தொழுதொன்று சிறப்பு வாய்ப்ப
என்றும் நிலவுஞ் சிவலோகத்தி லின்ப முற்றார்"

என்றது காண்க.

## கூ. தேவார ஆராய்ச்சி

திருநாவலூரர் வரலாற்றுட் போந்த பல குறிப்புக்களுக்கு அவர் தேவாரப் பதிகங்களிலே அகச் சான்றுகள் கிடைக்கின்றன. திருத்தொண்டத் தொகையுட் கக-ம் பாட்டிற் 'சடையன் இசைஞானி காதலன்' என்றும், திருவதிகை வீரட்டானப்பதிகம் ௰-ம் பாட்டில் 'இசை ஞானிசிறுவ' னென்றுங் கூறினமையால், அவரது தந்தையார் சடையனு ரென்றும், தாயார் இசைஞானியாரென்றும் புலனுகின்றது. திருநாவலூர்ப் பதிகத்தின் இறுதிப் பாட்டில், 'நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரையன் ஆதரித்தீசனுக் காட்செயுமூர்' என்ற விடத்துத் தம்மை விருப்புடன் வளர்த்த நரசிங்கமுனையரையர் செய்தி பகர்ந்தமை காண்க. 'வாழ்ந்து போதீ' ரென்ற திருவாரூர்ப்பதிகத்தின் அ-ம் பாட்டில், 'இழியாக்குலத்திற் பிறந்தோம்' என்று தம் மரபியல்பு கூறினர். பிறவிடங்களிலுந் தமது மரபு குறித்தல் உற்றுநோக்குக. திருமுருகன்பூண்டித் திருப்பதிகத்தின் கடைக்காப்புப் பாட்டினிற் 'சிந்தையிற் சிவதொண்டன்' என்றமையாற் சிவத் தொண்டிற் குரிமையுடைமை குறித்தவாறு காண்க. ஆரூரனென்று திருத்தொண்டத் தொகையிலும் பிற பதிகங்களிலுந் தமது பெயரை விளக்கினமையோடு ஊரனென்றும் நம்பியென்றும் பல பதிகங்களிற் றம் பெயர் குறித்தனர். திருநாவலூர்க்கோன்' என்ற விடத்து நாயனுர் திருப்பதி குறிக்கப்பட்டது.

"தன்மையினு லடியேனைத் தாமாட்கொண்ட
நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்ட'
னென்பதோர் வாழ்வுதந்தார்"

என்னுந் திருநாவலூர்ப் பதிகத்தின் உ-ம் பாட்டில் 'வன்றொண்ட' ரென்ற பெயர்க்காரண முரைத்தார்.

'வெண்ணெய் நல்லூரில் வந்தெனை யாளுங்கொண்ட'

என்ற சொற்றொடர் அப்பதிகத்திற் பல பாட்டுக்களில் வந்துள்ளது. அதன் ௰-ம் பாட்டில்

'அடக்கங்கொண் டாவணங் காட்டிநல்
வெண்ணெயூ ராளுங்கொண்டார்'

என்றும், திருக்கோலக்காத் திருப்பதிகத்தின் ரு-ம் பாட்டில்,

"அன்று வந்தெனை யகலிடத் தவர்மு
ளை தாகவென் றுவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த"

என்றும், திருநள்ளாற்றுப் பதிகம் கூ-ம் பாட்டில்

"வெண்ணெய்நல் லூரி
லற்புதப்பழ வாவணங் காட்டி யடிய னுவென்னை யாளது
கொண்ட நற்ப தத்தை"

என்றும் வருவனவற்றால், தம்மை ஓலை காட்டி யாண்டமை அறிவித்தவாறும். இத்திருப்பதிகத்தின் அ-ம் பாட்டில்,

"அடியேற் கெளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கு
நாதனை"

என்றவிடத்து இறைவன் தமக்குத் தோழனாய்த் தூது சென்றமை குறிக்கப்பட்டது. கோட்புலி நாயனாரின் புதல்வியரைத் தமக்குப் புதல்வியாகக் கருதினமை இதன் ௰-ம் பாட்டிற் 'சிங்கடிதந்தை' 'வனப்பகையப்பன்' 'ஊரன் வன்றொண்டன்' என்றும், திருப்பனையூர்ப் பதிகத்தின் இறுதியில் 'வனப்பகை யவளப்பன் வன்றொண்டன்'

என்றும், திருநாட்டியத்தான்குடிப் பதிக விறுதியிற் 'கோட்புலி சென்னி' 'சிங்கடியப்பன்' என்றும் விதந்தமையாற் றெளியப்படும். இறைவன் தமக்குத் தோழனுய்ப் பரவையாரையுஞ் சங்கிலியாரையுந் தமக்கு மணம் புரிவித்ததைப் 'பத்திமையும் அடிமையையும்' என்னுந் திருவாரூர்ப்பதிகத்தில், 'என்னுடைய தோழனுமாய்' 'மாழையொண்கண் பரவையைத் தந்தாண்டானை' யென்றும், 'சங்கிலியோடெனைப் புணர்த்த தத்துவனை' யென்றும் முறையே ௰, கக-ம் பாட்டுக்களால் விளக்கி யருளினர். திருவாமாத்தூர்ப் பதிகத்து ச-ம் பாட்டினிற் 'சங்கிலிமென்றோள் ஆர்ந்தனன்' என்றும், திருக்கோடிக்குழகர் திருப்பதிகத்தின் உ-ம் பாட்டிற் 'பின்றான் பரவைக் குபகாரஞ் செய்தாயோ' என்றும் வருவன இருபெண்டிர் மணத்தை வற்புறுத்தும். சங்கிலியாரின் பொருட்டுத் திருவொற்றியூர்ப் பெருமான் தமது திருக்கண் கொண்டதை வடதிருமுல்லைவாயிற் பதிகத்து ங-ம் பாட்டினில்,

"தண்பொழி லொற்றி மாநக ருடையாய்
சங்கிலிக் காவென்கண் கொண்ட பண்ப"

என்ற விடத்துக் குறித்தருளினர்.

"பழியதனைப் பாராதே
படலமென்கண் மறைப்பித்தாய்"

என்று திருவெண்பாக்கப் பதிகத்து முதற்பாட்டிற் கூறுவது மது. இதன் கூ-ம் பாட்டில் மகிழடிக்கீழ்ச் சூளுரைத்தமை கூறப்பட்டது.

'பொன்னவிலுங் கொன்றையினய் போய்மகிழ்க்கீ ழிருவென்று
சொன்னவெனைக் காணுமே சூளுறவு மகிழ்க்கீழே
யென்னவல்ல பெருமானே யிங்கிருந்தா யோவென்ன
வொன்னலரைக் கண்டாற்போ லுளோம்போகீ ரென்றானே'

இறைவன்பால் தான் ஊன்றுகோல் கேட்டதும் அவர் அஃதருளியதும் பின்வரும் அடிகளால் விளங்கும்.

'ஊன்று கோலெனக் காவதொன் றருளாய்'
(திருவொற்றியூர், துயர்நீங்கவோதிய பதிகம், ௪)
'ஊன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே'
(திருவெண்பாக்கத் திருப்பதிகம், ௰)

கண்கொண்டது மாத்திரமல்லாமல், கடவுள் நமது நாயனாருக்கு நோயையுங் கொடுத்தனரென்பது

"கண்ணி லேனுடம் பில்லடு நோயாற்
கருத்த ழிந்துனக் கேபொறை யானேன்"
(திருவாவடுதுறை, அஞ்சலென்றருளாயென்ற பதிகம், ௨)

என்பதாலுணர்க.

இறைவன் தமக்குப் பிறப்பிறப்புக்களை ஒழித்தருளி என்றும் அவனை மறவாத நன்னெறி உதவினனென்பதைப் பின்வரும் அடிகளில் தெரிவித்துள்ளார்.

"சாதலும் பிறத்தலுந் தீவிர்த்தெனை வகுத்துத்
தன்னரு டந்தவென் றலைவனை" (திருக்கழுமலம், க)

"மறவா மனம் பெற்றேன்
பிழைத்தொரு காலினிப் போய்ப்பிற வாமைப்
பெருமை பெற்றேன்" (திருக்கழுமலம், ௪)

'இருந்து நின்றுங் கிடந்து மும்மை யிகழா தேத்துவோம்'
(திருவாரூர், வாழ்ந்துபோதீரென்ற திருப்பதிகம், ௰)
'மேலைநோய் இம்மையே வீடுவித் தானை'
'எற்றான் மறக்கே னெழுமைக்குமெம் பெருமானையே'
(திருப்புக்கொளியூரவிநாசி, க)

"மேவியவெந் நரகத்தி லழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான்காட்டும் வேதமுத லானை"
(திருக்காளாட்டுமுள்ளூர், ௰)

இவ்வடிகளால், திருநாவலூரர் என்றும் இறைவனையே மறவா தேத்தினரென்பது தெளிவு.

> 'ஒருத்தனை யல்லதிங் காரையு முணரேன்'
>
> (திருக்கழுமலம், ௩)
>
> 'மெய்ப்பொரு ளன்றி யுணரேன்'
>
> (திருவாரூர், 'கரையுங்கடலும்', அ)
>
> 'அங்கையான் கழலடி யன்றிமற் றறியான்'
>
> (திருத்துருத்தி, ௰)
>
> 'வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால்
> மற்றுநா னறியேன்' (திருவொற்றி, துயர்நீங்க, ௧)

என்ற அடிகள் மேற்கூறியதை வற்புறுத்தும்.

இறைவன் தன்னை யாட்கொள்ளுகின்ற முறையை அவனை வழிபடாதா ருணரமாட்டா ரென்பார், நம்மை யாள்கின்ற தன்மையை யோரார்' என்றார். கயிலைநாதன் தம்மைத் தடுத்தாட் கொண்டதைக் குறிப்பாலுணர்த்து வார்,

> "இங்ஙனம்வந் திடர்ப்பிறவிப் பிறந்தயர்வே னயராமே
> யங்ஙனம்வந் தெனையாண்ட வருமருந்தெ னாரமுதை"
>
> (திருவாரூர், 'பத்திமையும்', ௪)

என்றார். இறைவன் விண்ணவர் அறியாநெறியினைத் தமக்குணர்த்தின னென்பார்,

> "முத்தியு ஞானமும் வானவ ரறியா
> முறைமுறை பலபல நெறிகளுங் காட்டி"

என்றார். திருவருட்காட்சியால் எல்லாம் அறிவாராதலின்,

> "கல்லாதேபல கற்றேன்" (திருநாட்டியத்தான்குடி, ௪)

என்றார்.

'விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள் தன்னை' என்றது மது. பிறவியற்றவிடத்தும் இறை நினைவு வேண்டுமென்பார், 'பிறவேனாகிலு மறவேன்' (திருநாட்டியத்தான்குடித் திருப்பதிகம், க) என்றார். தமது உறுதியையும் ஆசை யின்மையையுந் தெரிப்பார், அப்பதிகத்தின் அம்முதற்பாட்டிலேயே 'காணீராகிலுங் காண்பனென் மனத்தால்' என்றும், ரு-ம் பாட்டில் 'ஒட்டீராகிலும் ஒட்டுவனடியேன்' என்றும், திருவஞ்சைக்களம் தேவாரம் அ-ம் பாட்டில் 'வெறுத்தேன் மனைவாழ்க்கை' யென்றும் அருளிச்செய்தனர்.

'ஊனுருடல் புகுந்தான்' என்று மணிவாசகனார் அருளிச்செய்தவண்ணமே நமது நாயனாரும் பின்வரும் அடிகளிற் கூறியருளினர்.

"நானே லுன்னடியே நினைந்தே னினைதலுமே
யூனா ரிவ்வுடலம் புகுந்தாயெ னொண்சுடரே."

(திருக்கச்சிமேற்றளி, ௬)

உயிரினோடும் உள்ளத்தோடுங் கலந்தானென்பார், 'வவ்வி யென்னாவி மனங்கலந்தானை' (திருவலிவலம், அ) என்றார்.

தமது உலகவாழ்க்கை உண்மையாற் றுன்பமும், தோற்றத்தா லின்பமு முடையதென்பார், 'வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீற்றி' யென்றனர். இறைவன் தமக்குக் குருவென்பதனைக் 'குறியேயென்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன்' என்றவிடத்து விளக்கினர். இறைவன் தமக்கு உடற்பற்றை அறவே, ஒழித்தமையையும், விண்ணவர்கள் தம்மை வழிபடும்படி செய்வித்துத் தமக்கு வெள்ளை யானை அருளினமையையும் பின்வரும் அடிகளிற் குறிப்பித்தருளினர்.

'ஊனுடல் வேறுசெய்தான்' (கயிலை, ௪)
'விண்ணுலகத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மே
லென்னுடல் காட்டுவித்தான்' ( ,, ௫)
'இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மத்தயானை யருள்புரிந்து'
( ,, ௬)
'அலைகடலா லரையன் னலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச'
( ,, ௭)
'ஆழிகடலரையா வஞ்சையப்பர்க் கறிவிப்பதே' ( ,, ௰)

என்ற அடிகளால், கடற்றெய்வமாகிய வருணன் திருநாவலூர்ப் பெருமான் கயிலைக்குச் செல்லும்பொழுது அவரை வழிபட்டனனென்றும், தொடித்தான்மலைப் பதிகத்தைத் திருவஞ்சைக்கள முதல்வர்க்கு அறிவிக்கும்படி அவர் அவனைக் கேட்டனரென்றும் புலனாகின்றது.

நமது நாயனார் தமது அனுபவத்திற் சிவபிரானின் மிக்க கடவுள் வேறில்லையென்பார்,

'பிறதேவரைக்
காணா தொழிந்தேன் காட்டுதியே லின்னங் காண்பனோ'
(திருப்புக்கொளியூ ரவிநாசி, ௮)

என்று நயமிக மொழிந்தார். இறைவனை 'ஒருவன்' 'ஒருத்தர்' என்று கூறுமரபு இவர் தேவாரத்துள்ளுங் காணப்படும்.

'கரையுங் கடலு மலையுங் காலையு மாலையு மெல்லா
முரையில் விரவி வருவா னொருவன்' (திருவாரூர், ௧)
'கருத்தார வுற்றுளனா மொருவனை'
(திருவாரூர், பிரிந்திருக்கேனென்ற திருப்பதிகம், ௯)

என்றது காண்க.

சிவபெருமான் சத்தியுஞ் சிவமுமாயும், மூவர்கோனுயுந் திகழ்பவனுய் மூவரையுந் தன்றிருமேனியின் றுதிப் பித்தோனு யுள்ளவரென்பார்,

'மூவராயு மிருவராயுமுதல் வனவ னேயாம்'
'மூவரென விருவரென முக்கணுடை மூர்த்தி'

(திருவெதிர்கொள்பாடி, ச)

'முந்தி யாகிய மூவரின் மிக்க
மூர்த்தி யைமுதல் காண்பரி யானை'

(திருவாள்கொளி புத்தூர், எ)

'மூவரின் முதலாயவன் றன்னை' (திருநீடூர், ரு)
'மூவருருத் தனதா மூலமுதற் கருவை'

என்றூர்.

கடவுள் எல்லாப் பொருளோடும் அத்துவிதமாய்க் கலந்துநிற்குந் தன்மையை அவனது எண்வடிவங் கூறு முகத்தானும், பிறவாற்ருனும் ஆளுடைய நம்பி பல திருப் பாட்டுக்களிற் பகர்ந்தருளினர்.

'நிற்பனவு நடப்பனவா நின்மலன்'

(திருக்கலய நல்லூர், எ)

'நானுய பரனை' (திருவதிகைவீரட்டானம், ச)
'ஊனையுற்றுயி ராயினீ ரொளிமூன்றுமாய்'

(திருவீழிமிழலை, க)

'சூழொளி நீர்நிலந்தீத் தாழ்வளி யாகாசம்'
(திருவாரூர், என்றுகொலெய்துவதென்ற திருப்பதிகம், கூ)

'நிலனே நீர்வளிதீ நெடுவானக மாகிநின்ற
புலனே'

(திருக்கற்குடி, அ)

'அட்ட மூர்த்தியை'

(திருவாரூர், மறக்கலுமாமேயென்ற திருப்பதிகம், உ)

'பலவுருவுந் தன்னுருவே யாய பெருமானை'

(திருக்காட்டுமுள்ளூர், க)

'மண்ணீர் தீவெளிகால் வருபூதங்க ளாகிமற்றும்
பெண்ணோ டாணலியாய்ப் பிறவாவுரு வானவனே'

(திருக்கடவூர், சு)

'காலமு ஞாயிறு மாகிநின்றார்'

(திருநின்றியூர், க)

'உறவுமூழியுமாய பெம்மாற்கிடமாவது'

(திருப்புனவாயில், சு)

'கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானை'

(திருவாரூர், மறக்கலு, எ)

என்றது காண்க. திருமூலர், 'தானே மழைபொழி தையலுமாவன்' என்றார்.

இறைவனே எல்லாக் கலைகட்கு முதல்வ னென்பது,

'எழுத்தொடு சொற்பொரு ளெல்லாங் கண்டானே'

'மேலையார் மேலையார் மேலாய எண்டானே'

'கலைக்கெலாம் பொருளாய்'

(திருவாரூர், மறக்கலுமாமேயென்ற திருப்பதிகம், எ)

'இழைக்கும் மெழுத்துக் குயிரே யொத்தியால்'

(திருவஞ்சைக்களம், ௪)

என்பதாற் றெளிக.

இறைவன் பிறப்பு முதலிய மாற்றங்களில்லாதவ னென்பார்,

'பிறவா தவனே பெறுதற் கரியாய்'

(திருவெஞ்சமாக்கூடல், ரு)

'மூப்பது மில்லைப் பிறப்பது மில்லை யிறப்பதில்லை'

(திருவேள்விக்குடியுந் திருத்துருத்தியும், க)

'பெண்ணொ டாணுமல்லர்'

(திருவேள்விக்குடியுந் திருத்துருத்தியும், க)

என்றருளினர். இறைவனே எல்லாவற்றையும் படைத்து எவ்வுயிர்க்கு மாதாரமாய் ஓங்கார வடிவினனாய்த் திகழ்வனென்பார்,

'படைத்தாய் ஞாலமெல்லாம்'

(திருக்கழிப்பாலை, அ)

'தாயுந் தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனார்'

(திருக்கடவூர் மயானம், ரு)

'ஊனங்கத்துயிர்ப் பாயுயிர்க்கெல்லா
மோங்காரத்துரு வாகிநின்றானை'

(திருவலிவலம், க)

'உலகத் துயிர்க்கெல்லா மொளியானை'

(திருவாரூர், மறக்கலுமாமே, எ)

'எவ்வுயிர்க்கும் வைப்பினை'

'தந்தைதா யுலகுக்கோர் தத்துவன் மெய்த்தவத்தோர்க்குப்
பந்தமாயின பெருமான்'

(திருவானைக்கா, ச)

என்றனர். இறைவன் ஆகமங்களை வானவர்க் கருளினனென்பது,

'அண்டர்தமக் காகமநூன் மொழியு மாதியை'

என்றதாற் காண்க. கடவுள் பெருங்கருணையாற் பாசநீக்கமுஞ் சிவப்பேறும் வகுத்தனனென்பது,

'வெய்தாய வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு
மிகவிரங்கி யருள்புரிந்து வீடுபே றாக்கம்
பெய்தானை'

என்பதாற் றெளிக. 'பந்தம் வீடிவை பண்ணினீர் என்றது மது.

இறைவன் தன்னை யடைந்தார்க்கே சிறப்பாகத் திருவருள் புரிவனென்பது,

'சேர்ந்தவர்க்கே சித்திமுத்தி செய்வானை'
(திருவலிவலம், உ)

'பார்க்கின்ற வுயிர்க்குப் பரிந்தானை'
(திருவாரூர், மறக்கலு, ௯)

'பரவிநாடொறும் பாடுவார்வினை பற்றறுக்கும்
பைஞ் ஞீலியீர்'
(திருப்பைஞ்ஞீலி, ௬)

'பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்'
(திருக்குருகாவூர் வெள்ளடை, ௯)

'பொய்யா நாவதனாற் புகழ்வார்கண் மனத்தினுள்ளே
மெய்யே நின்றெறியும் விளக்கேயொத்த தேவர்பிரான்'
(திருக்கழிப்பாலை, ௧)

'கலந்தார்க் கருள்செய்திடுங் கற்பகமே'
(திருவெஞ்சமாக்கூடல், ரு)

'பாடும் புலவர்க் கருளும்'
(திருவஞ்சைக்களம், ரு)

என்பவைகளால் விளங்கும். மேற்போந்தவைகளால் இறைவன், பாடுமன்பர்க் கருளுவதும் வற்புறுத்தப் பட்டது. அவன் ஆகமசீலர்க்குந் தண்டமிழ்வாணர்க்கும் பேரருள் புரிவதை ஒரு திருப்பாட்டில் விதந்தோதினர்.

'அம்மானே யாகமசீலர்க் கருணல்கும்
பெம்மானே பேரருளாளன் பிடவூரன்
றம்மானே தண்டமிழ்நூற்புல வாணர்க்கோ
ரம்மானே பரவையுண் மண்டளி யம்மானே'
(திருவாரூர்ப் பரவையுண்மண்டளி, ரு)

கடவுள் தண்டனையும் அருட்செயலே யென்பதை,

'ஒறுத்தாய் நின்னருளி லடியேன் பிழைத்தனகள்'
(திருக்கழிப்பாலை, க)

என்பதாற் குறிப்பித்தார்.

நமது நாயனரது செந்தமிழ்ப்பற்று பின்வரும் அடிகளால் நன்கு விளங்கும்.

'பொய்யாத் தமிழூரன்' (திருத்துறையூர், கக)

'தங்களூர் தமிழானென்று பாவிக்கவல்ல'
(திரு இடையாறு, சு)

'இருந்துநீர் தமிழோ டிசைகேட்கு
மிச்சையாற் காசு நித்த நல்கினீர்'

'செந்தமிழ்த் திறம் வல்லிரோ'
(திருப்பைஞ்ஞீலி, ச)

'கலைமலிந்த தென்புலவர்'
(திருக்கருப்பறியலூர், கக)

'திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்'
(திருநின்றியூர், அடைந்தே, க)

'பண்ணிடைத் தமிழொப்பாய்'
(திருக்குருகாவூர் வெள்ளடை, சு)

'பன்னலந் தமிழாற் பாடுவேற் கருளாய்'
(வடதிருமுல்லைவாயில், ச)

'பண்ணின் றமிழிசை பாடலின்பழவேய் முழவதிர'
(திருக்கேதாரம், எ)

இறைவன் எந்தவிடத்திலும் நினைந்தபோதே தனக்கருள் புரிவனென்பதையும், எக்காலத்தும் ஒரு பெற்றித்தாய பேரருளாள னென்பதையும் பின்வருமடிகளால் நமது பரமாசாரியர் தெரித்தினர்.

'எங்கேனும் மிருந்துன் னடியே னுனைநினைந்தால்
அங்கேவந் தென்னொடு முடனாகி நின்றருளி'
(திருக்கழிப்பாலை, உ)

'எங்கே போவே னாயிடினு மங்கேவந்தென் மனத்தீராய்ச்
சங்கை யொன்று மின்றியே தலைநாள் கடைநா ளொக்கவே
கங்கை சடைமேற் கரந்தானே' (திருவையாறு, உ)

இறைவன் ஐம்பொறிகளோடுங் கலந்திருந்து தமக் கருளிய சிறப்பினை,

'சிரக்கண் வாய்செவி மூக்குயர் காய
மாகித் தீவினை தீர்த்தவெம் மானை'
(திருக்கோலக்கா, க)

'நாக்குஞ் செவியுங் கண்ணுநீ யென்பனன்'
(திருவஞ்சைக்களம், எ)

என்னுந் திருவாக்கினு லறிவுறுத்தருளினர். யாவர்க்கும் அவரவர் விரும்பிய வண்ணம் இறைவன் அருள்புரிதலை,

"எவ்வெவர் தேவ ரிருடிகண் மன்னர்
எண்ணிறந் தார்கண்மற் றெங்குநின் றேத்த
அவ்வவர் வேண்டிய தேயருள் செய்து
அடைந்தவர்க் கேயிட மாகிநின் றானை'

என்றதாற் பெறவைத்தார்.

இறைவனை வழிபட்டுப் பெரும்பேறு பெற்ற அடியார்கள் பலரையும், ஆளுடைய நம்பிகள் பல திருப் பாட்டுக்களிற் குறித்துள்ளார். திருஞானசம்பந்தருக்குத் தாளங்கொடுத்தமை திருக்கோலக்காத் திருப்பதிகத்தில் (அ) விதந்தோதப்பட்டது.

'நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்பு
ஞானசம்பந்த னுக்குல கவர்முன்
றாளமீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மையாளனை'

என்றது காண்க. திருநாவுக்கரசுநாயனாரை,

'அகத்தடிமை செய்யு மந்தணன்றா
னரிசிற் புனல்கொண் டுவந்தாட்டுகின்றான்

மிகத்தளர் வெய்திக் குடத்தையும்நும்முடி
மேல்விழுத் திட்டு நடுங்குதலும்
வருத்தவ னுக்கு நித்தற்படியும்
வருமென் றொருகா சினைநின் றநன்றி
புகழ்த்துணை' (திருவரிசிற்கரைப்புத்தூர், ௬)

'இணைகொ ளேழெழு நூறிரு பனுவ
லீன்றவன்றிரு நாவினுக்கரையன்
கணைகொள் கண்ணப்ப னென்றிவர் பெற்ற
காதலின்னரு ளாதரித் தடைந்தேன்'
(திருநின்றியூர், அடைந்தேனென்ற, ௨)

என்றமை நோக்குக.

இன்னும் பல அடியார்களையு முனிவர்களையுந் தேவர்களையும் வழிபட்டுப் பேரருள் பெற்றதாக நாயனார் கூறுகின்றார். சண்டேசுர நாயனாரையுங் கண்ணப்பரையும் பன்முறை இவர் வியக்கின்றார்.

'எறிந்த தண்டி யிடந்த கண்ணப்ப
னேத்து பத்தர்கட் கேற்ற நல்கினீர்'
(திருவீழிமிழலை, ௬)

'பணிந்த பார்த்தன் பகீர தன்பல
பத்தர் சித்தர்க்குப் பண்டு நல்கினீர்'
(திருவீழிமிழலை, ௭)

'இண்டைமலர் கொண்டுமண லிலிங்கம தியற்றி
யினத்தாவின் பாலாட்ட விடறியதா தையைத்தா
டுண்டமிடு தண்டியடி யண்டர்தொழு தேத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கன்'
(திருக்கலய நல்லூர், ௯)

'ஏயர்கோ னுற்றவிரும் பிணிதவிர்த்துக்
கோதனங்க ளின்பால் கறந்தாட்டக்

கோலவெண்மணற் சிவன்றன்மேற்சென்ற
தாதைதாளற வெறிந்தசண் டிக்குன்
சடைமிசைமல ரருள்செயக் கண்டு'
(திருப்புன்கூர், ௩)

'பத்திசெய்தவப் பரசுராமற்குப்
பாதங்காட்டிய நீதிகண் டடைந்தேன்'
(திருநின்றியூர், அடைந்தே. ௩)

'வந்தொரிந்திரன் வழிபடமகிழ்ந்து
வானநாடுநீ யாள்கெனவருளிச்
சந்திமுன்றிலுந் தாபரநிறுத்திச்
சகளிசெய்திறைஞ் சகத்தியர்தமக்குச்
சிந்துமாமணி யணிதிருப்பொதியிற்
சேர்வுநல்கிய செல்வங்கண் டடைந்தேன்!'
(திருநின்றியூர், அடைந்தே, ரு)

'இயக்கர்கின்னரர் யமனெடுவருண
ரியங்குதீவளி நாயிறுதிங்கண்
மயக்கமில்புலி வானரநாகம்
வசுக்கள்வானவர் தானவரெல்லா
மயர்ப்பொன்றின்றிநின் றிருவடியதனை
யர்ச்சித்தார்' (திருப்புன்கூர், சு)

உமையம்மையார் காஞ்சியில் வழிபட்டதை,

'உள்ளத்துள்கி யுகந்துமை நங்கை
வழிபடச்சென்று நின்றவாகண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிடவஞ்சி
வெருவியோடித் தழுவவெளிப்பட்ட
கள்ளக்கம்பனை' (திருக்கச்சியேகம்பம், ௧௦)

என்றவிடத்துச் சிறப்பித்தார்.

திருமால் கண்ணிடந்து மலராகத் தூவியதைப் பல விடங்களில் நாயனர் விதந்தனர். எடுத்துக்காட்டு வருமாறு:

'திருமகள்கோ னெடுமால் பலநாள்
சிறப்பாகிய பூசனை செய்பொழுதி
லொருமலராயிரத்திற் குறைவா
னிறைவாகவொர் கண்மலர் சூட்டலுமே
பொருவிறலாழி புரிந்தளித்தீர்'

(திருவரிசிற்கரைப்புத்தூர், உ)

'திகழுமாலவ னாயிரமலரா
லேத்துவானொரு நீண்மலர்குறையப்
புகழினாலவன் கண்ணிடந்திடலும்
புரிந்துசக்கரங் கொடுத்தல்கண் டடியேன்'

(திருவாவடுதுறை, கூ)

குமரப்பெருமானைச் சிவனார் புதல்வரென்றவிடத்துச் சம்புபக்கமும், பிறதேவரோடிணைத்துக் கூறியபோது அணு பக்கமுங் கூறியதாகக் கொள்க.

'மயிலூர்தி முருகவே டாதை'

(திருவதிகை வீரட்டானம், அ)

'செட்டியப்பனை' (திருவாரூர், மறக்கலுமாமே, க0)

'குறவர்மங்கைதன் கேள்வனைப் பெற்றகோனை'

(திருநள்ளாறு, எ)

'மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்'

(திருநாகைக்காரோணம், கூ)

'குமரன் முதற்றேவர் தங்கள்நம்பி'

(திருமுதுகுன்றம், நம்பியென்ற திருப்பதிகம், உ)

'குமரன் றிருமால் பிரமன் கூடியதேவர் வணங்கும்'

(திருவாரூர், கூ)

சிவபரமாகச் சத்தி, கணபதி, முருகன் என்பவர்களையே ஆசிரியர் நகைச்சுவைமிக விதக்கின்றார்.

'கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
யங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார்கோற் றட்டி
ருங்களுக்காட் செய்யமாட்டோம்' [யாளா

(திருக்கச்சியோணகாந்தன்றளி, உ)

என்றது காண்க.

மக்களுக்குக் கீழ்ப்பட்ட உயிர்ப்பொருள்களுள் பசு விடியற்காலத்தில் இறைவனை வணங்கியதை அழகாக ஒரு செய்யுளில் நாயனர் எடுத்தியம்பியுள்ளார்.

'இரவிநீள்சுட ரெழுவதன் முன்ன
மெழுந்துதன்முலைக் கலசங்க ளேந்தி
சுரபிபால்சொரிந் தாட்டிநின் பாதந்
தொடர்ந்தவார்த்தை திடம்படக் கேட்டு'

(திருநின்றியூர், அடைந்தேனென்ற, ச)

சிலந்தி சிவனரைப்பூசித்துச் செங்கட்சோழ னகிய செய்தி பல விடங்களில் விதக்கப்பட்டுளது.

'தெருண்டவாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப்பந்தர் சிக்கென வியற்றச்
சுருண்டசெஞ்சடை யாயது தன்னைச்
சோழனக்கிய தொடர்ச்சிகண் டடியேன்'

(திருவாவடுதுறை, உ)

'திருவும் வண்மையுந் திண்டிற லரசுஞ்
சிலந்தியார் செய்த செய்பணிகண்டு
மருவுகோச்செங்க ணன்றனக்களித்த
வார்த்தைகேட்டுநுன் மலரடி யடைந்தேன்'

(திருநின்றியூர், அடைந்தே, க)

சிவபெருமான் எண்குணத்தினன் என்பதைப் பல விடங் களிற் குறித்துள்ளார்.

'எண்குணத்தினனை' (திருக்கானட்டுமுள்ளூர், ௲)
'ஈசன்ற னெண்டோள்கள் வீசியெரியாட்'

( ,, அ)

தில்லையில் மூவாயிரவரும், திருவீழிமிழலையில் முந்நூறு வேதியரும் இறைவனைப் பூசித்தனரென்பது,

'முட்டாத முச்சந்தி மூவாயிரவர்க்கு மூர்த்தி'

(கோயில், எ)

'முந்நூற் றறுபதுவேலி மூன்றுநூறு வேதியரோடு'

(திருநின்றியூர், அடைந்தே, க)

என்பதாற் றெளிக.

இறைவனை 'உருத்திர லோகன்' (திருவாரூர், க) என்றமையால், உருத்திரலோகத்திலே சிறப்பாக அவன் வீற்றிருப்பனென்று கருதப்படும். உருத்திர னென்ற தெய்வத்தை யாண்டும் விதந்தோதாவிடினும், 'மூவரின் மிக்க மூர்த்தியை முதல் காண்பரியானை' என்றமையால், மூவரில் ஒருவனாகிய உருத்திரனின் வேறாய் எளிதில் அறியப்படாதவன் முதல்வனென்பதே நமது பரமாசாரியார் கருத்து.

'உறவிலி யூனமிலி' (திருநனிபள்ளி, உ)

'மனத்தாலு நினைப்பரியான்' ( ,, க)

'இன்ன தன்மைய னென்றறி யொண்ணு வெம்மானை'

(திருவாரூர், மறக்கலுமாமே, க)

'அடையிலன் புடையானை யாவர்க்கு மறிவொண்ணு'

முதலான திருவாக்குகள் இறைவனது சொரூபலக்கணத்தை யுணர்த்துவன.

'கருத்தா திருத்தலாகாதாய்' (திருவாலங்காடு, சு)

என்றதுங் காண்க. சமயங்களுக்கெல்லாந் தலைவன் அவனே யென்பார்,

'சமயங்களின் நம்பி'

(திருமுதுகுன்றம், நம்பியென்ற திருப்பதிகம், சு)

என்றார். 'அறிவினுன் மிக்க வறுவகைச் சமயம்' என்றமையால், உட்சமயங்களையே திருநாவலூரர் விதந்தோதினரென்று கருதுக.

'வினைப்பற்றறுப்பானை,' 'தடுமாற்றறுப்பானை,' 'தத்துவ ஞானிகள் தடுமாற்றிலார்,' 'கட்டுமயக்கு மறுத்தவர் கைதொழு தேத்துமிடம்' என்ற சொற்றொடர்களால், பற்று, வினை, மயக்கம் அல்லது தடுமாற்றம் என்னுஞ் சொற்களே மும்மலங்களையுங் குறிப்பானுணர்த்து கின்றன.

'முன்னைச் செய்வினை யிம்மையில் வந்து
மூடுமாதலின் முன்னமே' (திருப்புறம்பயம், எ)

என்றமையாற் பழவினைவலி குறிக்கப்பட்டது.

'மேலைநோ யிம்மையே வீடுவித்தானை'
'மலமெலா மறுக்கு மிம்மையே
மறுமைக்கும் வல்வினை சார்கிலா'
(திருப்புறம்பயம், அ)

என்றமையாற் றிருவருட்பேறுடையார்க்கு எதிர்வினை யின்றென்பது சுட்டப்பட்டது.

'மலந்தாங்கியபாசப் பிறப்பறுப்பீர்' (திருச்சுழியல், சு)

என்றவிடத்து மலமென்பது ஆணவமலத்தையும், பாசம் மாயையும், பிறப்பு வினையையும் உணர்த்தி நிற்பன. அறுவகைக் குற்றத்தை ஓரிடத்துத் தொகுத்துரைத்தனர்.

'கலையமைத்த காமச்செற்றக் குரோதலோப மதவருடை
யுலையமைத்திங் கொன்றமாட்டேன்'
(திருக்கச்சியோணகாந்தன்றளி, அ)

என்றது காண்க.

பிறவிக்குக் காரணம் அறியாமையென்பதை,

'முன்னை முதற்பிறவி மூதறி யாமையினாற்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழிய'
(திருவாரூர், என்றுகொலெய்துவதென்ற, க)

என்றவிடத்துக் குறித்தருளப்பட்டது.

'அறுபதும் பத்துமெட்டு மாறினோ டஞ்சுநான்குந்
துறுபறித் தனைய நோக்கி' (திருவாரூர், அஞ்சேனென்ற, க)

என்றவிடத்துத் தத்துவங்கள் குறிக்கப்பட்டன. வீடு பெறுதற்கு நெடுந்தவம் வேண்டுமென்பர்,

'வீடுபெறப் பலவூழிகணின்று நினைக்குமிடம் வினைதீருமிம்'
(திருக்கச்சியனே கதங்காவதம், ம)

என்றார். உலக நிலையாமையையும் யாக்கையினிழிவையும் நமது பரமாசாரியர் பலவிடங்களி லுணர்த்துகின்றார்.

'தோற்றமுண்டேன் மரணமுண்டு'
(திருவெதிர்கொள்பாடி, உ)

'இன்பமுண்டேற் றுன்பமுண்டு'
( ,, அ)

என்றும்,

'நரம்பினோ டெலும்பு கட்டி
நசையினோ டிசையொன் றில்லாக்
குரம்பைவாய்க் குடியி ருந்து
குலத்தினல் வாழ மாட்டேன்'
(திருவாரூர், அஞ்சினேனென்ற திருப்பதி, ரு)

'மணமென மகிழ்வர் முன்னே
மக்கடாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர்' ( ,, க)

'உதிரநீ ரிறைச்சிக் குப்பை யெடுத்தது மலக்கு கைம்மேல்
வருவதோர் மாயக் கூறை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்'
( ,, அ)

என்றும் வருவன காண்க.

சரியை

'முட்டாமே நாடோறு நீர்மூழ்கிப்
பூப்பறித்து மூன்றுபோதுங்
கட்டார்ந்த விண்டைகொண் டடிசேர்த்து
மந்தணர்தங் கருப்பறியலூர்'
(திருக் கருப்பறியலூர், க)

என்பதனாலும், கிரியை

'நறுமலர்ப் பூவு நீரு நாடொறும் வணங்கு வார்க்கு
அறிவினைக் கொடுக்கு மாரூ ரப்பனே'
(திருவாரூர், அஞ்சினேனென்ற திருப்பதிகம், ௬)

என்பதனுலும், யோகம்

'வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி'
(திருப்பாண்டிக்கொடுமுடி, ௨)

என்பதனுலும், ஞானம்

'உன்னைப்போ லென்னைப் பாவிக்கமாட்டேன்'
(திருவொற்றியூர், துயர்நீங்கவோதியபதிகம், ௫)

என்பதனுலும் பெறப்படுதல் காண்க.

சமணர்சாக்கியரைப் பற்றிய குறிப்பு நமது நாயனுர் தேவாரத்துட் சிலவிடங்களிலேதான் காணப்படுகின்றது. இவர் காலத்திலே அவர்கள் கிளர்ச்சி மிகத் தளர்ச்சியுற்றிருந்ததுபோலும்!

'மோடுடைய சமணர்க்கு முடையுடைய சாக்கியர்க்கு
மூடம்வைத்த
பீடுடைய புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானை'
(கோயில், ௧)

'குண்டாடுஞ் சமணருஞ் சாக்கியரும் புறங்கூறும்'
(திருக்கருப்பறியலூர், ௧0)

'இருந்துண் டேரரு நின்றுணுஞ் சமணு மேச நின்றவன்.'
(திருவாள்கொளிபுத்தூர், ௧0)

'குண்டாடியுஞ் சமணுடியுங் குற்றுடுக்கையர் தாமுங்
கண்டார்கண்ட காரணம்மவை கருதாதுகை தொழுமின்.'
(திருமறைக்காடு, ௧)

கொலைமறுத்தல்

'ஒட்டெனு மொட்டெனு மாநிலத்துயிர் கோறலே'
(பொது, முடிப்பதுகங்கை, ௬)

நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக்
கொல்ல நினைப்பனவுங் குற்றமு மற்றொழிய'

(திருவாரூர், என்றுகொலெய்துவ, ௬)

என்றமையாற் பெறப்படுகின்றது. ஆலின்கீழ்ச் சிவபெருமான் நால்வர்க்கு அருமறைகள் பகர்ந்தமையும் அற முணர்த்தினமையும் பல திருப்பாடல்களிற் கூறப்பட்டிருத்தல் காண்க. சிலவருமாறு :—

'அருந்தவமா முனிவர்க் கருளாகியொ ராலதன்கீ
ழிருந்தறமே புரிதற் கியல்பாகிய தென்னைகொலாம்'

(திருநாகேச்சரம், ௨)

'கோதின் மாதவர் குழுவுடன் கேட்பக்
கோல வானிழற் கீழறம் பகர
வேதஞ் செய்தவ ரெய்திய வின்ப
மியானுங் கேட்டுநின் னிணையடி யடைந்தேன்'

(திருநின்றியூர், அடைந்தேனென்ற, ௬)

'மறைநான்குங் கல்லானிழற்கீழ்ப் பன்னியவெங்கள்பிரான்'

(திருமண்ணிப்படிக்கரை' ௧)

'ஆலக்கோயில்கல் லானிழற்கீ
ழறங்கட்டுரைத்த வம்மானே'

(திருக்கச்சூ ராலக்கோவில், ௧)

'சொற்பொருளாய்ச் சுருங்காமறை நான்கினையு
மோதியான்'

(திருநனிப்பள்ளி, ௧)

விரித்தவேத மோதவல்லார்'

(திருவெண்காடு, ௧௦)

'வேதந்தான் விரித்தோத வல்லானை'

(திருக்கச்சியேகம்பம், ௭)

'அங்கங்களு மறைநான்குடன் விரித்தான்'

(திருமறைக்காடு, ௧)

என்றமையால், அங்கங்கள் மறைகளெழுந்த காலத்தே யெழுந்தனவென்பது போதரும். ஆளுடையநம்பி இறைவனேடு பெரிதுந் தோழமையே பாராட்டினும் சிலவிடங்களிற் றம்மைத் தலைவியாக வுருவகித்து அகத்துறைகள் அமைத்துள்ளார்.

'என்னதெழிலு நிறையுங் கவர்வான்'
(திருவொற்றியூர், ௪)

'மறக்ககில் லாமையும் வளைகணில் லாமையும்'
(திருவாரூர், உணர்த்தவல்லீர்களென்ற திருப்பதிகம், ௩)

'வாழு மாறும் வளைகழலு மாறுமென' ( ,, ௩)

'கலைகள் சோர்கின்றதுங் கனவளை கழறலும் ( ,, ௫)

என்று வருவன காண்க.

நமது நாயனுர் காலத்தே, காஞ்சியிற் பல்லவ மன்னரும், தமிழ்நாட்டுச்சேர சோழ பாண்டிய மண்டலங்களிலே மூவேந்தரும் அரசாண்டனர். திருப்பரங்குன்றத் தேவாரம் பாடியபோது அத்திருப்பதியிலே, மூவேந்தரும் நாயனுரோடு இறைவனைத் தொழுதனரென்று தெரிகின்றது.

'பாரூர்பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்'
(திருக்கச்சிமேற்றளி, ௧0)

'உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை
மறுக்கஞ் செய்யும்' (கோயில், ௪)

'முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந்து' (திருப்பரங்குன்றம், ௧௧)

'பாரி' யென்னுங் கடைச்சங்க காலத்து வள்ளலைப் பற்றி வருந் தேவார அடி வருமாறு :—

'கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று
கூறி னுங்கொடுப் பாரிலை' (திருப்புகலூர், உ)

நகைச்சுவை, திருநாவலூரர் தேவாரத்திற் காணப் படுமாறுபோல வேறு எந்த அருணூலுள்ளுங் காண்டலரி தாகும்.

'ஆடி யசைந்தடி யாருநீரு மகந்தொறும்
பாடிப் படைத்தபொரு ளெலாமுமை யாளுக்கோ'
(திருமுதுகுன்றம், ரு)

என்றவிடத்து அரனுர் தேடிய பொருளெலாம் தமது மனைவிபா லொப்புவித்துவிட்டுத் தாம் ஐயமேற்றுண்ப தாகக் குறிப்பித்தார்.

'பரவையிவள் தன்முகப்பே யென்செய்தவாறே'
(திருமுதுகுன்றம், பொன்பெற்றபதிகம், க)

யென்றவிடத்தும் திருவாரூர்க் குளத்திற் பொன்னைப் பரவைமுன் ஒளித்துத் தமக்கு அவமானம் விளைத்தவா றென்னே யென்றார். திருக்கோளிலிப் பதிகத்தில்,

'பாதியோர் பெண்ணை வைத்தாய்
படருஞ்சடைக் கங்கை வைத்தாய்
மாதர்நல் லார்வருத்த
மதுநீயு மறிதியன்றே' (திருக்கோளிலி, ௬)

என்றவிடத்து இறைவனுக்குத் தேவி இருவராதலின், பெண்டிர் துயரைத் தானே நன்கறிவனாதலின் பரவையின் துயரைக் களைந்தருளுவனென்றவாரும்.

'மெய்யரே யொத்தோர் பொய்செய்வ தாகி
லிவரலா தில்லையோ பிரானர்'
(திருப்பாச்சிலாச்சிராமம், எ)

'பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யி
லிவரலா தில்லையோ பிரானர்'
( ,, கக)

'கையொர் பாம்பரை யார்த்தொர் பாம்பு
கழுத்தொர் பாம்பு
ஆர்த்திட்ட தும்பாம்பு கைக்கொண்ட தும்பாம்
படிகே ளுமக்காட்செய வஞ்சுதுமே'

(திருப்பரங், க)

'அட்டக் கொண்டுண்ப தறிந்தோமேல்
நாமிவர்க் காட்ப டோமே'

(திருவேள்விக்குடியுந் திருத்துருத்தியும், ௬)

வேள்வியில் ஊன் சிவனுர்க்குச் சிலர் ஆகுதி செய்வதை யறிந்து, தாம் சைவராதலின் 'இவர்க்கு ஆட்படோமே' யென்ருர். திருமுருகன் பூண்டித் திருப்பதிகத்தில், 'எத் துக்கிங் கிருந்தீ ரெம்பிரா னீரே' என்ற முடிவு மிகவும் நெருங்கிய தோழமை யுணர்த்தும்.

'பொல்லாப் புறங்காட் டகத்தாட் டொழியீர்
புல்லால்வா யனபே யொடுபூச் சொழியீர்'

என்றதுமது.

'எல்லா மறிவீ ரிதுவே யறியீர்' (திருப்பரங்குன்றம், ரு)

என்ற அடியில் எல்லாந் தெரிந்தும் ஒன்று தெரியவில்லை யென்ருர். அன்பரை இறைவன் கைவிடமாட்டா னென்பதை மிக நயமாகச் சிறப்பிப்பார்,

'பங்கம்பல பேசிடப் பாடுந் தொண்டர்தமைப்
பற்றிக்கொண் டாண்டு விடவுங் கில்லீர்'

என்ருர்.

'மூன்று கண்ணுடையாய் அடியேன்கண் கொள்வதே
கணக்கு வழக்காகில்'

என்றவிடத்துக் கடவுளுக்கு மூன்று கண்ணிருக்கவும் என் கண்ணையும் எடுத்துக்கொண்ட தெற்றிற்கு என்று வினவினர்.

'மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியா
னெம்பெருமா னிதுதகவோ வியம்பியருள் செய்வீர்
திண்ணெனவென் னுடல்விருத்தி தாரீரே யாகிற்
றிருமேனி வருத்த வலைக்கின்றே னலைக்
கண்ணறையன் கொடும்பாட னென்றுரைக்க வேண்டா.'
(திருநாகைக்காரோணம், ௬)

இங்கே கடவுளை இகழ்வதுபோ லுரிமைபாராட்டினமை காண்க. திருக்கச்சியோணகாந்தன் றளித் திருப்பதிகத்தின் இரண்டாம்பாட்டிலும் இங்ஙனம் வந்தமை நோக்குக. அப்பதிகத்தின் ௩-ம் பாட்டில்,

' அற்றபோழ்து மலந்தபோழ்து மாபற்காலத்
தடிகேளும்மை
ஒற்றிவைத்திங் குண்ணலாமோ வோணகாந்தன்
றளியுளீரே '

என்று வந்தது. அதன் ௪-ம் பாட்டில்,

' வல்லதெல்லாஞ் சொல்லியும்மை வாழ்த்தினலும்
வாய்திறந்தொன்
றில்லையென்னீ ருண்டுமென்னீ ரெம்மையாள்வா
னிருப்பதென்னீர் '

என்றும் வந்தவிடத்து இறைவரைப் பேசாமோனப் பெரும்பொருள் என்றார்.

உலகவழக்கிற் பேசுவதுபோல இறைவன்பாற் குறையிரக்குந் திறமை நமது நாயனார் திருப்பாடல்களுட் காணப்படும்.

' மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்
மைந்த னேமணி யேமண வாளா
வகத்திற் பெண்டுக ளானொன்று சொன்னா
லழையேற் போகுரு டாவெனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன் '
(திருவொற்றியூர், துயர்நீங்கவோதிய, ௧

'என்னையு மொருவ னுளனென்று கருதி
யிறையிறை திருவருள் காட்டாய்'

(திருப்பாச்சிலாச்சிராமம், ௨)

என்றது காண்க. 'எதிர்த்து நீந்த மாட்டேனுன்' என்றது மனையதே. சமணரை நகையாடுமுகத்தால் ஒரு செய்யுள் வந்துளது.

'நமண நந்தியுங் கரும வீரனுந்
தரும சேனனு மென்றிவர்
குமண மாமலைக் குன்று போனின்று
தங்கள் கூறையொன் றின்றியே
ஞமண ஞாஞண ஞாண ஞோணமென்
றோதி யாரையு நாணிலா
வமண ராற்பழிப் புடையரோநமக்
கடிக ளாகிய வடிகளே'

(பொது, நமக்கடிகளாகிய வடிகள், ௬)

பழமொழிகள் பல நமது நாயனுர் தேவாரத்துள் வந்துள்ளன.

'எள்விழுந்திடம் பார்க்குமாகிலு
மீக்கு மீகில னுகிலும்' (திருப்புகலூர், அ)

'கழுதைக் குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர்' (திருவிடைமருதூர், க)

'பொற்குன்றஞ் சேர்ந்ததோர் காக்கை
பொன்னு மதுவே புகல்' (திருப்புனவாயில், ச)

திருக்குறட் சொல்லும் பொருளும் நமது நாயனுர் தேவாரத்துட் பலவிடங்களில் வந்துள்ளன. உதாரணம் வருமாறு:

'பொறிவாயிலிவ் வைந்தினையும் மவிய'

(திருநெல்வாயி லரத்துறை, க)

என்ற தேவார அடி,

'பொறிவாயி லைந்தவித்தான்' (கடவுள் வாழ்த்து, ௬)
என்னுந் திருக்குறளடியை நினைவூட்டுகின்றது.

'ஓடுபுனற்கரை யாமிளமை
யுறங்கி விழித்தா லொக்குமிப் பிறவி'
(திருநெல்வாயிலரத்துறை, ௪)
என்பதன் இறுதியடி,

'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' (நிலையாமை, ௯)
என்னுந் திருக்குறளடியே.

'அகரம்முதலி னெழுத்தாகி நின்றாய்'
(நெல்வாயிலரத், எ)

என்ற அடி முதற்றிருக்குறட் கருத்தை வலியுறுத்துகின்றது. 'மெய்யர் மெய்ப்பொருளே' (திருவாலங்காடு, ௨) என்ற தேவார அடிகள் திருக்குறளிலே 'மெய்ப்பொருள் கண்டார்' என்பதன் கருத்தை யடக்கி நிற்கின்றது.

இவ்வாறே பிறநூற் குறிப்பும் ஆளுடைய நம்பி தேவாரத்திற் காணப்படும்.

'புலனைந்து மயங்கி யகங்குழையப்
பொருவேலோர் நமன்றமர் தாநலிய' (நெல்வாயி, ரு)
என்னுமடிகள்

'புலனைந்தும் பொறிகலங்கி...
அலமந்த போதாக' (திருவையாறு, க)
என்ற திருஞான சம்பந்தர் தேவார அடிகள் போல்வன.

'தாழ்வெனுந் தன்மைவிட்டுத் தனத்தையே
மனத்தில்வைத்து' (திருவாரூர், அஞ்சினேனென்ற, எ)

என்ற அடியே, தாழ்வெனுந் தன்மையோடு' என்ற சிவஞானசித்தி யடிக்கு மூலம்போலும்.

'உற்றபோ தல்லா லுறுதியை யுணரேன்'

(திருப்பாச்சி, ௲)

என்ற அடி திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

'உற்றலாற் கயவர்தேரு ரென்னுங்கட்
டுரையை யொத்தேன்'

என்ற அடியை நினைவுறுத்து கின்றது.

'கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும்'

(திருக்கருப்பறிய், ௬)

என்ற அடி திருநாவுக்கரசர் தேவாரத்திலும் வந்துள்ளது.

'கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலுமாரூரரைக்
கையினாற் றொழா.'

திருநள்ளாற்றுப் பதிகத்தில், 'பன்றிப்பின் சென்ற மாயனை, (எ) என்றவிடத்து 'மாயன்' என்ற சொல் சிவனாரைக் குறிக்க வழங்கியது. திருமூலனாரும் இச் சொல்லைச் சிவனார்க்கு வழங்குகின்றார். 'மனத்திலெழுகின்ற மாயநன் னாடனை' என்றது காண்க. 'மாயனே மறிகடல் விடமுண்ட வானவா' என்ற திருவாசகமுங் காண்க.

'ஒழிப்பா யென்வினையை யுகப்பாய் முனிந்தருளித்
தெழிப்பாய் மோதுவிப்பாய்' (திருக்கழிப்பாலை, ௫)

என்றவிடத்து,

'மோதுவிப்பா யுகப்பாய் முனிவாய்' என்ற அப்பர் தேவார அடியை நினைவுபடுத்தும். ஒற்றியூர் என்ற சொற்றொடரை ஒற்றி வைக்கப்பட்ட ஊர், ஒற்றி வாங்கிய வூர் என்ற பொருள் படும்படியாகவும், ஆரூர் நிறைந்த ஊர் என்ற பொருள் தோன்றும் வண்ணமும்,

'ஒற்றியூ ரென்ற வூனத்தினா லதுதானோ
வற்றப்பட வாரூர தென்ற கன்றாயோ'

(திருக்கோடிக்குழகர், அ)

என்றது காண்க. இறைவனைச் சாராதார் பயனென்னு மென்ற கருத்தைச் 'சாராதார் சார்பென்னே' 'பேசாதார் பேச்சென்னே' என்றின்ன சொற்றொடர்கள், 'சேராதார் தீநெறிக்கட் சேர்கின்றாரே' 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்பனபோன்ற கருத்துக்களைக் குறிப்பா னுணர்த்துவன.

ஆற்றில் வருபொருள்களைத் தொகுத்துப் பல பதிகங் களிற் கூறு முறைமை இயற்கை யழகைச் செவ்வே புலப் படுத்துகின்றது. திருத்துறையூர்ப் பதிகத்திலே, மலைவீ ழருவியானது மாமணிகளும், யானை மருப்பும், முத்தும், காரகிலும், சந்தனமும், மல்லிகை, சண்பக முதலிய மலர் களும், மாவும், பலாக்களும், வன்னியும், மயிற்பீலியும், கோங்கு வேங்கை முதலியனவுங் கொணர்ந்து பெண்ணை யாற்றிலிடப் பெண்ணையாறு கொழித்துச் செல்வதைப் பகர்ந்தமை காண்க. கெடிலநதியின் பெருமிதத்தைக்

'கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையார வாரி
ஏந்துநீ ரெறிகெடிலம்' (திருவதிகைவீரட்டானம், ரு)

என்றார். திருவரிசிற்கரைப் புத்தூர்த் தேவாரத்தின் கண்ணும் ஆற்றுவளத்தை அழகுற வியம்பினர்.

'கழைக்கொள் கரும்புங் கதலிக் கனியுங்
கமுகின் பழுக்காயுங் கவர்ந்து கொண்டிட்
டிழைக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை
யழகார் திருப்புத்தூ ரழக னீரே'

(திருவரிசிற்கரைப் புத்தூர், க).

'இடிக்கும் மழைவீழ்த் திழுத்திட் டருவி
யிருபாலு மோடி யிரைக்குந் திரைக்கை' ( ,, ௰)

என்றதுங் காண்க. திருவையாற்றுத் தேவாரத்திலே, மலைக் குறத்தி கூந்தலிலணிந்த மாலையையும், கரும்புத் தேனை யும், பிறவற்றையுங் காவிரி கொண்டு செல்வதாகக் கூறினர். திருத்துருத்தித் தேவாரத்துள்ளுங் காவிரி வருணனை காணப்படுகின்றது.

'மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
யோடுமா காவிரி'

(திருத்துருத்தியுந் திருவேள்விக்குடியும், ௨)

'கொல்லு மாலி யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டுகூட் டெய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்துதவஞ் செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரி' ( ,, ௧)

என்றது காண்க. திருவெஞ்சமாக் கூடல் தேவாரத்துட் சிற்றாறு என்பதன் வளமும், அதன்கரைப் பாங்குற்ற பொழிலின் வளமுந் தொகுத்துரைக்கப்பட்டன.

'எறிக்குங் கதிர்வே யுதிர்முத்தமொ
டேல மிலவங்கந் தக்கோலமிஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்துகொண்டு மண்டித்
திளைத்தெற்று சிற்றாற தன்கீழ்க்கரைமேன்
முறிக்குந் தழைமா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்தி கண்மேற் குயில்கூவ லரு
வெறிக்குங் கலைமா வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியேனை யும்வேண்டுதியே'

(திருவெஞ்சமாக்கூடல், ௧)

என்றது காண்க. குறிஞ்சி வளத்தினைத் திருப்பருப்பதப் பதிகத்துள் அழகாகப் பரமாசாரியர் தொகுத்துரைத்த னர். சாந்தமான விலங்குகள் தமது இயற்கை வாழ்க்கை நடத்துவதை அப்பதிக முதற் செய்யுளிற் குறித்தார்.

'மானும்மரை யினமும்மயி லினமுங்கலந் தெங்குந்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முரிஞ்சிப்பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழி னீழற்றுயில் சீபர்ப்பத மலையே.'

(திருப்பருப்பதம், க)

இத்திருப்பதிகத்தின் ரு-ம் பாட்டில், களிற்றுக்கூட்டம் வேடர்க்கஞ்சி யோடிப்போய்ப் பிடிகள் கூட்டத்திற்சேர, பிடிகள் செவிதாழ்த்து வேடர்க் கிரக்கமுண்டாக்க, வேடர்கள் இலையாற்செய்த கல்லையிலுள்ள தேனைப் பிழிந்து உணவாகக் கொடுத்தலும், அழகாகச் சொல் லினமை காண்க.

'ஆனைக்குல மிரிந்தோடித்தன் பிடிசூழலிற் றிரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட வதற்குமிக விரங்கி
மானக்குற வடல்வேடர்க ளிலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடுஞ் சீபர்ப்பத மலையே.'

(திருப்பருப்பதம், ரு)

இதன் சு-ம் பாட்டில், களிறு பிடியுடன் ஊடுவதும், பிடி களிற்றைத் தேற்றுவது முரைக்கப்பட்டன. ங-ம் பாட்டிற் குறமங்கையர் தினைப்புனங்காத்தலும், ச-ம் பாட்டிற் கிளிகளைக் கவணெறிவதுங் கூறப்பட்டன. கூ-ம் பாட்டிற் பன்றிகள் கோட்டினாற் கிளைத்து வெளி யாக்கிய மணிகள் கனல் போன்றமையால், அவற்றைக் கனலென்று திரியக்கொண்டு கரடிகள் அஞ்சினமையும், கரடி முதலிய விலங்குகள் தேனுண்டமையுங் கூறப் பட்டன.

திருக்கோடிக் கரையில், இறைவன் கடற்காற்று கடிதாய் வீசத் தனியே யிருந்தமை கண்டு நாயனா ரிரங்கு வது யாவர்க்கும் பரிதாபத்தை விளைக்க வல்லது.

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதா னயலே யிருந்தாற் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீ
ரடிகே ளுமக்கார் துணையாக விருந்தீரே.

நெய்தற் பொழிலின் சிறப்பைத் திருமறைக் காட்டுப் பதிகத்தில் விதந்தனர்.

'தாழைப்பொழி லூடே சென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறைக் காடே'

(திருமறைக்காடு, க)

'முத்தின்றொளி பவளத்திர ளோதத்
தகரத்திடை தாழைத்திரண் ஞாழற்றிர ணீழன்
மகரத்தொடு சுறவங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே'

( ,, உ)

'தெங்கங்களு நெடும்பெண்ணையும் பழம்வீழ்மணற் படப்பைச்
சங்கங்களு மிலங்கிப்பியும் வலம்புரிகளு மிடறி
வங்கங்களு முயர்கூம்பொடு வணங்கும்மறைக் காடே'

( ,, ௩)

மருதமு நெய்தலு மயங்கிய இடமென்பார்,

'செந்நெல்
வளைவிளைவயற் கயல்பாய்தரு குணவார்மணற் கடல்வாய்
வளைவளையொடு சலஞ்சலங்கொணர்ந்
தெற்றும்மறைக் காடே' ( ,, எ)

என்றார்.

இத்திணை மயக்கம் திருக்கானாட்டுமுள்ளூர்த் தேவாரத்தினுங் காண்க.

'முள்வாய மடறழுவி முடத்தாழை யீன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே' (கானாட்டு, க)

இத்திருப்பதிகத்தில், செந்தாமரைகளிலே அன்னங்கள் விளையாடுவதும், கரும்புஞ் செந்நெலும் உயர்ந்து வளர்ந்திருப்பதும், வண்டுகள் கமுகுந்தெங்கும் நிறைந்த பொழில்களிற் றேனுண்டுபாட மயில்களாடுவதும், பெண்டிர் நீராடி மகிழ்வதும், பிறவும் அழகாக மொழியப்பட்டுள்ளன.

'அரும்புயர்ந்த அரவிந்தத் தனிமலர்க ளேறி
அன்னங்கள் விளையாடு மகன்றுறையி னருகே
கரும்புயர்ந்து பெருஞ்செந்நெல் நெருங்கிவிளை கழனி'
(காளுட்டு, ௧)

'பாளைபடு பைங்கமுகின் சூழலிளந் தெங்கின்
படுமதஞ்செய் கொழுந்தேறல் வாய்மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாடமயி லாலும்வளர் சோலை' ( ,, ௪)

'குருமணிகள் கொழித்திழிந்து சுழித்திழியுந் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்தாடுங் கொள்ளிடத்திற் கரைமேற்
கருமணிகள் போனீல மலர்கின்ற கழனி' ( ,, எ)

'தூவிவாய் நாரையொடு குருகுபாய்ந் தார்ப்பத்
துறைக்கெண்டை மிளிர்ந்துகய றுள்ளிவிளை யாடக்
காவிவாய் வண்டுபல பண்செய்யுங் கழனி' ( ,, ௧௦)

என்பனகாண்க.

திருக்கலய நல்லூர்ப் பதிகத்திலுஞ் சோலைநயங் காட்டப்பட்டுள்ளது.

'சோலைமலி குயில்கூவக் கோலமயி லாலச்
சுரும்பொடுவண் டிசைமுரலப் பசுங்கிளிசொற் றுதிப்பக்
காலையிலு மாலையிலுங் கடவுளடி பணிந்து
கசிந்துமனத் தவர்பயிலுங் கலய நல்லூர் காணே'
(திருக்கலய, அ)

திருப்பனையூர்த் திருப்பதிகத்தில், மருதவருணனை செவ்விதின் அமைந்துள்ளது.

' நாறுசெங்கழு நீர்மலர் நல்லமல்லிகை சண்பகத்தோடு
சேறுசெய் கழனிப் பழனத் திருப்பனையூர்' (பனையூர், உ)

' செங்கண்மேதிகள் சேடெறிந்து தடம்படிதலிற் சேவினத்
பைங்கண் வாளைகள் பாய் பழனம்' [தொடு ( ,, ரு)

நாரையின் செங்காலுக்குத் தினைத்தாள் உவமிக்கப் பட்டது.

' தினைத்தாளன்ன செங்காலனாரை சேருந்திருவாரூர்'
(திருவாரூர், வாழ்ந்துபோதீர், சு)

திருமுதுகுன்றத் திருப்பதிகத்தில், களிற்றினை யாளி கொன்றுவிடத் துணையற்ற பிடியானது குறத்தி முன்றிலிற் கன்றினைக் கருவுயிர்ப்பது கூறப்பட்டது. மந்தியானது தனது கணவனுக்கு உண்ணுதற் பொருட்டுக் கனிதேடிக் கொணர்தலு முரைக்கப்பட்டது.

' குன்றிவிடைக்களி றாளிகொள்ளக் குறத்திகண்
முன்றிவிடைப்பிடி கன்றிடும் முதுகுன்றரே' (முதுகுன், எ)

' மந்திகடுவனுக் குண்பழநாடி மலைப்புற
முந்தியடிதொழ நின்றசீர்முது குன்றரே' ( ,, அ)

நிறங்களின் வேற்றுமை தோன்றக்

' கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே'
(திருக்கலய நல்லூர். க)

என்றனர்.

' பளிக்குத் தாரை பவள வெற்பிற்
குளிக்கும் போனூற் கோமாற் கிடமாம்'
(திருச்சோற்றுத்துறை, ச)

என்றவிடத்து இறைவரது செம்பவளத் திருமேனி மிசை வெண்ணூ லிலங்குவது பவளமலையிற் பளிக்கருவி ஊடுசென்றாற்போன்ற தென்றமை கவின்மிக்கது காண்க.

## வரலாற்று நூல்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| சிவஞான முனிவர் வரலாறு | ... | 1 | 4 |
| ஆண்டாள் வரலாறு | ... | 0 | 4 |
| செகப்பிரியர் வரலாறும் நாடகக் கதைகளும் | ... | 0 | 4 |
| திருஞான சம்பந்தர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 2 | 0 |
| அப்பர்சுவாமிகள் சரித்திரம் | ... | 1 | 8 |
| சுந்தரமூர்த்தி நாயனர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 2 | 0 |
| மணிவாசகப் பெருமான் வரலாறு | ... | 1 | 8 |
| சேக்கிழார் சுவாமிகள் வரலாறு (அச்சில்) | | | |
| சந்தாஞசாரியர் வரலாறும் நூலாராய்ச்சியும் | ... | 0 | 12 |

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.